அங்காடி
விளம்பர சிறப்பிதழ்
உள்ளே



பக்கம் 02

காரினால் மோதுண்டு இளைஞர் படுகாயம்



பக்கம் 22

அதிரடிக் கோல்கள் போட்டார் ஜூட் 'மைலோ' கிண்ணம் மோரிஸ் வசம்



பக்கம் 23

மேற்கிந்தியத் தீவுகளை பந்தாடியது நியூசிலாந்து

உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily
■ சுடர்: 29 ■ கதிர்: 019 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 29, ஞாயிறு 15.12.2013
56
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30



மப்பான வானிலை

29 C 24 C

# வடக்கை அடக்கினால் ஆயுதமே தீர்வாகிவிடும்

## அரசுக்கு சஜித் பிரேமதாஸ எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 15
"வடமாகாண சபைக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்காது, அந்த மக்களின் ஆணையை அரசு, பணத்தைக் கொண்டு அடக்க முற்பட்டால் அவர்களின் தீர்வு ஆயுதத்தை நோக்கியே நகரும்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சஜித் பிரேமதாஸ நேற்றுச் சபையில் எச்சரிக்கை விடுத்தார்.
இந்தப் புரட்சிக்கு வடக்கு இளைஞர்களை மீண்டும் தள்ளிவிட வேண்டாம் எனவும் அவர் வலியுறுத்தினார்.
நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற காணி அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:
போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர், தமது ஜனநாயக உரிமைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதற்கு வடக்கு மக்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. வடக்கில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் தமது குரலைப் பதிவுசெய்தனர். ஒரு தரப்புக்கு அதிகூடிய மக்கள் ஆணை கிடைத்தது. முதலமைச்சர் தெரிவு செய்யப்பட்டார். அமைச்சரவை அமைக்கப்பட்டது.



தேர்தல் நடத்தப்படுவதால் மட்டும் பயனில்லை. மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும். குறித்த தேர்தலில் தோல்வியடைந்துவிட்டோம் என்பதற்காக நிதி ஒதுக்கீடுகளைச் செய்யாது விடுவதன்மூலம் எதைச் சாதிக்க முடியும்? இவ்

2l ஆம் பக்கம் பார்க்க

## பெயானியின் அறிக்கைக்கு பதில் என்ன?

கொழும்பு, டிசெ.15
பொதுமக்கள் பாதுகாப்பு, கருத்துச் சுதந்திரம், காணி அதிகாரம் முதலான வற்றை உள்ளடக்கியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான விசேட அறிக்கையாளர் பெயானியின் அறிக்கைக்கு அரசின் பதில் என்ன? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் சபையில் நேற்று கேள்வி எழுப்பினார்.
"பிரிக்கப்படாத இலங்கைக்குள் தீர்வு காணப்பட வேண்டுமாயின் மாகாணசபைக்குரிய

2l ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவாவில் இலங்கைக்கு காத்திருக்கிறது பேரதிர்ச்சி

### மன்னார் ஆயர் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 15
"மற்றவர்களின் அறிவுரைகளைக் கேட்காமல் தான் தோன்றித்தனமாகச் செயற்பட்டு வரும் இலங்கை அரசுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் பேரதிர்ச்சி காத்திருக்கின்றது" என்று மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
"தமிழ் மக்களுக்கான சகல



உரிமைகளையும் வழங்காவிடின் சர்வதேச சமூகத்தால் இலங்கை அரசு தூக்கியெறியப்படும் காலம் தொலைவில் இல்லை" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
கடந்த வாரம் கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்துள்ள சுற்றுநிரூப ஆவணத்தை இலங்கை அரச தரப் பினரும்,

2l ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் விபத்தில் படைச் சிப்பாய் சாவு



மன்னார், டிசெ.15
மன்னார் மாந்தை பிரதான வீதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
பெரிய மடுவில் இருந்து மன்னார் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ்ஸும் தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து மாந்தை வீதியூடாகச் சென்று கொண்டிருந்த இராணுவ 'கப்' ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின.
இதன் போது குறித்த 'கப்' ரக வாகனத்தின் சாரதியான இராணுவச் சிப்பாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
மேலும் 2 இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

2l ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் தொடர்பில் தேவை சர்வதேச விசாரணையே

### உள்ளூர் விசாரணையில் நம்பிக்கையில்லை உறவினர்கள் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15
"ஜனாதிபதியால் நியமிக்கபடும் ஆணைக்குழுக்களில் எமக்கு நம்பிக்கையில்லை. அவர்கள் அரசுக்குச் சார்பானவர்களாகவே செயற்படுகின்றனர். காணாமற்போனவர்கள் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு விசாரணைகளைத் தொடங்க முன்னரே இதுதான் பரிந்துரை என்று சொல்கின்றது. எனவே தான் நாம் தொடக்கத்திலிருந்தே காணாமல் போனவர்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்பதை வலியுறுத்தி வருகின்றோம்."
இவ்வாறு காணாமற்போனவர்கள் தொடர்பிலான சிவில் சமூக கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.
காணமற்போனவர்கள் கண்டுபிடிக்கப்படாவிட்டால் அவர்களின் உறவினர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் என்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்திருந்தமை தொடர்பில் கேட்ட போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.
வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பில் பதிவுகளை முன்னெடுத்த மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை அடிகள் இது குறித்துத் தெரிவிக்கையில், இலங்கை அரசு எந்த

2l ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோரின் உறவினருக்கு நட்டஈடு

### ஆணைக்குழு உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15
காணமற்போனவர்கள் கண்டுபிடிக்கப்படாவிட்டால் அவர்களின் உறவினர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்று அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள காணமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.
தமிழீழ விடுதலைப் புலிகளால் காணமற்போகச் செய்யப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படும் 148 பேர் தொடர்பில் அவர்களின் உறவினர்களால் ஆணைக் குழுவுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
உயிரிழந்த மற்றும் காணமற்போனவர்களின் பெற்றோர்களின் ஒன்றியம் என்ற தென்னிலங்கை அமைப்பு ஒன்றினால் மேற்படி 148 முறைப்பாடுகளும், ஜனாதிபதி ஆணைக் குழுவுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன.
வடக்கு - கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தமது உறவினர்கள் பிடித்துச் செல்

2l ஆம் பக்கம் பார்க்க

## இரண்டு நாள்களில் 10 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், டிசெ.15
யாழ்.குடாநாட்டில் கடந்த இரண்டு நாள்களில் 10 பேருக்கு டெங்கு தொற்று ஏற்பட்டுள்ளது.
டெங்கின் தாக்கம் யாழ்ப்பாணத்தில் இந்த மாதம் மிக அதிகமாக உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
நேற்று சனிக்கிழமை 3 பேரும், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 7 பேரும், கடந்த வியாழக்கிழமை 4 பேரும், கடந்த புதன்கிழமை 3 பேரும் டெங்கினால் பீடிக்கப்பட்டு யாழ்.

2l ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாணசபைக்கு சிவில் ஆளுநர் வேண்டும்

### அதில் தவறேதும் இல்லை என்கிறார் வாசு

கொழும்பு, டிசெ. 15
வடமாகாண ஆளுநரை நீக்கி அப்பதவிக்குச் சிவிலியன் ஒருவரை நியமிக்க வேண்டும் எனக் கோரப்படுகிறதே தவிர, சிங்களவர் எவரையும் நியமிக்க வேண்டாம் எனக் கூறவில்லை. எனவே, அதில் எந்தத் தவறையும் நான் காணவில்லை. எனவே, வட மாகாணசபையும் அரசும் பேச்சு நடத்த இவற்றுக்கு

2l ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால முகாமைத்துவம் குறித்து யாழ். பல்கலையில் ஆய்வரங்கம்

## *அடுத்த ஆண்டு மார்ச்சில் நடத்தத் திட்டம்*

யாழ்ப்பாணம், டிசெ.15

'நிலைத்திருக்கும் அபிவிருத்தியை நோக்கிய மனித வளத்தை வலுவூட்டல்' என்னும் பொருளை மையமாகக்' கொண்டு சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வரங்கு அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது. இந்த ஆய்வரங்கத்துக்கு 15 வகையான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்குமாறு யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கூறியுள்ளார்.

சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வரங்கு தொடர்பான செய்தியாளர் சந்திப்பு ஒன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இதனை துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, ஆய்வரங்குத் தலைவர் ம.கருணாநிதி ஆகியோர் நடத்தினர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது :-

சமூகத்துக்கான அறிவியல் பங்களிப்பைப் பல்கலைக்கழகம் வழங்க வேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாகும். பல்கலைக்கழகங்கள் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவது மற்றும் சமூகத்துடன் ஒன்றித்த வகையிலான பங்களிப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலை காணப்படுகிறது. இது போன்ற ஆய்வு முயற்சிகளூடாக பிராந்திய மற்றும் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

'சமகால முகாமைத்துவம்' என்ற எண்ணக்கருவில் முதலாவது ஆய்வரங்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தினால் ஒழுங்கு செய்யப்படவுள்ளது.

இதற்குக் கணக்கீடும் நிதியும், சுற்றுலாத் துறையும் விருந்தோம் பலும் மற்றும் நிகழ்வு முகாமைச் சந்தைப்படுத்தலும் விநியோகச் சங்கிலி முகாமைத்துவமும், வங்கியலும் காப்புறுதியும், மனித வள அபிவிருத்தி, வணிகமும் சட்டச் சூழலும், தந்திரோபாய முகாமைத்துவம், வணிகப் பொருளியல் முயற்சியாண்மையும் செயற்பாட்டு முகாமைத்துவமும், பிராந்திய மற்றும் சமூகத் திட்டமிடல், சர்வதேச வியாபாரமும் நிதியும், கலாசாரமும் நெறிமுறைகளும், நகர முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பமும் தொடர்பாடலும், செயற்பாட்டு ஆய்வு ஆகிய தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப் படவுள்ளன.

இதன்படி ஆய்வுச் சுருக்கம் கையளிப்பு இந்த மாதம் 25ஆம் திகதியும், ஆய்வுச் சுருக்கம் ஏற்பு அறிவிப்பு இந்த மாதம் 31 ஆம் திகதியும், ஆய்வுக் கட்டுரை கையளிப்பு ஜனவரி 15 ஆம் திகதியும் ஆய்வுக்கட்டுரை ஏற்பு அறிவிப்பு பெப்ரவரி 15 ஆம் திகதியும், ஆய்வரங்குப் பதிவு மார்ச் முதலாம் திகதியும், ஆய்வரங்கு மார்ச் 14ஆம், 15 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது.

இந்த ஆய்வரங்குக்கு என www.jfn.ac.lk/iccm 2014 என்ற பெயரில் இணையத்தள முகவரியும் நேற்று உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

# காரினால் மோதுண்டு இளைஞர் படுகாயம்



யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ். முற்றவெளி வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

வீதியில் உள்ள மஞ்சள் கோட்டுக் கடவை ஊடாக இளைஞர் கடக்க முற்பட்டவேளை வேகமாக வந்த கார் ஒன்று அவரை மோதியுள்ளது. இதனால் தூக்கி வீசப்பட்ட அவர் தலையில் படுகாயமடைந்தார்.

உடனடியாக அவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். சம்பவ இடத்துக்கு வந்த யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (த-17)

# வைத்தியசாலைத் தொண்டர்கள் 3 ஆவது நாளாகவும் போராட்டம்

யாழ்ப்பாணம்.டிசெ.15

யாழ். போதனா வைத்திய சாலைத் தொண்டர்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் வைத்திய சாலைப் பணிகள் பாதிக்கப் பட்டன.

தொண்டர்கள் செய்யவேண்டிய பல பணிகளை வைத்திய சாலை சிற்றூழியர்கள் செய்து விடுகின்றனர். அவர்களுக்கான விடுமுறையும் மட்டுப் படுத்தப்பட்டுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

பல வருடங்களாக வைத்திய வாங்கி விட்டு தற்போது 'கறி வேப்பிலையாக' எம்மைத் தூக்கி வீச முற்படுகிறார்கள். என தொண்டர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நேற்றும் மூன்றாவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் தமக்கு நியமனம் தரும்வரை போராட்டம் தொடரும் என்று கூறியுள்ள னர்.

இந்தப் போராட்டம் காரணமாக வைத்தியசாலையில் பணிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-4-17)

# மண்டேலாவுக்கு இன்று யாழ்ப்பாணத்தில் அஞ்சலி

## *கூட்டமைப்பின் ஏற்பாட்டில்*

யாழ்ப்பாணம், டிசெ. 15

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடிய நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் இன்று யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

மாமனிதன் நெல்சன் மண்டேலா பயங்கரவாதியெனப் பட்டம் சூட்டப்பட்டதன் பின் 27 வருடங்களுக்கு மேலாகச் சிறைவாசம் அனுபவித்தவர். தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டத்தில் தலைமை தாங்கி நாடு விடுதலை பெற்றபோது மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர். அவர் உயிர் பிரிந்த செய்தி மனித குலத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது.

தென்னாபிரிக்காவில் அவரது இறுதிநிகழ்வுகள் இன்று இடம் பெறுகின்றன. இலங்கையில் விடுதலைக்காகப் போராடும் தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் விசுவாசமிக்க அஞ்சலியை அவருக்கு அர்ப்பணம் செய்கின்றனர்.

இதற்காக யாழ்.மார்டின் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இன்று மு.ப. 10 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார். (த-5)

# காஞ்சாவுடன் மூவர் கைது

கிக்கடுவ பிரதேசத்தில் 10 கிலோ நிறையுடைய கஞ்சாவுடன் மூவரை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கஞ்சாவை பொலிஸார் மீட்டதோடு சந்தேகத்தின் பேரில் மூவரையும் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஐந்தாவது தடவையும் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ.14

அரியாலை மாம்பழம் சந்தியில் உள்ள கடை ஒன்றில் 5 ஆவது தடவையாக நேற்று சனிக்கிழமை அதிகாலை திருட்டு இடம்பெற்றுள்ளது.

ஓடு பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது கைத்தொலைபேசிகள், மெமறி காட்டுகள், கைத்தொலைபேசி மீள் நிரப்பும் அட்டைகள் என சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கடையின் உள்ளே மின் குமிழ் எரிவது கூரை வழியாக தெரிந்த போதே திருட்டுச் சம்பவம் இடம்பெற்றமை தெரியவந்தது.

சம்பவம் இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (த-4)

# சாவு வீட்டுக்குச் சென்ற பெண்ணின் தாலி அபகரிப்பு

## *சங்கத்தானையில் சம்பவம்*

தென்மராட்சி.டிசெ.15

சாவகச்சேரியில் இடம்பெற்ற உறவினரின் மரணச் சடங்குக்கு சென்ற வட்டக்கச்சியைச் சேர்ந்த பெண் அணிந்திருந்த ஒன்பதரைப் பவுண் நிறையுடைய தாலிக்கொடி மோட்டார் சைக்கிளில் வந்த நபரால் அறுத்துச் செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோயில் வீதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி சப்பச்சி மாவடியில் இடம்பெற்ற உறவினரின் மரணச் சடங்குக்காக வட்டக்கச்சியிலிருந்து பஸ்ஸில் வந்து சங்கத்தானையில் இறங்கி நடந்து சென்ற வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் குறித்த பெண் அணிந்திருந்த தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு தப்பியோடினார்.

> "இவருடன் வந்த ஏனைய மூன்று பெண்களும் கூக்குர லிட்ட போதிலும் திருடனைப் பிடிக்க முடியவில்லை."

இவருடன் வந்த ஏனைய மூன்று பெண்களும் கூக்குரலிட்ட போதிலும் திருடனைப் பிடிக்க முடியவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# காசோலை மோசடி 3 பேர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.15

22 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் தென்பகுதி நபர் உட்பட மூன்று பேர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநகரைச் சேர்ந்த ஒருவர், அதே பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு 17 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையைக் கொடுத்து பணத்தை வைப்பிலிடாது மோசடி செய்துள்ளதாக முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார்.

யாழ்.ராசாவின் தோட்டம் வீதியைச் சேர்ந்த ஒருவர் 3 லட்சத்து 44 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார். சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார்.

தென்பகுதியைச் சேர்ந்த ஒரு வர்த்தகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு எதிராக ஓர் இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்துள்ளமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். வியாபார நோக்கில் அந்தக் காசோலை கொடுக்கப்பட்டுள்ளது.

[illegible]
[illegible]
தெரிவிக்கப்பட்டது. (வ-4)

வாழ்க! வளத்துடன்!

கௌரவ

உயர்திரு ஈஸ்வரபாதம் சரவணபவன்

(நாடாளுமன்ற உறுப்பினர், உதயன் நிர்வாக இயக்குநர்)



உதயனுக்கு அகவை இருபத்தெட்டு
உங்களுக்கு அகவை அறுபது
முப்பத்திரு வயதில் முயன்று பெற்ற உதயனவன்
எத்திசையும் புகழ் பரப்பி
எம்மினத்தின் விடிவுக்காய்
எத்தகைய இடர் வரினும்
எதிர்கொண்டு.....
வாழ்கின்றது வளர்கின்றது.




இது நிற்க
உங்கள் பணி தமிழுக்காய் - தமிழ் இனத்தின்
விடிவுக்காய் - விடுதலைக்காய்
அரசியலில் தொடர்கிறது.
அறம்தவறா மறத்தமிழா
வாழ்க வளமோடு
வாழ்த்துகின்றோம் உமை நாங்கள்

திரு ச. ஐங்கரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்

திருமதி நா. ஐங்கரன்
தவிசாளர்,
வலிமேற்கு பிரதேச சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிச் சந்தைகளுக்கு வந்து குவியும் மாம்பழங்கள்

*கறுத்தக் கொழும்பான் 5 ரூபாவுக்கு*

தென்மராட்சி, டிசெ.15

தென்மராட்சிப் பிரதேசத்தில் மழை வீழ்ச்சி குறைந்ததால் மாம்பழ உற்பத்தி அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் பிரதேச சந்தைகளுக்கு மாம்பழம் விற்பனைக்கு கொண்டு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சந்தையில் அவற்றை விற்பனை செய்ய முடியாமல் கேட்கும் விலைக்கு விற்க நேரிடுகிறது.



உற்பத்தியாளர்களால் வீடுகளில் பழுக்க வைத்துகொண்டு வரப்படும் மாம்பழங்கள் ஒரு ரூபா தொடக்கம் ஐந்து ரூபா வரை விற்கப்படுவதைக் காண முடிகிறது.

உற்பத்தியாளர்களால் மலிவு விலையில் மாம்பழங்கள் விற்கப்படுவதால் பெருமளவு கொள்வனவு செய்யும் வியாபாரிகள் அவற்றை விற்க முடியாமல் பழுதடைந்ததும் வீசுவதாகவும் இதனால் தமக்கு நஷ்டம் ஏற்படுவதாகவும் தெரிவித்தனர்.

விலாட் மாம்பழமொன்று ஒரு ரூபாவாகவும், கறுத்தக் கொழும்பான் மாம்பழம் 5 ரூபா வரையும் விற்கப்படுகின்றன.

இதேவேளை வாழைப் பழத்தின் விலையும் வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது. திருவெம்பாவை உற்சவத்தை முன்னிட்டு பலாப்பழங்களும் பெருமளவில் கொண்டு வரப்பட்டு மலிவு விலையில் விற்கப்படுகிறது. (ஒ-9)

# உரிமம் இன்றி விற்பனை; ஒரே தடவையில் 10 வழக்கு

வலி.தென்மேற்கு, டிசெ.15

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பிரதேச சபையால் வழங்கப்படும் வருடாந்த உரிமம் எடுக்காமல் காலம் கடத்தி வந்த வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள வருமானப் பரிசோதகரால் ஒரே தடவையில் பத்துப் பேருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பிரதேச சபையின் விதி முறைகளைக் கடைப்பிடிக்காமல் கட்டடங்களை அமைப்பதிலும், வர்த்தக நிலையங்களுக்கான உரிமங்களைப் பெறாமலும், காலம் கடத்துவதிலும் பலர் ஈடுபட்டு வந்தனர்.

பிரதேச சபையின் சட்ட விதி முறை களுக்கு எதிராக சட்ட விரோதமான முறையில் செயற்படுவோர் மீது காலம் தாழ்த்தாமல் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபையின் பதில் தவிசாளர் வருமானப் பரிசோதகரைக் கேட்டுக் கொண்டார்.

அதையடுத்து நடவடிக்கையில் ஈடுபட்ட வருமானப் பரிசோதகர், அனுமதியின்றிச் சட்ட விரோதமான முறையில் கட்டடங்களை அமைத்தவர்கள் மற்றும் வியாபார நிலையங்களுக்கான வருடாந்த உரிமம் பெற்றுக் கொள்ளாதவர்கள் என பத்துப் பேர் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் ஒரே தடவையில் வழக்குகள் தாக்கல் செய்துள்ளார். (வ-115)

> "_"
> **ஒரே தடவையில் பத்துப் பேருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக் கல் செய்யப்பட்டுள்ளன.**

## சுத்தம் பேண பொது இடங்களில் 'பிளாஸ்ரிக்' குப்பைத் தொட்டிகள்

***உள்ளூராட்சிச் சபைகளுக்கு விநியோகம்***

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தினர் உள்ளூராட்சிச் சபைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் திண்மக்கழிவு முகாமைத்துவ நடவடிக் கையை மேம்படுத்தும் பொருட்டு 'பிளாஸ்ரிக்' குப்பைத் தொட்டிகளை உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கி வருகின்றனர்.



அந்தந்த உள்ளூராட்சி சபைகள் ஊடாக சுத்தத்தைப் பேணும் வகையில் பொது மக்கள் கூடும் இடங்கள், நகரப் பகுதி வர்த்தக நிலையங்கள், சந்தைகள் போன்ற இடங்களில் குப்பைத் தொட்டிகளை வைத்து கழிவுப் பொருள்களை தொட்டிகளில் போடும் பழக்கத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் முகமாக குப்பைத் தொட்டிகள் வைக்கப்படவுள்ளன.

அந்தந்த உள்ளூராட்சி சபைகளின் நகர்ப் புறத்தை அழகுற வைத்திருப்பதற்கு முன்னோடியாகவே இந்தக் குப்பைத் தொட்டிகள் வழங்கப்படுகின்றன. (ஒ-9)

# உள்ளூராட்சித் தலைவர்களுடன் 3 மாதத்துக்கு ஒருமுறை சந்திப்பு

*வடக்கு முதலமைச்சர் அறிவிப்பு*

வடமராட்சி , டிசெ.15

புத்தாண்டுக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான முத்திரை வரியைப் பெற நிதிச் சட்டத்தில் நியதி இருக்குமானால் அதனைப் பெற்றுக் கொடுக்க முயற்சிப்பதோடு, உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடனான கலந்துரையாடலை மூன்று மாதத்துக்கு ஒரு தடவை நடத்தி முயற்சிகளை மேற்கொள்வேன் என மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பருத்தித்துறை நகர சபையின் புதிய நவீன சந்தைக் கட்டடத் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட முதலமைச்சர் பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் விடுத்த இரண்டு கோரிக்கைகளுக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

நான் எதிர்பார்க்காவிட்டாலும் என்னை நல்ல முறையில் வரவேற்று கௌரவித்துள்ளீர்கள்.

எனக்கு பெரும் வரவேற்பு வேண்டாம். கௌரவமும் வேண்டாம். மக்களின் மனதைப் புண்படுத்தக்கூடாது என்பதற்காகத்தான் இந்த வரவேற்பை ஏற்றுக்கொள் கின்றேன். இனிமேல் இப்படியான வரவேற்பு வேண்டாம்.

நாங்கள் பதவிக்கு வந்து இரண்டு மாதங்கள் தான் ஆகின்றன. இன்னமும் செயலாளர்களைச் சந்தித்துப் பேசவில்லை. அவர்களை விரைவில் கூப்பிட்டு கலந்துரையாட வேண்டும் என்ற எண்ணம் உண்டு. அடிப்படை வேலைகள் முடிந்ததும் இதனைச் செய்வேன். பெரும்பாலும் புதுவருடத்துடன் இது சரியாக அமையும்.

நாங்கள் ஏதாவது வேலைகளை செய்து முடித்தால் அதுவும் இரண்டு வருடங்கள் சென்று வேலைகள் நிறைவு பெற்றாலும் வரவேற்பு கௌரவங்களைச் செய்யலாம். ஒரு வேலையும் இன்னமும் செய்து முடியாத நிலையில் இவ்வாறான வரவேற்பை செய்வது நல்லதல்ல.

மக்கள் வங்கி புதிய கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கு 100 லட்சம் ரூபா முத்திரை வரி வேண்டுகிறார்கள். அதற்குரிய நிதிச் சட்டம் அனுமதிக்காமையினால் அதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அந்தப் பணம் அரசுக்குத் திரும்பிப் போகும். ஆனாலும் அதனை நிதியச் சட்டத்தின் மூலம் திரும்ப எடுக்க இடமுண்டு. காலக்கிரமத்தில் இதனைச் செய்வோம்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடி குறை நிறைகளை தீர்க்கும் பணி புத்தாண்டுடன் சரிவரும்- என்றார். (த-8)

## பனை - தென்னை அபிவிருத்திக்கு மாகாண மட்டத்தில் சபை தேவை

யாழ்ப்பாணம், டிசெ. 15

வட மாகாணத்தில் உள்ள பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வசதி கருதி மாகாண சபைக்கு உட்பட்ட பனை - தென்னை அபிவிருத்திச் சபை ஒன்றை உருவாக்க வேண்டுமென்று வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாகாண சபையின் அமர்வில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

தற்போது மத்திய அரசின் கீழ் செயற்படும் பனை அபிவிருத்தி சபை வடக்கில் உள்ள பனை சார்ந்த பொருட்களை சங்கங்களிடம் இருந்து பெற்று வருகின்றது.

வடக்கு மாகாண சபையின் கீழும் இதற்கென சபை ஒன்றை அமைப்பதன் மூலம் மாகாணத்தில் உள்ள பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்ய முடியும் - என்றார். (த -17)

> "_"
> வடக்கு மாகாண சபையின் கீழும் இதற்கென சபை ஒன்றை அமைப்பதன் மூலம் மாகாணத்தில் உள்ள பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்ய முடியும்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் வெள்ளிக்கிழமை நெல்சன் மண்டேலாவை நினைவுகூரும் நிகழ்வு நடத்தப்பட்டது. யாழ்.பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட பதிவாளர் இ.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டு மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் நினைவுப் பேருரையும் மண்டேலா தொடர்பான ஆவணப்படமும் திரையிடப்பட்டது. (த-10)

## மாநகரசபை உறுப்பினராக தில்லையம்பலம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளும்கட்சி உறுப்பினராக கா.தில்லையம்பலம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, ஆணையாளர் எஸ்.பிரணவநாதன், செயலாளர் எம்.தர்மரட்ணம் ஆகியோர் முன்னிலையில் பதவிப் பிரமாணம்செய்து கொண்டார்.

ஆளும் கட்சியின் உறுப்பினராக இருந்த கோமகன் சபையின் அனுமதியின்றி மூன்று கூட்டங்களுக்குச் சமூகமளிக்காததை அடுத்து அவர் உறுப்பினர் பதவியை இழந்துள்ளார். இதனையடுத்து கா.தில்லையம்பலம் புதிய உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதை தெரிவத்தாட்சி அலுவலர் அறிவித்துள்ளதை அடுத்து தொடர்ந்து நேற்று முன்தினம் அவர் உறுப்பினராகப் பதவியேற்றுக் கொண்டார். (த-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரால் தமிழர் மீது இன அழிப்புப் போர்

## காணாமற் போனவர்களின் உறவுகள் மனுவில் தெரிவிப்பு

மன்னார், டிசெ.15

மௌனமான இன அழிப்புப் போர் படையினரால் தமிழர்கள் மீது தற்போது தொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மன்னாரில் காணாமற் போனவர்களின் உறவுகளால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கவென மன்னார் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு வன்செயல் இந்த நாட்டில் ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை பெருந்தொகையான தமிழர்கள் இந்த நாட்டில் காணாமற் போயுள்ளனர்.

இவர்களுள் ஆயுதப் படைகளால் கைது செய்யப்பட்டு, அழைத்துச் செல்லப்பட்டவர்கள், அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டோர், பொலிஸாராலும், ஆயுதப்படையினராலும் விசாரணைக்கென்று அழைக்கப்பட்டதன் பேரில், தாமாக படை முகாம்களுக்கும், பொலிஸிற்கும் சென்றவர்கள் எனப் பல வகைப்பட்டோர் அடங்குகின்றனர்.

மேலும் வன்னிப் போரின் போது வன்னியில் குடியிருந்தவர்களாக அரச பதிவேடுகளில் காணப்பட்டவர்களின் தொகைக்கும் போரின் பின் முகாம் களில் தடைப்படுத்தி வைக்கப்பட்ட மக்களின் தொகைக் கும் இடையில் காணப் படும் வித்தியாசம் 1,46,000 பேருக்கும் மேலானதாகும்.

இந்த 1,46,000 பேரும் காணாமற் ஆக்கப்பட்டவர்களுள் அடங்குவர். இவர் களுள் எமது மன்னார் மாவட்டத்தில் காணாமற் ஆக்கப்பட்ட எமது உறவுகளும் அடக்கப்பட்டுள்ளனர்.

காணாமற் போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவிடம் விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இவர்களை மீட்கும் முயற்சிகள் தொடர்ந்த போதிலும், அவை பயன் தராததால் நாங்கள் கண்ணீரும் கவலையுமாக வாழ்ந்து வருகிறோம்.

இந்த இழப்புக்களுக்குக் காரணமான போரும், அதனை முன்னெடுத்த அரசும் அப்பாவி மக்களின் இந்தக் கவலை களை யிட்டு எந்தவித அக்கறையுமில்லாதுள்ளனர்.

இவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? என்பதைக் கூட மூடி மறைத்து எங்களை அங்கலாய்ப்பில் தவிக்க விட்டுள்ளனர்.

எம்மால் இழக்கப்பட்ட இந்த உறவுகள் பற்றிய எமது கவலையைத் திசை திருப்பவோ என்னவோ அரசு எம்மீது வேறு பல சுமைகளைத் தொடர்ந்து சுமத்தி வருகிறது.

மீளக்குடியமர்ந்தவர்களுக்கு உரிய நிவாரணமோ, வேலை வாய்ப்புக்களோ வழங்கப்படவில்லை.

பல நூற்றுக்கணக்கானோர் அவர்களது சொந்த நிலங்களில் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படாது காடுகளிலும் வளமற்ற தரிசு நிலங்களிலும் அந்தரிக்க விடப்பட்டுள்ளனர்.

காணியுரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதுடன் வளமான நிலங்கள் இராணுவத் தேவைக்கும் தென்பகுதி மக்களின் குடியேற்றத்துக்குமாக கையகப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் மீனவர்களின் பாரம்பரிய கடற்கரையோரங்களில் படையினரின் உதவியுடன் வேற்றிடத்தவர்கள் குடியமர்த்தப்பட்டு தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் சூறையாடப்பட்டுள்ளது.


தமிழ்ப் பகுதிகளில் அதிகரித்த இராணுவ பிரசன்னத்தை ஏற்படுத்தி மக்களது இயல்பு வாழ்க்கை முடக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வீடுகளும், வணக்க ஸ்தலங்களும் படைத் தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டு போர் முடிந்த பின் னரும் அகதி வாழ்க்கை வாழும் அவல நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் அன்றாட பொது விடயங்களில் கூட படைத் தரப்பின் தலையீடு இருப்பதால் மக்களின் இயல்பு நிலை முழு மையாகத் தடைப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக ஓர் இன அழிப்பு மௌனப் போர், படைத் தரப்பு மூலம் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் துன்பத்தை நீக்க நாட்டின் அதி உயர் அதிகாரத் தலைவராகிய தாங்கள் உண்மை நிலையைத் தெளிவுபடுத்தி எமது அவலத் துக்கு முற்றுப்புள்ளி வைக் குமாறு பணிவுடன் இரந்து வேண்டுகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-12)




வவுனியா பசார் வீதியில் காணப்பட்ட 150 ஆண்டுகள் பழைமை வாய்ந்த வாகை மரம் வீதிக்கு இடையூறாகக் காணப்பட்டதாகக் கூறி தறித்து வீழ்த்தப்பட்டுளது.
இந்தப் பகுதியில் நிழலை வழங்கிக் கொண்டிருந்த இந்த மரம் தறித்து வீழ்த்தப்பட்டமை இந்தப் பகுதி வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் இங்கு வருகை தரும் மக்களுக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. (க-421)

## முத்துஜயன்கட்டு குளத்தை புனரமைக்க அதிக நிதி

கிளிநொச்சி,டிசெ.15

முல்லைத்தீவு முத்துஐயன் கட்டுக் குளத்தை புனரமைப்பதற்குச் சுமார் தொள்ளாயிரத்து ஐம்பது மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப் பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான முத்து ஐயன் கட்டுக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் நீண்டகாலமாக கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குளத்தைப் புனரமைப்பதற்கு சுமார் 950 மில்லியன் ரூபா தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் புனரமைப்புத் திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்தக் குளம் புனரமைக்கப்பட்டால் சுமார் 6 ஆயிரத்து 150 ஏக்கர் நிலப் பரப்பில் இரண் டாயிரம் வரையான விவசாயக் குடும்பங்கள் நன்மையடையும் வாய்ப்புக்கள் உண்டு எனவும் தெரிவிக்கப் பட்டுள் ளது.

இதேவேளை இந்தக் குளத்தின் கீழ் மேட்டு நிலப் பயிர்செய்கை மேற்கொள்வதற்கும் வாய்ப்புக் கள் உள்ள போதும், குளம் புனரமைக்கப்படாமையால் மேட்டு நிலச் செய்கையும் கைவிடப் பட்டுள் ளது.

எனவே குறித்த குளத்தைப் புனரமைத்துத் தமது வாழ் வாதாரத்தை மேம்படுத்த வழி வகை செய்ய வேண்டும் என இப்பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 19 பெரும் குளங்களில் முத்தையன்கட்டு குளம் தவிர ஏனைய குளங்கள் புனரமைப் புக்குத் தெரிவு செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)


# மரண அறிவித்தல்

## திருமதி சிவகங்காதேவி இராமலிங்கம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகங்காதேவி - இராமலிங்கம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை- இராமலிங்கத்தின் (தியாகு வாத்தியார்) அன்பு மனை வியும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி, கமலாலயம் தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற வர்களான சபாபதிப்பிள்ளை -நாக முத்து தம்பதியரின் அன்பு மருமகளும், திருமதி மாணிக்கம் - சிவ பாக்கியம், இளையதம்பி வாமதேவன் (கோலாலம்பூர், மலேசியா) ஆகியோரின் அன்புச்சகோதரியும், சுந்தரேஸ்வரி (சந்திரா) - பாலசுப்பிரமணியம், சுந்தரேசன் (சூரி-கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (அரசு), திருமதி சேரா- சுந்தரேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற ஜெயரூபி மற்றும் சிவரூபி - தட்சணாமூர்த்தி (கனடா), முரளி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அருஷ்ணா, அஸ்வினியா (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2013) திங்கள்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாணிக்கந்தோட்டம், மூளாய்.
தொ.பே. 077 3108959

தகவல்: குடும்பத்தினர்.
(பா. சுந்தரேஸ்வரி)



# அஞ்சலிக்கின்றோம்!!!



தோற்றம் 17 . 08 . 1909 மறைவு 14 . 12 . 1979

அமரர் பொன்னுசாமி நாகலிங்கம்
திதி : கார்த்திகை ஏகாதசி



தோற்றம் 08 . 08 . 1930 மறைவு 01 . 12 . 2009

நாகலிங்கம் மனோன்மணி
திதி : கார்த்திகை சதுர்த்தசி

முன்னறி தெய்வமாகி முழுமையும் எமக்காய் ஈந்து
விண்ணகத்தே வாழும் உங்கள் நினைவுகள் என்றும் நீங்கா!

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(சி/14391) (7.6.3)



# எட்டாம் ஆண்டு நினைவுச் சங்கமம்



அமரர் உயர்திரு

## செல்லையா தம்பித்துரை

(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார், கொழும்பு துறைமுக அதிகாரசபை அத்தியட்சகர், மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபை உபதலைவர்)

திதி:திரயோதசி

மண்மகிழ
08.06.1931

கண்நெகிழ
14.12.2005

கண்ணியம் மிக்க கருணையால் வளர்த்தீர்
காட்டியே ஒழுக்கமும் பண்புறத் துலக்கி
நண்ணி நின்றொரு தந்தையாய்த் தெய்வமாய்
நாளும் பொழுதும் விரும்பிய தளித்தீர்
எண்ணி மகிழ்கையி லுயிர் பிரிந்ததுவே
ஏங்கித் தளர்ந்தும் தெளிவொன் றில்லையே
புண்ணியக் கொழுந்தே நினைவினில் நிறைந்தீர்
கண்மழை நீராய்க் கரைகிறோம் உயிரே

குடும்பத்தினர்.
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(42614)(5.6.1)



# மரண அறிவித்தல்

## மிக்கேச்பிள்ளை ஞானமுத்து

(மேற்பார்வையாளர் துறைமுக அதிகாரசபை, திருகோணமலை)



முல்லைத்தீவு, அளம்பிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மிக்கேச்பிள்ளை ஞானமுத்து 12.12.2013 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிசிலியா சிவக்கொழுந்தின் மனைவியும், ஞா.ஜெபநேசன் (அதிபர்-மு/இரணைப்பாளை றோ.க.ம.வி), திருமதி த. ஜெஸ்மின் சியாமிளா, அ.ஜெஸ்மின் மஞ்சுளா (கனடா), யூ.ஜெஸ்மின் சர்மிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.12.2013) ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.00 மணியளவில் அளம்பில் சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளம்பில்,
முல்லைத்தீவு.

தகவல்: குடும்பத்தினர்.
077 364 0388

(42634) (108)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



Best Wishes

இன்று மணிவிழா காணும் றோட்டறிக் கழகத்தில் இணைந்து மிக நீண்ட காலமாக மக்களுக்கு மனமுவந்து சேவையாற்றிவரும் றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவரும், 1994, 1995 ஆம் ஆண்டுக்கான சிறந்த றோட்டறிக் கழகத் தலைவர் விருதினை வென்ற

MERGER DONOR PHF Rtn

## திரு. ஈ. சரவணபவன்

அவர்களை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ்ந்து இன்னும் பல வெற்றிகளையும் விருதுகளையும் பெற்று மக்களுக்கு சேவையாற்றி வாழ்வாங்கு வையத்தில் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**யாழ். றோட்டறிக் கழக நண்பர்கள்**

---

**உதயன்** வித்தாகி, முளைவிட்டு, அரும்பாகி, பூவாகி, காயாகி, கனி தந்து நிற்கும் காலம் முழுவதிலும் -

அதற்கு நீர் தந்து, உரமூட்டி உயர்ந்து வளர்வதற்காய் அல்லும் பகலும் உழைத்து வரும்

எமது நிர்வாக இயக்குநருக்கு இன்று அகவை அறுபது 60



## ஈஸ்வரபாதம் சரவணபவன்

என்றும் போல் மெய்வருத்தம்
பாராது கண் துஞ்சாது உதயனின்
உயர்ச்சிக்கு அவர் இளைஞனாய் உழைக்க
இறை அருள் கிடைக்க
இறைஞ்சுகிறோம்

எமது இனத்தின் அரசியல்
கையறு நிலை நீங்கிட
ஊடகப் பணி செவ்வியதாய்
தொடர்ந்து உயரட்டும்

- ஆசிரியர் பீடத்தினர்.

---

# இந்துவின் மைந்தனே வாழ்க நீ பல்லாண்டு



இந்து அன்னையின் புகழ் பூத்த பழைய மாணவனும் அன்னையின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் அகமகிழும் அன்புக்குரிய கௌரவ

## ஈ.சரவணபவன்

அவர்களின் அறுபதாவது அகவையில் மேன்மேலும் மிளிர வாழ்த்துகின்றோம்

Wish You Happy Birth Day

15.12.2013

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.**
**பழைய மாணவ நண்பர்கள்,**
**யாழ்ப்பாணம்.**

---

# மணிவிழா வாழ்த்து



எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பின் அதிஉயர் விருதினைப் பெற்று ஊடகத்துறைக்கும் தனக்கும் பெருமை சேர்த்துள்ள இலங்கைச் செய்திநாளேடான **உதயனின்** பிதாமகனும் இனவாத அநீதிகளுக்கு எதிராகப் போராடும் தமிழ் மக்களின் பிரதிநிதி கௌரவ

## ஈஸ்வரபாதம் சரவணபவன்

அவர்களை அகவை அறுபதில் வாழ்த்துவதோடு அவரது பணி மேன்மேலும் எம்மக்களுக்கும் இந்த நாட்டுக்கும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
**மேலைக் கரம்பன் ஸ்ரீபதி குடும்பம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, கந்தர்மட சனசமூக நிலையத்துக்கு அண்மையில் 1.5 பரப்புக் காணி விற்பனைக் குண்டு.

(சி10228) (12.6.3) தொடர்பு: 077 348 4467

## கட்டார் நாட்டிலுள்ள சூப்பர்மார்கெட்டில் உடனடி வேலைவாய்ப்பு

| Job Category | Qty | Salary QR | Salary RS |
|---|---|---|---|
| காஷியர் (Cashier) | 10 | 1100.00 | 40,150/= |
| ரொழிபோய் (Trolly Boy) | 10 | 800.00 | 29,200/= |

1 QR = Rs. 36.50

**நிபந்தனைகள் & சலுகைகள் :**

- தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதி வழங்கப்படும்.
- உணவு வழங்கப்படமாட்டாது
- 2 வருட ஒப்பந்தம்
- காஷியருக்கு 3 மாதங்களுக்குப் பின் 200 QR வழங்கப்படும்
- இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும். வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம்
- கிழமைக்கு ஒரு நாள் லீவு.
- எனைய நிபந்தனைகளும், விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

வீசா கிடைத்த பின்னரே கட்டணம் அறவிடப்படும்



ஒரு கிழமையில் விசா பெற்றுக்கொடுக்கப்படும்

**INTERVIEW 17,18 December 2013 | AT OUR OFFICE**

பாஸ்போர்ட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வரவும்

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் அறவிடப்படும்.

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY
றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இல. 287-1/2, ஹவ்லொக் றோட், கொழும்பு - 06. (மயூரா அம்மன் கோயில் எதிராக)
Tel : 0112552598|0773074744|0718126094
E - Mail : rodneyrayan@hotmail.com

max adz

## விற்பனைக்கு

Food City மற்றும் நிறுவனங்கள் பயன்படுத்தக்கூடிய Computer Till மற்றும் ஜெனரேற்றர் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:077 292 8573 (42628)(4.6.3)

## கடை,வீடு,காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு,கீரிமலை வீதியில் நான்கு கடைத்தொகுதி உடன் கூடிய மேல்வீடும் மேலும் 10 பரப்பு வயல், 35 பரப்பு காணி கீரிமலை வீதியில் கிணற்றுடன் கூடிய நான்கு பரப்பு காணி,மற்றும் வல்வைச்சந்தை தீருவில் வீதியில் நான்கு அறை கொண்ட வீடும் விற்பனைக்குண்டு

தொடர்பு :
Shan - 077 027 8937 ( இலங்கை )
மரியநேசன் - 416 839 7896 ( கனடா )
Email : GNANAM70@HOTMAIL.COM

max adz

## வீடு விற்பனைக்கு

52, மாட்டீன் வீதியில் அமைந்துள்ள ஒரு பரப்புக் காணியுடன் 5 அறைகள், சமையலறை, பெரிய ஹோல், 2மலசலகூடம் (கொமேட் வசதியுடன்) மற்றும் சகல வசதியும் கொண்ட வீடு விற்பனைக் குண்டு. புகையிரத நிலையத்துக்கும் யாழ். பிரதான வீதிக்கும் மத்தியில் அமைந்துள்ளது.

(40890)(4.6.3) தொடர்பு:இ.சௌந்தரநாயகம்
021 222 6056, 0044 7956 391527(Sam)

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனத்துக்கு நிரந்தர **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்** யாழ்.நகரில் வேலை செய்வதற்கு உடன் தேவை. OIC-2, ISO-16 பேர்

வயது 18-55

முன் அனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை

**சம்பளம் 20000/=-30000/= வரை**

**நேர்முகப் பரீட்சை யாழ் நகரில்**

தொடர்பு:071 244 6926 (42676)(4.6.3)

## Notice to Sri Lankan Chartered Students

Commencement of Strategic Level – Classes in Jaffna

Basic discussion about Strategic Level subjects, class timetable and Chartered Institute requirements for the exam

Date: 16th December 2013 [Monday]
Time: 10.30 am
Venue: K-AIMS Jaffna

K-AIMS 147- 2/2 K.K.S Road [Top of DFCC Bank]
0773 722 104

(சி.10220)(6.3)

All CAB – II Passed Candidates are expected to participate.

## Hp, Sony, Acer, Samsung, Toshiba, Dell

**போன்ற மடிக்கணினிகளின் உதிரிப்பாகங்கள் மாற்றித்தரப்படும்/ திருத்திக் கொடுக்கப்படும்.**

**ipad, Tablet PC, iphone** களின் தொடுதிரைகள் (**Touch Screen**) **China,** மற்றும் வேறு எந்த நாட்டு உற்பத்தியாயினும் திருத்திக் கொடுக் கப்படும். இவற்றுடன் கணினிகள் திருத்திக்கொடுக்கப்படுவதுடன் Service செய்தும் தரப்படும். புதிய கணினிகள், மடிக்கணினிகள், உதிரிப் பாகங்கள் உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.

நாட வேண்டிய இடம்: **iBuy Computers,**
இல.75/10, முன்னொழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
iBuy Computers@live.com
தொலைபேசி இல: 077 707 2092/021 320 2411 (12620)(12.6.3)

## DUTCH(Netherlands)

மொழியை இலகுவாக கற்கவும் Embassy இனால் நடத்தப்படும் விசாவுக்கான பரீட்சையில் சிறப்பாக சித்தியடையவும் நெதர்லாந்து நாட்டிலிருந்து வருகை தந்த ஆசிரியரினால் Audio,Video மற்றும் தமிழ் விளக்கங்களுடன் கற்பிக்கப்படுகிறது

**Netherland** அரசாங்கத்தினால் **April - 2012** லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள **M.V. V** வீசா பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கமைய புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது ஏற்கனவே **Netherland** தூதரக பரீட்சையில் சித்தியடையாதவர் களுக்கும்,கூடிய கவனம் தேவைப்படுகிறவர்களுக்கும் விசேட வகுப்புக்களும் மாதிரிப் பரீட்சைகளும் தமிழ் விளக்கத்துடன் உண்டு

மாணவர்கள் கவனத்திற்கு : இலங்கையில் போலியான ஆசிரியர்கள் இருப்பதாக எமக்கும் Netherland தூதரகத்திற்கும் தகவல் கிடைத்துள்ளது எனவே உங்களது ஆசிரியரை தெரிவுசெய்ய முன் நெதர்லாந்திலிருந்து உங்களை Sponsor செய்பவர் மூலம் நீங்கள் தெரிவுசெய்யும் ஆசிரியருடன் Dutch மொழியில் பேசி அவர் உத்தரவாதம் மிக்கவரா ? என்பதை உறுதிப்படுத்திய பின்னர் கற்கை நெறியை மேற்கொள்ளுங்கள். இதனால் உங்கள் பணம், நேரத்தை மீதப்படுத்தலாம்.........


Netherland தூதரகத்தினால் நீண்ட கால நன்மதிப்பை பெற்ற ஒரே International Language Academy

குறிப்பு : இலங்கையில் எமக்கு வேறு கிளைகள் கிடையா, குறிப்பாக யாழ்ப்பாணத்தில் எமக்கு கிளைகள் எவையும் இல்லை.

**Dutch Lanka Academy**
#69 -2/1,Galle Road,Dehiwala(Colombo).
Tel : 0777251332,011 271 8811

நெதர்லாந்து தூதரக பரீட்சையில் சித்தியடைவதற்கு 100 % உத்தரவாதம் அளிக்கப்படும். **Condition Apply

max adz



**Panasonic**

# நாடு முழுவதும் விநியோகஸ்தர்கள் தேவை



நுகர்வோர் மின் சாதனங்கள், வீட்டு உபகரணங்கள், பட்டறிகள், மின் குமிழ்கள் என்பனவற்றிற்கு பல நாடுகளில் உயர் சந்தையை உடைய, உலகப் புகழ்பெற்ற பனசொனிக் நிறுவனமானது நாடு முழுவதும் விநியோகிஸ்தர்களை எதிர்ப்பார்க்கிறது.

தேவையானவை

- ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக வங்கியிடம் இருந்து உத்தரவாதம்.
- விற்பனை பொருள்களை வைத்திருக்கக் கூடிய தகுதிவாய்ந்த இடம்.
- விநியோகத்திற்கான விற்பனை உத்தியோகஸ்தர்கள், வாகனங்களை வழங்கும் வசதி .

தெரிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் சொப்ட்லொஜிக் சில்லறை வியாபார (தனி) நிறுவனத்துடன் பனசொனிக் பட்டறி மற்றும் மின்குமிழ்களை விநியோகம் செய்ய உரிமம் அளிக்கப்படுவர்.

கீழ்காணும் முகவரிக்கு தங்கள் விண்ணப்பங்களை இவ் விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் அனுப்பவும். மேலதிக தொடர்வுகளுக்கு 0771 014 728

அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள்

**Asst. General Manager**
Softlogic Retail (Pvt) Ltd.
4 th Floor, Laxman's Building,
321 Galle Road, Colombo 03.
E-mail: amila.silva@softlogic.lk

softlogic BEST IN THE BUSINESS

(C 10219)(10.6)

## UNION PVC

## விற்பனைப் பிரதிநிதி தேவை

**UNION** பி.வீ.சி குழாய்கள் உற்பத்தி செய்து நாடு முழுவதும் சீரான கட்டமைப்புடன் விநியோகித்து வரும் எமது நிறுவனத்துக்கு, இத்துறையில் அனுபவமும் திறமையும் உள்ளவர்களிடமிருந்து யாழ். மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் விற்பனை பிரதிநிதியாக (கம்பனி) தொழில் பார்ப்பதற்கு, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியான வர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சகல வசதிகளுடன் கவர்ச்சிகரமான கமிஷன் மற்றும் சம்பளத்துடன் உடனடியாக வேலைக்கு அமர்த்தப்படுவார்கள்.

- ★ விண்ணப்பதாரிகள் மோட்டார் சைக்கிள் ஓட்டு வதற்கான அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் அவசியம்
- ★ தங்களது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பங்களை உடனடியாகக் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
- ★ தயவுசெய்து விளம்பர திகதியில் இருந்து 7 நாள் களுக்குள் விண்ணப்பிக்கவும்.

ஆளணி முகாமையாளர்
**UNION PVC Industries (Private) Ltd,**
இல.311, பழைய சோனகத் தெரு, கொழும்பு - 12.
(சி.10225) (6.3.45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசைகாட்டி கலை இலக்கிய மன்ற ஆரம்ப விழாவும் கருத்தரங்கும்

திசைகாட்டி கலை இலக்கிய மன்ற ஆரம்ப விழாவும் கலை இலக்கியக் கருத்தாய்வும் பருத்தித்துறை வீதி. 175 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள திசைகாட்டி குறூப் தலைமைக் காரியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக திசைகாட்டி குறூப் தலைவர் எஸ்.செல்வராசா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக பிரதம நிறைவேற்று அலுவலர் எஸ்.சொரூபா. திசைகாட்டி குறூப் உப தலைவர் ஏ.பிரவீனா ஆகியோர்கலந்து கொள்வர். (ந)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



முத்தமிழ் கலையரசு

அமரர் நாராயணர் முருகையா

மண்ணிற்கு 17.03.1932 — விண்ணிற்கு 15.11.2013

அத்தன்போல் எமைவளர்த்த
அன்பு அறிவுப் பெட்டகமே!
முத்தமிழின் கலையரசே
முதுபெருநற் பாவேந்தே!
இத்தரை நீங்கிச் சொர்க்கம்
ஏகிய தங்கள் பாதம்
சித்தத்தில் ஏத்தி என்றும்
சிரந்தாழ்ந்து போற்றி உய்வோம்.

"வாழ்வின் ஜீவன் காதலே" பாடலோடு எம் பெரியக்காவின் இதயம் நுழைந்து, வாழ்வில் இணைந்து, "கொம்பியூட்டர் நாராயணமூர்த்தி" முதலாம் மேதைகள் ஐவரைப் பெற்றெடுத்த, பேரறிவுப் பெரியோனே, நம் அனைவர்க்கும் "வளர்த்த தந்தை" தாங்கள் அல்லவா?

ஒரு ஞானியின் கோலம்தாங்கி, தாயகம் வந்து தாங்கள் தரிசனந் தந்தது இத்தனை விரைவில் எமைவிட்டு நீங்கத்தானா? தங்கள் பூதவுடல்தான் அக்கினியுடன் சங்கமமாகியிருக்கிறதே தவிர, நன்றி மறவாத தங்கள் சீடர்களும், அன்பர்களும், தங்களது புகழுடலுக்குச் சாற்றும் பாமாலைகளும், புகழ் மாலைகளும் நித்திய சிரஞ்சீவியாய் என்றென்றும் தங்களை இப்புவியிலே வாழ வைத்துக்கொண்டிருக்கும். இக உலகில் என்றும் சாந்தியுடன் வாழ்ந்திருந்த தாங்கள், நிரந்தர ஆத்மசாந்தி பெற நாராயணன் திருவடியில் இணைந்த இன்றைய 31ஆவது தினத்தில் எமது ஆத்மார்த்தமான அஞ்சலிகளைத் தங்கள் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.

(42942)(7.8.3)

"பரிமள வாசம்"
தொல்புரம், சுழிபுரம்.

கண்ணீருடன் நினைவு கூருவது
கந்தையா பாக்கியம் தம்பதியரின்
பிள்ளைகளாகப் பிறந்ததால் தங்களை
"பெரியத்தான்" என அழைக்கும் தவப்பேறு பெற்ற
தங்களது அனைத்து மைத்துனர்களும்,
மைத்துனிகளும்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 04.09.1944
உதிர்வு 30.12.2011

அன்பு மகாராசா ஆதிபராசக்தி பாதம்
சென்றின்று ஈராண்டு கண்டோம் -
என்றும்
ஆண்டு பல மேவிடினும்
எம் உள்ளம் உம்மை
மீண்டு நினைவு பெற
நாம் தவறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.
அளவெட்டி தெற்கு.
அளவெட்டி.

(41087)(12.8)



அமரர்
தம்பிமுத்து மகாராசா
(ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை வங்கி)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி முத்துலட்சுமி துரைச்சாமி



கடந்த 17.11.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு திருமதி முத்துலட்சுமி துரைச்சாமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.12.2013) ஞாயிற்றுக் கிழமை கீரிமலை புனித தீர்த் தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் நாளை (16.12.2013) திங்கட்கிழமைமு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எங்கள் வாழ்வின் இன்ப துன்பங்களில் எல்லாம் துணையாக இருந்து வாழ வழிகாட்டிய எம் அம்மாவே, எம்மை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தியவேளை எம்துயரில் பங்கு கொண்டு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோருக்கும், அத்தருணத்தில் இந்நிகழ்வில் பங்குகொள்ள முடியாமல் தவித்த உள்ளூர் மற்றும் வெளியூரில் இருந்து தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறிய உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

7ஆம் கட்டை,
சண்டிலிப்பாய்.


(42562)(12.3.6)

பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.

## ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

இரண்டாம் ஆண்டு நினைவு — எட்டாம் ஆண்டு நினைவு



அமரர்
புண்ணியமூர்த்தி முருகையா
(பத்தர்)

அமரர்
முருகையா சுரேஸ்குமார்
(பத்தர்)

பிறப்பு:- 19.02.1944
இறப்பு:- 09.12.2011

திதி: 15.12.2013

பிறப்பு:- 13.04.1968
இறப்பு:- 07.12.2005

71, பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


(41085)(2.6)

- குடும்பத்தினர்.

## இரண்டாம் வருட நீங்கா நினைவலைகள்

அமரர்
பண்டிதர் முருகேசு ஆனந்தசிவம்
(முன்னாள் உரிமையாளர், கொடிகாமம், குளோபல் தொலைத்தொடர்பகம் - எருவன் வரணி)

அமரர்
திருமதி உமையம்மை சிவபாதம்
(ஓய்வுநிலை மருந்தாளர் எருவன் வரணி (குடும்பசிட்டி))



திதி: அபரபக்க சதுர்த்தசி 29.12.2013

மலர்வு 1949.03.28 — உதிர்வு 2011.12.08
மலர்வு 1944.04.08 — உதிர்வு 2011.08.26


அக்காவின் பாசவலை தம்பியையும் ஈர்த்ததுவே!

இத்தியடிப் பிள்ளையார் கோயிலடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்:
பராசக்தி ஆனந்தசிவம்,
குடும்ப உறவுகள்.

(33035)(12.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதன் முறையாக
PHOTOBOOKS
ஸ்ரீ லங்காவில் தயாரிக்கப்படுகிறது

- இலகுவான பாரமில்லா நிழற்பட புத்தகம்.
- பல்வேறுவிதமான முன்அட்டைகள் மற்றும் கட்டும் தெரிவுகள்.
- பரந்த தெரிவுடன் உயர்தர பரிமாணங்கள்.
- நீர் மூலம் பாதிப்பு இல்லை.
- தலைமுறையாக நீடிக்கும் அச்சுப்பிரதிகள்.
- கிழிக்க இயலாத புத்தகம்.
- 5"x7" தொடக்கம் 12"x17"வரை அளவுகள்.
- இதில் இரசாயன பொருள்கள் சேர்க்கையில்லாத காரணத்தாலும் மற்றும் வெளிப்படுத்தாத காரணத்தாலும் சூழலுக்கு ஏற்புடையதாகும்

எமது யாழ்ப்பாணத்து வியாபாரபங்காளர்களிடம் பல வகையான மாதிரிகளை பார்வை இடலாம்

Vista Vision Colour Lab,
198/6, Navalar Road,
Jaffna.
Tel 021-2228510

Dot Line Colour Lab,
52, Palaly Road,
Jaffna.
Tel 021-2228443

அழகிய கதைகளை உருவாக்குவது அர்த்தமுள்ள உறவுகள்.
JAMPHOTO தொழில் நுற்பத்தைப்பற்றி மட்டும் அல்ல அது இனிய காவியங்களை உருவாக்குவதைப் பற்றியது.



திருமணங்கள் - விடுமுறைகள் களியாட்டம்- குடும்ப வைபவங்கள்

Powered By hp INDIGO DIGITAL PRESS

JAMPHOTO
நிரந்தர அழகிய கதைகள்
எமக்கு கொடுக்கப்படும் நிழற்படங்களுக்கு பூரண அந்தரங்கமும் உத்தரவாதமும் தரப்படும்

(42625)


## கலை விழாவும் பரிசளிப்பு விழாவும்

நெல்லியடி, டிசெ.15

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் கலைவிழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிறு பிற்பகல் ஒரு மணிக்கு நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி சனசமூக நிலையத்தின் தலைவர் சு.கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நெல்லியடி மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் அ.அரியரத்தினம், சிறப்பு விருந்தினராக நெல்லியடி கிராம அலுவலர் ஜி.சசிக்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-422)

## ஆண்டு நிறைவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், டிசெ.15

கனடா, நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவும் , மலர் வெளியீடும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெடுந்தீவு பிரதேச சபை தேவி கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

எ.அருந்தவசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநரின் பிரதிசெயலாளர் கே.எக்ஸ். செல்வநாயகம், சிறப்பு விருந்தினராக நெடுந்தீவுபல.நோ.கூ. சங்கத் தலைவர் அ.வெ. அரியநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில் பாடசாலை, பல்கலைக் கழக மாணவர்களுக்கான உதவிகள், நூல் வெளியீடு, பரிசில் வழங்கல், மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ந-7)


Green Grass Mega Blast Dancing & Musical Show



யாழ்.மண்ணில் முதன் முறையாக இலங்கையில் புகழ்பெற்ற அழகு நடன மங்கையான
"Shashila Perera" உடன் இன்னும் பல நடன தாரகைகள்,
கலந்து சிறப்பிக்கும் மாபெரும் நடன நிகழ்ச்சியும்
சாரங்கா இசைக்குழுவின் இன்னிசை நிகழ்ச்சியும்
இம் மாதம் 28ஆம் திகதி சனிக்கிழமை
மாலை 7.00மணியளவில்
சங்கிலியன் மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.
மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.



Free Dinner Buffet & BBQ

Green Grass Hotel 021 222 4385, 077 780 3210

(அ/14395)(5.6.3)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 146

# புதிதாய்ப் பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய கிருமித் தொற்றுக்கள் (Neonatal Infections)

உலகில் ஒரு வருடத்தில் , 28 நாள்களுக்குட்பட்ட 4 மில்லியன் குழந்தைகள் இறக்கிறார்கள். இறக்கும் 100 குழந்தைகளில், 26 பேர் கிருமித் தொற்றுக்கள் காரணமாக இறக்கிறார் கள். இலங்கையில் ஏறத்தாழ 20 வீதமான பிறந்த குழந்தைகளின் இறப்பு கிருமித் தொற்றுக்களாலேயே ஏற்படுகிறது. குறிப்பாக கடந்த காலத் தகவல்களின்படி, யாழ்ப் பாணத்தில், புதிதாய் பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய கிருமித் தொற்றுக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. பிறந்த குழந்தைகளுக்கு கிருமித் தொற்றுத் தொடர்பாக இக்கட்டுரை விளக்குகின்றது.

பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படும் வியாதிகளின் விகிதாசாரம்.

கிருமித்தொற்றுக்கள் -25%
MAS - 6%
சுவாசப் பிரச்சினைகள்(RDS) - 15%
மூளைக்கு ஒட்சிசன் செல்லாமை(Asphyaia)-11%
பிறவிக் குறைபாடுகள் -6%
ஏனையவை - 31%
என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.


அதேபோல், தாய்க்கும், பிள்ளைப்பேற்று காலத்திலோ, அதற்குப் பின்னரோ கிருமித் தொற்றுக்கள் ஏற்படலாம். உலகில் ஏற்படும் தாய் மரண வீதத்தில் 15 சதவீதம் தாய்மாருக்கு ஏற்படும் கிருமித் தொற்றுக்களால் நிகழ்கின்றன. ஒரு தாய்க்கும் அல்லது அதன் குழந்தைக்கும் பின்வரும் காலங்களில் எந்த காலப்பகுதியிலும் கிருமிகள் தொற்ற வாய்ப்புண்டு.

1. கர்ப்ப காலத்துக்கு முன்னதாக.
2. கர்ப்ப காலத்தில்.
3. குழந்தையை பெறும்போது.
4. குழந்தையை பெற்ற பின் வரும் காலங் களில்.

குழந்தைகள் மிகச் சிறியவர்களாக இருப்பதுடன் அவர்களின் ஒவ்வொரு அங்கங்களும் முதிர்ச் சியடையாது இருப்பதாலும், நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருப்பதாலும், குழந்தைகளுக்கு இலகுவில் நோய்க்கிருமிகள் தொற்ற வாய்ப்புண்டு.

★ குழந்தைகளுக்கு பின்வரும் வகையான கிருமித் தொற்று நோய்கள் ஏற்படலாம்.

1. கண்கள் சிவந்து, வீங்கி, சீழ் வடிதல் (Conjunctivitis)
2. தோலில் ஏற்படும் பருக்கள், சீழ்க் கட்டிகள் (Skin pustules and Abscens)
3. இரத்தோட்டத்தில் கிருமி பரவி முழு அங் கங்களையும் பாதித்தல் (Septicaemia)
4. நியூமோனியா (Pneumonia) போன்ற சுவாசத் தொகுதிக் கிருமித் தொற்றுக்கள்
5. மூளை மென்சவ்வுகளில் கிருமித் தொற்று ஏற்படல் (Meningitis)
6. என்புகளிலும் மூட்டுக்களிலும் கிருமித் தாக்குதல் (Septic arthritis and Osteo mycitis)
7. குடல்களில் ஏற்படும் கடும் கிருமித் தாக்கம் (Necrotising Entero Colitis)
8. சிறுநீரகத் தொகுதி கிருமித் தொற்றுக்கள் (Urinany Tract Infections)
9. தொப்புள்கொடிப் பகுதி சிவந்து, மணத்துடன் சீழ் வரல் (Umblical sepsis)



எவ்வகையான கிருமித் தொற்றுக்களாயினும், அவை ஒரு போதும் தானாக ஏற்படப்போவ தில்லை. ஒருவரிலிருந்தோ, சூழலிலிருந்தோ, உபகரணங்களிலிருந்தோ, காற்றின் மூல மாகவோ அல்லது வாய் மூலமாகவோதான் கிருமிகள் குழந்தைகளை அடையலாம்.

★ கிருமித் தொற்றுக்கு உள்ளான குழந்தைக்கு பின்வரும் அறிகுறிகள் காணப்படலாம்.

1. சோர்வடைதல்
2. காய்ச்சல் காய்தல் அல்லது உடல் குளிர் வடைதல்
3. பாலருந்தாமை
4. வாந்தி எடுத்தல் (குறிப்பாக பித்தம் கலந்த வாந்தி)
5. தோல்களில் சீழ்ப் பருக்கள் ஏற்படல்
6. தொப்புள்கொடிப் பகுதி சிவந்து இருப்பதுடன் மணத்துடன் சீழ் வரல்
7. மூச்சு விடுவதில் சிரமப்படல்
8. சிறுநீர் கழிக்கும் போதும், பின்னரும் தொடர்ச்சியாக அழுதல்
9. மலத்துடன் இரத்தம் போதல்
10. வலிப்பு ஏற்படல்
11. குழந்தை ஒரு பகுதியை அசைக்காமல் இருத்தல் அல்லது ஒரு பகுதியில் வீக்கங்கள் ஏற்படல்
12. தோல் வெளிறிக் காணப்படல் அல்லது மஞ்சள் நிறமடைதல்
13. வயிறு வீங்கி, மினுமினுப்பாகக் காணப் படல்

மேற்குறிப்பிட்ட அறிகுறிகளில் ஏதாவது தென் படின் உடனடியாகக் குழந்தையை வைத் தியசாலைக்குக் கொண்டு செல்லுதல் அவ சியமாகும்.


இனி எவ்வாறு நாம் குழந்தைகளைக் கிருமித் தொற்றுக்களிலிருந்து பாதுகாக்கலாம் எனப் பார்ப்போம். குழந்தைக்கு அது பிறக்கும் முன் னரோ அல்லது பிறந்ததன் பின்னரோ கிருமித் தொற்று ஏற்படலாம். எனவே எக்காலத்திலும், அனைவரும் நியம பாதுகாப்பு முறைகளின்படி (Standard precautions) சுகாதாரத்தையும், தூய்மையையும் பின்பற்ற வேண்டும்.

1. தாய்க்குக் கர்ப்பம் தரிக்க முன்னரோ அல்லது கர்ப்ப காலத்திலோ தேவையான நோய்த் தடுப்பு ஊசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டும்.
2. தாயின் போஷாக்கு பூரணமாக இருத்தல் வேண்டும்.
3. குழந்தைப் பேற்றுக் காலத்தில் வழங்கப்படக் கூடிய அனைத்து மருத்துவ சிகிச்சைகளும் முறையான சுகாதார முறைப்படி வழங்கப்படல் வேண்டும்.
4. குழந்தைப்பேற்றின் போது தாய் தூய் மையாக இருப்பதுடன், குழந்தைக்குப் பயன்படுத்தும் துணிகள், உடைகளைப் புதிய வையாகவும் மிகத் தூய்மையாகவும் வைத்திருத்தல்.
5. குழந்தை பிறந்தவுடனேயே, குழந்தையை தாயின் உடலுடன் தோலுக்குத் தோலாக தொடும் வண்ணம் (Skin to Skin Contact) அரவணைத்து வைத்திருத்தல்.
6. தனித் தாய்ப்பாலூட்டலை (Exclusive Breast feeding) இயன்றவரை மேற் கொள்ளல். ஏனெனில் தாய்ப்பாலில் காணப் படும் IgG போன்ற பதார்த்தங்கள் கிருமித் தொற்றுக்களிலிருந்து குழந்தையைப் பாதுகாக்கின்றது.
7. தனிநபர் சுகாதாரத்தைச் சரியாகப் பின்பற்றல். குறிப்பாக குழந்தையைப் பராமரிக்கமுன் கைகளை நன்றாகக் கழுவுதல் (Hand Washing)
8. இயன்றவரை பலபேர் குழந்தையைக் கையாள்வதை, தூக்குவதைத் தவிர்த்தல். (குறிப்பாக வைத்தியசாலைக்கு பலபேர் வருவதைத் தவிர்த்தல்)
9. சளி, காய்ச்சல் கண்டுள்ள நோயாளிகளுக்கு அண்மையில் குழந்தையைக் கொண்டு செல்வதை இயன்றவரை தவிர்த்தல்.
10. கிருமித் தொற்றுக்கான சிகிச்சையை உடனடியாக வழங்குவதன் மூலம் மற்றோ ருக்கும் பரவுவதைத் தவிர்க்கலாம்.

மேற்கூறப்பட்ட விடயங்களிலிருந்து குழந்தை களுக்கு ஏற்படும் கிருமித்தொற்றுக்கள் எவ் வளவு தூரம் பாரதூரமானவை என்பதையும், அவற்றை நாம் இலகுவில் தவிர்க்க முடியும் என்பதையும் அறியலாம். அனைவரும் வைத்திய ஆலோசனைகளைச் சரிவரப் பின்பற்றிக் கிருமித் தொற்றுக்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கலாம்.

Dr.ந.ஸ்ரீசரவணபவானந்தன்
குழந்தை வைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தயசாலை

**தாய்க்கும், பிள்ளைபேற்று காலத் திலோ அதற்கு பின்னரோ கிருமித் தொற்றுக்கள் ஏற்படலாம். உலகில் ஏற்படும் தாய் மரண வீதத்தில் 15 சதவீதம் தாய்மாருக்கு ஏற்படும் கிரு மித் தொற்றுக்களால் நிகழ்கின்றது.**



## சுகாதார இணையத்தளத்தின் மூலம் பயன் பெறுங்கள்

(WWW.Jaffnadiabetic centre.Org)

பொது மக்களிடையே சுகாதார மேம்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட் டிருக்கும் இணையத்தளமான "WWW.Jaffnadiabetic centre.Org" இனை பலரும் பார்வையிட்டு பயன் பெற்று வருகின்றனர். இந்த இணையத்தளமானது,

♥ பல சுகாதாரம் சம்பந்தமான தகவல்கள்.
♥ உடல் நிறையைக் குறைப்பது எப்படி என்பது சம்பந்தமான தகவல்கள்.
♥ பால்வினை நோய்கள் பற்றிய விளக்கங்கள்.
♥ மாணவர்களுக்கு பயன்தரும் பல தகவல்கள்.
♥ சுவையான பல உணவுகளைத் தயாரிப்பது எப்படி என்ற விளக்கங்கள்.
♥ சுகாதாரச் செய்திகள்.
♥ குழந்தை பராமரிப்பு சம்பந்தமான தகவல்கள்.
♥ உங்கள் சுகாதாரப் பிரச்சினைகளை கேள்விகளாக அனுப்பி தெளிவு பெற்றுக் கொள்ளும் வசதிகள்.

இன்னும் பல தகவல்களைத் தாங்கி நிற்கின்றது. இந்த இணையத்தளத்துக்கு அனை வரும் தினமும் சென்று புதிய பல தகவல்களைப் பெற்றுப் பயன் அடையுமாறு யாழ். நீரிழிவு சிகிச்சைப் பிரிவினர் கேட்டுக் கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

**NPWT 6263**எனும் இலக்கமுடைய மோட்டார் ச்சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 518 9131/077 693 4120

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குழி விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 711 1400

## வேலையாள் தேவை

கோயிலைச் சுத்தம் செய்யக்கூடிய வேலையாள் தேவை.

தொடர்பு: 021 492 0435

## கொள்வனவு

சகலவிதமான நெல் வகைகளும் கொள்முதல் செய்யப்படும்.

தொடர்பு: 077 772 2215

## NEW SCIENCE HALL JAFFNA

**2015 A/L PHYSICS**

*நீர் நிலையியல்*

MR. S. சோதிலிங்கம்

ஆரம்பம்: 15.12.2013

SUNDAY 2.15 P.M

## நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 424 4365 (42579)(4.6.3)

## வீடு வாடகைக்கு உண்டு

166/1, நாவலர் வீதி (கலா ஐஸ் ஒழுங்கை)

T.P: 076 607 1275

ச. சிவசோதி (42532)(7.6.3)

## வீடு வாடகைக்கு

பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையில் குளியலறைகளுடன் இணைந்த 3 படுக்கை அறைகளும், வாகனத்தரிப்பிடமும் உள்ள புதிய நவீன வீடு (தளபாட வசதிகளுடன்) வாடகைக் குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 184 6881

## வீடு வாடகைக்குண்டு

கிராமிய சந்தைக்குப் பின்புறம் மலை வேம்படி, அளவெட்டி தெற்கில் வீடு வாடகைக்குண்டு. வியாபார நிறுவனம், களஞ்சியசாலைகள் கூடுதலாக விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 301 3700

## TVகள் மலிவு விலையில்

மிக மிக மலிவு விலையில் SONY பனசோனிக் TVகள் 21"-14,000/=, 29" - 15,000/=, DVD - 3,000/= குளிர்சாதனப் பெட்டிகள், CD, ரேடியோ-கசெற் Box அம்பிளிபயர் என்பன. (42615) (7.6.3)

தொடர்பு: 077 044 0570

சோவி ரேற் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)

56, K.K.S. வீதி, சுன்னாகம்.

## காணி விற்பனைக்கு

இல.6/1, றக்கா வீதியில் ஒரு பரப்பும் 11.4 குழியும் காணி விற்பனைக்குண்டு.

தொ.பே. 075 069 7400 (42608)(7.6.3)

## வீடு வாடகைக்கு

கச்சேரி மற்றும் பிரதான பாடசாலைகளுக்கு அண்மையில் குருசோ வீதியில் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. வாகனங்கள் நிறுத்துவதற்கு இடவசதி உண்டு. (நிறுவனங்களுக்கும் உகந்தது.)

தொடர்பு:071 171 2003/077 934 4786

## Brindhaban Trade Center

அனைத்துவிதமான பாடசாலை உபகரணங்களையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

125A, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

## வாகன பராமரிப்பு சேவை

யாழ்ப்பாணத்தில் ஜப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட உங்கள் உயர்தர வாகனங்களை ஜப்பானின் தொழில்நுட்பத்தின் கீழ் பயிற்சிபெற்ற எமது தொழில்நுட்ப நிபுணர்கள் மூலம் உங்கள் வாகனத்திற்கு பின்வரும் சேவைகளைப் பெறமுடியும்.

- வாகன பரிசோதனை
- வாகன நிலைமை அறிக்கை
- திருத்த வேலைகள், பராமரிப்பு

(42576)(4.6.3)

தொடர்பு:077 331 8815

## காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை, வளன்புரத்தில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 938 4809/077 387 3616

## கடையும் வீடும் வாடகைக்கு

மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தில் பெரிய கடையும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் வாடகைக்குண்டு.

தொடர்பு:021 321 1086, 077 084 5583 (42570)(4.6.3)

## வகுப்பு

பலவருட அனுபவம் மிக்க ஆசிரியரால் தரம்5 முதல் O/Lவரை கணிதம் (தனி/குழு வகுப்புகள்) வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் கற்பிக்கப்படும். தனியார் கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 077 937 0228

## வீடு வாடகைக்கு

விபுலானந்தர் வீதியில், கச்சேரியிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் சகல வசதிகளுடனும் 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொ.பே. 071 259 9569 (42539)(7.6.3)

## வீடு வாடகைக்கு

பண்டாரிக்குளம் மேற்கு ஒழுங்கை நல்லூரில் 3அறை, 2குளியலறை, 2கோல், வாகனத் தரிப்பிடம் உள்ள புதிதாக அமைக்கப்பட்ட நவீன வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 693 9598

## மாடி வீடு வாடகைக்கு

யாழ்.நகர மத்தியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் 10 அறைகள் கொண்ட 3500 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 781 3646

## வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கு, சம்பியன் வீதியிலுள்ள 83ஆம் இலக்க வீடு வாடகைக் குண்டு. (15ஆம், 16ஆம் திகதிகளில் வீட்டைப் பார்வையிட முடியும்)

தொடர்பு: 077 063 0988

## வீடுவளவு விற்பனைக்கு

சித்தங்கேணி சந்தியிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் வட்டுக்கோட்டை றோட்டில் அமைந்துள்ள 3½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 225 0801

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில்1½ பரப்பு நீள் சதுரக் காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.

தொ.பே. 077 636 5937 (42612)(7.6.3)

## வீடு விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெரு, நாவலர் வீதி சந்திக்கருகில் இல.64, மருதடி வீதியில் நிலப் பரப்பு 1.05 காணியில் அமைந்துள்ள விசாலமான வீடு விற்பனைக்குண்டு. 5 அறை, Kitchen, Attach Bathroom, வாகனத் தரிப்பிடம் (Car or van) (நல்லூர் 300 மீற்றர், ... 400 மீற்றர்) பார்வையிடும் நேரம் 9.00am - 6.00pm

தொடர்பு: 077 602 8888



## ஈழத்துச் சிதம்பரம் திருவெம்பாவை

இன்று ஏழாம் திருவிழா – (15.12.2013)

கோயிலிற் கூத்தன்தோன்றி ஐந்தொழில் ஆற்றல்வேண்டும்
மனம் புத்தி சித்தம்
அகங்காரம் அனைத்தும் ஒன்றி
காயில்முக் குமைமும்ஒன்றி திருந்துசாத் விகமேஆகிக்
கூன்றபிறை சூடிக் கூத்தன்
கூத்தாடும் மண்டபத்துள்
நாவிலே உள்ளம்போற்றும் கூத்தனின் நாமம் போற்றி
ஆனந்தம் அடியார் கூட்டம்
அனைவரும் காண வேண்டி
கோயில்முன் தீவளர்த்து கூத்தனைக் கைகள்கூப்பிக்
கண்டனர் விண்டனர் விம்மிநின்றார்
காரைநகரிலே செழும்வளம் ஓங்கக்கண்டார்.

அனுசரணை: தரமான புதிய டிசைன்களில் ஆடைகளைக் கொள்வனவு செய்ய நாடவேண்டிய இடம்

**தனம்ஸ் ரெக்ஸ்ரைல்**

இல.90(22A), நவீனசந்தை, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 8544

---

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்

தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் மார்கழித் திங்கள்

## முழு நிலா நாள் கலை விழா 2013

காலம் : 16.12.2013 திங்கட்கிழமை மு.ப. 9.00 மணி

இடம் : சாவகச்சேரி கலாசார மண்டபம்

தலைவர் : திரு. சு. கிருஷ்ணகுமார் (தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்)

**முதன்மை விருந்தினர்:**

கௌரவ சி.வி.விக்னேஸ்வரன் (முதலமைச்சர்- வடமாகாண சபை)

**சிறப்பு விருந்தினர்கள்:**

கௌரவ சி. சிறிதரன் (நாடாளுமன்ற உறுப்பினர் - யாழ் மாவட்டம்)

கௌரவ பொ. ஐங்கரநேசன் (விவசாய அமைச்சர்- வட மாகாண சபை)

கௌரவ கே. சயந்தன் (வட மாகாண சபை உறுப்பினர்)

உயர்திரு சி. சத்தியசீலன் (செயலாளர், கல்வி அமைச்சு - வட மாகாணம்)

உயர்திரு வ. செல்வராசா (மாகாண கல்விப் பணிப்பாளர் - வட மாகாணம்)

கௌரவ இ. தேவசகாயம்பிள்ளை (தவிசாளர் - சாவகச்சேரி நகராட்சி மன்றம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சாவகச்சேரி. தென்மராட்சி கல்வி வலயம்.

(C/7604)(10.6.3)

---

## ஸ்ரீ லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்

## மீண்டும் யாழ்ப்பாணத்தில் "காங்கேசன்" சீமெந்து

ஸ்ரீ லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் மீண்டும் "காங்கேசன்" சீமெந்தினை யாழ் மாவட்டத்தில் விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளது.

தரமான சீமெந்தினை, நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளையும் சீமெந்துக் கூட்டுத்தாபனம் ஒழுங்கு செய்துள்ளது.

**மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்க:**

திரு.ஆர்.இராஜநாயகம்,
தொ.பேசி எண் - 0213215341, 0771121690

திருமதி.பவானி இராஜகாரியர்,
தொ.பேசி எண் - 0212230828, 0779590771

திரு.எஸ்.குகதாசன்,
தொ.பேசி எண் - 0113030042, 0776589967

ஸ்ரீ லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்,
வேம்பன் லேன்,
உரும்பிராய.

(42533)(10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014 இற்கான புதிய அனுமதிகள்

## BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

10 வருடங்களில் 7500 ற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி பயின்றுள்ளார்கள். 90 % மாணவர்கள் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

**கற்பித்தல் முறை:**

- ★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி, English Concert, முத்தமிழ் விழா, சித்திரக்கைவேலைக் கண்காட்சி, Graducation Ceremony.

### பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம் — 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| யாழ்ப்பாணம் | நீர்வேலி |
|---|---|
| மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் [ஓட்டுமடம் சந்தி அருகாமை] | 1வது மைல் கல் இராச வீதி |
| **கோப்பாய்** | **சாவகச்சேரி** |
| பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி | சாவகச்சேரி Hindu Collgee Primary School அருகாமை |
| **மானிப்பாய் 1** | **அச்சுவேலி** |
| 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி. | ஆதார வைத்தியசாலை அருகாமை |
| **மானிப்பாய் 2** | **சங்கானை** |
| சங்கரப்பிள்ளை வீதி. (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோயிலடி) |
| **சுன்னாகம்** | **வடமராட்சி** |
| Dr. சபாரத்தினம் வீதி சுன்னாகம் | பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. |

British BUSINESS COLLEGE — Where Students Come First

## BRITISH BUSINESS COLLEGE

64, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Tel:077 362 7055, 021 222 4060, 021 222 5796, 077 6646357

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரிட்சை பதிவு நிலையம்.

Registered as an Education & Training Company with the Registrar of Companies- Sri Lanka. Reg. No: P 9718


BANK OF CEYLON BOC Bankers to the Nation

# ஏலவிற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974-ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22 ஆம் பிரிவும் (397ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்.

**கடன் தொடர்பு இல. 71834485 & 72349235**

**சாவகச்சேரி நுணாவில் A9 பாதை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. சீவரட்ணம் கோபிதாசன் மற்றும் திருமதி ரஞ்சிதமலர் கோபிதாசன் ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 30.08.2013 ஆம் திகதி 1826 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 21.08.2013 ஆம் திகதி தினமின, தினகரன், டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல.692 K.K.S. றோட் யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு K.P. பாலகிருஷ்ணன் அவர்கள் 11.01.2014 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

## மேற்குறிப்பிட்ட அட்டவணை

வடமாகாணம் யாழ் மாவட்டம் தென்மராட்சிப் பிரிவில் நாவற்குழி பகுதியில் கைதடி நுணாவிலில் அமைந்த மருதையினார் சட்டியும் ஏனைய பகுதிகளும் என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் A. கமலசேகரம் தயாரித்த 2010.09.26 ஆம் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.4304 இல் துண்டு 1 என விபரித்த 33 லாச்சம் V.C மற்றும் 06 குழிகள் விஸ்தீரணமுடைய எனினும் தற்சமயம் 32 லாச்சம் V.C யும் 14.30 குழிகளும் விஸ்தீரணமுடைய காணியின் தற்சமய எல்லைகளாவன கிழக்கில் தாமோதரம்பிள்ளை பொன்னையாவினதும் சின்னத்தம்பி அருளையாவினதும் பங்குரிமையாளர்களினதும் ஆதனங்களும் வடக்கில் கண்டி றோட்டும் மேற்கில் ஒழுங்கையும் தெற்கில் சுப்பிரமணியத்தின் மனைவி பராசக்தியினதும் சின்னத்தம்பி அருளையாவினதும் ஆதனங்களும் ஆகும். இவை யாவும் F810/227 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி**

**இலங்கை வங்கி,**
**மானிப்பாய் மேற்தரக்கிளை.**

G.சகாதேவன்
கிளை முகாமையாளர்

(சி/14375)(4.6.3)


# JAFFNA ELECTRICALS

**DEALERS IN QUALITY ELECTRICAL & ELECTRONIC ITEMS**

ஆரம்பம் 1969

LG Authorized Dealer for Abans Ltd.

Sole Distributor for KML Cables & Pipes





44 வருட கால வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே நிறுவனம்

கீழுள்ள பொருட்களுக்கு மட்டும் இலவச மின் உபகரணங்கள் வழங்கப்படும்
குறிப்பு:- கையிருப்பு உள்ள வரை மட்டும்

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவும் இலவச மின் உபகரணங்களும் சகல விதமான மின்சார இலத்திரனியல் உபகரணப்பொருட்கள் PVC நீர்குழாய்கள்,நீர்பம்பிகள் முதலியன கூடிய விலைக்கழிவுடனும் இலவச விநியோக சேவையுடனும் பெற்றுக்கொள்ளலாம்.

15.12.2013 தொடக்கம்
31.12.2013 வரை




(C/14333)(2.6)

No: 94(6) Stanley Road Jaffna
Tel: 021 222 2330
Fax: 021 222 4302
Email:- jaffnaelectricals@yhaoo.com
Web:- www.jaffnaelectricals.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வினைமுயற்சி உகந்ததாக இல்லையெனின் விளைவுகள் தலைகீழாகலாம் அல்லவா....?

அர்த்தம் உள்ள நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீதித்துறை, சட்டம் ஒழுங்கு, கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பேண வேண்டும். ஏனைய மதங்கள் மீது சகிப்புத் தன்மை இல்லாத நிலையைப் போக்குவது அவசியம். இவற்றின் பொருட்டு, நல்லிணக்க ஆணைக்குழு வின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும்.

மேற்போந்தவற்றைத் தொட்டுக் காட்டி, இருபத்தெட்டு நாடுகளின் குழுமமான ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை கொழும்பு அரசாங்கம் முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று அந்தத் தீர்மானத்தில் அழுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கம்-நாட்டின் ஜனாதிபதி-நியமித்த சொந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பிரதானமான, முக்கியமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக அசமந்தப்போக்குக் கைக்கொள்ளப்படுவதால்-

ஐரோப்பிய ஒன்றியம் உட்பட அனைத்துலக நாடுகள் அது குறித்துக் கருத்துக்கூற முனைந்திருப்பது குறித்து எவரும் குறைகூறுவது நியாயமற்றது. அதுவும் ஒன்றைச் செய்து ஒன்பதாகக் காட்டும் இலங்கை அரசின் போக்கை பிறர் கண்டுகொள்ள மாட்டார்கள் என்று எண்ணுவதும் அர்த்தமற்றது.

எமது மக்களின் சொந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே, அனைத்துலக நாடுகள் பல வற்றின் அழுத்தங்களைத் தொடர்ந்தே, நல்லி ணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது என்பதனை எவராலும் இலகுவில் புரிந்துகொள்ள இயலும்.

அரசு-ஜனாதிபதி-நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் காட்டப்படும் தாமதம், உள்ளார்ந்த நோக்கம் கொண்டது என்று வெளியார் கருதுவதை தவறு எனக் கொள்ள முடியாது. இன்னமும் மூன்று மாதங்களில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட உள்ள பிரேரணை எந்த வகையில், எந்த வடிவில் கொண்டுவரப்படும் என்பது இப்போது தெரியவராது.

ஆகையால், அதற்கு முன்னதாக, எமது நாட்டு அரசு தானே நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம்-

இலங்கை அரசின் சொந்த (நல்லிணக்க) ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைந்து நடைமுறைப்படுத்துமாறு கோருவதைத் தப்பு என்றோ, தலையீடு என்றோ கருதுவது பொருத்தம் அன்று.

போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகள் முழுமையாகக் கடந்தேகிவிட்டன. போர் நடவடிக்கைகளின்போது தமது குடும்பங்களுக்கும் நண்பர்களுக்கும் என்ன நடந்தது, ஏது நடைபெற்றது என்ற அவல ஆதங் கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்டு. சுதந்திரமான விசாரணை மூலம் அது கண்டறியப்படவேண்டும்.

அத்தகைய ஒரு பொறிமுறை என்று நம்ப வைக் கும் வகையிலேயே, இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவை அனைத்துலக மக்கள் சார்பில் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட்ட அமைப்புகள் நோக்கின; நம்பின.

ஆனால், இலங்கை அரசின் தட்டிக் கழிக்கும் ஏற்புடைத்தற்ற தப்பான போக்கையும், அதற்கான உள்நோக்கத்தையும் மணந்து பிடித்துவிட்டதாலோ என்னவோ, சொந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைந்து நடைமுறைப்படுத்துமாறு அறிவித்துள்ளன; வற்புறுத்துகின்றன.

இலங்கை அரசுக்கு மிக நெருக்கமான நாடுகளில் ஒன்றான ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாசியும் சமகாலத்தில், நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை, காலம் கடத்தாது விரைந்து நடைமுறைப்படுத்துமாறு அறிவித்துள்ளார்; புத்திமதி கூறியுள்ளார் எனலாம்.

இலங்கை மக்களுக்கான அரசியல் தலைமைத்துவம் தனது கையில் உள்ளதால், அனைத்துலகப் பரிமாணங்களை மீறிச் செயற்படலாம் என்ற அரச தரப்பினரின் கெச்சிதம், ஆக்கபூர்வமான பலன்களை, நாட்டுக்கு நன்மை பயக்கும் பெறுபேறுகளைத் தரமாட்டாது.

மந்திரத்தால் மாங்காய் வீழ்த்தும் பலம் தம்மிடம் உண்டு என்று எமது நாட்டு ஆட்சியாளர்கள் கருதுவார்களானால், அது அனைத்துலக நாடுகளில் இருந்து தன்னைத் தனிமைப்படுத்துவதற்கான முதலாவது காலடியாக அமையலாம். யார் அறிவார். காலமே பதில் கூறி ஆகவேண்டும்.

நன்றே செய்வோம், அதனை இன்றே செய்வோம் என்ற வினை முயற்சி இல்லையெனில், விளைவுகள் தலை கீழாக மாறினும் தடுப்பார் எவருமிலர் என்றாகிவிடும் அல்லவா?

# தொங்குநிலையில் தமிழ்-முஸ்லிம் உறவு

அனார்க்கலி

> கல்முனை தமிழ்ப்பிரிவு உப பிரதேச செயலக அமைப்பு விடயம்

கல்முனை தமிழ்ப் பிரிவு உப பிரதேச செயலகத்தை முழு அதிகாரமும் கொண்ட பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தும் விடயத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ள ஆட்சேபனையும், முட்டுக் கட்டையும் கல்முனை வாழ் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், உணர்வுபூர்வமான கொதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 25 வருட காலமாக உபபிரதேச செயலகமாக இயங்கிவரும் இந்தத் தமிழ்ப் பிரிவு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தி, முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக இயங்குவதற்கு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டுமென்ற கோரிக்கை கல்முனை மாநகர சபைப் பிரிவிலுள்ள தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையாகும்.

இந்த உப பிரதேச செயலகம் உருவாக்கப்பட்ட வேளையிலும், அதன் பின்னரும் உருவாக்கப்பட்ட பல உப பிரதேச செயலகங்கள் இன்று முழுமையான பிரதேச செயலகங்களாகக் கண்முன்னே இயங்கி வருகின்றன.

ஆனால் சில சுயநல, அரசியல் இலாபம் கொண்ட அரசியல்வாதிகளின் முட்டுக்கட்டைகளால், கல்முனை மாநகரம் வாழ் தமிழ் மக்களின் முழுமையான பிரதேச செயலகக் கனவு, பகற்கனவாகத் தொடர்ந்து நீடித்த வண்ணமே உள்ளது.

**தரமுயர்த்துவது தொடர்பாக ஆராயும் கூட்டம்**

கல்முனை தமிழ்ப்பிரிவு உபபிரதேச செயலகத்தை முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவது தொடர்பாக ஆராயும் கூட்டமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், செயலாளர் எம்.ரி.ஹஸனலி, பிரதிச் செயலாளரும் கல்முனை மாநகர மேயருமான நிஸாம் காரியப்பர், முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோரும், திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீ.எச். பியசேன, மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் அருண் தம்பி முத்து உட்படச் சிலரும் கலந்து கொண்டுள்ளனர். அதேவேளை அமைச்சர் பி.தயாரத்ன, பிரதி அமைச்சர் சரத் வீரசேகர, மாவட்ட செயலாளர் (அம்பாறை), மற்றும் உயரதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு தரமுயர்த்தலுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளனர்.

**வெளுத்தது சுயரூபம்**

ஆனால் இந்தத் தமிழ் உபபிரதேச செயலகத்தை முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவதற்குக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ஒரு கட்டத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்ய முற்பட்டதுடன், ஏனைய முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களும் அவரைப்பின் தொடர முற்பட்டதாகவும் தகவல்கள் தெரிய வருகின்றன. அதேபோல் இந்தக் கூட்டத்தில் தர முயர்த்தும் தீர்மானத்தை [illegible] வர்த்தமானி அறிவித்தல் [illegible] தாகவும் தெரிய வருகின்றது.

ஆனால், இந்த அலுவலகத் தரமுயர்த்த லால் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே முரண்பாடும், பெரும் விரிசல்களும் ஏற்படக்கூடிய ஆபத்திருப்பதாக முஸ்லிம் காங்கிரஸினர் எடுத்துக் கூறி இம் முயற்சிக்குக் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

**உரிமையையே கோரினோம்**

இந்தத் தகவல்களை ஊடகங்கள் மூலம் அறிந்த கல்முனை மாநகரில் வாழும் தமிழ் மக்கள் பெரும் அதிர்ச்சியும், கவலையும் அடைந்துள்ளனர். முஸ்லிம் காங்கிரஸின் இச் சுயரூபமும், விதண்டாவாதக் கருத்தும் அந்த மக்களைப் பெரும் கொதிப்படையச் செய்துள்ளது.

நாம் கல்முனையைப் பிரித்துக் கேட்கவில்லை. ஏற்கெனவே உருவாக்கப்பட்ட 29 தமிழ்க் கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு நிர்வாகத்தைக் கொண்ட உபபிரதேச செயலகத்தை, அதன் கிராம சேவகர் பிரிவு அடிப்படையில் தரமுயர்த்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுமாறே கோருகின்றோமெனவும் பலர் தெரிவித்தனர்.

**தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் வரலாற்றுத் துரோகம்**

இந்த விடயம் தொடர்பாக அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவிக்கையில்.

12.01.1989 ஆம் திகதி உதவி அரச அதிபர் அலுவலகமாக கல்முனை தமிழ் பிரிவு உபபிரதேச செயலகம் ஆரம்பிக்கப்பட்டது. 29 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவைக் கொண்ட இந்தப் பிரிவில் 2011 ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி 35548 சனத்தொகையும், 90291 குடும்பங்களும், 20841 வாக்காளர்களும் இருந்தனர்.

28.07.1993 இல் இந்த உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தி முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக இயங்க அமைச்சரவை அங்கீகாரமளித்தும் அதனை வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்த கடந்த 25 வருடங்களாக இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் பெரும் வரலாற்றுத் துரோகமாகும். அப்போது கல்முனையிலிருந்து 14 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளுடன் பிரிக்கப்பட்ட சாய்ந்தமருது உபபிரதேச செயலகம் இன்று முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக இயங்குகின்றது.

**தமிழ் மக்கள் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை**

அதேபோல் இறக்காமம், நாவிதன் வெளி போன்ற பல உபபிரதேச செயலகங்கள் தரமுயர்த்தப்பட்டு முழு அளவில் இயங்குகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டமைக்குத் தமிழ் மக்கள் ஆட் சேபம் தெரிவிக்கவில்லை.

அன்று முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பின் இணக்கப்பாடு கண்டே கல்முனை தமிழ்ப் பிரிவு உபபிரதேச செயலகம் உருவாக்கப்பட்டது என்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

இந்த நிலையில் இந்தத் தமிழ்ப் பிரிவு பிரதேச செயலக விடயத்தில் இனவாதம் வெளிப்படுத்தப்படுவது வருந்தத்தக்கதும், கண்டனத்துக்குரியதுமாகும். நாம் எதனையும் பிரித்துக் கேட்கவில்லை, கல்முனை வாழ் தமிழ் மக்களின் உரிமையையே கேட்கின்றோம். இன்று இந்த அலுவலகத்தில் இருநூறுக்கு மேற்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள உத்தியோகத்தர்கள் கடமை புரிகின்றனர். அந்த வகையில் இது தரமுயர்த்தப்படுவதற்கு முற்றிலும் தகுதி பெற்ற அலுவலகம் இதுவாகும், எனத் தெரிவித்துள்ளார்.

**அரசியல் இலாபம் கருதிய செயற்பாடு**

காரைதீவுப் பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா இராசையா இது குறித்துக் கருத்து வெளியிடுகையில்:

"கல்முனை தமிழ்ப் பிரிவு உபபிரதேச செயலக விடயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் இலாபம் கருதியே செயற்படுவதாக எண்ணவேண்டியுள்ளது.

சகோதர சிறுபான்மை இனம் கோரும் தமது உரிமையை கிடைக்கும் தறுவாயில் முட்டுக்கட்டை போட்டுத் தடுக்க முயலும் முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாடு ஆரோக்கியமானதல்ல.

தேசிய ரீதியிலான தமிழ், முஸ்லிம் உறவுக்கும், ஒன்றிணைந்த செயற்பாடுகளுக்கும் பங்கம் விளைவிக்கும் வகையிலேயே முஸ்லிம் காங்கிரஸின் இந்தச் செயற்பாடு அமைந்துள்ளது.

வரையறுக்கப்பட்டு நிர்வாகம் நடைபெற்று வரும் 29 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளையும் உட்படுத்தியதாகவே கல்முனை தமிழ் மக்கள் இந்த உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோருகின்றனர். இது தமிழ், முஸ்லிம் மக்களிடையே நல்லுறவை மேம்படுத்துமே தவிர, எந்தவிதப் பிளவையும் ஏற்படுத்தாது"-என்றார்.

**மக்களுடன் சேர்ந்து போராடுவோம்**

தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) செயலாளர் நாயகம் ஹென்ரிமகேந்திரன் இது குறித்துக் கருத்து வெளியிடுகையில்:

"1977ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலக எண்ணக்கரு உருவானது.

இதன்படி 1989 இல் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டங்கள் காரணமாகவும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மர்ஹூம் அஷ்ரபுடன் பேசி இணங்கிக் கொண்டதன் பேரிலேயே கல்முனை தமிழ்ப் பிரிவு உபபிரதேச செயலகம் உருவானதை மறந்துவிட முடியாது. ஆனால் இன்றுவரை தரமுயர்த்தல் தொடர்பான நியாயமான எமது கோரிக்கையை அரசுகள் நிறைவேற்ற முன்வந்த போதெல்லாம், முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், இன்னும் ஒரு சில முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுகளுடனான நெருக்கத்தைப் பயன்படுத்தித் தடுத்து நிறுத்தும் வரலாறு தொடர்ந்து கொண்டிருக்கிறது. இடையில் ஏற்பட்ட போர்க் காலமும் இவர்களுக்குச் சாதகமாக அமைந்திருந்தது.

எனினும் இன்று கல்முனை தமிழ்ப் பிரிவு உபபிரதேச செயலகத்தை முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தும் சூழல் வந்தபோது முஸ்லிம் காங்கிரஸ் முட்டுக்கட்டையாக நிற்பது தமிழ், முஸ்லிம் நல்லுறவை விரும்பும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே நிரந்தரப் பிரிவை ஏற்படுத்தி விடுமா? என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இந் நிலையில் எமது மக்களின் நியாயமான கோரிக்கையை வெல்வதற்கு அவர்களுடன் சேர்ந்து போராடவும், போராட்டத்தை முன்னின்று நடத்தவும் தயங்கேன்- என்றார்.


**கல்முனை மாநகர சபை**

முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியிலிருக்கும் கல்முனை மாநகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்துணர்வுடன் நீண்டகாலமாக ஒத்துழைத்து வருவதுடன் தொங்கு நிலையில் கூட முண்டு கொடுத்து சபை நிர்வாகத்தைக் காப்பாற்றி வந்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் தமிழ்ப் பிரிவு பிரதேச செயலக விடய நிலைப்பாட்டுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் நிலைப்பாடொன்றை இன்றைய கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எடுக்க முன்வர வேண்டுமெனவும் சிலர் ஆக்ரோஷத்துடன் கருத்து வெளியிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ட்ரொயிட் தொழில்நுட்பத்தில் கொழும்பு பங்குப்பரிவர்த்தனை



கொழும்பு பங்குப்பரிவர்த்தனை செயற்பாடுகளை நேரடியாக அண்ட்ரொயிட் கையடக்க தொலைபேசிகளில் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் புதிய அப்ளிகேஷனை, கூகுள் ப்ளே பகுதியிலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

எந்தவொரு அண்ட்ரொயிட் சாதனத்திலும் இயங்கும் வகையில் அமைந்துள்ள இந்தப் புதிய அப்ளிகேஷன் சந்தைச் சுருக்கம், அ.ப.வி.சுட்டெண் மற்றும் S&P SL 20 சுட்டிகளின் விவரம், வரைபு விவரங்கள், நவீன கைமாறல்கள், அறிவித்தல்கள், விலைப் பட்டியல்கள், இலாப மீட்டிய மற்றும் நட்டமீட்டிய விவரங்கள், பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் விவரங்கள், மற்றும் நாடு முழுவதுமுள்ள பங்குதாரர்களுக்கு விவரங்களை வழங்கும் வகையில் இந்த அப்ளிகேஷன் அமைந்துள்ளது.

இந்த அப்ளிகேஷன் மூன்று மொழிகளிலும் அமைந்துள்ளமை மற்றுமொரு விசேட அம்சமாகும். (த)



## செயற்திறன் சிறப்பு விருதுகள் விழாவில் மஞ்சி பிரகாசிப்பு

சிலோன் பிஸ்கட்ஸ் நிறுவனத்தின் மஞ்சி வர்த்தகநாமம் அண்மையில் இந்தோனேஷியா பாலி நகரில் நடைபெற்ற உலகளாவிய செயற்திறன் சிறப்பு விருதுகள் விழாவில் (GPEA) மிகப்பெரிய உற்பத்திப் பிரிவின் கீழ் Quest for Excellence விருதினை வென்றுள்ளது. சர்வதேச நிறுவனங்களுக்கு இணையான தேவைகளைக் கொண்டிருக்கும் நிறுவனங்களைக் கௌரவப்படுத்தி Quest for Excellence விருது வழங்கப்படுகிறது.

சிறப்பாகச் செயற்படும் நிறுவனங்களை அடையாளப்படுத்தி வழங்கப்படும் இச் சர்வதேச விருதினை வென்றுள்ளமை குறித்து நாம் பெருமையடைகிறோம். CBL ஆகிய நாம், தொடர்ச்சியாக எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை இனங்கண்டு வருவதுடன், ஆண்டுதோறும் சர்வதேச அளவில் நடைபெறும் உணவு மற்றும் குடிபானங்கள் கண்காட்சிகளில் பங்குபற்றி வாடிக்கையாளர்களின் சுவைகள் மற்றும் நவீன போக்குகள் குறித்து அறிந்து வைத்துள்ளோம். இந்த நெகிழ்வுத்தன்மை மற்றும் தரம் குறித்து அதிக கவனம் செலுத்தி வருவதன் காரணமாக CBL இற்கு இவ் அங்கீகாரம் கிடைத்துள்ளது என சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் தர உறுதிப்பாட்டுப் பிரிவின் பொது முகாமையாளர் அனுர செனரத்ன தெரிவித்தார்.

ஆசிய பசுபிக் தர அமைப்பின் (APQO) மூலம் முன்னெடுக்கப்படும் சிறந்த வணிக செயற்பாடுகளுக்கு சர்வதேச அளவில் அங்கீகாரம் கிடைக்கும் நிகழ்வாக GPEA விளங்குகிறது. இவ் விருதானது வேகமாக மாறி வரும் உலகச் சந்தையை வெற்றி கொள்ளும் வகையில் நிறுவனங்களின் செயற்திறன் மற்றும் உபாயங்களை மேம்படுத்துகின்றது. இந் நிகழ்வு போட்டிகரமான உலக வர்த்தகத்தை வெற்றி கொள்ளவும், நிலையாகப் பேணவும் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்கான ஊக்குவிப்புக்களையும் வழங்குகிறது. 2000ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு பிரிவுகளின் கீழ் 127 நிறுவனங்கள் இவ் விருதுகளை வென்றுள்ளன. கடந்த 2010ஆம் ஆண்டு நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் சேவைகள் உள்ளடங்கிய நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயற்பாடுகள் மீதும் கவனம் செலுத்தும் வகையில் ஆசிய பசுபிக் தர விருதானது உலகளாவிய சிறப்பு விருதுகள் என மாற்றம் செய்யப்பட்டது. (த)

## தகவல் தொழில்நுட்ப கல்வியகத்தின் புதிய மாணவர்கள் குழு தெரிவானது

SLIIT
COMPUTING | BUSINESS | ENGINEERING

தகவல் தொழில்நுட்பம், வர்த்தகம் மற் றும் பொறியியல் துறைகளில் பட்டதாரி கற்கைகளை வழங்கிவரும் SLIIT கல்வியகம், தனது புதிய மாணவர் குழுவை கல்வியகத்துக்கு வரவேற்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இவ்வருடம் 1,100 மாணவர்கள் இணைந்து கொண்டு இலங்கையின் மிகச்சிறந்த உயர் கல்வியகத்தில் தமது கற்கையைத் தொடர்வதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

1999ஆம் ஆண்டு வெறும் 400 மாணவர்களுடன் SLIIT கல்வியகம் BOC டவரில் ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும், இது இன்று 6,000 இற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் ஒரு பல்கலைக்கழகமாக செயற்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் SLIIT கல்வியகம், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து தமது கல்வித் திட்டங்களை விஸ்தரித்திருந்ததுடன், தற்போது புகழ்பெற்ற LMD இதழ் மூலம் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி இலங்கையின் உயர்கல்வி நிலையங்களுள் முதலிடத்தில் SLIIT உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக எமது மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் Codefest, Robofest, மென்பொருள் போட்டிகள், சிம்போசியம் மற்றும் திறன்காண் போட்டிகள், விளையாட்டுத் தினங்கள் மற்றும் சமூகத் திட்டங்கள் போன்ற பிற கல்விசார் திட்டங்களையும் ஏற்பாடு செய்து வருகின்றோம்.


எமது மாணவர்களில் பலர் சர்வதேச மற்றும் உள்நாட்டு நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்று எமது கல்வியகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர் என SLIIT இன் தலைவரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான லலித் கமகே தெரிவித்தார்.

இவ்வருடம் SLIIT கல்வியகம் B.Sc. பட்டதாரி கற்கைகளை வழங்கவுள்ளது. தகவல் தொழில் நுட்பத்தில் B.Sc.(Hons) பட்டதாரி கற்கை, வணிக முகாமைத்துவத்தில் விசேட கௌரவ BBA பட்டம், B.Sc சிவில், இலத்திரனியல் மற்றும் எலக்ரோனிக் என்ஜினியரிங், mat erials என்ஜினியரிங் மற்றும் மெக்கானிக்கல் என்ஜினியரிங் போன்ற கற்கை நெறிகளை வழங்கவுள்ளது. இந்தக் கற்கைகளுக்கு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் (இலங்கை/லண்டன்) மூன்று பாடங்களில் சித்தி அல்லது SLIIT இனால் நடத்தப்படும் உளச் சார்பு தேர்வில் சித்தியடைந்தோர் தகுயுடைவர்களாகக் கருதப்படுவர்.

SLIIT இன் நீண்டநாள் கல்விப் பங்காளரான அவுஸ்திரேலியாவின் கர்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மென்பொருள் பொறியியலில் B. Sc. பட்டம், BEng in Mechanical Engineering, சிவில் மற்றும் கட்டுமான பொறியியல், Electrical and Power Engineering, கணினி முறைமை பொறியியல், தகவல் தொழில்நுட்பத்தில் B.Sc. பட்டம், கணினி முறைமைகள் போன்ற பட்டதாரி நெறிகளை வழங்குவதுடன், இரண்டாவது ஆண்டினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் (டிப்ளோமா நிலை) தமது மிகுதிக் கற்கையை கர்டன் பல்கலைக் கழகத்தில் தொடர்வதற்கான வாய்ப்பைப் பெறுவர். (த)

> 1999ஆம் ஆண்டு வெறும் 400 மாணவர்களுடன் SLIIT கல்வியகம் BOC டவரில் ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும், இன்று 6,000 இற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் ஒரு பல்கலைக் கழகமாகச் செயற்பட்டு வருகிறது.

## மைக்ரோசொப்டின் உற்பத்திகளுக்கு பாராட்டு



இலங்கையின் தகவல் தொழில்நுட்பச் சந்தையில் மைக்ரோசொப்டின் பங்களிப்பு இன்றியமையாததெனவும், நாட்டின் தொழில்நுட்ப ஸ்திரத்தன்மைக்கு அவர்களது பங்களிப்பு முக்கியமானது என்றும் இன்போடெல் நிறுவனத்தின் தலைவர் சிந்தக்க விஜேவிக்கிரம தெரிவிக்கின்றார்.

மைக்ரோசொப்டின்றி தகவல் மற்றும் தொலைத்தொடர்பை நாட்டில் எதிர்பார்த்திருக்க முடியாது. நாட்டின் முக்கிய செயற்பாடுகளுக்கு மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பங்களிப்பு முக்கியமானது. அத்துடன் ஏனைய போட்டியாளர்கள் நாட்டுக்கு வந்தபோதிலும் சந்தையில் முன்னோடிகளாக இந்நிறுவனம் திகழ்கின்றது. மைக்ரோசொப்ட் இல்லாதிருந்திருந்தால் நாட்டில் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கண்டிருக்க முடியாது என கொழும்பு கருத்தரங்கு மண்டபத்தில் அண் மையில் நடைபெற்ற 12வது இன்போடெல் கண்காட்சியில் வைத்து சிந்தக்க விஜேவிக்கிரம குறிப்பிட்டார்.

தனியுரிமை மென்பொருள்களின் விலைகள் சில விவாதங்களை முன்வைக்கும். எனினும் ஓப்பன் சோஷ் இதற்குத் தீர்வல்ல. ஓப்பன் சோஷை இலகுவாக வாங்கலாம். விலை பிரச்சினையல்ல எனினும் மென்பொருளின் ஸ்திரத்தன்மையே முக்கியமானது. நான் கடந்த 25 வருடங்களாக விண்டோஸ் பயன்படுத்துகின்றேன். அதனுடைய ஸ்திரத்தன்மை, நம்பகத்தன்மை தொடர்பில் எந்தவொரு சந்தேகமும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கண்காட்சியில் பல்கலைக்கழகங்களை சேர்ந்த மாணவர்கள் விண்டோஸ் தொலைபேசிகளுக்கு தூதுவர்களாக செயற்பட்டனர். அத்துடன் மைக்ரோசொப்ட் மென்பொருள்களின் பயன்பாடு குறித்து தமது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

உங்களுக்கு எப்படி?

நாளை

மார்கழி-01 திங்கட்கிழமை 16.12.2013
திதி:சதுர்த்தசி பி.ப.01.18 வரை
நட்சத்திரம்: ரோகிணி மு.இ.11.13 வரை
சுபநேரம்: 12.22 - 01.52 வரை
இராகுகாலம்: 07.52 - 09.22 வரை

**மேடம்**: மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள். சிறுசிறு ஏமாற்றங்கள் வரக்கூடும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும்.

**இடபம்**: குடும்பத்தினரை அனுசரித்துப் போவது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாளுங்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும்.

**மிதுனம்**: முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். வியாபாரத்தில் இருந்துவந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்டநாள் ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். கணவன் - மனைவிக்குள் மகிழ்ச்சியுண்டு.

**கடகம்** : எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் மதிப்பு மரியாதை கூடும். சகோதரர்கள் உதவுவார்கள்.

**சிங்கம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளை நல்வழிபடுத்துவீர்கள். அவர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும்.

**கன்னி**: நல்ல வாய்ப்புகளைப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று வருத்தப்படுவீர்கள். மற்றவர்களுக்காகப் பரிந்து பேசப் போய் நீங்கள் சிக்கிக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் அதிருப்தி அடைவார்கள்.

**துலாம்**: புது எண்ணங்கள் தோன்றும். விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். பணவரவு உண்டு. கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**விருச்சிகம்**: எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள்.

**தனுசு**: புது முயற்சிகள் வெற்றியடையும். கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிணக்குகள் நீங்கி அன்னியோன்னியம் அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மகரம்**: வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். கணவன்- மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும்.

**கும்பம்**: குழப்பத்தில் இருந்த நீங்கள் திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து ஆலோசனை செய்வீர்கள்.

**மீனம்**: இன்றைய தினம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். பணவரவு உண்டு. சகோதர வகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 4 | 7 | | | | | 6 |
| | | | | 4 | | | 7 | |
| 3 | | | | 1 | 6 | 4 | 5 | |
| | | 5 | | 6 | 7 | | 1 | |
| | 6 | | | | | | 2 | |
| | 9 | | 5 | 2 | | 8 | | |
| | 2 | 8 | 4 | 3 | | | | 5 |
| | 1 | | | 8 | | | | |
| 4 | | | | | 5 | 6 | 8 | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 9 | 8 | 3 | 2 | 4 | 1 | 7 |
| 4 | 2 | 8 | 7 | 5 | 1 | 3 | 9 | 6 |
| 1 | 3 | 7 | 4 | 9 | 6 | 2 | 8 | 5 |
| 9 | 1 | 4 | 6 | 7 | 8 | 5 | 2 | 3 |
| 3 | 5 | 6 | 2 | 1 | 9 | 7 | 4 | 8 |
| 7 | 8 | 2 | 3 | 4 | 5 | 9 | 6 | 1 |
| 8 | 4 | 1 | 5 | 2 | 3 | 6 | 7 | 9 |
| 2 | 9 | 5 | 1 | 6 | 7 | 8 | 3 | 4 |
| 6 | 7 | 3 | 9 | 8 | 4 | 1 | 5 | 2 |

**சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்), இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலகை அளவில் பிரபல்யமானது.**

## வீதி விளக்குகளைத் திருத்தக் கோரிக்கை

தென்மராட்சி, டிசெ.15

சாவகச்சேரி நகரசபையால் கடந்த வருடங்களில் பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் பழுத டைந்து காணப்படுகின் றன. அந்த இடங்களுக்கு புதிய விளக்குகள் பொருத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையுடன் தொடர்பு கொண்டபோது, பழுதடைந்த வீதி விளக்குகளுக்குப் பதிலாக புதிய விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பணியை மேற்கொள் ளுமாறு இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்துக்கு அறிவித்துள்ளோம். விரைவில் மாற்றீடு வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு விடும் என்று தெரிவித்தார்.

(வ-9)

## விபத்தில் சிக்கிய முதியவர் சாவு

வலி.வடக்கு, டிசெ.15

மோட்டார் சைக்கிளினால் மோதுண்ட மல்லாகம் வாசியான முதியவர் ஒருவர் எட்டு நாள்களின் பின்னர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

மல்லாகம் நீதிமன்றத்துக்கு அண்மையில் கடந்த 5 ஆம் திகதி இரவு இடம்பெற்ற விபத்தில் வீதியில் நடந்து வந்தவரான மல்லாகத்தைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி கலியுகவரதன் என்பவர் (வயது- 73) படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டு பின்னர் அங்கிருந்து கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார்.

இதேவேளை, நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு வழிப்போக்கரொருவரை வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதித்தள்ளியது.

சுன்னாகம் கந்தரோடை வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமுற்று ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவரான சுன்னாகம் புதுவளவைச் சேர்ந்த மாட்டின் யேசுதான் (வயது-54) தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஓ-86)

## தென்னங் கன்றுகள் விநியோகம்




யாழ்ப்பாணம், டிசெ.15

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் ஐந்தாம் கட்டத்தில் இரண்டாவது தடவையாக மேலும் 1920 தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தில் இடவசதியுள்ள ஆர்வம் மிக்க பயனாளிகள் பொருளாதார அபிவிருத்தி அலுவலர் மற்றும் கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் [illegible].செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ஓ-7)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கந்தசாமி



அராலி மத்தி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தசாமி 13.12.2013 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், மனோன்மணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், அமரர் கனகம்மாவின் பாசமிகு சகோதரனும், கோபாலசிங்கம் (சிற்பாசாரியார் - அராலி), இராசலட்சுமி, சற்குணவதி, நிர்மலகுமார் (ஜேர்மனி), பற்குணவதி (லண்டன்), லதாயினி, தயாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாநாதன், அமரர் இந்திரராசா மற்றும் தேவராணி, விமலேஸ்வரி (ஜேர்மனி), சிறீகாந்தன் (லண்டன்), முகுந்தகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிறைஞ்சன், பிரியதர்சினி, சுபதர்சினி(கனடா), சிவரூபதர்சினி, சுபத்திரா, தினேஸ் (ஆஸ்திரேலியா), பிரதீபா, தாரணி, ஹரிராம் (ஜேர்மனி), விஸ்னுஜா (ஜேர்மனி), அபிசனா (லண்டன்), கோபிஷன் (லண்டன்), வர்ணா, சசிதரன், கேதீஸ்வரன் (கனடா), கங்கைரூபன், பிரகலாதன், விஜியேஸ்வரன் ஆகியோரின் பேரனும், சொப்னா, ஹரிப்பிரவீன், அஸ்வினி, சாரங்கா, பிரஜித், அபிராஜ், அஜீஷ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அராலி பூனாவோடை இந்துமயானத்துக்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகம்மாள் கோயிலடி,
அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.
(42631)
(12)(8.3)

தகவல்:
கந்தசாமி கோ[illegible]சிங்கம்
(மகன்)

## மரண அறிவித்தல்



### திருமதி சகிதேவி கந்தையா

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மருதனார்மடம் இராமநாதன் பெண்கள் கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமான சகிதேவி கந்தையா 12.12.2013 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் இராமலிங்கம் கந்தையாவின் (முன்னாள் ஆங்கில விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி) அன்பு மனைவியும், Dr.ஸ்கந்தகுமார் (U.S.A), சக்திகுமார்(U.K) யோககுமார் (U.S.A) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] (சி/10277)(3.8.4)
3, Alison Close, HA5 2ND London

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு அண்மையில் சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பங்குபற்றிய விருந்தினர்களையும் பார்வையாளர்களையும் கலை நிகழ்வொன்றையும் காணலாம். (ஒ-86)



தேசிய ஆவணமாக்கல் சபையால் சிறந்த நூலகங்களுக்கான விருது அண்மையில் வழங்கப்பட்டது. நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட நூலகங்களுக்கான விருதை நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பா.வசந்தகுமார் உட்பட நூலகாகள் பெற்றுக் கொண்டனர். (ஒ-14)



சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு கடந்த 4 ஆம் திகதி பயணம் மேற்கொண்ட வடமாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம் வைத்திய சாலையின் தேவை தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் வளாகத்தில் மரக்கன் றையும் நட்டு வைத் தார். இதன்போது வடமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், வைத்தியசாலை வைத்திய அதிகாரி பிரகாஸ் உட்பட அபிவிருத்திக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ஒ-29)



அண்மையில் இடம்பெற்ற உரும்பிராய் கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் கலை விழாவின்போது பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், நிலைய நிர்வாகிகள் சிறார்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் வரவேற்கப்படுகின்றனர்.



காரைநகர் அபிவிருத்திச் சபை மாணவர் நூலக ஆரம்ப நிகழ்வும் வாணி விழாவும் அண்மையில் புதிய நூலகக் கட்டடத்தில் நடைபெற்றன. நிகழ்வில் மாணவி ஒருவருக்கு விருந்தினராகக் கலந்து கொண்ட இ.ச.பே.நாகரட்ணம் பரிசில் வழங்கினார். (ஒ-250)





வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மங்கல விளக்கேற்றுவதையும், நிறுவன உப தலைவரும், கரவெட்டி பிரதேச சபை உறுப்பின ருமான கே.பரஞ்சோதி அன்னாருக்கு பொன் னாடை போர்த்துவதையும், மாணவர்களின் கலை நிகழ்ச்சியையும் காணலாம். (ஒ-8)



குருநகர் கு.இராயப்புவினால் எழுதப்பட்ட 'வேப்பமரம்' நாவல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. இந்த நூலின் முதற் பிரதியை யாழ்.பல்கலைக்கழக கல்வியியல்துறைப் பேராசிரியர் கலாநிதி மா.சின்னத்தம்பி வெளியிட்டு வைக்க புலவர் ஆனந்த ராஜா (வேல்மாறன்) பெற்றுக்கொண்டார். (ஒ-51)




யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியற் கல்லூரியின் வருடாந்த பரிசில் தினத்தில் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்ச்சி. (ஒ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிளிநொச்சி அக்கராயன் வைகறை முன்பள்ளி யின் ஒளி விழா அண்மையில் இடம்பெற்றது. கலை நிகழ்வை சிறார்கள் கண்டு களிக்கின்றனர். (க-18)




வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், கல்லூரியின் அதிபர் சு.அமிர்தலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட வட மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், ம.தியாகராஜா, இ.இந்திரராஜா மற்றும் கௌரவ விருந்தினர்களான பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம், கோட்டக் கல்வி அதிகாரி ஆ.நடராஜா ஆகியோர் வரவேற்கப்படுகின்றனர். (வ-402)





மன்னார் பரப்பாங்கண்டல் றோ.க.த.பாடசாலையின் ஒளிவிழா கடந்த 5 ஆம் திகதி பாடசாலையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர் மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்வையும் காணலாம். (ஒ-14)



தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் சித்தியடைந்த மாணவிக்கு ரோன்ஸ் வேட் நிறுவனத்தின் இணைப்பாளர் அ.பாரதி ஆனந்தன் பாராட்டுச் சான்றிதழ் வழங்குவதையும், வழிகாட்டிய ஆசிரியைகளான திருமதி தவப்புதல்வி சந்திரகுமார், திருமதி சுகந்தி ஜனந்தன் ஆகியோரை தேவ அன்பு சிறுவர் இல்லப் பொறுப்பதிகாரி இக்னேசியஸ் கௌரவித்து வாழ்த்து மடல் வழங்குவதையும் காணலாம். (க-421)



வவுனியா கல்நாட்டியகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வின்போது பாடசாலையில் மரக்கன்று நடும் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு கிராம அபிவிருத்திச் சங்கம் சார்பாக பாடசாலை அதிபரிடம் தென்னங்கன்று வழங்கப்படுகின்றது. (க-421)



கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்ட திருக்குறள் விழாவின்போது திருக்குறள் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா மற்றும் முக்கிய பிரமுகர்கள் வரவேற்கப்படுகின்றனர். (க-426)



ஓமந்தைப் பகுதியில் குட்டிப் பிள்ளையார் என்று பக்தியுடன் அழைக்கப்பட்டு மக்களால் வணங்கப்பட்டு வந்த விநாயகர் சிலை மாயமாக மறைந்த நிலையில் அது நிறுவப்பட்டிருந்த பீடம் வெறுமையாகக் காணப் படுகின்றது. (க-402)



கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் நிர்வாகத்தில் அக்கராயன் ஸ்கந்தபுரம் [illegible] பகுதி மக்களுக்கான மயானம் புனரமைக்கப்பட்டுள்ளது. (க-18)



முத்துஐயன்கட்டு இடதுகரையில் அமைந்துள்ள பொதுச் சந்தையில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் அவலமான நிலையில் காணப்படுகின்றன. (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகரசபையால் 2014இற்கான வேலைத்திட்டம்

யாழ்.அரச அதிபரால் மேற்கொள்ளப்படவுள்ள நான்காண்டு அபிவிருத்தித் திட்டத்தில் பின்வரும் வேலைத்திட்டங்களை உள்ளடக்க சாவகச்சேரி நகரசபையால் முன்மொழியப்பட்டுள்ளது.

சுகாதாரத் தொழிலாளர்களுக்கு விடுதிகள் அமைத்தல், சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மணிக்கூட்டுக்கோபுரம் அமைத்தல், பொது விளையாட்டு மைதானத்தைச் சர்வதேச தரத்துக்கேற்றவகையில் அமைத்தல், விளையாட்டு அரங்கம் அமைத்தல், சாவகச்சேரி கடலேரியை உல்லாச மையமாக மாற்ற வசதிகள் ஏற்படுத்தல், கைத்தொழில் பேட்டைக் கட்டடம் அமைத்தல், சிறுவர் பூங்கா அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்களுக்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அடுத்த வருட வரவு - செலவுத் திட்ட பொழிப்பில் குறிப்பிட்டுள்ளார். (வ-9)

## தென்மராட்சி கல்வி வலயத்தில் முழு நிலா கலை விழா

தென்மராட்சி, டிசெ.15

தென்மராட்சி கல்வி வலயத்தின் மார்கழித் திங்கள் முழு நிலா நாள் கலை விழா நாளை திங்கட்கிழமை மு.ப. 9 மணிக்கு சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் மாகாணகல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா, சாவகச்சேரி நகர சபைத்தலைவர்இ.தேவ சகாயம் பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர்.

விழாவையொட்டி காலை 8.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக இருந்து ஆரம்பிக்கும் தமிழ் கலைகலாசார விழுமியங்களைப் பிரதி பலிக்கும் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள் பவனி இடம்பெறுவதுடன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முன்பாக இருந்து ஆரம்பிக்கப்படும் தமிழர் பாரம்பரியங்களைக் கொண்ட கலை நிகழ்வுகள் சகிதம் விருந்தினர்கள் ஊர்வலமாக விழா மேடைக்கு அழைத்துச் செல்லப்படுவர். கல்வி வலயப் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் அறிஞர் கௌரவிப்பு நிகழ்வில் மறைவன்புலோ க.சச்சிதானந்தன் விருதுவழங்கிக் கௌரவிக்கப்படுதலும் இடம்பெறும்.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் முழு நிலா கலை விழா நிகழ்வுகள் மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களிலும் மாதம் ஒரு வலயத்தில் என்ற ரீதியில் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ந-9)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், டிசெ.15

பிரிட்டிஷ் பிஸ்னஸ் கல்லூரியின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரிட்டிஷ் கவுன்ஸிலின் யாழ்ப்பாண முகாமையாளர் செல்வி மண்டா பிறவுண் கலந்து கொள்வார். (ஒ-14)

## மூதாட்டியை தீண்டியது நாகபாம்பு

வளவு துப்புரவாக்கிய மூதாட்டி நாக பாம்பினால் கடியுண்டார் இந்தச் சம்பவம் நேற்று வரணி, இயற்றாலையில் இடம்பெற்றது.

அதேஇடத்தைச்சேர்ந்தவேலுப்பிள்ளை இலட்சுமி (வயது 60) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். இவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஒ-9)

# மரண அறிவித்தல்கள்

## சுப்ரமணியம் தியாகராஜா

(ஷாமளா ஸ்ரோர்ஸ்)



கொட்டாவத்தையைப் பிறப்பிடமாகவும் நல்லூர், கைலாசபிள்ளையார் கோயில் வீதியை வதிவிடமாகவும் தற்போது வத்தளையில் வசித்தவருமான சுப்ரமணியம் தியாகராஜா நேற்றுமுன்தினம் (13.12.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் -சின்னம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற கதிர்த்தம்பி (வின்ஸர்தியேட்டர்)- தங்கம்மா தம்பதியரின் மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், இந்துமதி, உமைச்செல்வன், பானுமதி, உமாபாலன், ஷாமளா, காலஞ்சென்ற ஜெனார்த்தனன், ரகுராமன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசுப்ரமணியம், லோகராஜா, செல்வபாஸ்கரன், முத்துமணி, அஜந்தா, அமலா ஆகியோரின் மாமனும், கௌரிசங்கர், ஜீவகன், இந்திரேஸ், மேனகா, நிரேஷா, லாவன்யா, அஞ்சலி, அனுஷன், ஆருஷன், ரோகினி, கபூர் சேயோன் ஆகியோரின் பேரனும், சோமசுந்தரத்தின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.12.2013 வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வத்தளை கெரவலப்பிட்டிய மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

125/6, 8th Cross Street
Alwis town Wathala,
T.P. 011 293 2075

தகவல்:
குடும்பத்தினர்.

(42547) (45.6.3)

## திருமதி நவமணி பொன்னையா

வசாவிளான் தெற்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நவமணி பொன்னையா நேற்று (14.12.2013) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்லம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், உதயமலர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்-மகாஜனக் கல்லூரி, வசாவிளான் ம.ம.வி.) கதிர்காமவாசன் (ஆசிரியர்-உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பக்தவற்சலத்தின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், சதாசிவம், மார்க்கண்டு, சபாரத்தினம், நடராசா, துரைரத்தினம், மனோன்மணி மற்றும் நாகரத்தினம் (லண்டன்), பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், உமையவேள் (அபிவிருத்தி உத்தியோகத்தர் R.M.P. கச்சேரி), தீர்த்தனா (ஆசிரியர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியாரும், அபிஷேகனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் தாவடி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

கிளுவக்கட்டை வீதி,
இணுவில் தெற்கு,
இணுவில்.

உதயமலர் (மகள்-ஓய்வுபெற்ற ஆசிரியர்)
மகாஜனக் கல்லூரி, வசாவிளான் ம.ம.வி.
கதிர்காமவாசன் (மகன்-ஆசிரியர்,
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)

(42627) (7.6.3)

# மரண அறிவித்தல்கள்

## இராசரத்தினம் உமாபதி



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் உமாபதி நேற்று (14.12.2013) சனிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் -அருமைநாயகி தம்பதியரின் அன்புமகளும், மங்கையர்க்கரசி (வசந்தி), கமலாம்பிகை, மதிவதனி (கனடா), திருஞானம் (கனடா), நளினி, நந்தினி(கனடா), பரந்தாமன் (மட்டக்களப்பு), காலஞ் சென்றவர்களான திருமகள், கிருபா ஆகியோரின் சகோதரியும், ஜெயரட்ணம் (ஜெயம்), ஆனந்தமோகன், மோகன்ராஜ் (கனடா), நாஜோஜித் (கனடா), லியோனி (மட்டக்களப்பு) ஆகியோரின் மைத்துனியும், சிந்துஜா, ஜீவிதா, துவாரகன், வதனி (கனடா), சுபாஜினி, மயூரதன், ஜெனனன், உத்திரை, சஞ் யோஜித் (கனடா), சுஜான் (கனடா), சுரேன் (கனடா), நரேஷ் (கனடா) ஆகியோரின் சிறிய தாயும், சஞ்யோஜித் (கனடா), பரிக்ஷன் (மட்டக்களப்பு) ஆகியோரின் மாமியும், திவிசனின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(42546)(3.6.4)

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

தகவல்:
ஜெயரட்ணம் மங்கையர்க்கரசி (வசந்தி-சகோதரி)

## நடேசன் கனகம்மா



தல்லையபுரம், துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடேசன் கனகம்மா கடந்த செவ்வாய் 10.12.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காளியன்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சின்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நடேசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ரத்தினம், சரஸ்வதி, ஆசைப்பிள்ளை மற்றும் சிவக்கொழுந்து, மணியம் (பனை தெ.ப.பொ. சங்கம், முகாமையாளர்) கா.பொன்னையா (வராத்துப்பளை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலேந்திரன் (வளலாய்), பாலச்சந்திரன் (டென்மார்க்), பிறேமாவதி (கொழும்பு), நிர்மலா (பிரான்ஸ்), பாஸ்கரன் (லண்டன்), கமலாவதி (கரவெட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், வ.தனபாலசிங்கம் (லண்டன்), பிலீப் மகேந்திரம் (பிரான்ஸ்), தயாநிதி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும், துவாரகன், மாலவன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல் : குடும்பத்தினர்.
கா.பொன்னையா (வராத்துப்பளை)
045 7161 2575 (பாலச்சந்திரன்-டென்மார்க்)
0033 651 354 852 (நிர்மலா)
0044 750 544 5840 (தனபாலசிங்கம்)
0044 753 938 543
0044 740 544 5228 (தனபாலன்-லண்டன்)
0044 116 431 3330 (தனபாலன் வீடு)

தல்லையபுரம்,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(43001) (7.6.3)

## வைத்தியநாதன் சுவாமிநாதன்

(ஓய்வுநிலை நிர்வாக அலுவலர், கல்வித்திணைக்களம் - திருகோணமலை)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், இல.18, யாழ்.வீதியை வதிவிடமாகவும் கொண்ட வைத்தியநாதன் சுவாமிநாதன் செவ்வாய்க்கிழமை 10.12.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தின்ராசா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகனும், ஜெயகௌரி தேவியின் பாசமிகு கணவரும், முதளீதரன் (நோர்வே), சுவர்ணா (லண்டன்), சசீதரன் (பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம்), சுஞ்சுதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாரதி, துஷ்யந்தன், நதியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அகில்குமார், பவித்திரன் (கணியன்), தாரகி ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சிறீபற்பநாதன், தனலட்சுமி, குணநாதன், விஜயலட்சுமி, ஜெகநாதன், பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோ தரரும், புலவர் A.W அரியநாயகம் அவர்களின் உடன்பிறவாச் சகோதரரும், காலஞ்சென்ற வர்களான பாலச்சந்திரன், பாஸ்கரன் மற்றும் சந்திரவதனி, கமலாசினி (வவி), கோசலாதேவி, பாலராசா, காலஞ்சென்ற சுந்தரேசன் (சுரேஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப.11.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.18, யாழ்.வீதி,
[illegible]டி,
யாழ்ப்பாணம்.

(42531) (12)(6)

தகவல்:
குடும்பத்தினர்,
0776057324/0265680250

# மரண அறிவித்தல்

## நடராசா சந்திரலிங்கம் (அருமைத்துரை)



அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட நடராசா சந்திரலிங்கம் (அருமைத்துரை) 12.12.2013 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் அச்சுவேலி வடக்கு வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

(சி/14398) (7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிபெருக்கிகளின் பாவனையை மட்டுப்படுத்தியுள்ள ஆலயங்கள்

*முன்மாதிரி நடவடிக்கைக்குப் பாராட்டு*

உற்சவ காலத்தில் ஒலிபெருக்கிப் பாவனையைக் குறைத்து பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளன சாவகச்சேரிப் பகுதி இந்து ஆலயங்கள். திருவெம்பாவை உற்சவ காலத்தில் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி ஒலிபெருக்கிப் பாவனையை மட்டுப்படுத்துமாறு சாவகச்சேரி நகரசபையினர் நகரசபை எல்லைக்குட்பட்ட அனைத்து இந்து ஆலயங்களுக்கும் அறிவித்திருந்தனர்.

இதனை அடுத்து ஆலயங்களில் உயரத்தில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் ஆலய மண்டபங்களுக்குள் வைக்கப்பட்டு பூசை வேளைகளில் சத்தத்தை மட்டுப்படுத்தி பயன்படுத்துகின்றனர். அதிகாலை 4 மணி தொடக்கம் காலை 8 மணி வரை ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தியதால் மாணவர்கள் படிக்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும்-

தற்போது ஆலயங்கள் மேற்கொண்ட இந்த நடவடிக்கையினால் அதி காலை 4 மணி தொடக்கம் தமது பிள்ளைகள் படிக்கக் கூடியதாக இருப்பதாகவும், பரீட்சைக்குத் தமது பிள்ளைகள் படிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் அனைத்து ஆலயங்களுக்கும் தமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதாக மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, தமது ஆலயத்தில் ஒலிபெருக்கிப் பாவனையை மட்டுப்படுத்தியுள்ளதாக தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள ஆலயங்களின் நிர்வாகத்தினர் உதயன் சாவகச்சேரி பணிமனைக்கும் அறிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனிடையே, சாவகச்சேரிப் பகுதியில் மட்டுமன்றி, தற்போது குடாநாட்டின் பல பகுதி களிலும் உள்ள ஆலயங்களில் ஒலிபெருக்கியின் பாவனை மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. மாணவர்களின் நலனில் அக்கறை காட்டி வரும் ஆலய நிர்வாகிகளுக்கு சமூக நலன்விரும்பிகள் நன்றியும், பாராட்டும் தெரிவித்திருக்கின்றனர். (ஒ-9)


## உடனடியான தொழில்

கொழும்பை அண்மித்த பகுதிகளில் பிரபல்யமான தொழிற்சாலைகளான டொபி/ஜேம்/கோடியல்/பிஸ்கட்/PVC/பிளாஸ்டிக் பை/கோழி இறைச்சி போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/களஞ்சியப்படுத்தல் பிரிவுகளுக்கு18-55 வயது ஆண், பெண் இருபாலாரும் தேவை. உணவு, தங்குமிட வசதியுடன் மாதாந்தம் 18,000/=, 25,000/=, 38,000/=, சம்பளங்களுடன் உடனடி வேலை வாய்ப்பு.

தொடர்புகளுக்கு: 077 711 7661 (40600) (7.6.3)

## உடனடியான வேலைவாய்ப்பு

கப்பல்/விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமா? கப்பல் புனர் நிர்மாணத்துறையில் சாதாரண ஊழியர்/வெல்டர்/தச்சர்/பெயின்டர் மற்றும் விமான நிலையத்தில் (தனியார்) காகோ/சுத்திகரிப்பாளர்/கேட்டரீங்/லொன்றி பிரிவு 18-45 வயது ஆண், பெண் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலையில். சம்பளம் 18,000/=, 25,000/=, 32,000/=, மேல். வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்பு.

தொடர்புகளுக்கு: 077 556 1883 (40599) (7.6.3)

## வீடு விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு, பருத்தித்துறை வீதியில், மாதாகோயிலுக்கு அண்மையில் 3½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

(42626) (12.6.3) தொடர்பு: 077 967 4799

## வாடகைக்கு

மல்லாகத்தில் 4அறை வீடு வாடகைக்குண்டு

(சி/10224) (12.6.3)

தொடர்பு: 077 653 3656 077 346 5863

## காணி விற்பனைக்குண்டு

மட்டக்களப்பு, முதலியார் வீதியில் 12.76 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குண்டு

தொடர்பு : 0721 169 017

## உமா பியூட்டி சென்ரர்

உமா பியூட்டி சென்ரர் வழங்கும்

**3நாள் அழகுக் கலைப் பயிற்சி வகுப்பு**

5பேசியல்ஸ், 3கெயர்ஸ்ரைல்,Threding, Bridal Dressing & Beauty tips. மேற்கூறப்பட்ட Basic Course 20.12.2013 - 22.12.2013 வரை தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறும். பாடநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பதிவுக் கட்டணம் 1000/= 19.12.2013ஆம் திகதிக்கு முன்பாகப் பதிவு செய்யவும்.

நேரம் : 9.00 - 4.00

இடம் : உதயநகர், கிளிநொச்சி.

மேலதிக விவரங்களுக்கு:

(10711) (12.6.3) 077 447 1644/077 062 9798

## வீடு காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் இந்து மகளிர் கல்லூரி,பல்கலைக்கழகத்திற்கு அருகில் இரண்டு பரப்புக் காணி மாடி வீட்டுடன் விற்பனைக்குண்டு

தொ.பே. 077 360 4403 (சி/10234) (7.6.3)

## காணி விற்பனைக்கு

யாழ் அரியாலை நாவலடியில் 3 பரப்பு, 12 பரப்பு காணிகள் மற்றும் 20 பரப்பு வயல் விற்பனைக்குண்டு.

தொ.பே. 077 117 4692 (சி/10235) (7.6.3)

## சேவை

பிரான்ஸ், இத்தாலி, USA, கனடா ஆகிய நாடுகளுக்கு Visa ஒழுங்குகளும், ஆலோசனைகளும் வழங்கப்படும்.

தொ.பே. 072 154 1049 (சி/10236) (7.6.3)

## Nishanthan Decoration

Flower Decor
Balloon Decor
Flower Vase Decor
Fiber glass Decor
Garland Supply

Kaladdy lane,
Kondavil West, Kondavil.

T.P: 077 490 9708 (42624)(4.6.3)

## STUDY MEDICINE IN RUSSIA

KRUSK STATE MEDICAL UNIVERSITY மற்றும்
TVER STATE MEDICAL UNIVERSITY

- SLMC, WHO, UNESCO, AMC, US MEDICAL COUNCIL ஆகியவற்றால் அங்கிகரிக்கப்பட்ட முதற்தர பல்கலைக்கழகங்கள்
- இலங்கையிலிருந்து 700 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கின்றனர்
- முற்றிலுமான ஆங்கில மொழிமூல கற்கைநெறி
- வருடத்திற்கு 4000 USD + Hostel வசதி இலவசம்
- மிகக்குறைந்த ஆரம்பக்கட்டணம்
- விண்ணப்பித்து இரண்டு மாதங்களில் ரஷ்யா செல்லலாம்
- VISA 100% உத்தரவாதம்
- விடுமுறை காலங்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று வரக்கூடிய வாய்ப்பு

Russian Education Centre Sri Lanka

தொடர்புகளுக்கு :
Dr.Sivaraman Sanjey
Mob: 0773460324
Tel: 0114377388/0112769833
Email: snsanjey@yahoo.com

## வயல் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாவற்குழி கேரதீவு றோட் நெணியன் வெளியில் உள்ள 24 பரப்பு நெல் வயல் விற்பனைக்கு உண்டு. எதிர்பார்க்கும் விலை, பரப்பு 40 ஆயிரம் ரூபா.

தொடர்புகளுக்கு:

0716234045

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

(சி/10220) (12.6.3) தொடர்பு: 077 557 2982 (தை மாதத்தில் இருந்து)

## வாகனம் வாடகைக்கு தேவை

கார் மற்றும் வான் வாடகைக்குத் தேவை. (சி/10232) (7.6.3)

தொ.பே. 072 970 3210

## காணி விற்பனைக்கு A9றோட், மிருசுவில்

A9 றோட்டை முகப்பாகவும், மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்ட றோட்டை பக்க றோட்டாகவும் கொண்ட 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(சி/10230) (12.6.3) தொடர்பு: 077 607 9340

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் பிரதான வீதிக்கும் சந்தைக்கும் அண்மையில் 4 அறை கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:
72/9, பரிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி
(சி/10231) (12.6.3) 077 839 5444

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயில் 29.02 பேர்ச்சஸ் காணி 4 அறைகள் கொண்ட முற்றாகக் கட்டி முடிக்கப்படாத வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொ.பே. 077 646 3843 (சி/10233) (7.6.3)

## Vacancy for Web Application Developer and Data Processing Analyst

A USA-based company with offices in Colombo and Jaffna is looking for a Web Appli cation Developer and a Data Processing Analyst to work in the Jaffna office. Both candidates should have a degree or diploma in the field of Computer Science/IT and should posses strong technical and analytical skills. Candidates for Web Application Developer should have good programming knowledge; familiarity with PHP, HTML/CSS and Javascript is a plus. Excellent opportunity for motivated candidates to work with a strong team on challenging projects and establish long-term careers. Fluency in English is a must. Send your CV to siva@monthlywarranty.com (42617)(4.6.3)

## இலவச அழகுக் கலைப் பயிற்சி

நிபந்தனைக்குட்பட்டது.

சுவீடன் நாட்டு நிறுவனத்தால் 590/= பதிவுக் கட்டணத்துடன் Facial, Whiting Facial, Face Massage, Gold Facial, Diamond Facial, Eye Brow Shape, Fruit Facial, Bleaching, Hair Cut, Pedicure, Hair Ironing, Manicure, Hair Curling, Bridal Make Up, Nail Art, Hair Style, French Manicure, Pimple Treatment, Mehindi, Saree Style எனப் பல பயிற்சிகள் செய்முறை விளக்கத்துடன் ஒரு மாத, 3 மாத பிரிவுகளாக நடைபெற்று பயிற்சி முடிவில் சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும்

**இந்தியாவில் சிறப்புப்பெற்ற ஆசிரியரினால் சாறி மற்றும் பஞ்சாபியில் முத்து, சீகுன்ஸ், கல், நூல் ஆகியவற்றைப் பயன்படுத்தி வேர்க்கிங் செய்யப்படும் கற்கை நெறியும் ஆரம்பிக்கப்பட உள்ளன.**

முகப்பரு, கரும்புள்ளி, கண் கருவளையம், பித்த வெடிப்பு, முடிஉதிர்வு, உடல் எடை குறைய போன்ற பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பக்கவிளைவுகளற்ற 100% உத்தரவாதமுடைய பால்மா மற்றும் கிறீம் வகைகள் விற்பனைக்கு உண்டு.

காலம்: 18.12.2013
நேரம்: முற்பகல்10.00 மணி

தொடர்புகளுக்கு:
077 368 6038,077 884 8666

ஒறிபிளேம் யாழ் கிளை (42628)(3.6.4)
187/30,யூனியன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.(சத்திரச்சந்தி அருகில்)

## மங்களா நிறுவனத்தின் மாபெரும் அதிரடி மலிவு விற்பனை

10 % - 50 % விலைக்கழிவு முந்துங்கள் கையிருப்பு உள்ள வரை மட்டுமே

SALE SALE SALE

~~6000~~/= 3000/= ~~9000~~/= 4500/= ~~10500~~/= 5250/= ~~16000~~/= 11900/= ~~2200~~/= 1500/= ~~14000~~/= 8750/= ~~10500~~/= 9900/= ~~1500~~/= 1000/= ~~5000~~/= 2500/=

மர, வெளிநாட்டு, மூங்கில், தளபாடங்கள் சோபா செற்றிகள், Baby தொட்டில்கள், வீடு, அலுவலகத்திற்குரிய அனைத்து தளபாடங்களும் மின்னியல் பொருள்கள் 50% நம்ப முடியாத விலைக்கழிவில்...

ARPICO DAMRO போன்ற நிறுவனங்களினதும் விசேட விலைக்கழிவு...

536, K.K.S. Road, Jaffna. Tel : 021 222 8367, 021 ... 921099, 077 7286069


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு விசேட திட்டங்கள்;

*நன்றி கூறுகின்றனர் துணுக்காய் மக்கள்*

வடக்கு மாகாண விவசாயிகளுக்காக விசேட திட்டங்களை வடமாகாண வரவு -செலவுத் திட்டத்தில் அங்கீகரித்து அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட வட மாகாண சபை முதலமைச்சருக்கும், விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனுக்கும் தமது நன்றிகளைத் தெரிவிப்பதாக துணுக் காய் பகுதி கமக்கார அமைப்பும், விவசாயிகளும் அறிவித்துள்ளனர்.

அண்மையில் ஒட்டுசுட்டானில் துணுக்காய் கமக்கார அமைப்பு, விவசாயிகளையும் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகளை நேரில் பார்த்துத் தெரிந்து கொண்டார். எனவே தமது பிரச்சினைகளையும், தமது கோரிக்கைகளையும் வடக்கு மாகாண வரவு- செலவுத் திட்டத்தில் கொண்டு சென்று தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதமாக உடனடித் தீர்வைக் கொண்டு வந்ததற்கு அந்தப் பகுதியினர் தமது நன் றிகளைத் தெரிவித்துள்ளனர்.

(ஒ-422)

**Institute Of Junior**
*(English Medium)*
* Elocution Classes
எலக்கியூசன் வகுப்புக்கள் (Spoken & Written)
* Certificate Courses
Spoken English (3 Month)
05.01.2014 க்கு முன் உடன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
இல. 926 பருத்தித்துறை வீதி நல்லூர் (சட்டநாதர் கோயில் முன்)
Email - Instiututeofjunior2013@gmail.com
T.P : 077 1999630, 0212054052

**நம்ப முடியாத விலைக்கழிவு**
வாடிக்கையாளர் நலன்கருதி எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதி வரை ஞாயிற்றுக்கிழமைகளிலும் வாடிக்கையாளர் சேவை இடம்பெறும்
பிரமாண்டமான காட்சியறை.
புத்தகம் மற்றும் ஸ்ரேசனறி வியாபாரத்தில் என்றும் முன்னணியான நிறுவனம்
எண்ண முடியாத பரிசில்கள்
குறிப்பிட்ட தொகைக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு அழகிய கோப்பு[பைல்] இலவசம். கையிருப்பு உள்ளவரை மட்டுமே.
முந்துங்கள்! வெல்லுங்கள்!
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (சி/14164) (7.6.3)

**J.B. Constraction**
கொன்கிறிட் சிலாப் வேலைகள், மாபிள் பதித்தல், வீடு திருத்துதல் வேலைகள் நிலம் தட்டும் மொங்கான் வாடகைக்கு உண்டு.
T.P : 077 1138615

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வேலையாள்கள் தேவை**
1) போன் விற்பனையாளர்
2) கணக்கு எழுதுநர்
3) போட்டோ பிரதி தெரிந்தவர்
4) உதவியாளர் - நேரில் வரவும் - அனுபவம் உள்ளவர்களுக்கு 15000/= ரூபா வழங்கப் படும்.
நொக்கியா விற்பனை நிலையம்,
9, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை (வெளிப்புறம்) யாழ்ப்பாணம்.
(சி14400) (15.6.3) 077 361 1282

**கடை வாடகைக்கு**
யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் நியூ மார்க்கற்றுக்கு முன்னால் 11அடி அகலமுடைய கடை வாடகைக்குண்டு.
(43612) (18.6.3) தொடர்பு: 077 629 3893

**வீடு வாடகைக்கு**
யாழ். வேம்படி வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 078 9484194

**வேலையாள்கள் தேவை**
கட்டட ஒப்பந்த அலுவலகத்திற்கு கணினி வேலை தெரிந்த பெண்கள் தேவை. தொடர்பு: 077 355 1631

**சேவை தொடர வாழ்த்துகின்றோம்**



ஊடக, சமூக, அரசியல் பணியுடன்
விளையாட்டு முன்னேற்றத்திற்கும்
உதவி வீர வரலாறு படைக்க
உதவும்
கௌரவ. ஈ. சரவணபவன்
நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களை
மணிவிழா நாளிலே பல்லாண்டு
வாழ வாழ்த்துகின்றோம்
Best Wishes
தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம்,
தும்பளை, பருத்தித்துறை.

**மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்**



**கௌரவ ஈ. சரவணபவன்**
அகவை அறுபதில் காலடி வைக்கும் சிகரமே !
தமிழரின் உரிமைக்கு கர்ச்சிக்கும் சிங்கமே !
அன்பு உள்ளங்களை கை கோர்க்கும் இணைப் பாலமே!
உங்கள் வரவு தமிழினத்தின் விடிவே!
சிங்காரத் தலை மகனின் மங்காத புகழ் படைத்த
உதயன் நாளிதழ் உள்ள வரை கிழக்குச் சூரியன்
நீவீர் வாழ்க நீடூழி காலம் இங்கு
வட்டுக்கோட்டை தொகுதி தமிழ் தேசிய கூட்டமைப்பு
ஆதரவாளர்கள்
Best Wishes

**மணிவிழா வாழ்த்து**



கௌரவ.
ஈ. சரவணபவன்
மணிவிழா நாயகன்
சமூக சேவையாளன்
சவால்களை எதிர்கொள்ளும் சரா!
சாதனையாளர் சரா!
நாடாளுமன்ற உறுப்பினர்
'சகிதன்' ஈ. சரவணபவன் அவர்களை
பல்லாண்டு வாழ்ந்து மேலும் சேவைகள்
பலபுரிய - அவர்களது மணிவிழா நாளில் வாழ்க்கைத்திறன்
மேம்பாட்டு நிலைய ஆட்சிக் குழுவினர், பயிற்சி ஆசிரியர்கள்,
இலவச பயிற்சி நெறி பயனாளிகள், மாணவர்கள், பெற்றோர்
ஆகிய நாமும் வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிலையம்
இலக்கம், 26, ஆடியபாதம் வீதி கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்படாத நிலையில் காணப்படும் முல்லைத்தீவு- வவுனியா வீதி

*நெடுங்கேணிக்கு நேரடியாகச் செல்ல முடியாததால்*

முல்லைத்தீவு, டிசெ.15

முல்லைத்தீவிலிருந்து தண்ணீரூற்று ஊடாக வவுனியா செல்லும் வீதி காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்பட்ட போதிலும் அது தமக்குப் பயன்படாத நிலையில் உள்ளதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவிலிருந்து தண்ணீரூற்று மற்றும் நெடுங்கேணி ஊடாக வவுனியா சென்றடையும் இந்த வீதியில் உள்ள நெடுங் கேணி கிழக்கு, நெடுங்கேணி மேற்கு, களிக்காடு, தண்ணி முறிப்பு, கோடாலிக்கல்லு, குஞ்சுக் கோடாலிக்கல்லு, தட்டாமலை, இத்திமடு ஆகிய இடங்களில் இங்குள்ள விவசாயிகளுக்கு ஏராள மான விவசாய நிலங்கள் உள்ளன. கடந்த காலங்களில் வவுனியா, கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் இந்த வீதியூடாகச் சென்றதால் விவசாயிகள் தமது விவசாய நிலங்களுக்கு இலகுவாகச் சென்று வந்தனர். ஆனால் தற்போது வவுனியா செல்கின்ற பஸ்கள் ஒட்டு சுட்டான் ஊடாகவே செல்வதால் விவசாயிகள் தண்ணீரூற் றிலிருந்து ஒட்டுசுட்டான் ஊடாக நெடுங்கேணியை வந்தடைந்து தமது வயல்களுக்கு பல மைல் தூரம் நடந்தே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பஸ்களில் சிலவற்றையாவது இந்த வீதியூடாகப் போக்குவரத்து ஏற்பாடு வசதி செய்யப்படுமாயின் விவசாயிகள் தொடக்கம் பாடசாலை மாணவர் வரை பயன்பெறுவரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பஸ்கள் இந்த வீதியால் செல்லாது ஒட்டுசுட்டான் ஊடாகச் சென்று நெடுங்கேணி சென்றடைவதாலும், இதேபோன்று வவு னியாவிலிருந்து வருகின்ற பஸ்களும் ஒட்டுசுட்டான் ஊடாகச் செல்வதாலும், தாம் அதிக பணத்தைச் செலவழிக்க வேண்டியுள்ளதுடன், நேரத்தையும் வீணாகச் செலவழிக்க வேண்டியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் களிக்காடு, கோடாலிக்கல்லு ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு தனியார் வாகனங்களுக்கு அதிக பணம் செலவழிக்க வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். தண்ணீ ரூற்றுக்கும் நெடுங்கேணிக்கும் இடையிலான கிராமங்களுக்கு பஸ் சேவை இடம்பெறுவதற்கு பஸ் கழகங்கள் ஆவன செய்ய வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்தனர்.

(க-50)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா பொன்னையா



மீசாலையைப் பிறப்பிடமாகவும் உப்புக்கேணி வீதி பெரியமாவடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா பொன்னையா நேற்று முன்தினம் (13.12.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் பொன்னையாவின் அன்பு மனைவியும், தங்கராஜன், நாகேஸ்வரி, மகேஸ்வரன், சுந்தரேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், சுககன்னியா, காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் இராஜி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12. 2013) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உப்புக்கேணி வீதி, சாவகச்சேரி. தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி வீமன்



சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி வீமன் நேற்று (14.12.2013) சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரன் - முத்தாட்சி தம்பதியரின் அன்புமகளும் சின்னப்பொடி - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வீமன் அவர்களின் அள்புமனைவியும் வள்ளிப்பிள்ளை, சின்னப்பிள்ளை, செல்லம்மா, பவளம், கணேஸ், தங் கம்மா, பாலி காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சேதுப்பிள்ளை, சுப்பர் ஆகியோரின் பாச மிகு சகோதரியும் மகேந்திரராசா ( கோபால்), கிருபாமலர், தருமராசா (தேவன்) காலஞ்சென்ற யோகராசா மற்றும் சாந்தி, புஸ்பராசா (புஸ்பன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சந்திரா காலஞ்சென்ற தர்மலிங்கம், ஜெயந்தி, ரவி, வளர்மதி ஆகியோரின் பாசமிகு மாமியும் கேமலியா, ரெஜிமென்டன் (பிரான்ஸ்), சிந்துஜா, பவிதா, கவிதா, கீத்திகா, சாரங்கன், சஜித்தா, சஜித்தன், தர்சனா, தர்சன், கிசான், கிருஷாந்தன், சாருகன், தனுக்ஷன், தனோஜன், துசானன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யனுப்பிரியாவின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (15.12.2013) மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்தக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

ஆஸ்பத்திரி வீதி, சங்கானை குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பாலசேகரம்



வவுனியா குடியிருப்பு மாப்பாணர் வளவைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசேகரம் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தி யோகத்தர், நீர்பாசனத் திணைக்களம், வவுனியா) நேற்று (14.12. 2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை முதலியார்-தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வகுமாரியின் பாசமிகு கணவரும், ராஜினி (உதவித்திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம் நானாட்டான்), சதீஸ் (KEY INFORMATION TECHNOLOGY, DUBAI), ஆகியோரின் அன்புத் தந்தையும், S.M. ஜெயராஜ் (பிரதேச செயலகம், மடு), சத்தியப்பிரியா (ALTHAIYA, DUBAI) ஆகியோரின் அன்பு மாமனும், சம்யுக்தா (GOOD SHEPHERD CONVENT, KANDY), அக்ஷரா (DUBAI) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ் சென்ற பரராஜசேகரம், செகராஜசேகரம், குமாரசேகரம், ஞானசேகரம், தயாளலஷ்மி, கனகசேகரம் மற்றும் கணேசரட்ணம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2013) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் பள்ளங்கோட்டை, நானாட்டானில் உள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வவுனியா மாப்பாணர் முதலியார் குடும்ப மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

T.P:- 023 323 6347 பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

## விற்பனைக்கு

கே.கே.எஸ் வீதி, மாவிட்டபுரம் அரசடி வீதியில் மூன்று பரப்பும் 81/4, குளியும் கொண்ட காணியில் மூன்று அறை, கோல், குசினியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 8516659

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் நடராசா



யாழ். உரும்பிராய் தெற்கு, செல்லத்துரை வீதியைப் பிறப்பிடமாகவும் அமெரிக்கா நியூயோர்க் Rochester ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நட ராசா கடந்த (10.12.2013) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், இராஜேஸ் வரியின் அன்புக் கணவரும், நிர்மலா (சித்திரா), சுபத்திரா (கனடா), யசோ (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவலிங்கம் (அமெரிக்கா), நவரட்ண ராஜா (கனடா), காலஞ்சென்ற பாக்கியராஜா (கண்ணன்) ஆகியோ ரின் அன்பு மாமனும், சிந்துஜன் -சுகிதா, பிரசாத் (அமெ ரிக்கா), திவாகர், பிரியங்கா (கனடா), ஜசீகன், லசீகா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், நவமணி (சிங்கப்பூர்), காலஞ்சென்றவர்களான குமாரசாமி, சின்னம்மா, பொன்னுத்துரை, அன்ன பூரணம் (தங்கச்சி) மற்றும் செல்வரட்ணம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்றவர்களான தங்கரட் ணம், விசுவலிங்கம், அன்னலக்சுமி மற் றும் சத் தியதேவி (மலேசியா), காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சிவசுப்பிரமணி யம் (பாலா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (14.12.2013) சனிக்கிழமை பி.ப. 4.00 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை Brighton, 2305 Monroe Ave Rochester, 14618 NEW YORK, U.S.A. என்னும் முகவரியில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இன்று (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் தெற்கு, செல்லத்துரை வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
சிவலிங்கம் (அமெரிக்கா)
+ 15853598426, + 15854896606
சுபத்திரா (கனடா) +14162976624,
யசோ (கனடா) +14162828919

தகவல்:
குடும்பத்தினர்.
செல்லத்துரை (V.T.S) வீதி,
உரும்பிராய் தெற்கு.



## தேவை நாடும் மகளிர்

**நீங்கள் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்ணா?**
**அல்லது சிறுமியா?**
**அப்படியாயின்**
**உளவளத்துணை (மனநல ஆலோசனை)**
**சட்ட உதவி**
**எம்மால் இலவசமாக வழங்கப்படுகின்றன.**

மௌனத்தைக் கலையுங்கள்!
வாழ்வில் வெற்றி கொள்ளுங்கள்!!

**விபரங்களுக்கு:**

## தேவை நாடும் மகளிர் "வின்"

அவசர தொலைபேசி இலக்கம் 24 மணித்தியாலமாக விஸ்தரிக்கப்பட்டு
2014 ஜனவரி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது
**011 4718585**
இல 35A, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
அலுவலக இல. 021 222 9671
இணையத்தளம்: www.winsl.net
Facebook - Women In Need (WIN)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,083 பயிலுநருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ். மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட ஆயிரத்து 83 பேருக்கு இன்று அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் நாடளாவிய ரீதியில் பட்டதாரிகள், பட்டதாரிப் பயிலுநர்களாக அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இவர்களுக்கு ஆறு மாத காலப் பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையில் அவர்களுக்கான நிரந்தர நியமனம் இப்போது வழங்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 200 பேருக்குப் பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனம் வழங்கப்பட்ட போதும் தற்போது ஆயிரத்து 343 பேரே தொடர்ந்தும் கடமையில் உள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து 83 பேருக்கு இன்று யாழ்.மாவட்டத்தில் வைத்து நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இன்று காலை 9.30 மணிக்கு அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அரச கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. (த-5)

# அமைச்சரவை நாளை அவசரமாக கூடுகிறது

அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள சர்ச்சைக்குரிய பல விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற் காக விசேட அமைச்சரவைக் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் பௌர்ணமிதினமொன்றில் நடத்தப்படும் முதல் அமைச்சரவைக் கூட்டம் இதுவாகும்.

குறிப்பாக பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய நாளாக கருதப்படும் முழுநிலவு நாள் இலங்கையில் விடுமுறை நாளாகவே கடைப்பிடிக்கப்படுகிறது. குறித்த நாளில் எந்த அரச பணிகளும் இடம்பெறுவதில்லை.

எனினும், கடும் அரசியல் நெருக்கடிகாரணமாகவேபௌர்ணமிதினம் என்றுகூட பாராமல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவையை கூட்டியுள்ளார்என்றுகூறப்படுகின்றது.

நாளை காலை 7 மணியளவில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் இந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்தில், அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள பல முக்கிய விடயங்கள் குறித்து கலந்து ரையாடப்படவுள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தென்னாபிரிக்கா மற்றும் கென்யாவுக்கான அதிகாரபூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் ஜனாதிபதி பங்கேற்கும் முதலாவது அதிகாரபூர்வ கடமை இந்த அமைச்சரவைக் கூட்டமாகும். (த-சி)

# மண்டேலாவின் படிப்பினைகளை பின்பற்றும் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 15

மண்டேலாவின் படிப்பினைகளைப் பின்னணியாகக் கொண்டு வடக்கு - தெற்கு மக்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஜனநாயக மக்கள் முன்னணியினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நாளை திங்கள் கிழமை காலை 9.30 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

நெல்சன் மண்டேலாவின் வரலாறு, இந்த நாட்டு மக்களுக்குத் தரும் படிப்பினைகளின் பின்னணியில் இந்த நாட்டு சிங்கள, தமிழ் மக்களின் மனசாட்சிகள் உரையாடும் நிகழ்வாக இது நடைபெறவுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட செயற்குழு ஏற்பாடு செய்துள்ள, இந்த அஞ்சலி மற்றும் உரையாடல் நிகழ்வில், சிங்கள பௌத்த மக்களின் ராஜகுருவாக கருதப்படும் கோட்டே ரஜமகா விகாராதிபதி வண. மாதுலுவாவே சோபித தேரரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், இந்திய வம்சாவளித் தமிழ்ச் சமூகத்தின் மூத்த தலைவரும், முன்னாள் இந்து கலாச்சார அமைச்சருமான பி. பி. தேவராஜும், பிரபல சமூக செயற்பாட்டாளருமான சாந்தி சச்சிதானந்தமும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

(த-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பெயானியின்

அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் வட மாகாணசபைத் தேர்தல் நடத்தியதன் நோக்கம் தவறாகிவிடும்" என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற காணி, காணி அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி, மாகாண சபை கள் அமைச்சுகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரி வித்ததாவது:-

13ஆவது திருத்தச்சட்டத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி அதிகாரம் போதாது. இருப்பினும் காணி அதிகாரம் மாகாண சபைகளுக்கே உரித்தானது என அதில் கூறப்பட்டுள்ளது.

உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் காணி அதிகாரம் பிராந்தியத்துக்கே வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிபுணர்களின் கருத்தும் இதுவாகவே இருக்கின்றது.

காணி அதிகாரம் தொடர்பில் உயர் நீதிமன்ற விவகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுடன் தொடர்புபட்ட அந்த வழக்கில் 3 நீதியரசர்கள் அடங்கிய குழாம் வழங்கிய தீர்ப்பில் அரச காணிகள் மாகாண சபையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் போது மாகாண சபைக்குரிய சட்டத்துக்கு அமையவே அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் காணி உரிமை பற்றி மாகாண சபைகளே தீர்மானம் மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசுக்கு மாகாணசபைகளே தீர்ப்பு வழங்க வேண்டும் என அந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி, 13 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை புறக்கணித்து, காணி அதிகாரங்களை மறுத்து தான்தோன்றித்தனமாக செயற்படக் கூடியதாக இருக்குமானால் அது நீதித்துறையுடன் இணங்கிப் போகாது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் கையில் அதிகாரங்கள் குவிந்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது உண்மையான - நேர்மையான நம்பிக்கைக்கு தடையாக அமையும்.

வடக்கு மக்கள் வடமாகாணத் தேர்தலினூடாக ஜனநாயகத் தீர்ப்பொன்றைத் தெளிவாக வழங்கியுள்ளனர். இதனை அரசும், அரச அதிகாரிகளும் ஏற்றுச்செயற்பட வேண்டும். தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்பட்டு, தீர்மானம் மேற்கொள்ள வேண்டும்.

வடமாகாண சபையானது மாகாண சபைக்குரிய பூரண அதிகாரங்களுடன் இயங்காவிட்டால் வடக்குத் தேர்தல் நடத்தியதன் நோக்கம் தவறாகிவிடும். அத்துடன் மாகாண சபைக்கு அதிகாரம் வழங்கிய மக்களுக்கும் விரக்தி ஏற்படும்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சமூக நலனோம்பல், புனர்வாழ்வு உள்ளிட்ட விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ள கடிதமொன்று ஜனாதிபதியின் செயலாளர் ஒருவரால் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தின் பிரதிகள் ஏனையோருக்கு அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் வட மாகாண முதலைமைச்சருக்கு அதன் பிரதி அனுப்பிவைக்கப்படவில்லை.

இதனூடாக மாகாண சபை இயங்குவதைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. வடக்கு மக்கள் ஜனநாயக ரீதியாக வழங்கிய தீர்ப்பை மழுங்கடிக்கச் செய்ய எவராவது நினைத்தால் அது சாத்தியமாக அமையாது.

வடமாகாண சபை நடவடிக்கைகளை முன்னெடுக்க அதிகாரம், ஒத்துழைப்பு வழங்கப்படமாட்டா எனில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய மாகாண முதல்வரால் முடியாது எனில் வடக்குத் தேர்தல் நடத்தியதன் நோக்கம் என்ன?

வடக்குத் தேர்தலின் பின்னர் 'வடக்கின் வசந்தம்' செயற்றிட்டம் வடமாகாண சபையிடம் கையளிக்கப்படும் எனப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கூறினார். வடமாகாணசபைக்கோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ 'வடக்கின் வசந்தம்' செயற்றிட்டம் கையளிக்கப்பட்டுள்ளது என்று எவராவது கூறுங்கள்? பார்க்கலாம் - என்றார். (த)

### காணாமற்போனோர் தொடர்பில்

வொரு விடயத்தை முன்னெடுத்தாலும் அதற்கு எதிராக இன்னொரு விடயத்தையும் முன்னெடுக்கும். அந்த வகையிலேயே இந்த விடயத்தையும் நோக்க வேண்டியுள்ளது.

காணமற்போனவர்களின் உண்மை நிலை வெளித்தெரியாமல் அதனைத் திரிபுபடுத்துவதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கை அரசு திட்டமிட்டுத் தமக்குச் சார்பான குழுக்களை இந்த நடவடிக்கைக்காகக் களமிறக்கிச் சர்வதேசத்துக்குத் தவறான செய்தியைக் கொண்டு செல்ல முயற்சிக்கின்றது.

விசாரணைகளை ஆரம்பிக்காமலேயே ஆணைக்குழுவின் தலைவர் இவ்வாறு சொல்வது, அவர்களின் விசாரணையின் போக்கு எப்படிச் செல்லும் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. தமிழ் மக்களுக்கு இதனால் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்று குறிப்பிட்டார்.

இதேவேளை- காணமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் தலைவர் சுந்தரம் மகேந்திரன் கூறுகையி, இலங்கை அரசு இவ்வாறு செய்யும் என்பதனால்தான் நாம் ஆரம்பம் முதலே சர்வதேச விசாரணையைக் கோரி வருகின்றோம்.

காணமற்போனவர்களுக்கு இறப்புச்சான்றிதழ் வழங்கவே இவர்கள் செயற்படுகின்றனர். எம்மை ஆணைக்குழுவினர் சந்தித்த போது, தீவிர விசாரணைகள் செய்து குற்றவாளிகளைத் தண்டிக்க நடவடிக்கை எடுப்போம் என்று குறிப்பிட்டிருந்தனர். இப்போது தெரிகின்றது இவர்களின் விசாரணைகளின் இலட்சணம்.

ஆரம்பத்திலிருந்து வலியுறுத்துவது போல இவர்கள் சரியான விசாரணையை முன்னெடுத்து எங்களுக்கு நீதியான தீர்வை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே சர்வதேச விசாரணையே தேவை - என்றார். (த-5)

### ஜெனிவாவில்

சிங்கள இனவாதிகளும் விமர்சிப்பதை நிறுத்திவிட்டு நாட்டின் நலன் கருதி ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பில் நேற்றுத் தெரிவித்ததாவது,

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும், அரசியல் தீர்வைக் காண்பதற்கு அரசானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுகளை ஆரம்பிக்கவேண்டும். மனித உரிமை மீறல்கள், உயிர் பறிப்புகள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் நீதியான விசாரணையை உடன் நடத்த வேண்டும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குரிய நிர்வாகப் பொறுப்பை தமிழ் மக்களிடம் அளிக்கவேண்டும், அங்கு சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தவேண்டும், வடக்கு, கிழக்கில் சிவில் ஆளுநர்களை நியமிக்க வேண்டும், தேவையற்ற இராணுவத் தலையீடுகளை நிறுத்த வேண்டும், இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்ற வேண்டும், தமிழ் அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்ய வேண்டும், இறந்தவர்களை நினைவுகூர அனுமதிக்க வேண்டும், காணாமற்போனோர் தொடர்பில் தீர்வுகாணப்படவேண்டும் என பல முக்கிய விடயங்களை இலங்கை அரசு நடைமுறைப் படுத்தவேண்டும் எனக் கோரி கடந்த வாரம் கத்தோலிக்க ஆயர் பேரவையானது சுற்றுநிருப ஆவணத்தை வெளியிட்டுள்ளது.

ஆனால், நாட்டின் நலன் கருதி கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்துள்ள இந்த ஆவணத்தை இலங்கை அரச தரப்பினரும், சிங்கள இனவாதிகளும் கண்டபடி விமர்சிக்கின்றனர்.

இலங்கை அரசு, மற்றவர்களின் அறிவுரைகளைக் கேட்காது தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருவதால் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அதற்கு அதிர்ச்சி காத்திருப்பது உறுதியாகின்றது.

அண்மையில் இலங்கை வந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை, பிரிட்டன் பிரதமர் கமரூன், ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் பெயானி மற்றும் அமரிக்காவின் உயர் குழுவினர் ஆகியோர் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், போரால் பாதிக்கப்பட்ட மற்றும் இடம்பெயர்ந்த தமிழ் மக்களையும், தமிழ் சிவில் சமூகத்தினரையும் நேரடியாகச் சந்தித்து தகவல்களை திரட்டிக் கொண்டு சென்றுள்ளனர்.

எனவே, உள்நாட்டில் நடைபெற்ற மனிதப் பேரவலங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுயாதீன விசாரணையை நடத்திப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க இலங்கை அரசு உடன் முன்வர வேண்டும். இல்லையேல் சர்வதேச விசாரணையை இலங்கை அரசு எதிர்கொண்டே தீரும்.

அத்துடன் தமிழ் மக்களுக்கான சகல உரிமைகளையும் வழங்கி அவர்கள் சுதந்திரக் காற்றை சுவாசித்து நிம்மதியாக வாழும் சூழ்நிலையை இலங்கை அரசு உடனடியாக ஏற்படுத்தவேண்டும் - என்றார். (த-சி)

### மன்னார்

இதேவேளை, விபத்துக்குள்ளாகின. இராணுவ 'கப்' ரக வாகனத்தின் பழைய இலக்கத் தகட்டை கழற்றி புதிய இலக்கத் தகட்டை இராணுவத்தினர் மாற்றியுள்ளனர். (ஐ-12)

### காணாமற்

லப்பட்டதாகவும், அவர்களைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் தமக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

'காணாமற்போனவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் போனால், அவர்களின் உறவினர்களுக்கு, அவர்களில் தங்கி வாழ்ந்தவர்களுக்கு இழப்பீடு கொடுக்குமாறு நாங்கள் அரசிடம் பரிந்துரை செய்வோம். சிலர் தகவல்களை வழங்க அச்சப்படுவதாக எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. அப்படியான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டால் எங்களிடம் மக்களை முறைப்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்' என்று ஆணைக்குழுவின் தலைவர் பரணகம கூறியுள்ளார்.

இதேவேளை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் காலம் கடந்த நவம்பர் 30 ஆம் திகதியுடன் முடிவடைவதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், டிசெம்பர் 31 ஆம் திகதி வரை முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நேற்று முன்தினம் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (த-5)

### வடக்கை

வாறு பழிவாங்க முயற்சிப்பதன் மூலம் பொது விடயங்களில் வெளிநாடுகள் தலையிடுவதற்கான பாதைகளைத் தான் அகலத் திறந்துவிடுகின்றோம்.

வடக்குமக்கள்தமது ஆணையை வழங்கி மாகாண சபை ஒன்றை உருவாக்கியுள்ளனர். அதற்கான நிதியை அரசு ஒதுக்க வேண்டும். இது தொடர்பில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அமைச்சரவையில் குரல் கொடுக்க வேண்டும். இதுதான் நியாயமானதும் சரியானதுமான செயற்பாடு - என்றார். (த-சி)

### இரண்டு

போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து நேற்று வரை 38 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நவம்பரில் 40 பேரும், இந்த வருடத்தில் நேற்று வரை 586 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதாரப்பகுதியினர் அறிவுறுத்துகின்றனர். (த-4)

### வடக்கு

தீர்வுகாண வேண்டும் என்ற தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற காணி அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைப் பிரதிநிதிகள் தமது சேவையை மக்களுக்குவழங்குவதற்கு அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும். இந்தியாவில் கிராம பஞ்சாயத்து போன்று பிரதேச சபை உறுப்பினர்கள் மக்களோடு மக்களாக இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தே அவர்கள் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

நிதிக்குழுவினால்தான் மாகாண சபைக்கு நிதி வழங்கப்படும். வடமாகாண சபைக்கு அதனூடாகவே நிதி வழங்கப்படுகின்றது. எனவே, நிதி வழங்கப்படுவதில்லை எனக் கூற முடியாது. வடமாகாண சபையும் அரசும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு பொலிஸ் அத்தியட்சகரை நியமிக்கும் போது மாகாண சபையுடன் கலந்துரையாடப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் தவறொன்றும் இல்லை. மத்திய அரசும் வடமாகாண சபையும் பேச்சு நடத்தி இவற்றுக்குத் தீர்வு காண வேண்டும் - என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடிக் கோல்கள் போட்டார் ஜூட் 'மைலோ' கிண்ணம் மேரிஸ் வசம்









யாழ்ப்பாணம்,டிசெ.15
நெஸ்லே லங்கா நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட மைலோ கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யூட்டின் அதிரடியான கோல்களால் நாவாந்துறை சென். மேரிஸ் அணி கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இறுதியாட்டம் நேற்று சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் அணி மோதியது. ஆட்டம் தொடங்கிய போது சென் அன்ரனிஸ் அணியினரின் ஆட்டம் மேலோங்கிக் காணப்பட்டது. இதனால் அவர்களின் ஆட்டத்தில் வேகமும் தென்பட்டது. இதனால் சென். அன்ரனீஸ் வீரர் 10 ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணியின் கோல் காப்பாளரையும் தாண்டி பந்தைக் கொண்டு சென்று வெளியே அடித்து தமக்கு கிடைத்த மிக இலகுவான சந்தர்ப்பம் ஒன்றை தவறவிட்டார். இருந்த போதும் மீண்டும் சுதாகரித்து விளையாடிய சென். அன்ரனீஸ் வீரர்களுக்கு 13 ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோல்போடும் வாய்ப்பு கிடைத்தது. ஆயினும் அதனையும் கோலாக்க அவர்கள் தவறி விட்டனர். இதனால் தமது ஆட்டத்தின் நுட்ப முறைகளை சென். மேரிஸ் அணியினர் மாற்றி அமைத்தனர். அப்போது 19 ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணி வீரர் அன்ரனிசாள்ஸ் தட்டிக்கொடுத்த பந்தை அவ்வணி வீரர் ஜூட் மிகச் சிறப்பாக கோலாக்கினார். இதனால் ஆட்டம் உச்சக்கட்டத்தை எட்டியது.

இதனால் இடைவேளைக்கு முன்னர் 1:0 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது இரு அணிகளின் கால்களுக்குள்ளும் பந்து அகப்பட்டு ஆட்டம் சூடேறியது. இரு கோல் காப்பாளர்களையும் அச்சுறுத்தும் வகையில் இரு அணி வீரர்களும் விளையாட அதனை தடைபோடும் விதமாக பின்கள வீரர்கள் எதிரணியின் கோல் வாய்ப்புக்களைத் தடுத்து நிறுத்துவதில் ஆர்வம் காட்டினர். இருந்தபோதும் 22 ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணி வீரர் ஜூட் தான் எடுத்த பந்தை இலாவகமாகக் கொண்டு சென்று கோலாக்கி தனது அணியின் கோல் எண்ணிக்கையை உயர்த்தினார்.

அதன் பின்னர் ஆட்டம் நிறைவடைவதற்கான நேரம் நெருங்க சென். அன்ரனீஸ் அணியினர் தமது ஆட்டத்தை வேகப்படுத்தியபோதும் சென். மேரிஸ் அணியின் பின்கள வீரர்களால் அதற்கு முட்டுக் கட்டை போட்டனர். இதனால் அவர்களின் முயற்சி கள் முறியடிக்கப்பட்டன. இதனால் இறுதியில் சென். மேரிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது.

மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சக்கோட்டை வீண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் சக்கோட்டை வீண்மீன் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தைக் தனதாக்கிக் கொண்டது.

இறுதியாட்டத்தில் சிறந்த வீரனாகவும், தொடரின் சிறந்த வீரராகவும் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் ஜூட் தெரிவானார்.

சிறந்த கோல் காப்பாளராக சக்கோட்டை வீண்மீன் விளையாட்டுக் கழக அணி வீரன் அனஸ்லின் டினேஸ் தெரிவானார்.

இந்த நிகழ்வில் பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடி, நெஸ்லே லங்கா நிறுவனத்தின் தெற்காகிய வலயத்தின் சிரேஸ்ட பிரதித் தலைவர் நந்துநந்த கிசோர், நெஸ்லே நிறுவனத்தின் தெற்காசிய வலயத்தின் சந்தைப்படுத்தல் தலைவர் எட்டியா பெனி, நெஸ்லே லங்கா நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் கணேஸ் அம்பலவாணர், வட மாகாண சபை உறுப்பினர் இ. ஆனல்ட், வட மாகாண விளையாட்டுத் துறை பணிப்பாளர் ராஜா ரணசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆரம்ப நிகழ்வில் வட மாகாணக் கல்வி பண்பாட்டலுவல் விளையாட்டுத்துறை அமைச்சர் குருகுலராஜா பங்கு கொண்டார். (த-23-86-422)

## வலிகாமம் லீக் இதுவரை காலமும் பதியப்படாமை ஏன் எனத் தெரியாது

### *கைவிரிக்கிறார் சம்மேளனத் தலைவர்*

வலி.வடக்கு, டிசெ.15
வலிகாமம் உதைபந்தாட்ட லீக் கடந்த 23 வருடங்களாக இயங்கி வருகின்ற போதிலும் அதற்கு இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் அங்கத்துவம் கொடுக்கப்படாமை ஏன் என்பது எனக்குத் தெரியாது. இதற்கு தடையாக யார் இருந்தார் என்பது தெரியாது என்று இலங்கை உதைபந்தாட்டச் சம்மேள்னத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் உதைப்பந்தாட்ட லீக்கை இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தில் இணைத்துக் கொள்ளும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் நா.நவரத்தினராசா தலைமையில் வலி. தெற்கு பிரதேச சபை கேட் போர் மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் றொட்றிக்கோ தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர் காலத்தில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் கடந்த காலங்களைவிட மேலும் சிறந்த முறையில் இயங்க வேண்டும். இதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் என்ற வகையில் நானும் ஏனைய உறுப்பினர்களும் முழுமையாக செய்வோம்.

வலிகாமத்தில் இருந்து பெண்கள் உதைபந்தாட்ட அணியை மேலும் பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும்.

தற்போது உதைபந்தாட்ட லீக்குகளினால் நடத்தப்பட்டு வரும் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டிகளை நடத்த ஏனைய லீக்குகளுக்கு வழங்கப்பட்டதைப் போன்று பண உதவியாக 25 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும்.

அடுத்தாண்டு முதல் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு வழங்குவது போன்று பண உதவிகள், பொருள் உதவிகளும் வழங்கப்படும் - என்றார். (த-86)

## காலிறுதியாட்டங்களில் வெற்றி பெற்ற அணிகள்

வலி.வடக்கு, டிசெ.15
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளையொட்டி நடத்தி வரும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற காலிறுதி ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:

மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகத்துக்கும் அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் வளர்மதி விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் திருமகள் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று அரையிறுதியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழக 'பி' அணிக்கும் அராலி வடக்கு பாரதி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றமையால் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து அண்ணா விளையாட்டுக் கழக 'பி' அணி [illegible] என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியில் விளையாட தகுதி பெற்றுள்ளது. (த-86)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கிந்தியத் தீவுகளை பந்தாடியது நியூசிலாந்து



மேற்கிந்தியத் தீவுகள் அணியை இன்னிங்ஸ் மற்றும் 73 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது நியூசிலாந்து. நியூசிலாந்து- மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதிய இரண்டாவது டெஸ்ட் போட்டி வெலிங்டனில் இடம்பெற்று வந்தது.

இதில் முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 441 ஓட்டங்கள் குவித்தது. நேற்று முன் தினம் 2 நாள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 இலக்குகள் இழப்புக்கு 158 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, நியூசிலாந்து வீரர் போல்ட்டின் பந்து வீச்சில் திணறியது. 193 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில், அனைத்து இலக்குகளையும் இழந்து பலோ ஒன் ஆனது. போல்ட் 6 இலக்குகளை வீழ்த்தினார்.

இதனையடுத்து இரண்டாவது இன்னிங்ஸையும் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடர்ந்து இலக்குகளையும் இழந்து திணறியது. அனைத்து இலக்குகளையும் இழந்து 175 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதனால் நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 73 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. மூன்று போட்டிகள் கொண்ட தொடரில், நியூசிலாந்து 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. முதல் டெஸ்ட் போட்டி மழையால் சமநிலை ஆனமை குறிப்பிடத்தக்கது. (கு)

# சுவிஸ் அணியில் முதல் தமிழ் சிறுவன்

சுவிசில் 13 வயதின் கீழ் ஹொக்கி தேசிய மாநில கழகத்தில் தெரிவாகிய முதல் தமிழ் சிறுவன் என்ற பெருமையை பெற்றுள்ளார் அஸ்வின் சிவசுப்பிரமணியம்(வயது 12). இவர் தனது 6 வயதில் டெலிமண்ட் கழகத்தில் இணைந்து பந்துக் காப்பாளராக விளையாடி வருகின்றார். இவரது திறமையைக் கண்ட பயிற்றுநர்கள் 13 வயதின் கீழ் தேசிய மாநில அளவில் அஸ்வினை விளையாடச் செய்துள்ளனர்.

அத்துடன் கோடை காலத்தில் சுவிசின் முன்னணிக் கழகமான றோஸ்மைசன் ஹொக்கிக் கழகத்தில் 5 வருடங்களாக அஸ்வின் பந்துக்காப்பாளராக விளையாடி வருகின்றார். 2012 சுவிஸ் கிண்ணத்துக்கான போட்டியில் அஸ்வின் சிறந்த பந்துக்காப்பாளர் பட்டத்தை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)



# குசல் பெரேரா அபாரம் இலங்கை அணி வெற்றி



இலங்கை அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையில் இடம்பெற்ற இரண்டாவது 20/20 போட்டியில் இலங்கை அணி 24 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

டுபாயில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை இலங்கை அணிக்கு வழங்கியது. இதன்படி, துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குளை இழந்த நிலையில் 211 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் குசால் பெரேரா 84 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்த நிலையில் 212 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்த நிலையில் 187 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியைத் தழுவியது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட தொடர் ஒன்றுக்கு ஒன்று என்ற அடிப்படையில் சமநிலையில் நிறைவு பெற்றது. இதனிடையே, இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகளை கொண்ட ஒரு நாள் சர்வ தேச போட்டித் தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாக [illegible] குறிப்பிடத்தக்கது. (கு)

மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

Happy Birthday!



இன்நறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றுதல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்துதல்
அன்னயாவினும் புண்ணியங்கோடி
"ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

ஏழைப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு வழங்கிவரும் ஆதரவு
மேலும் தொடர மணிவிழாக் காணும்
எம் பெருமதிப்பிற்குரிய கௌரவ நாடாளுமன்ற உறுப்பினரும்,
உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநருமான

உயர்திரு ஈஸ்வரபாதம் சரவணபவன்

அவர்களை

நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

SUBRA கல்வி நிறுவனம்
சித்தங்கேணி - வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இதுவரை தொழில் இல்லையென்ற கவலையா..........?
★ 2014 இல் ஓர் சிறந்த நிறுவனத்தில் பணிபுரிய விருப்பமா?
★ அளவற்ற மாத வருமானம் பெற விருப்பமா?

யாழ். நகரில் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றில் வரையறையற்ற மாத வருமானத்துடன் வேலை வாய்ப்பு

வயதெல்லை - 25 தொடக்கம் 60 வயது வரை

தகமைகள்- O/L 6 பாடம் சித்தி (கணிதம் உட்பட)

தொடர்புகளுக்கு:- F.Stalin
0773655320

## LONDON METROPOLITAN COLLEGE

மாணவர்கள் பூரணமான ஆங்கில மொழியாற்றல் திறமையை எய்துவதற்கு வழிகாட்டிவரும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS** ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Week/ Week ends
- எம்மிடம் visa செய்யும் மாணவர்களுக்கு இலவச IELTS Classes
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-7.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
- British Council Special Trained Lecture Panel

**City & Guilds** A1 A2 B1 B2
Duration: 48 hrs Week/ Week ends
- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

Certificate in **SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning programme)
Duration: 60 hrs Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- தொழில்புரிவோர், மாணவர்களுக்கான தனிப்பட்ட பிரிவுகள் ஆரம்பம்.

**DIPLOMA IN ENGLISH**
Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
Be a power speaker INTENSIVE COMMUNICATION PROGRAM
- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறை மூலம் விரிவாக கற்பிக்கப்படும்.
- மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை எம்மிடமே கற்க முடியும்.
- கற்கைநெறி முடிவில் சர்வதேச தரத்திலான சான்றிதழ் வழங்கப்படும்.

**Weekdays: 09.12.2013 | 12.12.2013 || Weekends: 08.12.2013 | 14.12.2013**

அனைத்து கற்கைநெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

காலத்தின் தேவை

WWW.tharsfashion.com

மார்கழி வெற்றியாளர்:-
T. கௌசி
இலகடி,
கோப்பாய் வடக்கு
தொடர்புக்கு:
ப. தயாறுபன்
0771516013

## அந்தணர் தேவை

யாழ். தீவகத்திலுள்ள ஆலயம் ஒன்றுக்கு நாளாந்த நித்திய பூசைக் கடமைகள் புரிவதற்கு அனுபவம் வாய்ந்த பூசகர் தேவை. தகுந்த சம்பளத்துடன் தங்கு மிட வசதியும் செய்து கொடுக்கப்படும். விண்ணப்பங்களை விரைவில் அனுப்பி வைக்கவும்.

மே/பா உதயன்
விளம்பர இல.4479
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## LONDON METROPOLITAN COLLEGE
Computer Courses

| | |
|---|---|
| Certifcate in MS Office 2013 | 2500 |
| Certifcate in JAVA,VB.Net, C#, ASP | 3500 |
| Internet & Email | 1500 |
| Diploma in Graphic Designing cs6 | 4500 |
| Diploma in Computer Studies | 4500 |
| Diploma in Computer Hardware | 2500 |
| Diploma in Computer Network | 4500 |
| Diploma in Web Development | 5500 |
| Diploma in Web Designing | 3500 |
| Diploma in Software Development | 5500 |
| Diploma in Computer Programing | 4500 |

197, Arasady Road, Jaffna
Tel: 021 2227230, 0217538395

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 5671111

## German Language Academy

ஜேர்மன் மொழியும் இலகு வழியும்

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தும் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு ஜேர்மனியில் பல வருடங்கள் வசித்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது. வேறு எங்கும் இல்லாதவாறு மிகக்குறைந்த கட்டணத்துடன் பரீட்சைகள் ஆரம்பமாகும்.

No.23, Palaly Road, Jaffna. 077 970 7322 (40784)(15.3.6)

## கடை வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியில் 26அடி அகலமும், 70 அடி நீளமும் முற்றாக மாபிள் பதிக்கப்பட்ட இணைந்த குளியலறையுடன்சகலவசதிகளும் கொண்ட கடைத் தொகுதி வாடகைக்குண்டு. (நிதிநிறுவனங்கள், வங்கிகளுக்கு ஏற்றது)


தொடர்பு: 077 732 4648, 077 732 4637

## ஜூஸ் பக்கெட் மெசின்

நத்தார் பண்டிகையை முன்னிட்டு
**விசேட விலைக்கழிவுடன்**

பெறுமதியான பரிசுகள் உடன்

1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கலாம்




- 1 வருட உத்தரவாதம்
- இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்ச்சி வழங்கப்படும்
- விற்பனைக்கு பின் சேவை
- இலவச விநியோகம்

ரூ.2 /=
ரூ.5 /=
ரூ.10 /=
பக்கட்டுகளை தயாரிக்கலாம்

தமிழில் தொடர்பு கொள்ள
**077 391 8870**

WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo - 03

max adz




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

ஞாயிறு 15/12/2013






12

பலகோடி உண்மைகளை அறிவோம் 23

ஜன்னல் ஓரம் 20



# ஐ.நா. விரும்பாத ஆமி

ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான விடயங்கள் தொடர்பில் ஆராயும் விசேட அறிக்கையாளராகப் பணியாற்றுகின்றார் சலோகா பெயானி. ஆப்கன், வடகொரியா, லிபியா, ஈராக் போன்ற நாடுகளில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் நலன்கள் குறித்து ஐ.நாவுக்கு அறிக்கையிட்டதில் பெயானியின் பங்கு முக்கியமானது. இடம்பெயர்ந்து வாழும் மக்களின் துயரங்களை நேரில் கண்டுணர்ந்து அவற்றை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அறிக்கையிடுவதே அவரது பணி. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக மற்றொரு தீர்மானத்தை கொண்டு வரும் முயற்சிகளில் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ள தருணத்தில் பெயானியின் பயணம் இலங்கை அரசின் எதிர்பார்ப்புகள் எதுவுமின்றி நடந்தேறியது. ஆனால் அரசு பயந்ததைப் போன்றே எதிர்மறையான அறிக்கை ஒன்றை வழங்கியிருக்கிறார் பெயரானி 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம 5 12 2013 ஞாயிற்றுக்கிழமை

# ஆபத்தில்லாத சண்டித்தனம்

**தந்தை செல்வா சதுக்கத்தில் மாவீரர் நாளன்று மரம் நடப்படும் என்றும் அன்றைய தினம் மக்களும் மரம் நட வேண்டும் என்றும் ஊருக்கெல்லாம் உஷார் படுத்திவிட்டு இவர்கள் மட்டும் திடீர் என்று திட்டத்தைக் குப்பையில் போட்டுவிட்டு 'பம்மிக் கொண்டார்கள்'.**

ஓடுகாலி

பரமார்த்த குருவுக்கு உள்ளூர எப்போதும் எல்லாவற்றுக்கும் பயம் இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. தன்னைப்போலவே தன் சீடர்களையும் 'பயமற்றவர்கள்' என்று பார்ப்போர் நம்பும்படியான காரியங்களைச் செய்வதில் அவர் கெட்டிக்காரர். அவர் செய்கின்ற எல்லாவற்றுக்குமே காரண காரியங்களை கற்பித்து அவரை ஒரு 'சுப்பர்மானாக' உயர்த்திப் பிடிப்பதில் ஊரவர்களும் சளைத்தவர்கள் அல்ல.

பறவைகளில் வெளவால் என்றால் பரமார்த்த குருவுக்கு பேதி போய்விடும். அந்தளவுக்கு பயம். ஆனால் அவர் அதனைக் காட்டிக் கொள்வதில்லை.

" எனக்கு ஒரு சக்தி இருக்கிறது. தலைகீழாக செயற்படும் எல்லாவற்றையும் பார்த்தேன் என்றால் அவை பஸ்பமாகிவிடும். பாவம் - இந்த சக்தியால் அப்பாவி வெளவால்களை எரிக்க நான் விரும்பவில்லை" என்று வீறாப்பாகச் சொல்லிவிட்டு இரவானதும் வீட்டுக்குள்ளேயே அடைந்துகொள்வார். வெளியே போனால் வெளவால் கடித்து விடுமோ என்ற பயம். ஒருமுறை கொட்டுமழை. பரமார்த்த குருவுக்கு சிறுநீர் முட்டிக்கொண்டு வந்தது. எவ்வளவு தான் அடக்கியும் முடியவில்லை. போனால் போகட்டும் என்று வெளவால் பயத்தைத் தூக்கிவைத்துவிட்டு வெளியே வந்து இயற்கைக் கடனைத் தீர்த்தார். அவர் இரவில்வெளியேவந்ததைநாலைந்து பேர் கண்டும் விட்டார்கள். அவரது நல்ல காலம். அன்றைக்கு மின்னலில் சிக்கி நிறைய வெளவால்கள் அந்த ஊரில் இறந்து கிடந்தன.

"பரமார்த்த குருவின் பார்வை பட்டுத் தான் வெளவால்களுக்கு இந்தக் கதி" என்று ஊரே உசுப்பேற்றி, பரமாத்மகுருவை ரணகளமாக்க முயற்சித்தது. வெளவால்கள் செத்த கதை பரமார்த்த குரு வுக்கு எட்டியது. இன்னும் பயம் அதிகமானது. 'ஒருவேளை உண்மையிலேயே வெள வாலை எரிக்கும் சக்தி எனக்கு உண்டோ?' என்று எண்ணிக் கொண்டு படுத்திருந்தவரை கடித்தது நுளம்பு. ஆனால், பரிதாபம் அவர் இதுநாள்வரை நுளம்பை நேரில் கண்டறியார்.

'என்னால் கொல்லப்பட்ட வெளவால்களின் ஆவிதான் இப்படி வந்திருக்கிறது.' என்று எண்ணிக்கொண்டு அலறித்துடித்தார். அவரது அலறல் கேட்டு சீடர்களும் என்னவோ ஏதோ என்று ஏங்கித் தவித்தார்கள். கடைசியில் தன்னைக் கொல்ல வந்திருக்கும் 'வெளவால்களின் ஆவி பற்றி' சீடர்களுக்குச் சொன்னார். சீடர்களும் கத்தி கடப்பாறைகளோடு நுளம்புகளை கொல்லப் புறப்பட்டு தோல்வி கண்டார்கள். கடைசியில் வெளவால்களின் ஆவியை அழிக்க ஒரு திட்டம் தீட்டினார்கள். வீட்டுக்குள் இருக்கும் வெளவால்களின் ஆவியை' (நுளம்பை) அப்படியே தீ மூட்டுவது என்பதே திட்டம். திட்டப்படி பற்றி எரிந்தது வீடு. ஆனால் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஓடிவந்து தீயை அணைத்துவிட்டார்கள்.

"முட்டாள் சனங்கள். எங்கள் திட்டத்தை பாழடிதுவிட்டார்களே" என்று அயலவர்களை நொந்துகொண்டார் பரமார்த்த குரு.


* * *

பரமார்த்த குருவையும் சீடர்களையும் போலவேதான் ஏதாவது ஏடாகூடமாகச் செய்தேனும் தங்களுடைய 'வீரத்தை' மக்களை நம்பச் செய்யும் காரியத்தில் தமிழ் அரசியல்வாதிகள் தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள். ஒன்றையும் வெட்டிக்கிழிக்காமலேயே ஊரெல்லாம் 'விசிற்' அடித்து, பத்திரிகைகளில் படங்களாகப் பிரசுரித்து, நடக்கவே முடியாதவற்றை பற்றியெல்லாம் கண்ணை மூடிக் கொண்டு வாக்குறுதிகளை வழங்கி 'வீரர் சூரராக' தம்மையும் இந்தச் சனங்கள் நம்ப வேண்டும் என்பதற்காக அவர்கள் படும் பாடு கொஞ்சநஞ்சமல்ல. ஆனால், குருவி தலையில் பனங்காய் போல சற்றும் பொருத்தமே இல்லாத செயல்களில் இறங்கி அடிக்கடி இவர்கள் மூக்குடைபடுவதும் உண்டு.

கடந்த 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம். அன்றைக்குத்தான் மூன்றாவது முறையாக வடக்கு மாகாண சபை கூடியது. அத்துடன் அடுத்த வருடத்துக்கான வரவுசெலவுத் திட்டமும் இதன்போது சமர்ப்பிக்கப்பட இருந்தது.

மாகாணசபை அமர்வுகள் தொடங்கிய சில நிமிடங்களில் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கையில் சுலோகங்களை ஏந்திய படி கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் இறங்கினார்கள். "நாங்களும் மனித உரிமைகள் தினத்தில் மக்களுக்காக உயிரைக் கொடுத்துப் போராடினோம்" என்று காட்டுவதற்காகவே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டதோ என்ற சந்தேகம் ஒவ்வொரு தமிழனிடத்தும் இருக்கின்றது.

ஏனெனில் சாத்வீக வழியிலான போராட்டங்கள் அண்மைக்காலங்களில் நடைபெற்ற போது மாகாண சபை உறுப்பினர்கள் பலர் சுழற்சி முறையில் எட்டிப்பார்த்தோடு ஒதுங்கி விட்டார்கள். மக்களோடு மக்களாக நின்று இந்தப் போர்ாட்டங்களில் குரல்கொடுத்த கூட்டமைப்புக்காரர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். அண்மையில் வலி வடக்கு மக்கள் தெல்லிப்பழையில் நடத்திய உணவுத் தவிர்ப்பு போராட்டத்திலும் இதே கதைதான். ஆனால், போராட்டத்தின் இறுதி நாளன்று அந்தப் பகுதிக்கு பிரிட்டன் பிரதமர் வருவார் என்று கதை பரவியதால் அதுநாள்வரை எட்டியும் பார்க்காத கூட்டமைப்பு உறுப்பினர் கள் பலரும் வெள்ளையும் சொள்ளையுமாக விழுந் தடித்து ஓடிவந்தார்கள். ஆனால், கமரூன் வராததால் இலவுகாத்த கிளிகளானார்கள்.



மாவீரர் தினத்தில் ஒரு மரம் நடுவதற்குக் கூட இந்த உறுப்பினர்களில் பெரும்பாலானோருக்கு வீரம் பிறந்திருக்கவில்லை. தந்தை செல்வா சதுக்கத்தில் மாவீரர் நாளன்று மரம் நடப்படும் என்றும் அன்றைய தினம் மக்களும் மரம் நட வேண்டும் என்றும் ஊருக்கெல்லாம் உஷார் படுத்திவிட்டு இவர்கள் மட்டும் திடீர் என்று திட்டத்தைக் குப்பையில் போட்டுவிட்டு 'பம்மிக் கொண்டார்கள்'.

மாவீரர் நாள் மட்டுமல்ல வலி. வடக்கில் மக்களின் வீடுகளும், ஆலயங்களும் இடிக்கப் படும் போது கூட இவர்களில் பலர் அந்தப் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை. பார்க்கச் சென்ற முதலமைச்சர் வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பப்பட்டபோது கூட ரோசம் பொத்துக்கொண்டு வந்து ஒரு அகிம்சை ரீதியிலான எதிர்ப்பைக் கூட காட்டுவதற்கு நெஞ்சில் இவர்களுக்கு உரம் இருக்கவில்லை.

இப்படிப்பட்ட விண்ணர்கள்தான் 'அடிக்கவும் வேணும்; சேதாரமும் இருக்கக்கூடாது' என்ற சித்தாந்தத்தில் குப்புறப் படுத்திருந்து யோசித்ததன் விளைவுதான் மனித உரிமை நாளன்று மாகாண சபையில் எதிர்ப்புப் போராட்டம். உண்மையில் இது ஒரு ஆபத்தில்லாத சண்டித்தனம். ஏனென்றால் மாகாண சபையில் உறுப்பினர்கள் இத்தகைய போராட்டங்களை நடத்தினால் அவர்களை தாக்குவதற்கு எவரும் இருக்கப்போவதில்லை. ஏனென்றால் எங்களுடைய வீட்டுக்குள் நாங்கள் எதுவும் செய்யலாம். யாரும் கேள்விகேட்க முடியாது. அந்தத் தைரியம்தான் இதுநாள்வரை குமர்ப் பிள்ளை போல உள்ளுக்குள் ஒளிந்திருந்தவர்களை அரசுக்கு எதிரான சுலோகங்களை ஏந்தவைத்தது.

அதிலும் வேடிக்கை என்னவென்றால் அனுராதபுரத்தில் அடிவாங்கியவன் அச்சுவேலியில் போய்நின்று சண்டைக்கு அழைத்த கதையாக, ஒரு வாரத்துக்கு முன்னர் வலி. வடக்கில் படையினரால் முதலமைச்சர் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவத்துக்கு அன்றைக்குத் தான் இவர்கள் எதிர்ப்பைக் காட்டினார்கள். அந்தளவுக்கு 'அதிவேக' எதிர்ப்பாளர்கள்.

வட மாகாணசபை கூட்டமைப்பின் ஆட்சியில் இருக்கிறது. இந்த நிலையில் இந்தப் போராட்டத்தை யாருக்கு எதிராக இவர்கள் நடத்தினார்கள் என்ற கேள்வி எழுகின்றது. உண்மையில் வடமாகாண அரசுக்கு எதிரான கருத்தை வெளிப்படுத்தவேண்டு மானால் சபை அமர்வில் ஜனநாயகப் போரில் இறங்குவதில் அர்த்தமுண்டு. ஆனால் இவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியதோ இலங்கை அரசுக்கு எதிராக. அப்படியானால் கொழும்பிலோ அல்லது பகிரங்க பொது வெளியிலோ இவர்கள் மக்களை ஒன்று திரட்டி மனித உரிமைகள் தினத்தில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்திருந்தால் அதனை மக்களும் வரவேற்றிருப்பார்கள். எனினும் அப்படி நடத்தப்போய் திருகோணமலையில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தாக்கப்பட்டதைப் போன்று தாமும் காயப்பட வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் என்ன இளித்தவாயர்களா? அதனால்தான் புத்திசா துரியமாக தங்களுடைய 'வீரத்தையும்' வெளிப்படுத்தி பாதுகாப்பையும் உறுதிப் படுத்தி ஒரு எதிர்ப்புப் போராட்டத்தை நடத்திக் காட்டியிருக்கிறார்கள். நான்கு சுவர்களுக் குள் நடந்த ஆர்ப்பாட்டம் ஊடகங்கள் மூல மாகவே மக்களுக்குத் தெரியும். மாகாண சபைக் குறிப்பேட்டிலும் இது பதிவாகலாம். ஆனால் வேறெந்தத் தாக்கத்தையும் ஒரு போதும் இந்த எதிர்ப்பு நிகழ்த்தப்போவ தில்லை. எப்படி மீனின் கண்ணீர் கடலில் கண்டுகொள்ளப்படாமல் இருக்கிறதோ அதே போன்று இவர்களின் நான்குசுவர் நடுவே நடக்கும் 'மாபெரும்' எதிர்ப்புப் போராட்டங்களும் எந்தவித அதிர்வையும் உண்டுபண் ணாத மலட்டுத்தன்மையானவையே. நெஞ் சுரமும் நேர்மைத் திறமும், இனப்பற்றும் இருந்தால் வாருங்கள் வீதிக்கு. உங்களோடு சேர்ந்து குரல்கொடுக்க மக்கள் எப்போதும் தயார்தான். நீங்களல்லவா தலையைக் காட்டாமல் ஓடி ஒளிகிறீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. விரும்பாத ஆமி



“ சலோகா பெய்யானி கடந்த வாரம் இலங்கைக்கு வந்திருந்தார். இலங்கை வந்த அவர் வடக்கில் யாழ்ப்பாணத்துக்கும் முல்லைத் தீவுக்கும் பயணத்தை மேற்கொண்டு அங்கு இடம் பெயர்ந்த மக்கள் அனுபவித்துவரும் வேதனைகளை - சோதனைகளை நேரில் கண்டுணர்ந்தார். ”

அதிரன்

“இராணுவத்தினரால் கையப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் விவரங்களின் வெளிப்படைத் தன்மை மேணப்படுவதுடன் பொதுமக்களின் இடங்களிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். அத்துடன் போரினால் இடம் பெயர்ந்த வர்களின் பிரச்சினைக்கு ஒரு காத்திரமான தீர்வை எட்டுவதற்கு வளர்ச்சியை அடிப் படை யாகக் கொண்டு யுக்தி தேவை"

இவ்வாறு கூறியிருக்கிறார் ஐ.நா.வின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மனித உரிமைகள் குறித்த சிறப்புப் பிரதிநிதி சலோகா பெயானி.

ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான விடயங்கள் தொடர்பில் ஆராயும் விசேட அறிக்கையாளராக சலோகா பெயானி பணியாற்றி வருகிறார். மோதல்கள் இடம்பெறும் நாடுகளான ஆப்கானிஸ்தான், வடகொரியா, லிபியா, ஈராக் போன்ற இடங்களில் இடம்பெயர்ந்த மக்களின் நலன்கள் குறித்து ஆராய்ந்து ஐ.நாவுக்கு அறிக்கை சமர்ப்பித்ததில் பெயானியின் பங்கு முக்கியமானது. இவ்வாறு மோதல் இடம்பெறும் நாடுகளுக்கு சென்று அங்கு இடம் பெயர்ந்த மக்கள் அனுபவிக்கும் வேதனை [illegible]ள நேரில் கண்டுணர்ந்து அவற்றை அறிக்கையாக்கி ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு சமர்ப்பிக்கும் பொறுப்பே பெயானியின் முக்கிய பணி.

அந்த வகையில் சலோகா பெயானி கடந்த வாரம் இலங்கைக்கு வந்திருந்தார். இலங்கை வந்த அவர் வடக்கில் யாழ்ப்பாணத்துக்கும் முல்லைத்தீவுக்கும் பயணத்தை மேற்கொண்டு அங்கு இடம் பெயர்ந்த மக்கள் அனுபவித்து வரும் வேதனைகளை - சோதனைகளை நேரில் கண்டுணர்ந்தார்.

ஐ.நா. நிபுணர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதற்கு முன்னர் கடும் எதிர்ப்பை வெளியிட்ட இலங்கை அரசு பின்னர் ஒருவாறு அவர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதி அளித்தது. எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக மற்றொரு தீர்மானத் தைக் கொண்டு வருவதில் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ள தருணத்தில் ஐ.நா. பிரதிநிதிகள் இலங்கை வருவதற்கு அரசு அனுமதி அளித்தி ருந்தது. அந்த வகையில் பெயானியின் பயண மும் அரசின் எதிர்ப்புக்கள் எதுவுமின்றி நடந்தேறி யது.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர் வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து 23 வருடங்களாக சுன்னாகம் கோணப்புலம் அகதி முகாமில் வசிக்கும் மக்களை நேரில் சென்று பார்வையிட்டார். அவரது பயணம் அமைந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் கடும் மழை பெய்திருந்தது. முகாம்களில் வசிக்கும் மக்கள் வழமையாகவே பருவ மழையினால் பல்வேறு துன்பங்களை அனுபவித்துப் பழகிப் போனவர்கள். ஒழுங்கான கூரைகள் இன்றி ஓட்டைக் குடிசைகளில் அவர்கள் மழைக்கு மத்தியிலும் நடத்தும் சீவியம் சொல்லில் அடங்காதவை. சீமெந்துத் தரைகள் அற்ற இந்தக் குடிசைகளுக்குள் மழை காலத்தில் ஈரம் ஊறி நிலம் சதுப்பு நிலமாக இருக்கும். அவ்வாறான ஒரு நேரத்திலேயே ஐ.நா.வின் அறிக்கையாளர் பெயானி கோணப்புலம் அகதிமுகாமுக்கு சென்றிருந்தார்.

அந்த முகாமுக்குச் செல்லும் வீதி மோசமான நிலையில் இருந்தது. [illegible] காணப்பட்ட அந்த [illegible] குடிசைகளுக்குள்ளும் குனிந்து சென்று அந்த மக்கள் அனுபவிக்கும் அல்லல்களை நேரில் கண்டறிந்துகொண்டார் அந்த ஐ.நா. அதிகாரி. இதன் மூலம் இடம்பெயர்ந்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவருக்கு தெளிவாக தெரிந்திருக்கும். இலங்கை வந்த அவர் அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேசியிருந்தார். தனது பயணத்தை முடித்துக் கொண்டு ஜெனிவாவுக்குத் திரும்பிய அவர் தனது இலங்கைப் பயணம் தொடர்பாகவிரிவான அறிக்கையொன்றை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்திருக்கிறார். அவரது இந்த அறிக்கை இலங்கை அரசின் அட்டூழியங்களையும் மனித உரிமை மீறல்களையும் தெளிவாக வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

தனது அறிக்கையின் இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தியிருக்கிறார். அத்துடன் தமிழர் பிரதேசங்களில் படையினரால் கையப்படுத்தப்பட்டுள்ள காணி களின் விவரங்கள் தொடர்பில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும் எனவும் பொது மக்கள் வாழும் பகுதிகளில் இருந்து இலங்கை யில் இராணுவம் முற்றாக வெளியேற வேண் டும்என்றும் அவர் முக்கியமாக வலியுறுத்தியிருக்கிறார்.

30 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கான நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போருக்குப் பின்னர் நிவாரண நடவடிக்கைகளிலிருந்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மாறுகின்ற காலப்பகுதியில் இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதையும் குறிப்பிடுவதற்கு அவர் தவறவில்லை. கணிசமான தொகையினர் இன்னும் இடம்பெயர்ந்த நிலையிலேயே உள்ளனர். இருப்பிடங்களுக்குத் திரும்பிய பலர் மோசமான நிலையில் உள்ளனர் என்றும் பெயானி தனது அறிக்கையில் கூறியிருக்கிறார். இலங்கையில் உள்ளக இடம்பெயர்ந்தோர் விடயத்தில் தற்போதைய நிலை என்ன என்பதை அறிந்து கொள்வதற்காகவே ஐ.நாவி னால் அவர் இலங்கைக்கு அனுப்பப்பட்டார் என்று கூறப்படுகிறது. அவர் தனது இலங்கைப் பயணத்தின் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற [illegible] கூட்டத்தொடரின் போது கவனத்தில் கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு எதிராக ஏற்கனவே ஜெனிவாவில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்தத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதை இலங்கை அரசு தொடர்ச்சியாக உதாசீனம் செய்து வருகிறது. இந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துமாறு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கும் போதெல்லாம் வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிந்து விடமாட்டோம் என்று ஜனாதிபதியும் அவரோடு இணைந்த பட்டாளங்களும் வீராவேசப் பேச்சு பேசி வருகின்றனர். தற்போது ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக மூன்றாவது தீர்மானத்தையும் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

ஐ.நாவில் எந்தத் தீர்மானம் வந்தாலும் நாங்கள் அதனைக் கணக்கெடுக்கமாட்டோம் என்ற தோரணையிலேயே இலங்கை அரசு செயற்பட்டு வருகிறது. வடக்கில் அதிகரித்த இராணுவப் பிரசன்னம் உள்ளது என்பதை இங்கு வரும் ராஜதந்திரிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடிக்கடி எடுத்துக் கூறி வருகிறது. அத்துடன் நாடாளுமன்றத்திலும் இராணுவ தலையீட்டை குறைக்குமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. ஆயினும் இந்தக் கோரிக்கைகள் எவையும் எடுபடுவதாக இல்லை.

வடக்கில் இராணுவத்தை தொடர்ச்சியாக நிலை நிறுத்துவதுடன் சிங்கள குடியேற்றங்களை நிறுவும் செயற்பாடுகளையும் தற்போது அரங்கேறி வருகின்றன. வலி.வடக்கில் பொதுமக்களின் வீடுகள் இடித்தழிக்கப்பட்டு அங்கு இராணுவக் குடியேற்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழர் தாயகப்பகுதியில் தமிழினத்தின் அடையாளங்களை அழிக்கும் கைங்கரியங்களே அதிகமாக இடம்பெற்று வருகின்றன. இந்தநிலையில் ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் சலோகா பெயானி, பொதுமக்கள் செயற்படும் இடங்களிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேற வேண்டும்என்று கூறியிருக்கிறார். அவரது இந்தக் கூற்றையும் இலங்கை அரசு வழமைபோன்று செவிடன் காதில் ஊதிய சங்காகவே எடுத்துக் கொள்ளும் என்பது நிச்சயம். ஆனாலும் இந்த தட்டிக்கழிப்புக்கள் எல்லாம் இலங்கை அரசு தமிழர்களுக்கு அதிகாரங்களையும் உரிமை களையும் வழங்காமல் தொடர்ந்தும் சர்வாதிகாரப் போக்கில் செயற்படுகிறது என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றன. இதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கை அரசின் மீதான சர்வதேசத்தின் பிடி மேலும் இறுக்கமடையும் என்பதே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கீகரிக்கப்பட்ட காடைத்தனம்



சந்திரசேகர ஆசாத்

கறுப்பின மக்களின் ஒப்பற்ற விடுதலைப் போராட்டத் தலைவரும், முன்னாள் தென்னாபிரிக்க அதிபருமான நெல்சன் மண்டேலா அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் பிரிட்டோரியா நகரில் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில் அமெரிக்க, பிரிட்டன் அதிபர்கள் உட்படப் பல உலகத் தலைவர்களும் கலந்து கொண்டு தமது மரியாதையைச் செலுத்தியுள்ளனர். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நெல்பாவின் தேசிய சுதந்திரதின வைபவங்களில் கலந்து கொள்ளச் சென்ற போது தென்னாபிரிக்காவுக்குச் சென்று தென்னாபிரிக் காவின் முன்னாள் ஜனாதிபதிக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இது ஒரு சம்பிரதாய பூர்வமான நடைமுறை என்று கருதப்பட்டாலும் கூட நெல்சன் மண்டேலாவுக்கு எவராவது அஞ்சலி செலுத்தினால் அது இன ஒடுக்கு முறைக்கு எதிரான ஓர் ஆதரவு என்றே கருதப்படுகிறது.

ஆனால் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தென்னாபிரிக்கா நோக்கிப் பயணமான நாளிலேயே அவரது ஆட்சியதிகாரத்திலுள்ள இலங்கையின் திருகோணமலை நகரில் இன ஒடுக்கு முறையின் கோரம் வெளிக்கிளம்பியுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசெம்பர் பத்தாம் நாளில் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் காணாமற் போனோரின் உறவினர்களாலும், மனித உரிமை ஆர்வலர்களாலும் பல பகுதிகளிலும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் அமைதியான முறையில் நடத்தப்பட்டன. திருகோணமலை நகரிலும் இப்படியான ஒரு கவனவீர்ப்புப் போராட்டத்தை காணாமற் போனோரைத் தேடியறியும் குழு மனித உரிமை நிறுவனங்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆகியோர் ஒன்றிணைந்து நடத்தினர்.

இந்தப் போராட்டம் சுலோக அட்டைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப் பியும் ஜனநாயக வழியிலேயே நடத்தப்பட்டது. ஆனால் அங்கு வந்திறங்கிய குண்டர் கூட்டம் அந்தப் போராட்டத்தைக் குழப்ப முயன்றது. ஆனால் போராட்டத் தில் கலந்து கொண்டவர்கள் உறுதியாக நின்று தமது போராட்டத்தைத் தொடரவே அங்கு வந்த மூகமூடி அணிந்த நபர்கள் மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல் களை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலை முச்சக்கர வண்டி யொன்றில் வந்து இறங்கிய புத்தபிக்கு ஒருவரே வழி நடத்தினார் என்பது இங்கு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். அது மட்டு மன்றி இந்தத் தாக்குதல்கள் இடம் பெற்ற போது அங்கு நின்ற பொலிஸார் அதைத் தடுக்கவோ, தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்யவோ எந்த ஒரு முயற்சியையும் எடுக்கவில்லை. பொலிஸார் முன்னிலையி லேயே ஒரு பெரிய காடைத்தனம் அரங்கேற்றப்பட்டது. இதில் கடுமையாகக் காய முற்ற நிலை யில் இருவர் திருமலை மருத் துவ மனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் தங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன ஒடுக்குமுறைக் கொடுமைகளுக்கு எதிராக அமைதிப் போராட்டங்களை யும், ஆர்ப்பாட்டங்களையும் நடத் தியபோது வெள்ளையின இனவெறி ஆயுதக் குழுக்களும் , பொலிஸாரின் முன்னிலையில் அந்த மக்கள் மீது தாக்குதல்களை நடத்தினர். கொலை வெறியாட்டம் போட்டனர். பல சமயங்களில் பொலிஸாரும் அவர்களுடன் இணைந்து தாக்குதல்களை நடத்தினர். அதாவது இந்த இன வெறிக் குழுக்கள் வெள்ளையின ஆட்சியாளர்களின் அங்கீகாரத்துட னேயே கொலை வெறி வன்முறைகளை மேற்கொண்டனர்.

அந்த வெள்ளையின ஆட்சியாளர்களதும் இன வெறிக் கும்பல்களி னதும் அங்கீகரிக்கப்பட்ட காடைத் தனங்களுக்கு எவ் விதத்திலும் குறையாத விதத்தில், அங்கீகாரம் பெறாத காடைத்தனங்கள் இலங்கையிலும் தமிழ் மக்கள் மீது தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் மனித உரிமைகள் தினத்தன்று திருகோண மலையில் கோலோச்சிய இன வெறிக் காடைத்தனம்.

திருமலையில் நடத்தப்பட்ட ஜனநாயக விரோத வன்முறை தொடர்பாக நாம் இரு கேள்விகளை எழுப்ப வேண்டியவர்களாக உள்ளோம்.

முதலாவது கேள்வி கறுப்பின மக்கள் தங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன ஒடுக்கு முறை நடவடிக்கைகளுக்கு எதிராக அமைதி வழிப் போராட்டங்களை நடத்தியபோது அவற்றின் மீது வெள்ளையின ஆயுதக் கும்பல்கள் வன்முறைகளை வெள்ளையின ஆட்சியாளர்களின் அனுசரணையுடன் மேற்கொண்டனர். இவற்றில் சிறுவர், முதியோர், பெண்கள் என ஏராளமானோர் கொல்லப்பட்டனர்.

அந்தக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கு தலைமை தாங்கி நடத்தியமைக்காக நெல்சன் மண்டேலா அவர்கள் தேசத்துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு 27 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்தார்.

அந்த வெள்ளையின ஆட்சியாளர்கள் பாணியில் குண்டர்களின் வன்முறை களை அரச அனுசரணையுடன் கட்டவிழ்த்து விடும் ஓர் அரசினதும் அரச படையினதும் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு அத்தகைய கொடுமைகளுக்கு எதிராகப் போராடிச் சிறைவாசம் அனுபவித்த நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்த அருகதை உண்டா? அந்த அஞ்சலி அந்த மாமனிதரையும்அவரது போராட்ட இலட்சியங்களையும் கொச்சைப்படுத்தும் வகையிலானது என்று கருதினால் அது பிழையாக இருக்க முடியுமா? வெள்ளையராட்சி தென்னாபிரிக்க மக்களின் பாரம்பரிய நிலங்களை ஆக்கிரமித்து அவர்களை அங்கிருந்து விரட்டிவிட்டு நிலக்கரிச் சுரங்கங்களையும் தங்கச் சுரங்கங்களையும் அபகரித்தது. தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களை அபிவிருத்திக் கெனவும் இராணுவ முகாம்கள் அமைக்கவும் இராணுவக் குடிருப்புக்களை உருவாக்கவும் அபக ரிக்கும் அரசின் தலைவருக்கு, நிலங்களை இழந்த ஆபிரிக்க மக்களுக் காகப் போராட்டம் நடத்திய தலைவ ருக்கு அஞ்சலி செலுத்தும்தகுதி உண்டா? தங்கள் தவறுகளை ஏற்றுக் கொண்டு இணக்கப்பாட்டுக்கு வந்த வெள்ளை யராட்சியாளர்களை மன்னித்து அன்பு காட்டியநெல்சன்மண்டேலா இன்னமும் கொடுமைகளை விடாப்பிடியாகத் தொடர்பவர்களை மன்னிப்பாரா? அவர்கள் செலுத்தும் அஞ்சலியை அவரின் புனித ஆவி ஏற்றுக் கொள்ளுமா? என்பது இரண்டா வதுகேள்வி.

டிசெம்பர் 10 - சர்வதேச மனித உரிமைகள் தினம். உலகம் முழுவதுமே மக்கள் தம்மீது இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் நாள். சர்வதேச அளவில் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த நாளை இலங்கையும் ஏற்றுக் கொண்டுள்ளது. உலக மனித உரிமை நிறுவனங்கள் மனித உரிமைகள் தொடர்பான விழிப்பு ணர்வை ஏற்படுத்தல், மனித உரிமை மீறல்கள் தொடர்பானவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளில் இந்த நாளில் ஈடுபட்டு வருகின்றன.

அவ்வகையில் இதுவரை அரசினதும் அரச படைகளினதும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வடக்கிலும் கிழக்கிலும் பல கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதில் ஒரு பகுதியாகவே காணாமற் போனோர் தொடர்பான போராட்டம் திருமலை நகரிலும் மனித உரிமைகள் தினத்தன்று நடத்தப்பட்டது. இப்போராட்டத்தின் மீது பொலிஸார் முன்னிலையில் அரச அனுசரணை பெற்ற குண்டர்களால் தாக்குதல் நடத்தப் பட்டது. அதை ஒரு புத்த பிக்கு வழி நடத்தினார்.

அதாவது மனித உரிமைகள் நாளன்று கூட மனித உரிமைகள் தொடர்பாகக் குரல் கொடுக்கும் உரிமை கூட மறுக் கப்படுகிறது என்பது இத் தாக்குதல் மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. திருமலையில் இடம்பெற்ற இந்த வன்முறையை ஒரு தனிச் சம்பவமா கப் பார்க்க முடியாது. இது ஏற்கனவே தமிழ்மக்கள் தம்மீதான மனித உரிமை மீறல்கள், நில அபகரிப்புகள் என்பன தொடர்பாக அமைதி வழிப் போராட்டங்களை நடத்தும் போதெல்லாம் அவர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் தொடர்ச்சியாகவே இந்தச் சம்பவம் அமைந்துள்ளது.

இப்படியான சம்பவங்கள் பொலிஸார் முன்னிலையில் இடம்பெறும் போதும் அவர்கள் தடுத்து நிறுத்துவதுமில்லை. சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதுமில்லை. பல சந்தர்ப்பங்களில் இந்தத் தாக்குதல்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் நேரடியாகப் பங்கு கொண்டமை கண்டறியப்பட்டுள்ளது. திருமலையிலும் முகத்தை மறைத்துக் கொண்டு தாக்குதலில் ஈடுபட்டவர்கள் இராணு வப் புலனாய்வுப் பிரிவினர் என மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் குற்றஞ் சாட்டியிருந்தார்.

அண்மையில் இலங்கைக்கு பயணம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை யின் ஆணை யாளர் நவநீதம்பிள்ளை இலங்கையின் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நம்பக மான உள்ளூர் விசார ணையை எதிர்வரும் மார்ச்மாதத்துக்குள் நடத்தாவிடில் சுயாதீனமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். இலங்கையின் மனித உரிமை மீறல்களை காரணம் காட்டி கொழும்பில் இடம் பெற்ற பொதுநலவாய மாநாட்டில் கனடா, மொறிசியஸ் ஆகிய நாடுகள் கலந்து கொள்ள மறுத்து விட்டன. இந்தியப் பிரதமரும் அதில் கலந்து கொள்ளவில்லை.

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ள வந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் மிகக் கடுமையான தொனியில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அதுமட்டுமன்றி இலங்கை மீதான சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப் போவதாகவும் கூறியிருந்தார்.

இப்படியான நிலையில் எதிர்வரும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை பல நெருக் கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இலங்கை அரசோ இறுதிப்போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பன உள்நாட்டு விவகாரம் எனவும் அவற்றுக்குச் சர்வதேச விசாரணை அவசியமில்லை எனவும் கூறி வருகிறது. ஆனால் உள்நாட்டிலோ மனித உரிமைகள் தொடர்பாக எழும் குரல்கள், ஜனநாயக வழியிலான போராட்டங்கள், தென்னாபிரிக்க வெள்ளை அரசின் வழிமுறையில் வன்முறைக் கும்பல் கள் மூலம் ஒடுக்கப்படுகின்றன.

இப்படியான நிலையில் நம்பகமான உள்ளூர் விசாரணைகளை எதிர்பார்க்க முடியுமா? தென்னாபிரிக்க அரசு சர்வதேசத்தின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து இன ஒடுக்கல் கொள்கைகளையும் மனித உரிமை மீறல்களையும் மேற்கொண்டு அரச அங்கீகாரம் பெற்ற காடைத் தனத்தை மேற்கொண்டு வந்தது. அதன் பயனாக அந்த நாடு சர்வ தேசத்தால் ஒதுக்கப்பட்டு தனி மைப்படுத்தப் பட்டது. இறுதியில் வெள்ளையின அரசு பணிந்து போக வேண்டிய நிலை ஏற்பட்டது. தொடர்ந்து அதே பாணியில் செயற்படும் இலங்கை அரசும் அதேபோன்று நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்படுவது உறுதி என்பதற் கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துவிட்டன.

Cow & Gate

பொதுமக்களுக்கான அறிவித்தல்

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் அனைத்துத் தொகுதி Cow & Gate தயாரிப்புகளும் DCD எனப்படும் இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை என்பதனை, இலங்கை கைத்தொழில் தொழினுட்ப நிறுவனத்தினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து இத்தால் சகல பொதுமக்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எமது பண்டகசாலையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு Cow & Gate பக்கட்டுகளும், (கீழே குறிப்பிட்டுள்ளது போல) DCD இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் முகமாக, சுகாதார அமைச்சினால் கட்டாயமாக்கப்பட்டுள்ள ஸ்டிக்கர் ஒன்றினைத் தாங்கி வரும்.

இது 2013 செப்டெம்பர் 4ம் திகதி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட PA/EOH/FCAU/42/2013 இலக்க திருத்தியமைக்கப்பட்ட பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படுகின்றது.

டி.சி.டி. எனும் இரசாயனப் பொருள் அடங்கவில்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
Batch No:

இது பற்றிய மேலதிக விளக்கங்களுக்கு அழையுங்கள் 0773-290183 அல்லது 0773-290180

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன சின்ன பாடங்கள்....

## விலைமதிப்பற்றவர் நீங்கள் 2



சிறந்த பேச்சாளர் ஒருவர் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் முன்னால் பேசிக் கொண்டிருந்தார். 'சுயமதிப்பும் முன்னகர்தலும்' என்ற தலைப்பில் பேசிக் கொண்டிருந்தார். குண்டூசி விழுந்தால் சத்தம் கேட்கும் என்ற அளவில் அமைதியாக இருந்து அவரது பேச்சைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தது கூட்டம். அற்புதமான மேற்கோள்களை எல்லாம் எடுத்துக்காட்டிப் பேசிக் கொண்டிருந்தார் பேச்சாளர். திடீரென்று ஒரு 1000 ரூபாய் தாளை வெளியே இழுத்தார் பேச்சாளர். தலைக்கு மேலே அதனை உயர்த்தி கூட்டத்தை நோக்கிப் பலமாக அசைத்தார். "யாருக்கு வேண்டும் இந்த 1000 ரூபாய்?" என்றார். எல்லோர் கைகளும் சடக்கென உயர்ந்தன. "நல்லது! உங்கள் எல்லோருக்கும் பணத் தேவை இருக்கின்றது என்பதை நேர்மையாக - ஒளிவு மறைவின்றி - சொன்னதற்காக நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனால் நான் இந்தப் பணத்தை என்ன செய்கிறேன் பாருங்கள். அதன் பின்னரும் உங்களுக்கு அந்தப் பணம் தேவை என்றால் கையை உயர்த்துங்கள்" என்றார் பேச்சாளர்.

அதன் பின்னர் அந்தக் காசுத் தாளைத் தன் கைகளில் வைத்து முடிந்த மட்டும் கசக்கினார் பேச்சாளர். "இப்போதும் இது வேண்டும் என்று சொல்பவர்கள் யார்?" அவர் கேட்டார். மீண்டும் எல்லோருடைய கைகளும் மேலே உயர்ந்தன.

"இந்தக் காசை நான் கொஞ்சம் ஊத்தையாக்கினால்கூட நீங்கள் எல்லோரும் அது வேண்டும் என்று சொல்வீர்களா?" அவரது கேள்வி முடியக்கூட இல்லை. பேச்சாளர் தன் கையிலிருந்த காசைக் கீழே போட்டு கால்களால் மிதித்தும் தேய்த்தும் முடிந்தவரைக்கும் அதனை அழுக்காக்கினார்.

> சின்னச் சின்னச் சம்பவங்கள் உங்கள் சுயமதிப்பை குறைத்துக் கொள்வதற்கோ உங்கள் இயலுமை யைப் பாதிப்பதற்கோ அனுமதிக்கா தீர்கள். உங்களை நீங்களே நம்புங் கள், என்றென்றும் உங்களுக்கா கவே செயற்படுங்கள்"

கூட்டத்திடம் இருந்து ஒருவிதமான அசூசை ஒலி கிளம்பியது. அவர்கள் குசுகுசுக்க ஆரம்பித்தனர். அவர்களின் முகங்களில் அருவருப்புத் தெரிந்தது. மீண்டும் அந்தக் காசுத் தாளைக் கையில் எடுத்த பேச்சாளர் அதனை கூட்டத்தினரிடம் தூக்கிக் காட்டி "இப்போதும் இது வேண்டும் என்று யார் கேட்கிறீர்கள்?" என்றார். ஒரு சில கைகள் மட்டும் மேலெழுந்தன. பேச்சாளர் சொன்னார், "இந்தக் காசு கசங்கி ஊத்தையாகப் போனாலும் அது சிலருக்காகவாவது தேவையானதாக இருப்பதையிட்டு நான் மகிழ்கின்றேன். ஏனென்றால் கசங்கிய பின்னரும் காலில் போட்டுத் தேய்த்த பின்னரும் இந்தத் தாள் இன்னமும் அதே 1000 ரூபாய் பெறுமதியையே கொண்டிருக்கின்றது என்பதை அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காசுத் தாளின் வெளித்தோற்றம் மாறி இருக்கலாம் ஆனால் அதன் பெறுமதி ஒருபோதும் மாறவில்லை. இதிலிருந்து நீங்கள் புரிந்துகொள்ள வேண்டிய மிக முக்கிய பாடம் அதுதான்."

கூட்டத்தினர் ஆடாமல் அசையாமல் மிக அவதானமாக அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். பேச்சாளர் தொடர்ந்தார். "வாழ்க்கையில் நாம் பல துன்பகரமான அனுபவங்களுக்கு ஊடாகப் பயணித்திருப்போம். அது எங்களை வருத்தப்படுத்தியிருக்கும், பயப்படுத்தியிருக்கும், எங்களை நிலைகுலைய வைத்திருக்கும் அத்துடன் துன்பப்படுத்தியி ருக்கும். நாங்கள் இவை எல்லாவற்றுக்கும் இடமளித்திருப்போம். அப்போது எங்கள் சுய மதிப்பையும் ஊக்கத்தையும் இழந்து விட்டோம் என்று வருந்தியிருப் போம். அப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம் இந்த 1000 ரூபாய் காசுத் தாளை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் அடுத்தவர்களால் எப்படி நடத்தப்படுகிறீர்கள் அல்லது எப்படிப் பார்க்கப்படுகிறீர்கள் என்பது ஒரு விவகாரமே அல்ல. உங்கள் வழியில் நீங்கள் எப்போதும் சிறப்பானவர், தனித்துவமானவர் என்பதை என்றென்றைக்கும் நினைவில் கொண்டிருங்கள். சின்னச் சின்னச் சம்பவங்கள் உங்கள் சுயமதிப்பைக் குறைத்துக் கொள்வதற்கோ உங்கள் இயலுமையைப் பாதிப்பதற்கோ அனுமதிக்காதீர்கள். உங்களை நீங்களே நம்புங்கள், என்றென்றும் உங்களுக்காகவே செயற்படுங்கள்" என்று முடித்தார் பேச்சாளர்.

நீங்கள் எப்போதும் விலைமதிப்பற்றவர். உங்கள் சுயமதிப்பை ஒருபோதும் இழந்துவிடாதீர்கள்.

கொமர்ஷல் கிரெடிட்
ரிய சல
2013 டிசம்பர் 12-22 வரை போகுந்தர வாகன முற்றத்தில்
2013 டிசம்பர் 14-24 வரை அநுராதபுர வாகன முற்றத்தில்



▪ பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் உங்கள் விலைக்கு*
▪ உடனடி லீசிங் வசதிகள் * உடன்.

உங்கள் மனதுக்கு பிடித்த வாகனத்தை, நீங்கள் தேடும் விலைக்கு வாங்கிச் செல்லுங்கள். 2013 டிசம்பர் 12ஆம் திகதி முதல் டிசம்பர் 22ஆம் திகதி வரை போகுந்தர, டிசம்பர் 14ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை அநுராதபுரம் கொமர்ஷல் கிரெடிட் வாகன முற்றத்தில் காணப்படும் "ரிய சல" வுக்கு விஜயம் செய்யுங்கள். மோட்டார் சைக்கிள் முதல் பஸ் வண்டிகள் வரை பதிவு செய்யப்பட்ட வாகனங்களை உங்கள் விருப்பத்துக்கமைய தெரிவு செய்யுங்கள். லீசிங் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

கொமர்ஷல் கிரெடிட் அன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி
போகுந்தர வாகன முற்றம்
இல.326 ஏ, கொழும்பு வீதி, போகுந்தர, பிலியந்தலை
தொடர்புகளுக்கு:
0774 772 999 திமுத், 0773 205 549 சமன்

அநுராதபுரம் வாகன முற்றம்
இல. 379, குருணாகல் வீதி, அநுராதபுரம்
தொடர்புகளுக்கு:
0772 360 837 நளீன், 0774 772 590 நிரஞ்சன்

* நிபந்தனைகளுக்கு உட்படும்

கொமர்ஷல் கிரெடிட்

TVS KING
TVS
மன்னனை போல சொகுசாக பயணிக்க
ரூ. 45,666/- செலுத்தி
TVS KING முச்சக்கர வண்டி ஒன்றை
வாங்குங்கள்





LED TV ஒன்று இலவசம்
காப்புறுதி இலவசம்

சென்ட்ரல் ஃபினான்ஸ் லீசிங் திட்டத்தின் கீழ் வாங்கும் ஒவ்வொரு
TVS KING முச்சக்கர வண்டியுடனும் ஒரு LED TV இலவசம்

(வரி உள்ளிட்ட விலை ரூ. 477,920/-)

சென்ட்ரல் ஃபினான்ஸ் கம்பனி பி.எல்.சி.
www.cf.lk www.cfautomart.com
0112 038 038
0772 228 111

TVS லங்கா (தனியார்) நிறுவனம்
இல.38, பழைய நீர்கொழும்பு வீதி,
வத்தளை.
0777 779 500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகேளம்

# அடித்து அணைத்தல்

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போர் தொடர்பில் சர்வதேசத்தின் பார்வை இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்கடியாக இருக்கிறது. போருக்குப் பின்னரான ஒவ்வொரு வருடமும் ஏதோ ஒரு வகையில் இலங்கைக்கு அழுத்தம் வந்துகொண்டே இருக்கின்றது. மனித குலத்துக்கு எதிரான வன்முறைகள், கெடுபிடிகள், இனப்படுகொலைகள் சர்வதேச விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட போர் முறைகள் குறித்து இந்த அழுத்தங்கள் எழுகின்றன.

இவை ஒவ்வொன்றையும் இலங்கை அரசு சமாளித்து தன்னை நிரபராதியாக வெளிப்படுத்துவதற்கு முழு முயற்சி எடுத்து வருகிறது.

## நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்

- இது 1979 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24 ஆம் திகதி இத்தாலி யில் நிறுவப்பட்டது.
- மனித உரிமைகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்ப்பு வழங்குகிறது.
- சமூக அமைப்புக்களாலோ தனிநபராலோ தமக்கோ தாம் சார்ந்தவர்களுக்கோ ஏற்படும் அநீதிகள் தொடர்பில் செய்யப்படும் முறைப்பாடுகள் குறித்து இது விசாரணை நடத்துகிறது.
- சர்வதேச அளவில் தகுதிபெற்ற நீதிமன்றங்களைச் சேர்ந்த நீதிபதிகள் இந்த ஆயத்தின் மூலம் சட்டத்தின் இயற்கை விதிகளைக் கொண்டு ஆய்வில் ஈடுபடுகின்றனர்.
- ஒடுக்கப்படும் நாடுகளைச் சேர்ந்த மக்கள் குழுமத்தைக் காப்பாற்றும் ஒரு முயற்சியையே இந்த அமைப்பு செய்து வருகிறது.



போர்க் குற்றம் தொடர்பில் ஆகக் கூடிய அறிவிப்பாக இத்தாலியின் ரோமைத் தளமாகக் கொண்டு இயங்கும் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் வெளியிட்ட தீர்ப்பு அமைகிறது.

மனித உரிமைகள் அமைப்புக்களால் இலங்கைக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடுகள். அதற்கான ஆவண ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தீர்ப்பாயம் தனது முடிவை அறிவித்திருக்கிறது.

சர்வதேச தரத்திலான நீதிபதிகள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிய இந்த ஆயம், ஒரு சமூகத்துக்கு அல்லது நாட்டுக்கு, ஓர் இனத்துவக் குழுவுக்கு உலக ஆதிக்கவாதிகளால் ஏற்படுத்தப்படும் உரிமை மீறல்கள் குறித்துக் கவனம் செலுத்தி வருகிறது. இந்த அடிப்படையில் இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கு ஆட்சி அதிகாரத்தைக் கொண்டுள்ள இலங்கை அரசு இழைத்த அநீதிகள் குறித்து கவனம் செலுத்தியிருக்கிறது.

மனித உரிமைகள் அமைப்புக்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பாயத்தின் முதலாவது அமர்வு கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் டப்ளின் நகரில் நடைபெற்றது.

இதன்போது இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான நெருக்குதல்கள் குறித்து வலுவாக விசாரிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஆயத்தின் இரண்டாவது அமர்வு இந்த மாத ஆரம்பத்தில் ஜேர்மனியில் நடைபெற்றது. இதன்போது இலங்கையில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் நேரடிச் சாட்சிகள் பங்கேற்றதுடன், ஐரோப்பிய மற்றும் பிற நாடுகளின் நிபுணர்களும் சாட்சியமளித்திருந்தனர் இதன் அடிப்படையில் மக்கள் தீர்ப்பாயம்

1) இலங்கை அரசு ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்துள்ளது.

2) இனப்படுகொலைக்கு அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் துணை போயுள்ளன.

3) விடுதலைப்புலிகள் அமைப்பை முழுமையான தீவிரவாத அமைப்பாக கருதமுடியாது.

ஆகிய மூன்று முக்கிய விடயங்களை உள்ளடக்கித் தனது தீர்ப்பை வெளியிட்டிருந்தது.

சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் வெளியிட்டிருக்கும் இந்தத் தீர்ப்பு இறுதியானது அல்ல.

காரணம், சர்வதேசச் சட்ட விதிகளுக்கு உட்படாத வகையில் போர்க்குற்றங்கள் அமைந்துள்ளமையால் அது குறித்து இறுதித் தீர்ப்பை வழங்குவதற்கு ஆயத்துக்கு தகுதி போதாது. ஆனால் சர்வதேச சட்டம் ஒன்று இயற்றப்படும் சந்தர்ப்பத்தில் ஆயத்தின் தீர்ப்பு வலுவுடையதாகும். அதுவரை இது ஒரு முற்தீர்ப்பாகவே இருக்கும். எனவே இந்தத் தீர்ப்பாயத்தின் முடிவுகளைக் கொண்டு இனிவரும் காலங்களில் நடைபெறவுள்ள விசாரணைகளைத் துரிதப்படுத்தவும் அதற்கான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், இலங்கையில் நடைபெற்ற மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகளை சரியா தவறா என விசாரணைக்கு உட்படுத்தவும் முடியும்.

இந்த நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா.வில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டில் இந்தத் தீர்ப்பாயத்தின் முடிவு சமர்ப்பிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தீர்ப்பாயத்தின் முடிவுக்கு அப்பால் இங்கு

(08 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி என்பது: தன் காலில் நிற்கும் பெருமை

வேலை பார்க்கும் பெண்களுக்கும் வீட்டிலே இருந்துகொண்டு வேலைக்கு போகாத பெண்களுக்கும் கொடுக்கப் படும் மரியாதை வெவ்வேறானது.



தன் காலில் நிற்கும் பெருமை இருக்கிறதே, அதை எமது பெண்களுக்கு இல்லாமல் செய்துவிட்டோம். பெண்களை ஆண் களில் சார்ந்து நிற்க வேண்டிய ஒரு சமுதாயமாக உருவாக்கி விட்டோம். ஒரு பெண்ணோ, ஆணோ, தனது காலில் நிற்கும்போது - தன்னால் உழைத்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற நம் பிக்கை வரும்போது, அவர்களுக்குச் சுதந்திரம் கிடைக்கிறது. அவர்கள் யாரையும் சட்டை செய்யவேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு சமூக மதிப்பு. சமூகத்தில் ஒரு பெருமை கிடைக்கிறது. ரீச் சரம்மா, டாக்டரம்மா, வக்கீலம்மா என்று ஊரும் உலகமும் அவர்களைப் பெருமையுடன் அழைப்பதைப் பாருங்கள். வேலை பார்க்கும்பெண்களுக்கும் வீட்டிலே இருந்துகொண்டு வேலைக்குப் போகாத பெண்களுக்கும் கொடுக்கப்படும் மரியாதை வெவ்வேறானவை.

உழைக்கின்ற மருமகளை மாமியார் அதிகம் அதட்டிக் கேட்க முடிவதில்லை; அதிகாரம் செய்வதில்லை. மாறாக மதிப்பும் மரியாதையும் கிடைக்கின்றன. பொட்டைக் கழுதை என்று பெண்களை இழிவுபடுத்துவதும், பொம்பளை மாதிரி பேசறீயே! என்று பெண்களை உதாரணம் காட்டுவதும் சமுதாயத்தில் பெண்களைக் கேவலப்படுத்துகிறது.

சாண் பிள்ளையானாலும் அவன் ஆண்பிள்ளை! என்று ஆண் பிள்ளையைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவது அவனது சகோதரியின் மண்டையில் அடிக்கிறது. உன்னால் ஒன்றும் செய்ய முடியாது; ஏனெனில் நீ ஒரு பெண்! என்று சொல்லாமல் சொல்கிறது, எமது சமுதாயம். முன்னேற விரும்பும் பெண்கள் இந்தச் சமுதாயப் பழக்க வழக்கங்களைக் கிள்ளி எறிய வேண்டும். அதற்கு முதலில் பெண்கள் படிக்க வேண்டும்.

## அடித்து.....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் மூன்று நாடுகளது வெளியுறவுக் கொள்கை தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுந்திருக்கின்றன.

இலங்கையில் நடைபெற்றது போர்க்குற்றமே அங்கு மனித குலத்துக்கு எதிரான சம்பவங்கள் நடந்தேறின என்று முதல் நிலையில் அமெரிக்காவும் இரண்டாவது நிலையில் பிரிட்டனும் நாங்களும் சளைத்தவர்கள் இல்லை என இந்தியாவும் கங்கணம் கட்டி நிற்கின்றன.

அப்படியானால் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டிய கதையாக இந்த நாடுகளது செயற்பாடு புட்டுவைக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கைக்கு எதிராக ஐக்கியநாடுகள் சபையில் அமெரிக்கா கொண்டுள்ள நிலைப்பாடு சர்வதேச போர்க் குற்ற விசாரணை ஒன்று இலங்கை மீது நடத்தப்பட வேண்டும் என்ற பிரிட்டனின் நிலைப்பாடு - இந்தியா எதையுமே வெளிப்படையாக அறிவிக்காது எடுத்துவரும் முடிவுகளைக் கொண்டு இவற்றை நான்கு வருடங்களுக்கு முன்நகர்த்தும்போது நிலைப்பாடு மாறுபடுகிறது.

விடுதலைப்புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக சித்திரித்துவந்த இலங்கை அரசு அதனைச் சர்வதேச மட்டத்தில் கொண்டுசென்று பிச்சை எடுத்திருப்பதும் அம்பலமாகிறது.


எந்தவித ஆராய்ச்சியும் இன்றி அப்போது இலங்கை அரசுக்கு உதவிய இந்த நாடுகள் இன்று வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்று சர்வதேச மட்டத்தில் குரல் கொடுக்கின்றன.

நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் தீர்ப்புப்படி விடுதலைப்புலி அமைப்பு கடும்போக்கு பயங்கரவாத அமைப்பு இல்லை எனக் கருதினால் இந்த நாடுகள் இன ஒடுக்கு முறைக்குத் துணைபோயிருக்கின்றன என் பதே உண்மையாகும்.

ஆனாலும் சர்வதேச சட்டம் ஒன்றைச் சரிவர இயற்றுவது இந்த நாடுகளின் கைகளிலேயே இருக்கின்றன. அவை தம்மை காட்டிக் கொடுக்க ஒருபோதும் முன்வர மாட்டா. அங்கேயும் ஒரு உரிமை மீறல் நிகழ இருக்கின்றது என்பது கவலைக்குரியதே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமூக வலைகளின் அதிரவைக்கும் பின்னணி மர்மங்கள்

> கெடுமதியாளர்கள் கையில் சிக்கிச் சின்னா பின்னமாகும் சமூக வலைத்தளங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட நேரிடும். ஒரு கட்டத்தில் யார் உண்மை பேசுகிறார்கள், யார் பொய் பேசுகிறார்கள் என்பதே தெரியாமல் போய்விடும்.

எந்த ஒரு புதிய தொழில்நுட்பம் வந்தாலும் அதை முதலில் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக்கொள்பவர்கள் கெடுமதி படைத்தவர்கள் தான். அவர்களது குற்ற மூளைதான் அந்தத் தொழில்நுட்பத்தின் சாத்தியக்கூறுகளை முழுவதுமாக ஆராய்ந்து முதலில் புரிந்துகொள்ளும். இணையமும் சமூக வலைத்தளங்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

இணையத்தை வணிகத்துக்காக முதலில் பயன்படுத்திக்கொண்டவர்கள் 'போர்னோ' எனப்படும் ஆபாசப் படங்களை விற்றவர்கள் தான். எண்ணற்ற ஆபாச வலைத்தளங்கள் உருவாகின. ஒரு கட்டத்தில். அதிக 'ஹிட்'கள் பெறும் முதல் இருபது தளங்கள் அனைத்துமே ஆபாசத் தளங்களாக இருந்தன. பின்னர். கடனட்டைகள் மூலம் மாதா மாதம் சந்தா பெறும் தளங்களாக முதலில் மாறியவையும் இவைதான். அதன் பின்னர்தான் நியாயமான வணிக நிறுவனங்கள் பலவும் தம் பொருள்களை விற்பதற்கும் சேவைகளைத் தருவதற்கும் இணையத்தைப் பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்தன.

### நைஜீரிய தில்லாலங்கடி

அதேபோல. நைஜீரிய ஏமாற்று வித்தைகளையும் குறிப்பிடவேண்டும். ஏதோ ஓர் ஆபிரிக்க நாட்டின் சர்வாதிகாரி பல நூறு மில்லியன் டொலர்களை விட்டுவிட்டுச் சென்றுவிட்டதாகவும். அதைக் கைப்பற்ற உங்கள் உதவி தேவைப்படுகிறது என்றும். அந்த சர்வாதிகாரியின் துணைவி அன்புடன் உங்களுக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பியிருப்பார்.

ஒரே ஒரு சின்ன பிரச்சினை... என்றபடி அதற்குமேல்தான் வில்லங்கம் ஆரம்பிக்கும். முதலில் நீங்கள் கொஞ்சம் பணத்தை ஒரு குறிப்பிட்ட வங்கி எண்ணுக்கு அனுப்பவேண்டும். பல நூறு மில்லியன் டொலரில் நம் பங்கு கணிசமாக வரும்போது கொஞ்சம் பணத்தைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும் என்று சிலர் பணத்தை அனுப்பியும் விடுவார்கள். இப்படித் தொடங்கி இன்னும் பல நூறு ஏமாற்று வித்தைகள் இணையத்தில் உலா வருகின்றன.

மற்றொரு பக்கம். இணையத் தேடுபொறிகள் சர்வசக்தி வாய்ந்தவையாக ஆனபோது. 'சேர்ச் என்ஜின் ஆப்டிமைசேஷன்' என்னும் கருத்து முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. கூகுளில் நீங்கள் ஒரு விஷயத்தைத் தேடும்போது ஒரு லட்சம் சுட்டிகள் கிடைக்கும். ஆனால் முதலில் வரும் சில சுட்டிகளைத் தாண்டி நீங்கள் போகமாட்டீர்கள். எப்படி முதல் சில சுட்டிகளில் ஒன்றாக நாம் வருவது என்ற நோக்கில் பலரும் தத்தம் இணையப் பக்கங்களில் சிறுசிறு மாற்றங்களைச் செய்யத் தொடங்கினர். இதைத் தடுக்கும் நோக்கில் கூகுள் தங்கள் தேடுதல் அல்காரிதத்தில் பல மாற்றங்களைச் செய்து. உண்மையிலேயே உபயோகமான தளங்கள் மட்டும் முதலில் வருமாறு பார்த்துக் கொண்டனர். ஆனாலும் இந்தத் திருடன் - போலீஸ் விளையாட்டு இன்னும் தொடர்ந்து நடக்கிறது.

### நம்பகத்தன்மை

இதுபோன்ற தகிடுதத்தங்கள் ஒருபுறம் இருக்க. இப்போது சமூக வலைத்தளங்கள் குறித்து வெளியே கசியும் சில செய்திகள். இணைய ஊடக வெளி மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையைச் சிதைக்கின்றன. ஓர் இந்திய இணைய தளம் வெளியிட்டுள்ள 'ஸ்டிங் ஒப்பரேஷன்' இது குறித்து பல குறிப்புகளை நமக்குத் தருகிறது.

ட்விட்டர். ஃபேஸ்புக் போன்ற தளங்களை சாதாரண மக்கள் தங்கள் கருத்துகளைச் சொல்லும் களமாகவும் நண்பர்களுடன் உரையாடும் இடமாகவும் வைத்திருக்கின்றனர். இது ஒரு விதத்தில் மக்களாட்சி முறைக்கு வலு சேர்க்கும் விதமாகவும் உள்ளது. ஆனால் பல அரசியல்வாதிகளும் தொழில் நிறுவனங்களும் இவற்றை வேறு கண்களுடன் பார்க்கின்றனர். அரசியல். தொழில் போட்டிகளைச் சமாளிக்கவும் எதிரிகளை ஒழிக்கக் காய் நகர்த்தவும் இணையத்தைப் பயன்படுத்த இவர்கள் முன்வந்துள்ளதாகத் தெரிகிறது. இவர்களுக்கு உதவுவதற்கு என்றே பல இணைய சந்தைப்படுத்தல் முகவர் நிறுவனங்களும் முளைத்துள்ளன.

உலகெங்கும் - இலங்கையில்கூட - பல அரசியல் தலை வர்கள் இன்று ட்விட்டர்கணக்குவைத்திருக்கிறார்கள். (அண்மையில் யாழ்ப்பாணம் வந்த டேவிட் கமரூன் கூட அதில்தானே டக் டக் [illegible] [illegible] அவர்களைப் பின் தொடர பல மில்லியன் கணக்கில் ஆட்கள் இருக்கிறார்கள் என்று காட்டப்படுகின்றது. 'ட்விட்டர் ஒடிட்' போன்ற சில தளங்கள். இந்த மாதிரியான அரசியல்வாதிகளைப் பின்பற்றும் பல கணக்குகள் போலியானவை என்கின்றன. அதாவது அவை உண்மையான மனிதர்களாக இல்லாமல் வெறும் மாயக் கணக்குகளாக இருக்கலாமாம்.

ட்விட்டரில் பின்பற்றுவோர் எண்ணிக்கையை அதிகரிக்கவென்றே மாயக் கணக்குகளை விலைக்கு விற்க பல முகவர் அமைப்புகள் இருக்கின்றன என்று தெரியவந்துள்ளது. இந்த அமைப்புகள் ஒளிந்து மறைந்தெல்லாம் இயங்குவதில்லை. வெளிப்படையாகவே இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கலாம். 'ஸ்டிங் ஒப்பரேஷன்' சொல்லும் தகவலும் இதுதான்.

நிழல் உலக தாதா ஒருவரைச் சந்தித்து என் தொழில்முறை எதிரியுடைய ஃபோட்டோவும் முகவரியும் இவைதான். இவரைப் போட்டுத் தள்ளிவிடு. இந்தா பணம் என்று ஒருவர் சொல்வதைப்போல. ஒரு தொழிலதிபர் ஓர் இணைய சந்தைப்படுத்தல் நிறுவனத்தை அணுகி வியாபாரம் பேசலாம். பணம் கைமாறும். அந்த இணைய சந்தைப்படுத்தல் முகவர் நிலையம் அந்தக் குறிப்பிட்ட தொழிலதிபருடைய நிறுவனத்தின் ட்விட்டர் எக்கவுன்ட்டை ஒரே நாளில் சில ஆயிரம் மாயக் கணக்குகள் பின்பற்றுமாறு செய்வார்கள். அவர்களுடைய ஃபேஸ்புக் பக்கத்தில் வரும் தகவல்களுக்கு எல்லாம் சில மாயக் கணக்குகள் பொய் லைக்குகள் போட்டுக்கொண்டே இருக்கும்.

அதோடு விடமாட்டார்கள். எதிரி நிறுவனம் பற்றிப் பொய் வதந்திகளைப் பரப்பும் ஓர் இணையதளம் இரவோடு இரவாகத் தோன்றும். ஊர் பேர் போடாமல் தெருவில் ஒட்டப்படும் கண்டன போஸ்டர்போல அல்லது அலுவலகத்துக்கு வரும் மொட்டைக் கடுதாசிபோல. பின்னர். மாயக் கணக்குகள் இந்தப் பொய்த் தகவல்களை ட்விட்டரிலும் ஃபேஸ்புக்கிலும் பரப்பும். எல்லாவற்றுக்கும் ஒரு குறிப்பிட்ட விலை உண்டு.

இந்தத் தகவல்களை உண்மை என்று நம்பும் உண்மையான பலரும்கூட இவற்றை ஃபேஸ்புக்கில் லைக் செய்து. ட்விட்டரில் ரீட்வீட் செய்து மேலும் மேலும் பரப்புவார்கள். மின்னஞ்சல் மூலம் பல்லாயிரம் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வார்கள்.

### எல்லாம் ட்விட்டர் மயம்

இன்று. ஓர் அரசியல்வாதியின் பிம்பத்தைக் கட்டி எழுப்புவது முதல். ஒரு முழு அரசியல் [illegible] இணையத்தின் மெய்நிகர் [illegible]துவிட முடியும். அந்த அரசியல்வாதிக்கென்று ஓர் இணையதளத்தையும் ட்விட்டர். ஃபேஸ்புக் கணக்குகளையும் தொடங்குவதிலிருந்து இந்தப் பரப்புரை ஆரம்பிக்கும். பின்னிருந்து இயக்கும் சந்தைப்படுத்தல் முகவர் அமைப்புகளின் உதவியால் அரசியல்வாதியின் இணைய பிம்பம் வலுவாகிக் கொண்டே போகும். அவர் அனைத்தைப் பற்றியும் கருத்துச் சொல்வார். அறிக்கைகள் விடுவார். அவரது எதிரிகள் குறித்து இணையத்தில் வம்பும் வதந்தியும் பெருகும். இதன் நீட்சியாக அவர் தேர்தலில் வெற்றி பெறலாம்.

இவற்றையெல்லாம் புலன்விசாரித்து. உண்மையைக் கண்டுபிடிப்பது சாத்தியமே. ஆனால் நேரம் ஆகும். அந்த நேரத்தில் தேர்தலே நடந்து முடிந்துவிடலாம்.

கெடுமதியாளர்கள் கையில் சிக்கிச் சின்னா பின்னமாகும் சமூக வலைத்தளங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட நேரிடும். ஒரு கட்டத்தில் யார் உண்மை பேசுகிறார்கள். யார் பொய் பேசுகிறார்கள் என்பதே தெரியாமல் போய்விடும்.

உண்மையான வாழ்க்கையில்கூட எதை நம்பலாம் என்ற தெளிவு நம்மிடம் ஓரளவுக்கு இருக்கிறது. ஆனால் இணைய வாழ்க்கையில் எதை நம்புவது என்று தெரியாமல் தடுமாறும் நிலையை நோக்கி நாம் சென்றுகொண்டிருக்கிறோம். பயன்படுத்துவதற்கு எளிமையாக உள்ள இணையம். சாதாரண மக்களைவிட குற்ற எண்ணம் கொண்டவர்களுக்குச் சாதகமாக ஆகிவிடுமோ என்ற அச்சம் எழுகிறது!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெலிகளின் அரசியல்

பா.ராகவ்



உலகம் நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்திக்கொண்டிருக்கும் நேரத்தில் அமைதியாக ஓர் ஆயுத ஒப்பந்தம் நடந்து முடிந்திருக்கிறது. அமைதியாக நடந்தாலும் இது ஆபத்தானது. கொலை ஆயுத ஒப்பந்தத்துக்குச் சமமானது. அதுவும் அமெரிக்காவுடன் தொடர்புபட்டது. அதனாலேயே இதனைக் கவனிப்பது அவசியமாகிறது.

**புதிய ஹெலிகள்**

ரோஸோபொரான் எக்ஸ்போர்ட் (Rosoboron export) என்பது ஒரு ரஷ்ய நிறுவனம். ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்கள். இராணுவ வாகனங்கள் என்பவற்றை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நிறுவனம். பிரசித்தி பெற்ற எம்.ஐ.17 ரக ஹெலிகளை உலகெங்கும் பறக்க விடுவது இந்த நிறுவனம்தான்.

இந்த நிறுவனத்துடன் அமெரிக்கா ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. முதல் கட்டமாக சுமார் 130 பில்லியன் ரூபாவுக்குச் சற்று அதிகமான மதிப்பீட்டுத் தொகைக்கு எம்.ஐ. 17 ரக ஹெலிகளுக்கான கொள்வனவுக் கட்டளையைக் கொடுத்திருக்கிறது. இந்த ஹெலிகளை அந்த நிறுவனம் விரைவில் ஆப்கனிஸ்தானுக்கு அனுப்பி வைத்துவிடும். அமெரிக்கா அதற்காகத்தான் இந்தக் ஹெலிகளை வாங்குகின்றது. ஆப்கான் தேசிய பாதுகாப்புப் படையின் பயன்பாட்டுக்காகவே இந்தக் ஹெலிகள் வாங்கப்படுகின்றன. ஆப்கனிஸ்தான் இராணுவத்திடமுள்ள வாகன வசதிகள் அனைத்தும் லொடலொடத்துப் போய் விட்ட நிலையில் இந்தப் புதிய ஹெலிகள் வாங்கப்படுவது அங்கே அவசியமாகியிருக்கிறது.

இதில் குடைச்சல் எங்கே வருகிறது என்றால் மேற்படி ரோஸோபொரான் எக்ஸ்போர்ட் நிறுவனம்தான் சிரிய இராணுவத்துக்கும் ஹெலிகள் மற்றும் ஆயுதங்களை விற்றுக் கொண்டிருக்கிறது

**ரஷ்யாவிடம் ஏன் வாங்குகிறது?**

ரஷ்யாவின் பரிபூரண ஆசீர்வாதத்துடன், அமெரிக்க ஆதரவு புரட்சிப் படைகளுக்கு எதிராக அங்கே சிரிய இராணுவம் போரிட்டுக் கொண்டிருக்க, எதிரியின் கொள்முதல் மையத்திலேயே அமெரிக்காவும் ஹெலிகள் வாங்குவது அமெரிக்க இராணுவத்துக்கே பெரும் குழப்பத்தை அளித்திருக்கிறது.

இது, இதுவரை யாரும் செய்யாதது. நினைத்துக்கூடப் பார்த்திராத காரியம். அமெரிக்காவில் இல்லாத ஹெலி உற்பத்தி நிறுவனங்களா? உத்தரவு போட்டால் உடனே வேலையை ஆரம்பித்துக் கட்டிக்கொடுத்துவிடமாட்டார்களா? அமெரிக்கத் தொழில்நுட்பத்தைக் காட்டிலும் ரஷ்ய நிறுவனத்தின் தொழில்நுட்பம் அத்தனை சிறந்தது என்று அமெரிக்காவே நினைக்கிறதா? இது அவமானமல்லவா? பெரியண்ணன் பெருமைக்குக் களங்கம் தரக்கூடிய செயலல்லவா? என்று கேள்விகள் துளைக்கின்றன.

மேலோட்டமான, பார்வைகளுக்குப் புலப்படாத உள்ளார்ந்த உள்குத்துகள் ஏதும் இதில் இருக்குமா என்று ஆராய்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

பென்சில்வேனியாவில் இயங்கும் போயிங் நிறுவனம் இத்தகு இராணுவ ஹெலிகளைத் தயாரிப்பதில் பேர்போனது. சொல்லப் போனால் போயிங் நிறுவனத்தின் 'சினூக்' ரக ஹெலிகள் எம்.ஐ. 17 ஹெலிகளை விடவும் விலை மலிவானவை. அப்படி இருக்க அமெரிக்கா ஏன் ஒரு ரஷ்ய நிறுவனத்திடம் போய் ஹெலிகளை வாங்க வேண்டும்? கிடைக்கிற ஒரே பதில், ஆப்கான் இராணுவத்துக்கு ரஷ்யத் தயாரிப்புகள் பரிச்சயமானவை என்பது மட்டுமே.

ஆனால் இராணுவத் தளபாடக் கொள்முதலுக்கெல்லாம் இந்தக் காரணம் மட்டுமே போதுமானதா? 2006இல் ஜோர்ஜ் புஷ் அதிபராக இருந்த சமயம் இந்த ரோஸோபொரான் எக்ஸ்போர்ட் நிறுவனத்துக்கு அதிகாரபூர்வத் தடையே அறிவித்திருந்தார். காரணம், அமெரிக்காவுக்கு வேண்டாத தேசங்களான ஈரான் மற்றும் சிரியாவுக்கு இந்த நிறுவனம் ஆயுதங்களை விற்றுக் கொண்டிருந்ததுதான். இப்போதும் மேற்படி ஆயுத விற்பனையில் எந்தவித மாற்றமுமில்லை. சொல்லப்போனால் சிரிய உள்நாட்டுப் போர் தொடங்கிய பிறகு விற்பனை இன்னும் அமோகமாக நடந்து கொண்டிருக்கின்றது.

**என்னதான் நடக்கிறது?**

புஷ்ஷுக்கு ஒவ்வாத ஒப்பந்தம் ஒபாமாவுக்கு எப்படி சாத்தியமாகியது? அமெரிக்க நாடாளுமன்றம் எப்படி இதற்கு ஒப்புக்கொண்டது? கடந்த ஜூலையிலேயே அமெரிக்க நாடாளு மன்றத்தின் இரு அவைகளிலுமாக இது தொடர்பான விவாதம் வந்தபோது சுமார் எண்பதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இதற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார்கள். எதிர்த்தவர்கள் அத்தனை பேரும் எதிர்க்கட்சிக்காரர்கள் மட்டும் அல்ல என்பதுதான் இதில் கவனிக்கப்பட வேண்டியது. ஆனாலும் இந்த ஒப்பந்தம் இப்போது நடந்து முடிந்திருக்கிறது. அமெரிக்கா, ரஷ்ய நிறுவனத்திடமிருந்து ஹெலிகாப்டர்கள் வாங்குகிறது. அதை ஆப்கனிஸ்தானில் பயன்படுத்தவிருக்கிறது.

சிரியாவின் எதிரியாகவும் ஆப்கனிஸ்தானின் நண்பனாகவும் அமெரிக்காவால் ஒரே நிறுவனத்தை எவ்வாறு பார்க்க முடிகிறது என்று கேட்டால் அதற்குப் பதில் கிடையாது. இதுதான் அமெரிக்கா. அமெரிக்காவைப் புரிந்துகொள்ள இதுவும் ஒரு சந்தர்ப்பம்.




நாடெங்கிலும் விற்பனை முகவர்கள் தேவை - அழையுங்கள்
• கொழும்பு - பந்துல - 077 144 4709 • கம்பஹா - கயான் - 077 011 2027 • சபரகமுவ - கனேத் - 077 755 1489 • அநுராதபுரம் - சஷான் - 077 277 3824
• கண்டி - லக்ஷித - 077 755 3430 • காலி - இஷான் - 077 753 9366 • மாத்தறை - பேர்ல் - 077 755 8692 • பொலன்னறுவை - பிரியந்த - 077 755 8943
• யாழ்ப்பாணம் - டேமியன் - 077 440 2087 • புத்தளம் - பிரியங்க - 077 259 0456 • மன்னார் - அற்புதகுமார் - 077 277 1039 • வடகிழக்கு - நதீர் - 0777552765

விற்பனை முகவர்கள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலியல்

## வன்முறை என்கிற கொள்ளை

கனிமொழீ



பாலியல் வன்முறை பற்றிய செய்திகள் வெளிவரும் போதெல்லாம் கூடவே தமிழ்ச் சமூகத்தின் இன் னொரு முகமும் வெளிப்படுகிறது. இந்த முகத்தில் அதி கம் பேசப்படுவது பாதிக்கப்பட்டவரின் அந்த ரங்கம் பற்றியது. குறிப்பாக, சம்பவம் நடப்பதற்கு ஏதுவான சூழ்நிலைக்குள் பெண் ஏன் சென்றாள் என்பது குறித்த கதையாடல்கள் மிகக் கொச்சைத்தனமாகச் செய்யப்படுகின்றன.

### விமர்சனங்கள்

ஊசி இடம் கொடுக்காமல் நூல் நுழையுமா? இந்தப் பெண் ஏன் அந்த நேரத்தில் அங்கே போனாள்? இப்படியெல்லாம் ஆடை அணிந்து சென்றால் சும்மா இருப்பார்களா? அவன் ஆண்பிள்ளை, கூப்பிட்டால் உடனே போவதற்கு இவளுக்கென்ன மதி? பெண்களை அதிகம் படிக்கவைத்தாலே இப்படித்தான்? என்றெல்லாம் வம்பு மடங்கள் வாய்பிளந்து பேசி மகிழும் நிலை ஏற்படுகிறது.

நடந்தது ஒன்றாக இருக்க, அதற்குக் கண், காது, மூக்கு வைத்துப் பேசி, சம்பவத்துக்கு அந்தப் பெண்ணும் காரணம் அல்லது உடந்தை என்கிற மாதிரி முடிப்பதுதான் அனேக இடங்களில் நடக்கிறது.

பெரும்பாலான வன்முறைச் சம்பங்களைப் பெண்கள் வெளியே சொல்லாமல் விடுவதற்கும் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் விடுவதற்கும் இப்படியெல்லாம் நடக்கும் என்கிற அச்சம்தான் காரணம். நடந்துவிட்ட மோசமான சம்பவத்தை மூடி மறைப்பதும், குறைத்துச் சொல்வதும் இதனால்தான் நடக்கிறது.

பாலியல் வன்முறைச் சம்பவம் (படையினரால் நிகழ்த்தப்பட்டவை போக ஏனையவை) குறித்து முதல்முறை யாகக் கேள்விப்பட்டவுடனேயே ஒரு முடிவுக்கு வந்துவிடுவோர்தான் இங்கு அதிகம். தங்களுக்குத் தெரிந்த, தங்கள் அறிவுக்கு எட்டிய, தங்களால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய காரண காரியங்களை அவர்கள் தேடுகிறார்கள். ஆணாதிக்க சிந்த னையுடனேயே இந்தச் சமூகம் வளர்க் கப்பட்டுவிட்டதால் பெண்கள் உட்பட அனே கர் உடனே பாதிக்கப்பட்ட பெண்ணிடம் என்ன தவறு இருந்தது என்று தேட முற் படுகிறார்கள்.

### பாதிக்கப்பட்டவருக்கு இரட்டைச் சுமை

பாலியல் வன்முறைக்கு உள்ளான பெண் காலமெல்லாம் இந்தச் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப் படாமல் விலக்கப்படுகிறார். இந்தக் கண்ணோட்டத்தை மாற்றியே தீர வேண்டும். அதற்கு நமது சமூகத்தின் பார்வை மாறவேண்டும். இந்த மாதிரி விடயங்களை எப்படி அணுகவேண்டும், ஊடகங்களில் வரும் இத்தகைய செய்திகளை எப்படிப் புரிந்துகொள்ள வேண்டும் என்று பெற்றோர் தமது குழந்தைகளுக்குச் சொல்லித்தர வேண்டும் (புரிந்துகொள்ளும் வயதுள்ள சிறுவர்களுக்கு மட்டும்).

நடந்ததை வெளியே சொன்னால், நமக்குத்தான் அவமானம் என்ற காரணத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கூனிக் குறுகி மௌனம் சாதிப்பது, குற்றமிழைத்தவர்களுக்குச் சாதகமாகப் போய்விடுகிறது. நீதிமன்றங்களில் போய்ப் பார்த்தால் இது தெளிவாகப் புரியும். பாதிக்கப்பட்ட பெண் தலை குனிந்துவர, குற்றமிழைத்தவருக்கோ தலை நிமிர்ந்து நடக்கும் துணிவு ஏற்பட்டுவிடுகிறது.

வன்முறைக்கு ஆளான சுமை ஒரு பக்கம், மான, அவமானத்துக்கு அஞ்சி எதையும் வெளியே சொல்ல முடியாமல் உள்ளுக்குள்ளேயே மறுகுவது மறுபக்கம் என்று இரட்டைச் சுமைக்கு ஆளாகிறார்கள் பாதிக்கப்பட்ட பெண்கள். இதனால், குற்ற மிழைத்த ஆண்களால் - பொய்கள், அரை உண்மைகள், நியாயப்படுத்தல்கள், பெண்ணின் மீதே பழியைச் சுமத்துதல்கள் ஆகியவற்றைக் கையாண்டு - அவள் மீது நடத்தை கெட்டவள் என்ற பழியைப் போட்டுத் தப்பிக்க முடிகிறது.

> நடந்தது ஒன்றாக இருக்க, அதற்கு கண், காது, மூக்கு வைத்துப் பேசி, சம்பவத்துக்கு அந்தப் பெண்ணும் காரணம் அல்லது உடந்தை என்கிற மாதிரி முடிப்பதுதான் அனேக இடங்களில் நடக்கிறது.

### புதுயுகம் படைப்போம்

பாலியல் வன்முறைக்கு ஆளான பெண்ணால் அது குறித்து விவாதிக்க முடியாது என்கிற நிலைதான் இன்றிருக்கிறது. சமூகமும் சட்ட அமைப்புகளும்தான் அதை அவளுக்கு எளிதாக்க வேண்டும். பாரபட்சமில்லாமல் துல்லியமாக நடந்த சம்பவத்தைத் தெரிவிப்பதன்மூலம்தான் சமூக ஊடகங்கள் அந்தப் பெண்ணுக்கு உதவ முடியும்.

நகை, பணத்துக்காக வீட்டு உரிமையாளரைக் கூர்மையான கத்தியால் குத்திவிட்டுத் தப்பியோடும் கொள்ளைக்காரனின் செயலைப் போன்றதுதான் பாலியல் வன்முறையும். முதலில் கூறிய சம்பவத்தில் கத்திக்குத்துப்பட்டவர் மீது சந்தேகப்படுவதோ, அவர்தான் காரணம் என்று யாரும் குற்றம் சுமத்துவதோ இல்லை; அவர் மீது அனுதாபமே காட்டப்படுகிறது. கத்தியால் குத்திவிட்டுக் கொள்ளையடித்தவனைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும் என்பதே கோரிக்கையாக இருக்கிறது. அதே நிலை பாலியல் வன்முறைச் சம்பவங்களிலும் எடுக்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட பெண்ணை அவமானப்படுத்துவதை விட்டுவிட்டு, கோழைத்தனமும் ஈனத்தனமும் மிக்க இந்தச் செயலைச் செய்தவர்கள் சமூகத்தில் நடமாடவே முடியாத நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அப்படியொரு நிலைமை வந்தால்தான், அதிகாரத்தில் இருப்பவர்கள் தவறுகளைச் செய்துவிட்டு, அதை மூடிமறைக்கும் நிலைமை மாறும். பாலியல் வன்முறை என்பது கொடிய நோய்க்கிருமி. அதை மூடி மறைக்காமல் பகிரங்கம் என்கிற சூரிய வெளிச்சம் படுமாறு அம்பலப்படுத்தினால்தான் அது ஒழியும்.




## நில் என்றான் ஒருவன்

மதியம் திரும்பி
மாலையும் சாய
மனாங்கொள்ளும் வேளை
வழக்கம் போல
களைத்து விழுந்து
கூடு தேடும் பறவைகளில் ஒன்றாய்
வழமையான
மினிபஸ் தரிப்பிடத்தில்
தரித்து நின்ற பஸ்ஸைப் பார்த்து
இருப்பதற்கு இடமிருப்பதாய்
ஆறுதல் பெருமூச் செறிந்து
அமர்ந்து கொண்ட பின்னே
ஆண்களும் பெண்களும்
இளசுகளும் முதுமைகளுமாய்
ஆசனங்களை நிறைக்க
வேம்படியில் இருந்து வரும்
மாணவி ஒருத்திக்கு
இடமிருப்பதாய்ப் பல்லிளித்து
நடத்துநர் அழைத்து
ஆசனத்தில் அமரவிட்டு
இணை பிரியா அன்றில்களாய்
சோடி ஒன்று ஏறி
இருவர் அமரும் சீற்றொன்றில்
சிக்கனமாய் அமர
வரிசை அமைத்து
நிற்பவர்கள் நிற்கத் தொடங்க
பஸ் புறப்படும் வேளையிலே
எங்கோ இருந்து
கையிலே பிள்ளையுடன்
பெண்மணி ஒருத்தி
புறப்படும் நேரம் வந்தால்
நடத்துநர் இடம் தருவார்
என்ற தந்திரோபாயமும்
நன்றாய்த் தெரிந்தேற
கர்ப்பிணிக்கு; மதகுருவுக்கு
விசேட தேவை உள்ளோர்க்கு
என்று ஒட்டப்பட்ட ஸ்ரிக்கர்களில்
பாலூட்டும் தாய் அடங்காததால்
எழுத்தறிவித்த ஈசர்கள்
பிள்ளையுடன் வரும் தாய்க்கு
இடம்கொடுக்க வேண்டும்
என்று சொன்ன போது
வகுப்பில் இருந்ததாலோ என்னவோ
பிள்ளையுடன் வருகின்ற
அக்காவுக்கு இடம் கொடுங்கோ
என்று அலற
கூப்பிட்டு இருத்திய
வேம்படிப் பிள்ளையும்
சோடி பிரியாதமர்ந்த
தம்பதியரில் ஆண் மகனும்
ரெலிபோனை நோண்டியபடி
[illegible]
[illegible]
இப்படியே இருக்க
யாரை எழுப்ப வேண்டுமென
அடுத்த வகுப்பில் சொல்லும் போது
இருக்காததாலோ என்னவோ
அவர்களை எல்லாம் விடுத்து
பின் சீற்றில் அமர்ந்திருந்த
தலை நரைத்துக் களைத்த
முகம் வாடிக் காலை உணவோடு போராடி
ஏலவே பல கிலோமீற்றர்
ஒரு பஸ்ஸில் பயணித்த
என்னைப் பார்த்து
மனிதாபிமானத்தையே
சொன்னது போல
எழும்பி நில்லென்று
சொன்னான் அவன்.

*சின்மயி, கோப்பாய்.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாழ்க மின்வெட்டு

விவேகானந்தனூர்
சதீஸ்

தரம் ஐந்தில் பயிலும் மலர்விழியின் மகள் வீட்டுப்பாடம் செய்யும் போது ஏற்பட்ட சந்தேகத்தை தாயிடம் பலமுறை கேட்கிறாள். "கொஞ்சம் பொறு வாறன்...விளம்பரம் வரட்டும்!". "அம்மா! அம்மா சொல்லுங் கோவன்..!" மறுபடியும் தாயின் குரலுயர்ந்த அதட்ட லோடு அடங்கிப் போனாள் சின்னவள்.

"அவளெல்லாம் ஒரு மாமியா..? இப்படி கொடுமைக்காறியாக இருக்கிறாளே! அவனும் துணை போவது போலல்லவா நடந்து கொள்கிறாள்! எவ்வளவுதான் தாய்ப்பாசம் இருந்தாலும் கட்டியவளையும் மனம் நோகாது நடத்த வேண்டுமல்லவா?" இப்படித்தான் மாமியாரும் மருமகளும் தம்மை மறந்து சின்னத்திரை முன் அமர்ந்து பரஸ்பரமாகப் பேசிக் கொள்கிறார்கள். தரம் ஐந்தில் பயிலும் மலர்விழியின் மகள் வீட்டுப்பாடம் செய்யும் போது ஏற்பட்ட சந்தேகத்தை தாயிடம் பலமுறை கேட்கிறாள். "கொஞ்சம் பொறு வாறன்...விளம்பரம் வரட்டும்!". பிள்ளை மீண்டும் பிராண்டுகிறது. "அம்மா! அம்மா சொல்லுங்கோவன்..!" மறுபடியும் தாயின் குரலுயர்ந்த அதட்டலோடு அடங்கிப் போனாள் சின்னவள். "சிறிய விளம்பர இடைவேளையில் சின்னவளுக்கு சாப்பாட்டை போட்டுக் கொடுப்போம்" விரைவாக எழுந்து வந்த மலர்விழி அலுத்துப்போய் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த மகளைத் தட்டியெழுப்பி சாப்பாட்டைத் தட்டில் போட்டுக் கொடுத்தாள். சீரியலின் தொடக்க இசையைத் தொடர்ந்து கேட்டு நன்கு பழக்கப்பட்டிருந்ததால் இடைவேளை முடிந்ததையறிந்து "அடுத்தது நல்லதொரு கட்டம்..அவள் தன் மாமியாருக்கு மின்சார அதிர்ச்சி கொடுக்கப் போறாள்.." எனக் கத்திய படியே துள்ளி வந்து சோபாவில் அமர்கிறாள் மலர்விழி.

மாலை 6.30 தென்றல் தொடங்கி 9.30 திருமதி செல்வம் வரை பார்ப்பது அந்த வீட்டுத் தாய்க் குலத்துக்கு அன் றாடக் கடமைகளில் ஒன்றாகிப் போனது. அவ்வப்போது வரும் இடைவேளைகளும் இல்லா விட்டால் வீட்டிலிருப்பவர்களின் கதி அவ்வளவுதான்.

தனியார் நிறுவனம் ஒன்றில் வெளிக்கள உத்தியோகத்தராகப் பணி செய்து வரும் இந்திரனுக்கு இவையெல்லாம் பழகிப் போன விடயங்களாகிவிட்டன. திருடனாய்ப் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என விட்டு விட்டான். எத்தனை நாளைக்குத்தான் புத்திமதி சொல்வது? இதனால் வீட்டில் எந்த நாளும் அமர்க்களம்தான். அம்மாவும் சேர்ந்து கொண்டு அநியாயத்துக்கு வக்காளத்து வாங்கினார்..! "சரி.. சரி.. அவள் உன்னைப் போல் வெளியில அங்க இங்கையெண்டு போறவளே.. வீட்டுக்கேயே கிடக்கிறாள். பொழுதுபோக்கா பாத்திட்டு போகட்டுமென்" தாய்தானும் பங்காளியென்பதால் தன் கட்சிக்காக கதைக்கிறா என்பதை உள்ளார்ந்தமாகப் புரிந்து கொண்ட இந்திரன் "சரி.. ஏதோ மாமியாரும் மருமகளும் ஒற்றுமையா இருப்பது எல்லாவற்றையும் விட மேலானது." எது எப்படி இருந்தாலும் அவனுக்குள் ஒரு கவலை.நான் எப்படியும் சமாளித்துக் கொள்வேன் இந்தப் பிள்ளையின் எதிர்காலம் எப்படியாகுமோ..? என்பதுதான்.

அன்று தூரப் பிரதேசம் ஒன்றுக்கு சுகாதாரப் புள்ளிவிவரம் எடுப்பதற்காக உந்துருளியில் சென்ற இந்திரன் அலுவலகம் திரும்ப இரவு எட்டுமணியாகி விட்டது. அங்கிருந்து வீடு வந்து சேர மணி எட்டு முப்பதை தொட்டுக் கொண்டிருந்தது. பாதையில் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் பல கல்லெறிக்கு இலக்காகி குருடாகியிருந்தாலும் சில மின் குமிழ்கள் தூங்கி வழிந்து எரிந்து கொண்டிருக்கும்.



இன்று அவையும் அமைதியாகி இருந்தது கண்டு அனுமானித்துக் கொண்டான், அடிக்கடி தான் விரும்பும் மின்வெட்டுதானென்று வீட்டுக்குள் சென்றதும் "என்னப்பா.. தேத்தண்ணி போடட்டே..?" என்று வினவிய மலர்விழியை அதிசயமாய்ப் பார்த்தவன் "இல்ல மலர்! சாப்பாட்டு நேரமாச்சு சாப்பிடுவம்" பெருமூச்சொன்றை உகுத்து விட்டு கிணற்றடி நோக்கி நகர்ந்தான். "என்ன மகன் இண்டைக்கு நல்லாச் சுணங்கீட்டுது.. நேரத்துக்கு வீடு வந்து சேராமல் அப்படி என்னதான் வேலை? உடம்பையும் கவனித்துக் கொள்! போ.. போய்ச் சாப்பிடு." இது அம்மா தொலைக் காட்சிப் பொழுதை தொலைக்க இரு பெண்ணுள்ளங்களும் பெரும் பாடுபடுவது புலப்படுகிறது. பெற்றவள் அருகில் வந்து "தம்பி கரன் போன் கதைச்சவன் .." என்று ஆறுதலாய் கதை சொல்ல வெளிக்கிட்ட தாயையும் வியப்பாய்ப் பார்த்தான். உழைத்துக் களைத்து இரவில் வீடு வந்தால் "சாப்பாடு மேசையில் இருக்கப்பா.. சாப்பிடு[illegible] வாறன்" இது அன்பு மனைவியின் திருவாய[illegible] உதிரும் சொற்கள். அன்னை அவதானமாகப் பார்த்துக் கொண்டிருப்பாள் மகனையல்ல.. தொலைக்காட்சித் திரையை. இப்படி இருவரும் சின்னத் திரையில் மூழ்கி அவனது சிந்தனைத்திரையை திறப்பதுதான் வழக்கம். மாறாக இன்று பீங்கானில் தோசையை வைத்து சாம்பாரும் ஊற்றிவிட்டு "சம்பலும் கொஞ்சம் வைக்கட்டே அப்பா..?" என்று அருகிலிருந்து அன்பாய் மலர்விழி கேட்டுக் கொண்டிருக்கிறாள் என்றால் அதற்குக் காரணம், திடீரென கனவில் வந்த கடவுள் வாக்கு அல்ல எட்டு தொடக்கம் ஒன்பது வரையிலான மின் வெட்டுதான். வாழ்க மின் பொறியியலாளர்! வளர்க மின்வெட்டு! குறைக மின் கட்டணம்! பெருகட்டும் கவனிப்பு! தாய்க்குலம் தலைதூக்கட்டும்! என மனதுக்குள் உணர்ச்சிக் கோஷங்களை வரவழைத்துக் கொண்டான் இந்திரன். நீண்ட நாள்களுக்குப் பிறகு சந்தோஷமாகச் சாப்பிட்டான்.

## இது போன்று எத்தனையோ......

எம்.நேதா,
நெடுந்தீவு.

நாய்ப் பிழைப்பு
உன்னை சுமந்ததற்கு
வயிற்றில் நெருப்புக்கட்டி
வாழ்ந்திருப்பேன்

தரித்திரத்தின் தலைக்கவசமா
வந்து பிறந்த
வாழ வழியற்று
வாழ்வறுத்து நிக்கிறியே

சாபமாப் பிறந்தாலும்
ஊனமாப் பிறக்கக் கூடாதாம்
குடும்ப சுகமழிக்க நீ
சொத்தியாப் பிறந்து தொலைச்சியே
போடி... தெருத்தெருவா
தட்டிப் பிடி
தெரியாதவங்க கேட்டாலும்
என் மகளென்று சொல்லாதே

தலைமுறை கெடுக்க வந்த
தட்டுவாணி
பற்றியெரிந்துபோவாள்
நீ பிண்டமாகும் முன்னே
பிறப்பழிச்சிருக்க வேணும்
நடுவீட்டில் பிறந்த
சாபக்கேடு
நீ இருப்பதால்தான் இந்த
வீட்டில் இழவும்
விழுகுதில்லை
இளையவளுக்கு
வரனும் பொருந்துதில்ல..
போடி... கிணறோ குளமோ
உனக்கு கிடைக்காதா
இடுப்ப சுத்தியிருக்கும்
அறணாக் கயிற்றிலாவது
தொங்கவிடு உயிரை
[illegible]
வளர்க்க பிள்ளை

எதுக்கென்று
ஊர் சொல்லும்
சனியன் நீ துலைஞ்சாப்
போதும்
ஊர்பேச்சொன்றும்
எனக்கு உறைக்காது
இப்படி இன்னும்
எத்தனையோ
கேட்டபடியே கடந்து
போகிறோம்
மரத்துப்போன
மனம் கொண்ட
மனிதர்களாய்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்ஸீமர்

## என்ற மறதி வியாதி

*அல்ஸீமர் வியாதி சிறுவர் களைப் பாதிப் பதில்லை. பெரும் பாலும் 65 வய துக்கு மேற் பட்ட வர்களையே இது பாதிக்கின்றது.*

அசை போட ஒரு விடயம் 104

ரம்யன்

ஒரு விடயத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள் சில சமயம் தன் சுற்றாடலை மட்டுமன்றி தாம் செய்வது இன்னதென்றே மறந்து விடுகிறார்கள். சாதாரண மக்களுக்கு மட்டுமல்ல புகழ் பெற்ற விஞ்ஞானிகள், தத்துவஞானிகளுக்கும் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு விடயத்தைப் பற்றிப் பல நாள்கள் இரவு பகலாக ஆராய்ந்து கொண்டி ருந்த விஞ்ஞானி ஒருவருக்கு குளியல் அறையில் உடைகளைக் களைந்து விட்டு குளித்துக் கொண்டிருந்த போதுதான் அந்த விடயத்துக் கான விடை மூளையில் தட்டுப்பட்டிருக்கிறது. உடனே அவர் தான் குளித்துக் கொண்டிருப்பதையும் மறந்துவிட்டு வெளியில் வந்து பிறந்த மேனியுடன் "கண்டுபிடித்து விட்டேன், கண்டுபிடித்துவிட்டேன்" என்று உரத்துக் கூறியபடி தெருவீதியில் ஓடினார் என்று படித்திருக்கிறோம். அதேபோல் வங்கியொன்றின் கருமபீடத்தில் ஏதோ காரியமாக வரிசையில் நின்ற விஞ்ஞானி ஒருவர் கருமபீட அலுவலர் முன்தோன்றிய போது தனது பெயரை மறந்துவிட்டு விழித்ததாகவும் பக்கத்தில் நின்றவர்தான் அவர் பெயரைக் கூறி நினைவுபடுத்தியதாகவும் சம்பவமுண்டு.

பொதுவில் மறதி என்பது எல்லோருக்கும் ஏற்படுகின்ற ஒன்றுதான். வாழ்க்கையில் ஏற்படும் எத்தனையோ விதமான துன்பங்களை மறக்க முடிவதனால்தான் நம்மில் அநேகரும் தொடர்ந்து மகிழ்ச்சியாக வாழ்கிறோம். ஆனால் மறதி என்பது வியாதியாக வரும்போதுதான் கவலை கொள்ள வேண்டியிருக்கின்றது. மறதி உண்மையில் வாழ்க்கையில் ஒரு பகுதிதான். ஆனால் அடிக்கடி மறப்பதானது மறதி வியாதியாக மாறக்கூடிய நிலைக்குப் போய்க் கொண்டிருப்பதைக் காட்டுவதாய் இருக்கும். வயது போகப் போகப் இந்த நிலைமை அதிகரித்துக் கொண்டே போகும். ஆனால் சாதாரண மறதிக்கும் அல்ஸீமர் என்றழைக்கப்படும் மறதி வியாதிக்கும் நிறையவும் வேற்றுமை உண்டு. இது நிரந்தரமாக மூளையைப் பாதித்துவிடக் கூடியதான வியாதி என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

அல்ஸீமர் என்பது நிரந்தரமாக மூளையைப் பாதித்துவிடக் கூடிய ஒரு வியாதி சின்ன விடயங்கள், பொத்தானைப் பூட்டுவது, பெல்டை போடுவதைக் கூட இது மறக்கச் செய்துவிடும். காலப் போக்கில் இந்த நோய்க்குள்ளானவர்கள் தமது குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைக் கூட மறந்து போவார்கள். இது சம்பந்தப்பட்டவருக்கு மட்டுமல்ல உறவினர்களுக்கும் கவலைக்குரிய விடயம்.

இதில் இன்னொரு முக்கிய விடயம் என்ன வென்றால் அல்ஸீமர் வியாதி சிறுவர்களைப் பாதிப்பதில்லை. பெரும்பாலும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களையே இது பாதிக்கின்றது. ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. நோயை தாமதம் செய்வதற்கான மருந்துகளை மட்டுமே இப்பொழுது மருத்துவர்களால் கொடுக்க முடிகின்றது. இருந்தாலும், ஒருநாள் இந்த நோய்க்கும் ஆராய்ச்சியாளர்களால் மருந்து கண்டு பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை துளிர் விட்டிருக்கின்றது.

### மூளையில் என்ன நடக்கிறது?

மூளையானது சமிக்ஞைகளை அனுப்புவதன் மூலம் செயற்படுகின்றது என்பது நம்மில் அனேகருக்குத் தெரியும். நியுரோ ட்ரான்ஸ்மிட்டர்ஸ் (Neuro transtmiters) என்றழைக்கப்படும் நுண்கடத்திகள் - இரசாயன செய்தியாளர்கள்- மூளையிலுள்ள செல்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்துகின்றன. ஆனால் அல்ஸீமர் நோயுள்ளவரிடம் இந்த நுண்கடத்திகள் மிகக் குறைவாகவே காணப்படும். அத்துடன் இந்த நோய்க்குள்ளானவர்களின் மூளையில் புரதம் மற்றும் நார்ப் பொருள் சேர்மானம் அடர்த்தியாகும். அதனால் கலங்கள் முறையாக செயற்படாமல் போகும். இப்படியான சந்தர்ப்பத்தில் மூளையால் ஏனைய பகுதிகளுக்குச் சரியான சமிக்ஞைகளை அனுப்ப முடியாமல் போகும். காலப்போக்கில் அல்ஸீமர் வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுடனும் சுருங்கத் தொடங்கி மடிந்து போகும். அல்ஸீமர் நோய்க்கான காரணத்தைக் கண்டுபிடிக்க நிறையவும் ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இந்த நோய் வருவதற்கான காரணங்கள் பல இருப்பதாகக் கருதப்படுகின்றது.

வயதாக ஆக இந்த வியாதி முற்றிக் கொண்டே போகும். 65 வயதானவர்களைவிட 85 வயதைக் கடந்தவர்களுக்கு இந்த நோய் ஏற்படுவது வேகமாக இருக்கலாம். அநேகமாக ஆண் களைவிடப் பெண்களுக்கே இந்த நோய் அதிகமாக ஏற்படுகிறது என் கிறார்கள்.

குடும்ப நோயாக சில வேளைகளில் இது காணப்படலாம். பரம்பரையாக வருவதாகவும் சிலவேளை இருக்கலாம். ஆனால் அந்த நோய் உள்ளவருக்கு உறவினராய் இருப்பதனால் மட்டும் இன்னொருவருக்கு அந்த நோய் வரும் என்பதில்லை. மரபணுவும் சில வேளைகளில் காரணமாக இருக்கலாம்.

ஒழுங்காக உடற்பயிற்சிகளை செய்து வருவது, சுகாதாரமான உணவுகளை உண்பது, மூளையை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வதற்கான (குறுக்கெழுத்துப் போட்டி போன்றன) செயற்பாடுகளில் ஈடுபடுவது போன்றவை மூலம் அல்ஸீமர் நோய் வருவதை தடை செய்ய முடியாவிட்டாலும் தாமதப்படுத்த முடியும்- என்கிறார்கள் ஆய்வாளர்கள்.



**அல்ஸீமர் நோய் வருவதை தடை செய்ய முடியா விட்டாலும் தாம தப்படுத்த முடியும்**

## மனிதம் எங்கே.....?



மதங்கள் இருந்தென்ன?
விரதங்கள் தொடர்ந்தென்ன?
சரிதங்கள் பாடியென்ன?
சாஸ்திரம் செய்தென்ன?
மனிதத்துக்காய் மரணித்த
மனிதர்களைப் பூஜிக்க முடியவில்லை
மனிதம் எங்கே இருக்கிறது....?

ஒவ்வொரு கார்த்திகையும்
ஒளி விளக்கேறும்
ஓசைகள் கேட்கும்
பண்டிகைத் திருநாளாய்
புத்தாடையிட்டு
புதுமணம் வீசும் தென்றலாய்
பூஜித்த தெய்வங்களின்
ஆலய மணிகள் அறுக்கப்பட்டனவே...?

ஆலய மணிகளை அறுத்த
அரிவாள்கள் இங்கே
அதிகார ஆசனங்களை அமர்த்தி
அல்லும் பகலும் அர்ச்சனை செய்கின்றன.
அழுது பயனென்ன?
மாண்டவரை தோண்டி
துகழ் எடுத்து எரித்த
எமன்கள் இருப்பதால்
மனிதம் எங்கே..?

பறந்து சென்ற பச்சைக் கிளிகளை
பல்லின கழுகுகள் சேர்ந்து பிடிச்சுதறி
எடுத்தன இச்சை தீர்த்த கழுகுகள்
பச்சைக் கொடி காட்டின
பரமசிவன் கழுத்துப் பாம்பு கேட்டது
கருடா சவுக்கியமா? இங்கு
மனிதம் எங்குள்ளது....?

இனத்துக்காய் பறந்துழைத்த
ஈசல்களின் இறக்கைகள்
இரண்டும் ஒடிக்கப்பட்டன
குழிகள் வெட்டி விதைக்கப்பெற்ற
விதைகளுக்கு விஷம் ஊற்றப்பட்டது
நாற்று மேடைகள் நிர்க்கதியாக்கப்பட்டன
ஓசைகளற்று ஒலிகள் புலம்புகின்றன
ஒவ்வொரு தாய்க்குலமும்
ஓலமிட்டுக் கிடக்கின்றன
மனிதம் எங்கே...?
துட்டகைமுனு மகாவம்சத்தில்
திடம் கொண்ட வீரனின்
விடுதலை விருப்பால் எல்லாள
மன்னனின் நாமத்தை நாட்டுவித்தான்
அந்த மனிதம் சாகவில்லை
இனத்துக்கினம் இடர்பாடுகளை
ஈட்டிவிட்டால் மனிதம்
மரணத்துக்காக மண்டியிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 15 12 2013 ஞாயிற்றுக்கிழமை




செ.கிரிதரன்.

# நினைவழியா நடேஸ்வர

மாவிட்டபுரத்திலிருந்து காங்கேசன் வீதியால் செல்லும் போது இடது பக்கத்தில் சிமெந்துத் தொழிற்சாலை வரும். அதனை அடுத்து வருவது வைத்தியர் இராஜேந்திராவின் ஈஸ்வரி நேசிங்ஹோம். அவரது வீட்டு வாசலிலே அழகிய பூந்தோட்டம் ஒன்றிருந்தது. அதில் சிறிய தடாகமொன்றில் ஒரு பெண்ணின் சிலை வைக்கப்பட்டு அந்த சிலையின் கரத்திலுள்ள குடத்திலிருந்து நிற்காமல் தொடர்ச்சியாக நீர் வழிந்தோடியது.

மேலும் செல்லும் போது குரு வீதிச் சந்தி, காட்டடைப்பு வீதிச் சந்தி என்பன வரும். அதனை அடுத்து கிழக்குப் பக்கமாகச் செல்வதுதான் கல்லூரி வீதி. இந்த வீதியில் அமைந்திருந்தது தான் நடேஸ்வரக் கல்லூரி.

வீமன்காமம் டச்சு வீதியில் வாழ்ந்த தம்பிப்பிள்ளை மனேஜர் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டதுதான் நடேஸ்வராக் கல்லூரி. முதலில் இரண்டு பாடசாலைகளாக இயங்கின. வீதிக்கு வடக்குப் புறமாகவுள்ள தென்னஞ் சோலைகளின் மத்தியில் அமைந்திருந்தன. தமிழ்ப் பாடசாலை தெற்குப் புறமாக ஆரம்பத்தில் நடேஸ்வர வித்தியாலயம் என்ற பெயருடன் ஆங்கிலப் பாடசாலையாக விளங்கியது.

### உயர் தரத்துக்கு நடேஸ்வரா

இலவசக் கல்லூரி அறிமுகப்படுத்தப்படாத காலம் அது. கட்டணம் செலுத்திப் படிக்க வசதி இல்லாதவர்கள் எல்லோரும் நடேஸ்வரா தமிழ்ப் பாடசாலையிலேயே படித்தார்கள்.

1974 - 1976 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நான் அங்கு கல்வி கற்றேன். யூனியன் கல்லூரி க.பொ.த. சாதாரண தரம் வரை படித்த என்னை, எனது பெற்றோர் இருவரும் நடேஸ்வரவில் ஆசிரியர்களாக இருந்தமையால் அங்கு உயர் தரம் படிப்பதற்காகச் சேர்த்துவிட்டனர்.

அதற்கு பிறிதொரு காரணமும் இருந்தது. அந்த நாள்களில் உயர்தர வகுப்பு கணித விஞ்ஞானப்பிரிவுகளுக்குநடேஸ்வர சிறந்த ஆசிரியர்களைக் கொண்டிருந்தது. பிரபல்யமாக இருந்தது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி வயாவிளான் மத்திய கல்லூரி, இளவாலை சென். ஹென்றிஸ் ஆகிய பிரபல பாடசாலைகளிலிருந்து க.பொ.த. சாதாரணம் சித்தியெய்தியவுடன் இங்கே வந்து மாணவர்கள் பலர் உயர்தரம் படிப்பது வழக்கமாக இருந்தது.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த பொன்.சோமசுந்தரம் அதிபராக இருந்தார். உயர்தர வகுப்புகளுக்குரிய இரசாயன பாடப் புத்தகங்கள் எழுதிய வைத்தியநாதன் உப அதிபராக இருந்தார். (அப்போது இலவச பாடப் புத்தகங்கள் இல்லை) உடுவில் மணியம் என்று அழைக்கப்பட்ட சுப்பிரமணியம், சிவராஜா, பாலசுப்பிரமணியம், பரமேஸ்வரி வேல்முருகன், திருமதி அப்பாத்துரை, திருமதி பொன்னம்பலம், நித்தியானந்தன் ஆகியோர் உயர் வகுப்புகளுக்கு பாடம் கற்பித்துக் கொண்டிருந்தனர்.

பாடசாலை வளவினுள் அம்மன் கோவில் ஒன்று அமைந்திருந்தது. காலையில் தினமும் கோவில் முன்பாக நடைபெறும் பிரார்த்தனை பின்னர் ஒன்றுகூடல் (Assembly) பிரதான மண்டபத்துக்கு வெளியே அதன் நிழலில் நடைபெறும்.

இந்தப் பிரதான மண்டபம் ஒரு சுண்ணாம்புக் கட்டடம். அதனுடன் இணைந்து பௌதிக, உயிரியல், இரசாயன ஆய்வு கூடங்கள் அமைந்திருந்தன. பாடசாலையின் விழாக்கள் எல்லாம் இந்த மண்டபத்திலேயே நடைபெறும். பின்னர் அந்தக் கட்டடம் இடிக்கப்பட்டு ஓர் இரண்டு மாடிக் கட்டடம் அமைந்ததாக அறிகிறேன்.

பாடசாலை மைதானம் புறம்பாக காங்கேசன்துறை வீதிக்கு மேற்கே அமைந்திருந்தது. அந்த மைதானத்திலிருந்து பார்க்கும் போது சிமெந்துத் தொழிற்சாலையின் பிரம்மாண்டமான புகை போக்கி ஊடாக புகை வெளியேறிக் கொண்டிருக்கும்.

நடேஸ்வரக் கல்லூரிக்கு இளவாலை, கீரிமலை, கொல்லன் கலட்டி, தெல்லிப்பழை, மாவிட்டபுரம், வீமன்காமம், வறுத்தலைவிளான், கட்டுவன், வயாவிளான், குரும்பசிட்டி, பலாலி, மயிலிட்டி, தையிட்டி, மாங்கொல்லையிலிருநந்தும் இன்னும் பல ஊர்களி லிருந்து மாணவர்கள் வந்து கொண் டிருந்தார்கள். தற்போதைய நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும்கூட இந்தப்பாடசாலையின் ஒரு பழைய மாணவர்.

### சரித்திரத்தில் உதைபந்தாட்டம்

பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டி கிரமமாக நடைபெற்று வந்தது. மகாஜன, யாழ். இந்து, உரும்பிராய் இந்து ஸ்கந்தா ஆகியவை பெரும்பாலும் சம்பியன்களாக வந்து கொண்டிருந்தன. 1975 ஆம் ஆண்டென்று நினைக்கிறேன். இறுதிப் போட்டிக்கு விளையாடுவதற்கு நடேஸ்வராவும் தகுதி பெற்றிருந்தது. மகாஜனக் கல்லூரிக்கு எதிராக விளையாட வேண்டி இருந்தது. இறுதிப் போட்டி கள் யாவையுமே யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிலேயே நடைபெறும். லொறி ஒன்றை வாழைகள், தென்னோலைகளால் அலங்கரித்து கல்லூரிக் கொடியைப் பிடித்துக் கொண்டு கத்தியபடி யாழ்ப்பாணத்துக்குச் சென்றது இன்னும் நினைவில் இருக்கிறது.

அப்போது அதிபராக இருந்த பொன்.சோமசுந்தரம் பிறிதொரு நாள் கூட்டமொன்றில் பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார். "கல்லூரி மாணவர்கள் லொறி ஒன்றில் வரா! வரா! நடேஸ்வர'! என்று சத்தமிட்டபடி செல்கிறார்கள். அவர்களின் பின்னால் நான் காரில் சென்று கொண்டிருந்தேன். அப்போது என் கண்களில் நீர் வழிந்தோடியது. ஏனெனில் நடேஸ்வரா அதுதான், சரித்திரத்தில் முதல் தடவையாக இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றிருந்தது. அத்துடன் உதைபந்தாட்டத்தில் ஜாம்பவானாகிய மகாஜனவுடன் மோதுகிறது என்பதை நினைக்கச் சிலிர்ப்பாக இருந்தது. ஆனால் அந்தப் போட்டியில் மகாஜனவே வென்றது.

> ஆயிரமாயிரமானவர்களுக்கு கல்வியைப் புகட்டி வாழ்க்கையை சிறப்புற ஆக்கிய கல்லூரியின் ஒவ்வொரு கட்டடமும் ஒவ்வொரு அங்குல நிலமும் நினைவில் நிற்கிறது. உடலும் மனதும் வலிக்கிறது.

அந்த நாள்களில் உயர்தரத்தில் ஒரு வருடம் முன்பாகப் படித்துக் கொண்டிருந்த வாகீசன், நவரஞ்சன் மற்றும் பலர் பாட்டுப் பாடுவதில் வல்லவர்கள். ஒரு இசைக்குழுவையே உருவாக்கி இருந்தார்கள். ஒரு கலைவிழாவின் போது இவர்களின் இசை நிகழ்ச்சி நடந்தது. தற்போது மன்னார் புனித சவேரியார் கல்லூரியில் கடமை புரியும்யேசுராஜா அங்கே பணி புரிந்து கொண்டிருந்தார். அவரும் அந்த நிகழ்ச்சியில் பாடல்களைப் பாடி அனைவரதும் பாராட்டைப் பெற்றார். அதிபர் மறு நாள் ஒன்று கூடலில் இந்த நிகழ்ச் சியை மிகவும் பாராட்டினார்.

நவராத்திரி பூசை அந்த அம்மன் கோவிலில் சிறப்பாக நடைபெறும். விஜயதசமி அன்று பிரதான மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். ஒரு முறை வயலின் வித்துவான் இணுவில் இராதாகிருஷ்ணனின் கச்சேரி நடைபெற்றது. அன்று அவர் அபூர்வ இராகங்கள் திரைப்படத்தில் இடம்பெற்ற 'அதிசய ராகம்' பாடலை வாசித்தபோது மெய் மறந்து கிடந்தோம்.

### கோவிலுடன் நெருக்கம்

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கும் பாடசாலைக்கும் பல தொடர்புகள் உண்டு. ஒரு திருவிழாக்கு கல்லூரியே உபயகாரராக இருந்தது. நடேஸ்வர கல்லூரி மாணவர்களின் ஒரு செயற்றிட்டமாக நூல் நிலையம் ஒன்று கோவிலின் தெற்கு வீதியில் அமைக்கப்பட்டது. இதற்காக வீடு வீடாகச் சென்று ஏராளமான புத்தகங்களை சேகரித்தார்கள் மாணவர்கள். ஆலயமென்பது ஆன்மிகத் தேடலுக்கு மட்டுமல்ல அறிவுத் தேடலுக்கும் உரிய இடமென்பதை பொன். சோமசுந்தரம் நிறுவினார். ஆனால் பின்னர் வந்த நாள்களில் அந்தப் புத்தகங்கள் மட்டுமல்ல ஆதீன கர்த்தா பிரம்ம சிறி சு.து. ஷண் முகநாதக் குருக்களின் ஏராளமான கிடைத்தற்கரிய நூல்களும் மக்கள் இடம்பெயர்ந்தபோது காணாமற் போய்விட்டன.

என்னுடன் படித்த நண்பர்களின் பெயர்கள் நினைவுக்கு வருகின்றன. மனோகரன், ஞானநாயகம், சந்திரகுமார், சின்னையா, பாலசுப்பிரமணியம், சொர்ணலிங்கம், செல்வச்சந்திரன், குகதீசன், சிவகுமார், பாலராஜா, ஷண்முகம். இவர்களுடன் உயர்தர பரீட்சை முடிந்து மறுநாள் யாழ்ப்பாணம் சென்று ஒரே நாளில் 'மனிதனும் தெய்வமாகலாம்', 'அகத்தியர்' திரைப்படங்களை வின் சர், வெலிங்டன் அரங்குகளில் பார்த்தது மறக்க முடியாத அனுபவம்.

தற்போது நடேஸ்வரக் கல்லூரி இடித்தழிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை அறிந்த போது நெஞ்சில் இடி இறங்கியது. என்னைப் போன்ற ஆயிரமாயிரம் மாணவர்களுக்குகல்வியைப் புகட்டி வாழ்க்கையை சிறப்புற ஆக்கிய கல்லூரியின் ஒவ்வொரு கட்டடமும் ஒவ்வொரு அங்குல நிலமும் நினைவில் நிற்கிறது. உடலும் மனதும் வலிக்கிறது.

யாழ்.நூலகத்துக்கு முன்பு ஏற்பட்ட நிலைதான் இப்போது நடேஸ்வரவுக்கும் ஏற்பட்டுள்ளது. கட்டடங்களை அழிக்கலாம். அங்கு கற்ற கல்வியை அழிக்க முடியுமா?

கட்டுரையாளர் தொடர்புக்கு:
(kiritharansellathurai1959@gmail.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில்: ரம்யன்

# இலங்கையில் பால்நிலை 4 தாக்கங்கள்




அடிப்படையில் சிறுவர்கள் பெற்றோரின் அரவணைப்பான அணுகுமுறையையே எதிர்பார்க்கிறார்கள். அதாவது அன்பும், ஆதரவும் அதைவிட முக்கியமாக, அவர்கள் சிறப்பானவர்கள், நல்லவர்கள், கெட்டிக்காரர், கவர்ச்சியானவர்கள் என்று கருதப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் தமது சொந்த திறமைகள் பற்றிய தன்னம்பிக்கை வெற்றி பெறும் என்ற வகையில் மீள உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதாகும். உடன்பாடான தன்மை கொண்ட பெற்றோர் தமது குடும்பத்தில் எதிர் மறையானவைகளை அனுமதிக்க மாட்டார்கள். அவர்கள் அடிப்பதில்லை, ஒரு போதும் கத்தி பேச மாட்டார்கள். இல்லை என்று சொல்வதானால் ஒரு புன்முறுவலுடன் தான் அதைச் சொல்வார்கள். ஏதாவதொன்று அபாயகரமானதாக இருந்தால் மட்டுமே அதுவும் மிக அரிதாக 'இல்லை' ,'வேண்டாம்' என்பதை வெளிப்படுத்துவார்கள்.

### ஒழுங்கு விதிகள்

எல்லாருக்கும் நன்மை விளைவிக்கும் வகையில் ஒன்றாக வாழ வேண்டும் என்ற வகையிலேயே ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. கவனித்து ஒழுக வேண்டிய ஒரு விதிமுறை என்னவென்றால்: நீங்கள் எவ்வாறு செய்யப்பட விரும்புகிறீர்களோ அவ்வாறே பிறருக்கும் செய்யுங்கள் என்பதாம்.

ஏதோ ஒன்று உங்களுக்கு நடக்கக் கூடாது என்று கருதுவீர்களானால் அதை பிறருக்கு நீங்கள் செய்யாதீர்கள். இது பெற்றோர் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல முக்கியமாக வளர்ந்தவர்களின் உறவு முறையிலும் பிரதான மானதாகும்.

நல்ல முறையில் வளர்க்கப்படும் குழந்தையானது 12 வயதாகும் போது எது நல்லது எது கெட்டது என்பதை அறிந்திருக்கும். அதனால் அதன் சொந்த ஆய்வுகளுக்கான பாதையில் செல்ல நம்பிக்கையுடன் அனுமதிக்கலாம். அது தனக்குரியதைத் தெரிவு செய்து தமது சொந்த தவறுகளை உணர்ந்து போகும் வழியில் பலவற்றை கற்றுக் கொள்ளும். இது தனிப்பட்ட பயணமாக இருக்கும். பெற்றோர் வழி காட்டிகளாய் இருப்பதில்லை. அவர்கள்

> ஏதோ ஒன்று உங்களுக்கு நடக்கக் கூடாது என்று கருதுவீர்களானால் அதை பிறருக்கு நீங்கள் செய்யாதீர்கள். இது பெற்றோர் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல முக்கியமாக வளர்ந்தவர் களின் உறவு முறையிலும் பிரதான மானதாகும்.

அபிப்பிராயத்தைக் கூறலாம். அவ்வளவுதான் . அது சரியாகவும் இருக்கலாம், தவறானதாகவும் இருக்கலாம். பிள்ளைகளைப் பொறுத்தவரை பெற்றோருக்கு ஸ்கேட் மோர்டிங் பற்றித் தெரியாது. எதிர்கால பகட்டுக்காரிகள் பற்றி தெரியாது.

எதிர்கால இசை ஏன் பால்வினை பற்றியும் தெரியாது. பெற்றோர் கடந்த காலத்திலிருந்து வருபவர்கள். மரபுகள் மற்றும் மாற்றங்களைக் கண்டு அஞ்சுகின்ற கூடுகளில் வாழ்பவர்கள் பால்வினையானது விலக்கப்பட்டுள்ள பெரிய விடயம். அன்பு, நட்பு, மதிப்பு மற்றும் அடிப் -படை உறவுகளில் இருந்து ஒதுக்கி விடப்படுகின்றது. இதன் விளைவு ஆண்கள் விரக்திக்குள்ளாகிறார்கள், பெண்கள் சலிப்புக்கும் திருப்தியின்மைக்கும் ஆளாகின்றார்கள்.

பால் வினையானது ஆண்களைக் குழப்பத்துக்குள்ளாக்குகின்றது. பெண்களைப் புரிந்து கொள்கிறார்கள் இல்லை. அதே போல் பெண்களும் ஆண்களைப் புரிந்து கொள்கிறார்களில்லை.

பெண்களின் உணர்ச்சிகரமான தேவைகளை யாரும் ஆண்களுக்கு விளங்கப்படுத்துவதில்லை. ஆண்களுக்குத் தேவைப்படும் உடல் ரீதியான தேவைகளைக் கையாள பெண்களுக்குத் தெரிவதில்லை.

இதற்கான தீர்வு என்னவென்றால் இவை யாவும் 13, 14.15 வயதானவர்களைச் சுற்றியே நிகழ்கின்றன. இளம் பெண்களும் .பையன்களும் ஒன்று சேர்ந்து கலந்துரையாட வேண்டும், சந்திக்க வேண்டும், யோசனைகளை , வாழ்க்கை முறைகளை, இசைகளை விவாதிக்க வேண்டும், நட்பினை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

### அடுத்த தலைமுறைக்கு விட்டுக் கொடுங்கள்.

பதின்மவயதினர் தமது உடல்கள், மனங்கள், முக்கியமாக மற்றவர்களின் மனங்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். இதற்கு திரைப் படங்கள், நூல்கள் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும்.

சமூகத்தை நீங்கள் மாற்றி அமைக்க விரும்புவீர்களானால் அடுத்த தலைமுறையினருக்கு இடமளியுங்கள். அவர்களுக்கு சுயாதீனம் அளியுங்கள். உரிமம் வழங்குவதைப் பற்றி நாம் கதைக்கவில்லை. சுயாதீனத்துடன் பொறுப்புணர்வு வந்து சேரும்.

இப்போதைய சமூக துஷ்பிரயோகமானது கடந்த கால நம்பிக்கைகளில் இருந்து வந்தவையே. இன்றுள்ள நடத்தைகள் குறித்து நாம் ஒன்றும் செய்ய முடியாது. நாம் செய்யக்கூடிய நல்ல காரியம் என்னவென்றால் சிறுவர்களில் நம்பிக்கை வைக்க ஆரம்பிப்பதுதான். அதன் மூலம் வருங்காலத்துக்கான நல்ல பணிகளை அவர்கள் செய்யும் படியாக உதவலாம். எதுவானாலும் அவர்கள் தமது மூத்தவர்களை விட எதனையும் மோசமாகச் செய்துவிடமாட்டார்கள்.

இவை எல்லாவற்றையும் சமூகம் விளங்கிக் கொண்டுவிட்டதா என்பதை அறிவதற்கு ஒரு சோதனை இருக்கிறது.

இளைஞர்கள் விசித்திரமான தலைமுடி அலங்காரங்களைச் செய்து கொள்வதையும் உடல் ஸ்டைல் மற்றும் உடை மாற்றங்களை செய்து கொள்வதையும் அவதானிக்க நேர்ந்ததால் நீங்கள் நினைப்பது சரியாக இருக்கலாம். இளைஞர் கழகங்கள், இரவு விடுதிகள், மதுபான சாலைகள் மற்றும் படக் கொட்டகைகள் புதிதாகத் தோன்ற ஆரம்பித்திருந்தால் நீங்கள் சரியாகத்தான் அவதானிக்கிறீர்கள் என்பதாகும்.

*பிரபல உளவியல் நிபுணர் கலாநிதி டொரத்திறோல் கூற்றின்படி: 99 வீதமான துன்பங்கள் பூமி அதிர்வு போன்ற இயற்கை அனர்த்தங்களால் நிகழ்வதில்லை. எம்மிடமுள்ள எண்ணங்களால்தான் அவை ஏற்படுகின்றன. இந்த எண்ணங்கள் முற்றிலும் உண்மை என்று நீங்கள் கருதும்போது துன்பத்தை அனுபவிக்கிறீர்கள். அதனை பிறர் மீதும் திணித்து அவர்களையும் துன்பமுறச் செய்கிறீர்கள். ஆனால் இந்த வேறு எண்ணங்கள் எல்லாம் எம்மால் உருவாக்கிக் கொள்ளப் பட்டவை என்பதை விளங்கிக் கொள்வோமானால் அவைகளை மாற்றிக் கொள்ளவும் நாம் சுயாதீனம் உடையவர்கள் என்பதை உணரலாம்.*


*(முற்றும்)*

# பிராயச்சித்தம்

ஒரு ஞானியிடம் ஒருவன் "சுவாமி! நான் ஒருவர் மீது அபாண்டமாகப் பழி சுமத்தி விட்டேன். இப்போது என் மனச்சாட்சி உறுத்துகிறது. அதற்கு ஏதாவது பிராயச்சித்தம் கூறுங்கள்" என்று வேண்டினான். "நாளை காலையில் ஒவ்வொரு வீட்டின் முன்பும் சிறிதளவு பஞ்சை வைத்துவிட்டு வா" என்றார் ஞானி. அவ்வாறே அவன் செய்துவிட்டு வந்தான். "இப்போது என் பாவம் தொலைந்திருக்கும் அல் லவா?" என வினவினான். "நீ இப்போது இன்னொரு வேலை செய். நீ வைத்துவிட்டுவந்தஅந்தப்பஞ்சையெல்லாம் திரும்பக் கொண்டு வா!" என்றார் ஞானி. சற்று நேரம் கழித்து வந்தவன் "சுவாமி! அந்தப் பஞ்செல்லாம் காற்றில் பறந்துபோய்விட்டதே" என்றான். ஞானி கூறினார் "மகனே வில்லிலிருந்து விடுபட்ட அம்பையும், வாயிலிருந்து வெளி வந்த வார்த்தையையும் திரும்பப் பெற முடியாது. உன் பழிச் சொற்களும் இப்பஞ்சு போல் தான் திரும்ப வராது கவலைப் படாதே! ஆனால் மனமார வருந்தி, இறைவனிடம் மன்னிப்பு கேள். அவரது எல்லையற்ற கருணை, காற்று பஞ்சை அடித்துப் போவது போல் உன் பாவத்தைப் போக்கி விடும்!" என்றார்.

ஒரு இந்து பிறர் இல்லாதபோது பிறரைப் பற்றி வசைபாடுவது மாபெரும் பாவமாகும். குறிப்பாக ஆன்ம சாதனை செய்பவன் இந்த விடயத்தில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். பிறரைப் பற்றி புறஞ்சொல்வது தன் நாவால் பிறர் பாவத்தை கழுவுவதற்கு ஒப்பானது. இது ஆன்ம ஈடேற்றத்தை ஒரு போதும் தராது.

> பிறர் இல்லாத போது பிறரைப் பற்றி வசைபாடுவது மாபெரும் பாவமாகும். பிறரைப் பற்றி புறஞ்சொல்வது தன் நாவால் பிறர் பாவத்தை கழுவுவதற்கு ஒப்பானது. இது ஆன்ம ஈடேற்றத்தை ஒரு போதும் தராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(நாசவேலைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு 1964, ஏப்ரல் 20ஆம் திகதி தென்னாபிரிக்க உச்ச நீதி மன்றத்தில் நடந்த விசாரணையின் போது நெல்சன் மண்டேலா ஆற்றிய உரையின் சுருக்கமான மொழிபெயர்ப்பு)*

இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட முதல் நபர் நான்தான். அனுமதி இல்லாமல் நாட்டை விட்டுச் சென்றது, 1961ஆம் ஆண்டு மே மாதம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்படி மக்களைத் தூண்டியது ஆகிய காரணங்களுக்காகக் குற்றவாளியென்று அறிவிக்கப்பட்டு, கடந்த ஐந்து ஆண்டுகளாகச் சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறேன்.

ஆரம்பத்திலேயே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்: தென்னாபிரிக்காவில் நடைபெறும் போராட்டங்களின்பின்னணியில்அயல் நாட்டவர்களும் கம்யூனிஸ்ட்டுகளும் இருக்கிறார்கள் என்று அரசு சொல்வதை முற்றிலும் நான் மறுக்கவில்லை. அதேநேரத்தில், ஒரு தனி நபராகவும் எனது மக்களின் தலைவனாகவும் நான் எதைச் செய்திருந்தாலும் அவை, தென்னாபிரிக்காவில் எனக்கு நேர்ந்த அனுபவங்களாலும் ஆபிரிக்கன் என்ற எனது உணர்வின் அடிப்படையினாலும் நடந்தவையே அன்றி, ஏதோ அந்நியர்களின் தூண்டுதலால் நிகழ்த்தப்பட்டவை அல்ல.

டிரான்ஸ்கேயில் எனது இளம் பருவத்தில் எங்கள் இனக் குழுவின் பழங்காலப் பெருமைகளை எல்லாம் கதைகளாகக் கேட்டு வளர்ந்தவன் நான். எங்கள் மூதாதையர் தங்கள் மண்ணைக் காப்பதற்காக ஈடுபட்ட போர்களைப் பற்றி அந்தக் கதைகளுக்கிடையே எங்களுக்குச் சொல்லப்பட்டது. இதையெல்லாம் கேட்ட பிறகு, எனது மக்களுக்காகப் பணியாற்றவும் அவர்களின் விடுதலைக்காகப் பாடுபடவும் வாழ்க்கை எனக்கு வாய்ப்பு வழங்குமென்று நம்பினேன். இதுதான் எனக்கு உந்துசக்தியாக இருந்து என்னைச் செலுத்தியது. நான் செய்ததாக இந்த வழக்கில் சாட்டப்படும் குற்றங்களுக்கெல்லாம் காரணம் இதுதான்.

## ஏன் வன்முறை?

இதையெல்லாம் சொன்ன பிறகு, வன்முறை என்ற விடயத்தைப் பற்றியும் நான் சொல்லியாக வேண்டும். நாசவேலைகளுக்குத் திட்டம் தீட்டியது நான்தான் என்பதை நான் மறுக்கப்போவதில்லை. கண்மூடித்தனமாகவோ வன்முறையின் மீதுள்ள விருப்பத்தாலோ நான் இந்தத் திட்டத்தைத் தீட்டவில்லை. வெள்ளையர்களால் என் மக்கள் நெடுங்காலமாக அனுபவித்துவந்த கொடுங்கோன்மை, சுரண்டல், அடக்குமுறை ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்டிருந்த அரசியல் சூழ்நிலையை நிதானமாகவும் ஆழ்ந்தும் மதிப்பிட்ட பிறகே நான் இந்தத் திட்டத்தைத் தீட்டினேன்.

உம்கோண்டோவைத் (உம்கோண்டோ- ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் ஆயுதப் படை) தோற்றுவித்தவர்களில் நானும் ஒருவன். அந்த அமைப்பை நாங்கள் தோற்றுவித்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, ஆபிரிக்க மக்கள் ஒரு கட்டத்தில் வன்முறைப் போக்கைக் கைக்கொள்வது தவிர்க்க முடியாததாக ஆகிவிட்டது; மக்களின் உணர்வுகளுக்குச் சரியான பாதை வகுத்துக்கொடுக்கும் வகையிலான தலைமை இல்லையென்றால், வன்முறை வெடித்து நாடெங்கும் உள்ள வெவ்வேறு இனங்களுக்கு இடையில் பெரும் பிளவும் விரோதப் போக்கும் ஏற்பட்டுவிடும் சூழல்வேறு. இரண்டாவதாக, வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெற வன்முறையைத் தவிர வேறெந்த வழியும் ஆபிரிக்க மக்களுக்கு இல்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம்.

வெள்ளை ஆதிக்கத்துக்கு எதிரான, சட்டபூர்வமான எதிர்ப்புகள் அனைத்துக்கும் வழியே இல்லாத வகையில் சட்டம் கதவடைத்துவிட்டது. எங்களின் இழிநிலையை நிரந்தரமாக ஏற்றுக்கொள்வது அல்லது அரசுக்கு எதிராகச் செயற்படுவது என்ற நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டோம். இந்த நிலையில், சட்டத்தை மீறுவது என்ற முடிவுக்கு நாங்கள் வந்தோம். வன்முறைக்கு வழிவகுத்துவிடாதபடி சட்டத்தை நாங்கள் மீறினோம். இந்த வழிமுறையும் சட்டத்தால் ஒடுக்கப்பட்ட பின்னர், அரசு தன் எதிர்ப்பாளர்களை நசுக்குவதில் ஈடுபட்ட போதுதான் வன்முறைக்கு வன்முறையால் பதிலடி கொடுப்பதென்ற முடிவுக்கு நாங்கள் வந்தோம்.

ஆனால், நாங்கள் தேர்ந்தெடுத்த வன்முறையைத் தீவிரவாதம் என்று சொல்லிவிட முடியாது. அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அகிம்சையையும் சமரசத்தையும் வழிமுறையாகக் கொண்டிருந்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் பின்னணியிலிருந்து வந்தவர்கள்தான் நாங்கள். தென்னாபிரிக்கா ஒரு குழுவுக்கு மட்டும் உரியதல்ல என்றும் அதில் வாழும் அனைவருக்கும், அவர்கள் கறுப்பினத்தவரோ வெள்ளையரோ, அது சொந்தம் என்றும் நாங்கள் நம்புகிறோம். இனங்களுக்கிடையில் போர் மூள்வதை நாங்கள் விரும்பவில்லை. எப்பாடுபட்டாவது அதைத் தவிர்க்கவே நாங்கள் முயன்றோம்.

### ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ஆ.தே.கா.)

தென்னாபிரிக்கச் சட்டத்தாலும் உள்ளூர் நிலச் சட்டத்தாலும் ஒடுக்கப்பட்டிருந்த ஆபிரிக்க மக்களின் உரிமைகளைக் காப்பதற்காக 1912ஆம் ஆண்டு ஆ.தே. காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. 1949 வரை சட்டபூர்வமான போராட்டத்திலேயே அது எப்போதும் முன்மொழிந்து வந்திருக்கிறோம். ஆனால், 50 ஆண்டுகளின் அகிம்சைப் போராட்டம் மேலும் மேலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் சட்ட அமைப்பையும் கிட்டத்தட்ட அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்ட நிலையையும் நோக்கி எங்களைத் தள்ளியது. ஆ.தே.காங்கிரஸின் தலைவர்களாகிய நாங்கள், வன்முறையைத் தவிர்த்து விட்டு, அமைதியான முறையில் போராடும்படி மக்களுக்கு அறிவுறுத்தினோம். எனினும், அகிம்சைக் கொள்கையில் எங்கள் தொண்டர்கள் நம்பிக்கை இழக்க ஆரம்பித்து தீவிரவாதப் போக்கைக் கடைப்பிடிக்கும் எண்ணங்களை வளர்த்துக்கொள்ள ஆரம்பித்தனர்.

உள்நாட்டுப் போரைத் தவிர்ப்பது என்ற எண்ணமே எங்கள் அனைவருடைய சிந்தனைகளையும் வெகு காலமாக ஆக்கிரமித்திருந்தது. ஆனால், வன்முறைப் பாதையைக் கடைப்பிடிப்பது என்ற முடிவை எடுத்த போது, அது போன்ற ஒரு போரை நாங்கள் எதிர்கொள்ளும் நாள் வரலாம் என்பதை உணர்ந்தோம். வன்முறையின் நான்கு வடிவங்கள் அப்போது எங்கள் முன்னால் இருந்தன. நாசவேலைகள், கெரில்லா போர்முறை, தீவிரவாதம், வெளிப்படையான கிளர்ச்சி. இவற்றுள் முதல் வகையைத் தேர்ந்தெடுப்பது என்றும் வேறுவிதமான முடிவுக்குப் போகும்வரை இந்த வகைப் போராட்டத்தின் எல்லாவிதமான சாத்தியங்களையும் பார்த்து விடுவது என்றும் முடிவெடுத்தோம்.

> எல்லாவற்றுக்கும் மேலாக, சரிசமமான அரசியல் உரிமைகள் எங்களுக்கு வேண்டும், ஏனெனில், அவை இல்லாவிட்டால், எங்கள் ஊனங்களெல்லாம் நிரந்தரமாகிவிடும். இந்த நாட்டில் உள்ள வெள்ளையர்களுக்கு இது ஏதோ கலகச் சிந்தனைபோல் தோன்றக் கூடும். இதனால்தான் ஜனநாயகத்தைக் கண்டு வெள்ளையர்களுக்கு அச்சம்.



### நான் கம்யூனிஸ்ட் அல்ல

ஆபிரிக்கத் தேசியவாதம்தான் ஆ.தே.காங்கிரஸின் ஒரே சித்தாந்தம். வெள்ளையர்களைக் கடலில் தள்ளுங்கள் என்ற முழக்கம் வெளிப்படுத்தும் கோட்பாடும் ஆபிரிக்க தேசியவாதமும் ஒன்றல்ல. ஆபிரிக்க மக்களுக்குச் சுதந்திரம் கிடைக்கப்பெறுவதும், அவர்களுடைய சொந்த மண்ணின் மீதான உரிமை நிலை நாட்டப்படுவதும்தான் ஆபிரிக்கத் தேசிய வாதம். ஆ.தே.காங்கிரஸால் உருவாக்கப்பட்ட அரசியல் ஆவணங்களில் மிக முக்கியமானது, அது உருவாக்கிய விடுதலைப் பிரகடனம்தான். அது எந்த வகையிலும் ஒரு சோஷலிச நாட்டுக்கான வரைபடம் அல்ல.

நிலங்களை மறுபகிர்மானம் செய்ய அது கூக்குரல் கொடுக்கிறதே தவிர, அவற்றை நாட்டுடைமையாக்குவதற்காக அல்ல. சுரங்கங்கள், வங்கிகள், ஏகபோகம் நிலவும் தொழில் துறைகள் போன்றவை நாட்டுடைமையாக்கப்படுவதற்கு அது வகை செய்கிறது. இதுபோன்ற நாட்டுடைமையாக்கம் இல்லையென்றால், அதிகாரப் பரவலாக்கத்தை மீறியும் குறிப்பிட்ட ஓர் இனத்தின் ஆதிக்கம் நீடிப்பதைத் தடுக்க முடியாமல் போய்விடும். வர்க்கபேதத்தைக் கோடிட்டுக்காட்டுவது கம்யூனிஸ்ட் கட்சி, ஆ.தே. காங்கிரஸோ வர்க்கங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முயல்வது. இதுதான் இரண்டு கட்சிகளுக்கும் இடையேயுள்ள முக்கியமான வேறுபாடு. ஆ.தே.காங்கிரஸுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே அவ்வப்போது ஒத்துழைப்பு இருந்து வந்தது உண்மைதான். இந்த ஒத்துழைப்பு எங்களின் பொது நோக்கத்தை, அதாவது வெள்ளையர் ஆதிக்கத்தை அகற்றுவது என்ற நோக்கத்தைச் சுட்டிக்காட்டுகிறதே தவிர, இருவரின் சித்தாந்தமும் ஒன்றுதான் என்று சுட்டிக்காட்டவில்லை. ஆபிரிக்கத் தேசப்பற்றாளன் என்றே என்னை எப்போதும் கருதி வந்திருக்கிறேன். வர்க்க பேதமற்ற சமுதாயம் என்னும் சிந்தனையால் இன்று நான் கவரப்பட்டிருக்கி றேன். மார்க்ஸிச வாசிப்பும், முந்தைய ஆபிரிக்கச் சமூக அமைப்புகள் மேல் எனக்கு இருந்த வியப்பும்தான் இந்த ஈர்ப்புக்குக் காரணம். உற்பத்தியின் முக்கியமான சாதனமாக இருந்த நிலம் என்பது அதன் மக்களுக்குத்தான் அப்போது சொந்தம். அப்போது ஏழைகளும் இல்லை, பணக்காரர்களும் இல்லை, எந்த விதமான சுரண்டலுமில்லை.

ஏற்கெனவே, நான் குறிப்பிட்டிருப்பது போல் மார்க்ஸிசம் என்மேல் தாக்கம் ஏற்படுத்தியிருப்பது உண்மைதான். எனக்கு மட்டுமல்ல, உலக நாடுகளின் தலைவர்கள் பலருக்கும் இந்தத் தாக்கம் இருந்திருக்கிறது. காந்தி, நேரு, ங்க்ரூமா (கானா நாடு), நாசர் (எகிப்து) போன்ற தலைவர்களெல்லாம் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். முன்னேறிய நாடுகளை எங்கள் மக்கள் எட்டிப்பிடிப்பதற்கும் அவர்களின் கடுமையான வறுமையைப் போக்கவும் வகைசெய்யும் சோஷலிசத்தின் ஒரு வடிவத்தை நாங்கள் எல்லாரும் ஏற்றுக்கொள்கிறோம். இதனாலெல்லாம் நாங்கள் கம்யூனிஸ்ட்டுகள் என்று சொல்லிவிட முடியாது.

# கறுப்பர்களும் மனிதர்களே...

ஈடுபட்டுவந்தது. ஆபிரிக்கர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு அமைதியான முறையில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும் முழுமையான அரசியல் உரிமைகளை நோக்கி ஆபிரிக்கர்கள் சீராக நடைபோட முடியும் என்ற நம்பிக்கையிலும் அரசாங்கத்துக்கு அது தனது பிரதிநிதிகளை அனுப்பிவைத்தது. ஆனால், வெள்ளையரின் அரசாங்கங்கள் கொஞ்சம்கூட அசைவதாகவே இல்லை. ஆபிரிக்கர்களின் உரிமைகள் அதிகமாவதற்குப் பதிலாகக் குறைந்துகொண்டே வந்தன.

எனது தலைவரும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான லுட்டுலி இப்படிச் சொன்னார்: திறக்கவே திறக்காத வகையில் மூடப்பட்டிருந்த கதவை, பொறுமையுடனும் கண்ணியத்துடனும் தட்டுவதில் என் ஆயுளில் 30 ஆண்டுகளை நான் வீணடித்திருக்கிறேன். மிதவாதத்தின் பலன்கள்தான் என்ன? நமது உரிமைகளையும் முன்னேற்றத்தையும் நசுக்கும் விதத்திலான சட்டங்களைத்தான் கடந்த 30 ஆண்டுகளாக நாம் பார்த்து வந்திருக்கிறோம். கடைசியில் நமக்கென்று எந்த உரிமையும் இல்லாத நிலைதான் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

தொடர்ந்து போராடியாக வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. போராட்டத்துக்கு மாற்று, முழுமையான அடிபணிதல்தான். ஆ.தே.காங்கிரஸைச் சேர்ந்த நாங்கள் நிறப்பிரிவினையற்ற ஜனநாயகத்தையே

### கறுப்பர்களும் மனிதர்களே

அடிப்படையில், ஆபிரிக்க வாழ்க்கையின் அடையாளங்கள் என்று ஆகிவிட்ட இரண்டு அம்சங்களை எதிர்த்துதான் நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரிடுகிறோம். சட்டத்தால் நன்றாக நிலைபெற்றுவிட்ட அவை விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பு. ஏழ்மையும் மனித உரிமையின்மையும்தான் அந்த அம்சங்கள். இதை எங்களுக்குப் போதிப்பதற்கு கம்யூனிஸ்ட்டுகள்தான் வர வேண்டும் என்ற அவசியம் இல்லை.

ஆபிரிக்காவிலேயே பணக்கார நாடு தென்னாபிரிக்காதான். முற்றிலும் எதிரெதிர் துருவங்களும் அசாதாரணமான வேறுபாடுகளும் காணப்படும் நாடும் இதுதான். உலகிலேயே மிகவும் சொகுசான வாழ்க்கை முறையை இங்குள்ள வெள்ளையர்கள் அனுபவிக்கும் அதே வேளையில், ஆப்பிரிக்கர்கள் ஏழ்மையிலும் துயரத்திலும் உழல்கின்றனர். வெள்ளையர்களால் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் யாவும் இந்த நிலையைத் தொடர்ந்து நீடிக்கச் செய்பவையாகவே இருக்கின்றன என்பதுதான் ஆபிரிக்கர்களின் முறையீடு.

வெள்ளை ஆதிக்கத்தின் நேரடி விளைவுதான் ஆபிரிக்கர்கள் அனுபவிக்கும் இழிநிலை. வெள்ளை ஆதிக்கம் என்பது கருப்பர்கள் தாழ் வானவர்கள் என்பதையே குறிக்கிறது.

தென்னாபிரிக்காவில் கீழான வேலைகள் என்பவை ஆபிரிக்கர்களால் மட்டுமே செய்யப்படுகின்றன. எதையாவது தூக்கிச் செல்ல வேண்டும் என்றாலோ எதையாவது சுத்தம் செய்ய வேண்டு என்றாலோ ஒரு வெள்ளையர் சுற்றும்முற்றும் யாராவது கறுப்பினத்தவர் தென்படுகிறாரா என்றுதான் பார்ப்பார், அவர் தனது வேலையாளாக இல்லாவிட்டாலும் கூட அப்படித்தான் நடக்கிறது. இது போன்ற அணுகுமுறையால்தான் வெள்ளையர்கள் ஆபிரிக்கர்களை ஏதோ தனிவகை ஜந்து என்ற விதத்தில் பார்க்கிறார்கள்.

கறுப்பர்களுக்கும் குடும்பம் இருக்கும் என்றோ அவர்களுக்கும் உணர்வுகள் இருக்கும் என்றோ, வெள்ளையர்களைப் போலவே அவர்களுக்கும் காதல் ஏற்படும் என்றோ வெள்ளையர்கள் உணர்வதில்லை. வெள்ளையர்கள் தங்கள் மனைவியருடனும் குழந்தைகளுடனும் இருக்க விரும்புவதைப் போலவே கறுப்பர்களும் விரும்புவார்கள் என்று அவர்கள் உணர்வதில்லை. தங்கள் குடும்பத்தை நல்லபடி நடத்தவும், உணவு, துணிமணிகள் போன்ற தேவைகளை நிறைவேற்றவும் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பவும் தேவையான அளவுக்கு சம்பாதிக்கக் கருப்பர்கள் விரும்புவார்கள் என்று வெள்ளையர்கள் உணர்வதில்லை.

### கோரிக்கைகள்

ஆபிரிக்கர்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்தத் தேவையான அளவு அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும். அரசாங்கம் சொல்லும் வேலைகளைத்தான் ஆபிரிக்கர்கள் செய்ய வேண்டும் என்ற நிலை இல்லாமல், ஆபிரிக்கர்கள் எந்த வேலைகளைச்செய்யவிரும்புகிறார்களோ அந்த வேலைகளை அவர்கள் விரும்பும் பிரதேசங்களில் செய்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். தாங்கள் வேலை பார்க்கும் பிரதேசங்களில் இடங்கள் வாங்க அனுமதிக்கப்பட வேண்டுமே தவிர, வாடகை வீடுகளில்தான் குடியிருக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படக்கூடாது.

பொதுச் சமூகத்தின் ஒரு பங்காகவே ஆபிரிக்கர்கள் இருக்க வேண்டுமே தவிர, சேரிகளுக்குள் அவர்களை ஒதுக்கிவிடக்கூடாது. ஆபிரிக்கப் பெண்கள் தங்கள் கணவர்களுடன் வாழ அனுமதிக்கப்பட வேண்டுமே ஒழிய, காலமெல்லாம் அவர்கள் அபலைகளாகவே ஆக்கப்படக்கூடாது. ஆபிரிக்கர்கள் தங்கள் நாட்டுக்குள் எங்கு வேண்டு மானாலும் பயணிக்க அனுமதிக்கப்பட வேண்டும். மொத்தத் தென்னாபிரிக்காவிலும் ஆபிரிக்கர்களுக்கு உரிய பங்கு கிடைக்க வேண்டும். சமூகப் பாதுகாப்பும், சமூகப் பங்கேற்பும் அவர்களுக்குத் தரப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சரிசமமான அரசியல் உரிமைகள் எங்களுக்கு வேண்டும். ஏனெனில், அவை இல்லாவிட்டால், எங்கள் ஊனங்களெல்லாம் நிரந்தரமாகி விடும். இந்த நாட்டில் உள்ள வெள்ளையர்களுக்கு இது ஏதோ கலகச் சிந்தனைபோல் தோன்றக் கூடும். அதனால்தான் ஜனநாயகத்தைக் கண்டு வெள்ளையர்களுக்கு அச்சம் ஏற்படுகிறது. இன ஒற்றுமைக்கும் எல்லோருக்குமான சுதந்திரத்துக்கும் உத்தரவாதம் அளிக்கக் கூடிய ஒரே பாதையின் குறுக்கே அந்த அச்சம் தடையாக நின்றுவிடக் கூடாது.

எல்லோருக்குமான வாக்குரிமை என்பது இன ஆதிக்கத்துக்கு வழிவகுத்துவிடும் என்பது உண்மையல்ல. நிறங்களை அடிப்படையாகக் கொண்ட அரசியல் பிளவு என்பது, முழுக்க முழுக்கச் செயற்கையானதே. இது மறைந்துபோகும்போது ஒரு நிறத்தின் மீது இன்னொரு நிறம் செலுத்தும் ஆதிக்கமும் மறைந்துவிடும். அரை நூற்றாண்டாக நிறவெறியை எதிர்த்தே ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் போராடியிருக்கிறது. அது வெல்லும்போது தனது கொள்கையை மாற்றிக்கொள்ளாது.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் போராட்டம் என்பது இதுதான். அவர்களின் போராட்டம் என்பது உண்மையில் தேசம் முழுமைக்குமானது. இது ஆபிரிக்க மக்கள் தங்கள் துன்பங்கள், அனுபவங்களின் அடிப்படையில் முன்னெடுத்த போராட்டம். வாழ்வதற்கான உரிமை வேண்டிய போராட்டம்.

என் வாழ்நாள் முழுவதும் ஆபிரிக்க மக்களின் போராட்டத்துக்காகவே என்னை அர்ப்பணித்திருக்கிறேன். வெள்ளை ஆதிக்கத்துக்கு எதிராக நான் போராடியிருக்கிறேன், கறுப்பர் ஆதிக்கத்துக்கு எதிராக நான் போராடியிருக்கிறேன். எல்லோரும் ஒற்றுமையாக வாழக்கூடிய, எல்லோருக்கும் சமமாக வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய, ஜனநாயகபூர்வமான, சுதந்திரமான சமூகம் என்ற லட்சியத்தையே நான் போற்றி வந்திருக்கிறேன். நான் அடைய நினைப்பது இந்த லட்சியத்தைத்தான்; நான் வாழ நினைப்பது இந்த லட்சியத்துக்காகத் தான். தேவை என்றால், என் உயிரையும் துறக்க நினைப்பது இந்த லட்சியத்துக்காகத்தான்.



> எல்லாரும் ஒற்றுமையாக வாழக்கூடிய, எல்லோருக்கும் சமமாக வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய, ஜனநாயகபூர்வமான, சுதந்திரமான சமூகம் என்ற லட்சியத்தையே நான் போற்றி வந்திருக்கிறேன். நான் அடைய நினைப்பது இந்த லட்சியத்தைத்தான்; நான் வாழ நினைப்பது இந்த லட்சியத்துக்காகத் தான். தேவை என்றால், என் உயிரையும் துறக்க நினைப்பது இந்த லட்சியத்துக்காகத்தான்.

# உன்னத நாயகன்

க.ஆரோக்கியநாதன்



உண்மையான தலைவர்கள் தங்கள் மக்களுக்காக தங்களது அனைத்து சுதந்திரங்களையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டும்."

இப்படிச் சொன்னவர் வேறு யாருமல்லர்; இந்த இலக்கணப்படியே வாழ்ந்து காட்டிய நெல்சன் மண்டேலாதான்!

தன் நாட்டு மக்கள் அனைவரும் சம வாய்ப்புகளோடு சமஉரிமை பெற்று வாழ வேண்டும் என்பதற்காக மண்டேலா 27 ஆண்டுகள் சிறையில் இருந்தார். அவரது சிறைவாசமே போராட்டமாகத் தொடர்ந்தது. மக்களுக்கான போராட்டம். உலகில் நிறவெறிக்கு இடமில்லை என உணர்த்திய போராட்டம். அகிம்சை ஆயுதத்தின் மூலம் ஆதிக்க வெறியை அமைதியாகச் சாய்க்கலாம் என உணர்த்திய போராட்டமாகவும் அது அமைந்தது.

1990ஆம் ஆண்டு அவர் சிறையில் இருந்து விடுதலை ஆனபோது, அது மனிதகுலத்தின் விடுதலையாகக் கொண்டாடப்பட்டது. அவரது கைவிலங்குகள் அகன்றபோது தென் ஆபிரிக்காவில் கறுப்பர்கள் கைகளில் இருந்தும் இனப்பாகுபாடு எனும் விலங்கு அகன்றது.

1994ஆம் ஆண்டு அவர் தென் ஆபிரிக்காவின் முதல் கறுப்பின அதிபரானபோது, நினைத்துப் பார்க்க முடியாத வரலாற்றுச் சாதனையாகவும் அது அமைந்தது. முதல் முறை அதிபரான பிறகு இரண்டாம் முறை பதவிக்கு வராமல் இருந்தபோதும் மண்டேலா மீண்டும் ஒரு முறை முன்னுதாரணமாக மாறினார்.

எல்லா விதங்களிலும் மண்டேலாவின் வாழ்க்கை முன்னுதாரணமானதுதான். இந்த மகத்தான மனிதரின் வாழ்க்கை 1918ஆம் ஆண்டு ஆரம்பமானது. தென் ஆபிரிக்காவின் கிழக்கு முனையில் உள்ள வேசோ எனும் கிராமத்தில் மண்டேலா பிறந்தார். ஹோசா மொழி பேசிய தெம்பு இனக்குழுவில் அவர் தந்தை குழுவின் தலைவருக்கு ஆலோசகராக இருந்தார். மண்டேலாவின் இயற்பெயர் ரோலிலாலா மண்டேலா. பின்னர் ஞானஸ்தனத்தின்போது ஆசிரியர் அவருக்கு நெல்சன் எனும் ஆங்கிலப் பெயர் வைத்தார்.

மண்டேலாவுக்கு 9 வயதானபோது அவரது தந்தை இறந்துவிட்டார். குழுவினத் தலைவர் அவரை தத்தெடுத்து வளர்த்தார். கிராமத்தில் இருந்து மாகாணத் தலைநகருக்கு குடிபெயர்ந்தவர், வெஸ்லியன் மிஷன் பள்ளியில் படித்தார். இங்கு ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர், தடகளம் மற்றும் குத்துச்சண்டையிலும் புலியாக இருந்தார்.

இதனிடையே, மண்டேலாவுக்கு திருமண ஏற்பாடு நடக்கவே, அதில் இருந்து தப்பிக்க அவர் தலைநகர் ஜோகன்னஸ்பர்க்கிற்கு வந்துவிட்டார். அப்போது அவருக்கு 23 வயது. இரண்டு ஆண்டுகள் கழித்து விட்ஸ் வாட்டரண்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சட்டம் பயின்றார். தலைநகர் வாசம்தான் அவருக்கு தனது நாட்டில் நிலவிய வெள்ளையர் ஆதிக்கத்தையும், நிறவெறியின் கொடூரத்தையும் உணர்த்தியது. இதன் பயனாக அரசியலில் ஆர்வம் ஏற்பட்டு, ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் சேர்ந்தார். பின்னர் இக்கட்சியின் இளைஞர் பிரிவையும் நிறுவினார். 1944இல் மண்டேலா எவ்லின் மாசே என்பவரை திருமணம் செய்து கொண்டார். 1944இல் நடந்த இந்தத் திருமணம் 1958இல் முறிந்துவிட்டது.

1952இல் மண்டேலா ஆலிவர் டாம்போ எனும் நண்பருடன் சேர்ந்து



வழக்குரைஞராக தொழில் ஆரம்பித்தார். இருவருமாக சேர்ந்து நிறவெறிக்கு எதிராகவும் போராடினர். வெள்ளையர்கள் மட்டுமே உறுப்பினராக இருந்த ஆளும் தேசிய கட்சிக்கு எதிராக அவர் உறுதியுடன் போராடினார்.

1956இல் அவர் மீது தேசத் துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் 155 பேர் மீதும் குற்றம்சாட்டப்பட்டது. இந்த வழக்கு நான்கு ஆண்டுகள் நடைபெற்று அவர் விடுவிக்கப்பட்டார். அப்போது அறிமுகம் செய்யப்பட்ட பாஸ் லாஸ் எனும் சட்டம் கறுப்பர்கள் எங்கே வசிக்கலாம்; எங்கே பணிபுரியலாம் என கட்டுப்பாடு விதித்து இனப்பாகுபாட்டை மேலும் மோசமாக்கியதால் போராட்டமும் தீவிரமானது. இதனிடையே 1958இல் மண்டேலா வின்னியை திருமணம்செய்துகொண்டார்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 15 12 2013 ஞாயிற்றுக்கிழமை






அழகிய பாண்டியன்

பில்கேட்ஸின் கல்யாணத்தைக் கண்டு களித்த பரவசத்தோடு அப்படியே அவர் புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கும் அந்த டிஜிட்டல் மாளிகையையும் கொஞ்சம் எட்டிப் பார்த்து விட்டு வருவோமா? 1988 இல் தலைநகர் வாஷிங்டனுக்கு வெளியே. அதாவது சியாட்டல் நகருக்கு அருகிலேயே ஒரு மலையடிவாரத்தில் ஏரிக்கரைப் பக்கத்தில் ஐந்தரை ஏக்கர் நிலத்தை பில்கேட்ஸ் வாங்கிப் போட்டிருந்தார்.

அன்று தொடங்கிய கட்டட வேலைகள் ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பில்கேட்ஸ் தம்பதிகள் உள்ளே நுழைந்து குடித்தனம் நடத்த முடியாத நிலை. ஆம் இப்போதுதான் இறுதிக் கட்ட வேலைகள் மும்முரமாக நடக்கின்றன. கடுமையான சில நடுக்கத்தையும் கூடத் தாங்கும் வகையில் அதன் அடித்தளம் நவீன தொழில்நுட்பத்துடனும் உறுதியான கான்கிரீட்டுடனும் அமைக்கப்பட்டுள்ளது.

கொலம்பியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்ரக டக்ளஸ் பிர் மரங்களே. அவ்வீட்டின் மரத்தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கின்றன.

பல அடுக்குகளைக் கொண்ட ஓங்கி உயர்ந்த வீடு. அதனுடைய கீழ் அடுக்கு மட்டும் கண்ணுக்குத் தெரியாதபடி பூமிக்குள் இருக்கிறது. வீட்டின் உச்சி விதானங்களில் எவர்சில்வர் தட்டுக்கள் பதிக்கப்பட்டுள்ளன. எட்டுப் படுக்கை அறைகள் மற்றும் அத்தியாவசிய அறைகள். விருந்தினர்களுக்கான அறைகள், மைக்ரோசொப்ட் உயர் அதிகாரிகளுக்கான அறைகள். நூலக அறை. பில்லுக்கென்று தனியாக நூலக அறை. வரவேற்பு அறை. வீட்டுக்குள்ளேயே மினி தியேட்டர். ஒரே நேரத்தில் நூறு பேர் ஒன்றாக அமர்ந்து சாப்பிடக் கூடிய உணவு அறை என்று அந்த மாளிகை வளாகம் மிகப்பெரியது.

ஒவ்வோர் அறையும் நவீன டிஜிட்டல் தொழில் நுட்பத்தில் அமைக்கப்பட்டிருப்பது தான் சிறப்பிலும் சிறப்பு. வெளியே காணப்படும் தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ப ஒவ்வோர் அறையிலும் சீதோஷ்ண நிலை தானாகவே மாறிக் கொள்ளும்.

வெளியே கோடை வெயில் கொளுத்தினாலும் உள்ளே ஜிலுஜிலுவென்று ஏசிகள் வேலை செய்யத் தொடங்கிவிடும். வெளியே பனியென்றால் உள்ளே இதமான வெப்பம் பரவ ஆரம்பித்துவிடும்.

இதற்காக யாரும் எந்த சுவிட்சையும் இயக்க வேண்டிய அவசியமில்லை. எல்லாமே ஓட்டோமேட்டிக்கில் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அங்கே நிலவும் தட்பத்தை அல்லது வெப்பத்தைக்கூட்டவோ குறைக்கவோ மட்டும் ரி மோட்டை உபயோகிக்க வேண்டும்.





ஒவ்வோர் அறையும் டிஜிட்டல் மயம்தான். அறையில் இருக்கும் எந்தவொரு டிஜிட்டல் கருவியும் கண்ணுக்குத் தெரியாத வகையில் சுவர்களில் மறைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அறையிலும் டிஜிட்டல் திரை.

பில்கேட்ஸ் வீட்டுக்கு விருந்தினராக செல்லும் பாக்கியம் உங்களுக்கு கிடைக்கிறதென்றால் அந்த அனுபவம் எப்படி இருக்கும்?


முதலில் நீங்கள் வரவேற்பறையில் நுழைந்ததும் உங்களிடம் ஒரு காகிதப்படிவம் கொடுக்கப்படும். அதில் இருக்கிற விடயங்களில் உங்களுக்குப் பிடித்தமானவற்றை டிக் செய்துவிட்டால் போதும். அதனடிப்படையில் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட அறை அலங்கரிக்கப்படும். உங்களுக்குப் பிடித்தமான பாடல், அது தியாகராஜர் காலத்துப் பாடலாக இருந்தாலும் சரி இசை, ஓவியம் எல்லாமே உங்கள் அறையில் சிறிது நேரத்துக்குள் ஏற்பாடு செய்யப்பட்டுவிடும். இப்போது உங்கள் அறைக்குள் நுழைந் தால் நீங்கள் எதிர்பார்த்த எல்லாமே அங்கு இருக்கும்.

'மோனாலிசா' ஓவியம் பிடிக்கும் என்று நீங்கள் தெரிவித்திருந்தால் அந்த அறையின் டிஜிட்டல் திரையில் இப்போது மோனாலிசா உங்களைப் பார்த்து புன்னகை செய்து கொண்டிருப்பாள். நீங்கள் விரும்பிக் கேட்ட பாடல்களும் இசையுடன் உங்கள் அறையில் ஒலிக்க ஆரம்பித்துவிடும். அந்த அறைக்கதவை நீங்கள் திறக்க வேண்டிய அவசியமில்லை. உங்கள் வருகையை உணர்ந்து அதுவாகவே திறந்து மூடும்.

நீங்கள் அறைக்குள் நுழையும்போது தானாகவே விளக்கு எரியும். அறையை விட்டு வெளியேறிவிட்டால் விளக்குகள் எல்லாம் தாமாகவே அணைந்து விடும். நீங்கள் எந்தச் சுவிட்சையும் தேடிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இசையும் அப்படியே. அறைக்குள் ஆள் இருந்தால் இசை ஒலிக்கும். இல்லையென்றால் அமைதியாகிவிடும்.

உலகிலுள்ள எந்த ஒரு புகழ்பெற்ற நகரத்தையும் பார்க்க விரும்பினால் அந்த நகரம் டிஜிட்டல் திரையில் சினிமாவாக ஓடும். அதைக் கண்ணால் காண்பதோடு அந்த நகரத்தைப் பற்றிய எல்லாக் குறிப்புகளும் கிடைக்கும். வீட்டுக்குள்ளேயே நீந்தி விளையாட அழகிய நீச்சல் குளமும் உண்டு. வீடு முழுவதும் கலைநயம் மிக்க திரைகள், தூண்கள் அந்த வீட்டின் அழகை மேலும் அதிகப்படுத்தும். இப்படி ஓர் அழகிய டிஜிட்டல் அரண்மனையாக வளர்ந்து கொண்டிருந்த அந்தக் கட்டடம் மெலின்டா பார்வையிட்ட பிறகு மேலும் சில மாற்றங்களுடன் அற்புதமாக ஜொலிக்கத் தொடங்கியது. அவரது வீட்டு எல்லைக்குள் ஒரு காக்கா, குருவி நுழைந்தாலும் அவ்வீட்டின் டிஜிட்டல் கேமரா கண்ணிலிருந்து தப்பிவிட முடியாது.

1995 இல் இவ்வீட்டுக்கு புதுமனை புகுவிழா நடத்திய பில்கேட்ஸ் மெலிண்டா தம்பதி இங்கு குடியேறினார்கள்.



## சாத்தான்களோடு வாழ்தல் பற்றி

நீளும் இந்த இரவின்
பிடியில் மாட்டிக் கொண்டு
நெஞ்சமெங்கும் நிறைந்து போயுள்ள
தீராத வலியின் சுழிப்போடு
சாத்தான்களினால் மனிதர்கள்
ஆளப்படுதல் அல்லது அடக்கப்படுதல்
பற்றி சிலாகித்துக் கொண்டிருக்கிறேன்
எனக்குள்ளேயே

சாத்தான்களுக்குப் பயந்து
வாழ்ந்த நாள்கள் பற்றியும்
வாழும் நாள்கள் பற்றியும்
எழுதிக் குவிந்து போய்க் கிடக்கின்ற
நாள்குறிப்பேட்டை புரட்டுகின்றேன்
சாத்தான்களின் அசுரத்தனம் பற்றி
எழுதித் தீராத சொற்கள்
என்னை வெறித்துப் பார்த்துக்
கொண்டிருந்தன காதல் பற்றியும்
காதலின் கண்கள் பற்றியும்
இயற்கை பற்றியும்
எழுதிக் குவிக்க வேண்டிய
இந்த இளம் வயதில்
நாங்கள் மட்டும் ஏன்
சாத்தான்கள் பற்றி
எழுதிக் குவிக்க விதிக்கப்பட்டோம்?

விடியாத ஒவ்வொரு இரவுகளிலும்
எங்கள் சுவர்களில்
மரணச்சாயம் அப்பப்பட்டுக் கிடந்த
காலப்பெருவெளி குறித்த
ஞாபக தரிசனங்கள் விழிகளுக்குள்
நெருங்கி வரலாயிற்று மறுபடியும்

சாத்தான்களின் வேதம்,
அவையிடையே
வெளிக்கிளம்பும் மரணநாதம் என
சாத்தான்களின் சுயும் பற்றி ஏதும்
அறிந்திராத ஒரு பராயத்திலேயே
சாத்தான்கள் எம்மை அச்சுறுத்திய
நினைவலைகள் இப்போதும்
என்னிடத்தில்
நிறைந்து போய்க்கிடக்கின்றன

இன்று...
சாத்தான்களின் உலகம் பற்றியும்
சாத்தான்களின் கொடூரம் பற்றியும்
எழுத்தில் படிக்கின்ற பொழுதுகளில்
எதுவித எதிர்வினைகளும்
எங்களிடத்தே இருப்பதில்லை

காரணம் நாங்கள் சாத்தான்களோடு
பேசிக் கொண்டவர்கள் நாங்கள்
சாத்தான்களோடு வாழ்ந்து
கெட்டவர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக
நாங்கள் இப்போது சாத்தான்களோடு
வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்
ஆதலால் என்னவோ
இந்த வாழ்வு எமக்கு புதிதல்ல.

*வெற்றி துஷ்யந்தன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம்

## மண்டேலா வடிவில் வந்தது

● க.திருநாவுக்கரசு

நெல்சன் மண்டேலாவின் மறைவு உலக வரலாற்றில் ஒரு சகாப்தத்தின் முடிவு. லெனின், ஸ்டாலின், மாவோ, சே குவேரா ஆகிய பொதுவுடமைத் தலைவர்களைத் தவிர்த்துப் பார்த்தால், காந்திக்குப் பிறகு நாடுகளின் எல்லைகளைக் கடந்து உலகம் முழுவதிலும் உள்ள கோடிக்கணக் கான மக்களால்பெரிதும்மதிக்கப்பட்ட, கொண்டாடப்பட்ட தலைவர் மண்டேலா.

**காந்திய வழி?**

உலக மக்கள் மீதான இவரது செல்வாக்கு, சித்தாந்த எல்லைகளைக் கடந்ததாக இருந்தது. உலக மக்களால் மகத்தான தலைவராக இவர் போற்றப்படுவதற்கான காரணம், தான் நேசித்த மக்களின் சுதந்திரத்துக்காகத் தனது சுதந்திரத்தைத் தியாகம் செய்தவர் என்பது மட்டுமல்ல, தென்னாபிரிக்க மக்களின் விடுதலையைச் சாதித்த வழிமுறைகளாலும் அல்ல. 27 ஆண்டுகள் கொடும் சிறைவாசத்துக்குப் பிறகு, சுதந்திர தென்னாபிரிக்காவின் முதல் ஜனநாயகத் தேர்தலில் வென்று, தென்னாபிரிக்க அரசின் தலைவரானபோது, வெள்ளை இன மக்களிடம் அவர் காட்டிய பெருந்தன்மையும், மக்களாட்சி குறித்த அவரது புரிதலும், தொலைநோக்கும்தான் அவர் எத்தகைய மகத்தான தலைவர் என்பதைக் காட்டின. இங்குதான் அவர் காந்திய வழியை முழுமையாகப் பின்பற்றுகிறார்.

தங்கள் மக்களின் சுதந்திரத்துக்காக, நல்வாழ்வுக்காகப் பெரும் தியாகங்கள் செய்து, ஆனால் ஆட்சிக்கு வந்தவுடன் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள எல்லா வழிமுறைகளையும் கையாளும் தலைவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர் மண்டேலா. அவர் உயிருடன் இருக்கும்வரை பதவியில் தொடர்ந்திருக்க முடியும் என்றாலும், இரண்டாம் முறையாகத் தேர்தலில் நிற்கவே மறுத்துவிட்டார். அமைதிக்கான நோபல் பரிசு உட்பட உலக நாடுகள் பலவற்றின் உயர்ந்த பட்ச விருதுகள் அவருக்குக் குவிந்தன. மண்டேலா அளவுக்கு ஏராளமான சர்வதேச விருதுகளைப் பெற்ற தலைவர்கள் வேறு யாரும் கிடையாது என்பது அவரது மகத்துவத்துக்கான ஒரு சிறு சான்று.

ஆரம்பத்தில் அகிம்சை வழியில் போராட்டத்தை மண்டேலா ஆரம்பித்தாலும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அன்றைய தலைவர்களின் விருப்பத்துக்கு எதிராக ஆயுதம் தாங்கிய குழு ஒன்றை அமைத்தார். பொதுவுடமைக் (கம்யூனிஸ்ட்) கட்சியுடன் சேர்ந்து கொண்டு வன்முறைப் போராட்டத்தை நடத்தினார். அப்போது மண்டேலா பொதுவுடமை கட்சியின் உறுப்பினராக, அதிலும் மத்தியக் குழு உறுப்பினராக இருந்தார். அது ஒரு மிகக் குறுகிய, ஓராண்டுகூட நீடிக்காத காலகட்டம். பின்னர், பொதுவுடமைக் கட்சியிலிருந்து விலகியபோதிலும்பொதுவுடமை வாதிகளுடனான தனது நெருக்கமான உறவையோ, ஆயுதம் தாங்கிய போராட்டத்தையோ அவர் கைவிடவில்லை.

**அகிம்சை - ஒரு போராட்ட உத்தி**

ஹிட்லரின் இனப் படுகொலையை யூதர்கள் எப்படி எதிர்கொள்வது என்று கேட்டபோது, யூதர்கள் அனைவரும் தற்கொலை செய்துகொள்ள வேண்டும். அதுவே ஹிட்லரின், ஜெர்மன் மக்களின் மனசாட்சியை உலுக்குவதாக அமையும் என்றவர் காந்தி. அவருக்கு அகிம்சை ஒரு முழு முதலான, தார்மீகக் கோட்பாடு. காந்தியை முழுமையாக ஏற்ற மார்ட்டின் லூதர் கிங்குக்கோ அகிம்சை வழி ஒரு தார்மீகக் கொள்கை மட்டுமல்ல, அது ஒரு போராட்ட உத்தியும்கூட. 15 சதவீதத்துக்கும் குறைவாக இருக்கும் கறுப்பின மக்கள், நீதிக்காக ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபடுவது என்பது தற்கொலைக்குச் சமம் என்று கிங் கருதினார். மண்டேலாவைப் பொறுத்தவரை அது ஒரு போராட்ட உத்தி மட்டுமே.

நீங்கள் பின்பற்றும் அதே விதிமுறைகளை உங்களது எதிராளியும் பின்பற்றும்போதுதான் அகிம்சை வழியிலான போராட்டம் சாத்தியம். ஒரு சுதந்திரப் போராட்டத்தின் வழிமுறை என்னவாக இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது, ஒடுக்குபவர்களின் வழிமுறைகள்தான் என்பது மண்டேலாவின் புரிதல். வன்முறையை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் முழுமையாகக் கைவிட ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், மண்டேலாவைச் சிறையிலிருந்து விடுவிப்பதாக நிறவெறி அரசு 1980களின் மத்தியில் கூறியபோது, மண்டேலா அதை ஏற்க மறுத்துவிட்டார். ஆனாலும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் போராட்டங்கள் பெருமளவுக்கு அமைதியான வழிமுறைகளையே கொண்டிருந்ததை மறுக்க முடியாது.

**சமத்துவமும் சுதந்திரமும்**

1990இல் சிறையிலிருந்து விடுதலையான பிறகு, தானும் ஆயிரக்கணக்கான தனது தோழர்களும் அனுபவித்த கொடுமைகளை முற்றிலும் மறந்து 1994இல் முதன்முறையாக தென்னாபிரிக்காவில் மக்களாட்சி அமைந்தபோது, எந்த விதமான கசப்புணர்வும் பழிவாங்கல் உணர்வும் இல்லாமல் எல்லா இன மக்களின் உரிமைகளையும் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் உறுதி செய்யும் ஆட்சியை மண்டேலா வழங்கினார். அவர் ஆட்சிப் பொறுப் பேற்றபோது காட்டிய பெருந்தன்மை அசாதாரணமானது.

தான் 18 ஆண்டுகளாக அடைக்கப்பட்டிருந்த, சுண்ணாம்புப் பாறைகளை உடைக்கப் பணிக்கப்பட்டிருந்த (அதனால் மண்டேலாவின் கண் பார்வை நிரந்தரப் பாதிப்புக்குள்ளானது) மிகக் கொடூரமான சிறைச்சாலையான ராபென் தீவு சிறையின் அதிகாரியைத் தனது பதவியேற்புக்குச் சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தார். ரிவோனியா வழக்கில் (மண்டேலாவுக்கு ஆயுள் தண்டனையைப் பெற்றுத் தந்த வழக்கு) தனக்கு தூக்குத் தண்டனை வாங்கித்தர மிகவும் போராடிய அரசு வழக்குரைஞரையும் விருந்துக்கு அழைத்திருந்தார். நிறவெறி ஆட்சிக் காலத்தில் நடந்த கொடூரங்களுக்கு, அவற்றை இழைத்தவர்களுக்குச் சட்டப்படியான தண்டனை வழங்கியிருந்தால், அதை யாரும் இம்மியும் தவறாகப் பார்த்திருக்க முடியாது. ஆனால், உண்மை, நல்லிணக்க ஆணையம் அமைத்த தன் மூலம் வெள்ளை மற்றும் கறுப்பின மக்களிடையே கசப்புணர்வு வராமல் பார்த்துக் கொண்டார். அத்துடன், தனது ஐந்தாண்டு கால ஆட்சியில் தென்னாபிரிக்காவில் சிறந்த ஜனநாயக மாண்புகள் நன்றாக வேர்கொள் வதையும் உறுதிசெய்தார்.

**மக்களுக்காக இழந்தவை**

தனது மக்களின் சுதந்திரத்துக்காக மண்டேலா இழந்தது மிக அதிகம்.



அவரே குறிப்பிட்டது போல, எனது மக்களுக்கான எனது கடமையின் காரணமாக, நான் என்றைக்குமே (நேரில்) சந்திக்க முடியாத, அறிய முடியாத கோடிக் கணக்கான தென்னாபிரிக்கர்களுக்காக நான் மிகவும் நெருக்கமாக அறிந்திருந்த, நேசித்திருந்த மக்களை இழந்தேன். அமைதியான குடும்ப வாழ்வுக்காக ஏங்கிய மனிதர் மண்டேலா. ஆனால், அது அவருக்கு வாய்க்கவே இல்லை. முதல் இரண்டு திருமணங்களும் பிரிவில் முடிந்தன. குறிப்பாக, வின்னியுடனான இரண்டாவது திருமணம், அவரது மனதில் ஆறாத வடுக்களை ஏற்படுத்துவதில் முடிந்தது. ஆனால், எப்போதும் யார் மீதும் காழ்ப்புணர்வையோ கசப்புணர்வையோ அவர் வளர்த்துக்கொள்ளவே இல்லை. அது தனி வாழ்விலாக இருந்தாலும் சரி, பொதுவாழ்விலாக இருந்தாலும் சரி.

# உன்னத....

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பிறகு போராட்டத்திலும் மண்டேலாவுடன் துணை நின்ற வின்னி அவரது நீண்ட சிறைவாசத்தின் போதும் அவரது விடுதலைக்காக குரல் கொடுத்தார்.

1960ஆம் ஆண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி தடை செய்யப்பட்டதால் மண்டேலா தலைமறைவாகி போராட்டத்தை தொடர்ந்தார். அதே ஆண்டு வெள்ளையர் அரசின் அடக்குமுறை உச்சத்தை தொட்டது. ஷார்பேபில்லே பகுதியில் போலீசார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 69 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

தென் ஆபிரிக்காவின் இந்தப் படுகொலையால் வெகுண்ட மண்டேலாஅகிம்சைமுறையைக்கைவிட்டு பொருளாதார தடை போராட்டத்தை அறிவித்தார். அப்போது அவர் கட்சியின் துணைத்தலைவராக இருந்தார். தென்னாபிரிக்க அரசு அவரை தீவிரவாதி என முத்திரை குத்தி அரசைக் கவிழ்க்கச் சதி செய்தார் என்றும் குற்றம்சாட்டியது. அவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டு 1964ஆம் ஆண்டு வாழ்நாள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ரோபன் தீவுகளில் அவரது சிறைவாசம் ஆரம்பமானது. 18 ஆண்டுகள் அங்கு கொடிய சிறைவாசத்தை அனுபவித்த பிறகு 1982இல் நாட்டின் பிரதான பகுதியில் இருந்த போல்ஸ்மூர் சிறைக்கு மாற்றப்பட்டார். சிறைவாசத்தின் ஆரம்ப காலத்தில் அவரது தாய் மற்றும் மூத்த மகன் இறந்து விட்டனர். இறுதிச்சடங்கில்கூட பங்கேற்க மண்டேலா அனுமதிக்கப்படவில்லை. சிறையில் சுண்ணாம்புக் கல் உடைப்பது உட்பட கடினமான வேலைகளைச் செய்தார். எல்லா இன்னல்களையும் தனது மக்களுக்காகப் பொறுத்துக்கொண்டிருந்தார்.

இதனிடையே, தென் ஆபிரிக்காவில் நிறவெறிக்கு எதிரான போராட்டம் மண்டேலாவின் விடுதலை எனும் ஒற்றைக் குறிக்கோளுடன் தீவிரமானது. தன் மக்களின் உரிமைப் போராட்டத்துக்காகச் சிறைவாசம் அனுபவிக்கும் அந்தத் தலைவரை விடுதலை செய்ய வலியுறுத்தி உலகம் முழுவதும் ஆதரவு வலுத்தது. 1988ஆம் ஆண்டு லண்டன் வெம்பிலி மைதானத்தில் 72,000 பேர் திரண்ட மாபெரும் இசை நிகழ்ச்சி மண்டேலா விடுதலைக்காக குரல் கொடுத்தது. ஒரு மனிதரின் விடுதலைக்காக இந்த அளவுக்கு ஆதரவு உண்டானதில்லை எனகூறும்அளவுக்குமண்டேலாவுக்காக அகில உலகமும் குரல் கொடுத்தது. இதன் பயனாக 1990ஆம் ஆண்டு மண்டேலாசிறையில்இருந்துவிடுதலை செய்யபட்டார். தென் ஆபிரிக்கா நிறவெறியில் இருந்து விடுப்பட்டது.

1962ஆம் ஆண்டு தனக்கு எதிரான வழக்கு விசாரணையில் தானே வாதாடிய மண்டேலா, எல்லா மக்களும் நல்லிணக்கத்தோடு சம வாய்ப்புகளோடு வாழும் சுதந்திரமான ஜனநாயக சமூகம் அமைய வேண்டும் என்பது என் லட்சியம் என்றார். தேவைப்பட்டால் இந்த லட்சியத்திற்காக உயிரையும் கொடுப்பேன் என முழங்கினார். இதைச் செயலிலும் காட்டி தென் ஆபிரிக்க மக்களுக்கு நிறவெறியில் இருந்து விடுதலை வாங் கித்தந்து புது வாழ்வு மலரச்செய்தார்.

விடுதலைக்குப் பிறகு வெள்ளையர்களுடன் அவர் நடத்திய பேச்சு மன்னிப்பை அடிப்படையாக கொண்டு அமைந்திருந்தது. இதுவே அந்த நாட்டில் முதல் சுதந்திர தேர்தலுக்கு வழிவகுத்து அவரை மக்கள் அதிபர் ராக்கியது. 1994இல்அவருக்குஅமைதிக் கான நோபல பரிசு வழங்கப்பட்டது.

பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு பொதுவாழ்க்கையில் இருந்து பெரும்பாலும் விலகி வாழ்ந்து வந்த மண்டேலா நோயோடு போராடிக் கொண்டிருந்தார். இதுவும் சிறைவாசம் தந்த பரிசுதான். சிறையில் இருந்த போது அவர் காசநோயால் பாதிக்கப்பட்டார். நோயுடனான அவரது போராட்டம் முடிவுக்கு வந்து 95ஆவது வயதில் அவரது உயிர் பிரிந்தது.

தென் ஆபிரிக்கா அதன் மகத்தான புதல்வரை இழந்துவிட்டது என அவரது இறப்புச் செய்தியை அறிவித்த அந்நாட்டு அதிபர் ஜூமா குறிப்பிட்டார். தென் ஆபிரிக்கா மட்டுமா, ஒட்டு மொத்த உலகமும் அதன் மகத்தான புதல்வரை இழந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 15 12 2013 ஞாயிற்றுக்கிழமை



## கலாசாரம் பேணுவோம்

தாயிற் சிறந்த கோயிலுமில்லை;
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
சேய்கள் இதைக் கவனத்தோடு
கற்கின்றார்கள் - எதற்காக?
கன புள்ளிகள் பெற்று
சித்திகள் பெறவேண்டுமே அதற்காக!
மனக் கோயிலில் மடப்பள்ளியில் கூட
இடமில்லைப் பெற்றோர்க்கு!

படிப்பறையிலே என் செவிப்பறைகள்
சல்லடையாயின!
கடித்ததோ, குளவியெனப் புகுந்த
சிறு குழவியின் மழலைகள்!
அன்னையும் பிதாவும் பின்னடிக்கு கிடைஞ்சல்!
அத்தோடு இன்னும்
சொன்னது "ஆலயம் தொழுவது
வேலைக்கு மினக் கெடு!

குழந்தையிலே குற்றமில்லை
கூறவைத்த அம்பு எது?
தந்தையும் தாயுமாகிய நீ,
உன் பெற்றோரை
அகதிகளாய்த் தவிக்க வைத்த
அனுபவம்தான் அந்த அம்பு
கதிகலக்க, மீண்டும் வரும்
உன்னிடமே கூராக்கப்பட்டு!

முதுமை வந்தால் முதியோர் இல்லம்!
இல்லையேல் ஏதுங்கதியற்று அநாதையாய்
பிச்சையெடுக்கும் அவலக் கோலம்!
கண்கலங்கிப் பரிதவித்து அழைத்தால்கூட
பதிலே சொல்லார் - சிலரோ பண்டிகைக்கு
மட்டும் வந்து பார்த்துச் செல்வார்
உயிர் இருக்கிறதா என்று

தமிழ்க் கலாசாரம் தலை சிறந்த தென்று
மேலை நாட்டவரோ மகிழ்ந்து
மதிப்பளித்துப் போற்றுகின்றார் - ஆனால்
இங்கே மதியிழந்த மந்திகள்போல்
மரியாதையிதுதான் என்று கண்ணைமூடி
பிரதி பண்ணுகின்றனரே
வெள்ளைக்காரன் கூத்துக்களையே

தோள் வலிமை உடையோரெல்லாம்
தினமும் போகும் தொடர் நாடகங்களுக்குள்
மயங்கித் தொலைந்து போனார். விரக்தியின்
விளிம்பினிலே ஏங்குகின்றேன் நம் நாடு
அபிவிருத்தி அடைவதுதான் இனி எப்போது?

இனிவரும் பிறந்த நாளையாவது
அர்த்தமுள்ளதாக்கிடவே
சங்கல்ப்பம் கொள்வீர்
அக்கினிச் சுடரை ஊதி நூர்த்து, இனிப்பு
வெதுப்பி வெட்டும்போது கை தட்டாமல்
பின்னவரும் போற்றியே நினைக்கும்
வண்ணம் மரக்கன்று நட்டு
மன்னுயிர்க்கு உதவும்போது பார்முழுவதும்
கேட்டிடவே கை தட்டுங்கள்

என்றுமே சிறந்த நம் பண்பாட்டை நீயும்
போற்றியே மதித்திடு - வழித்
தோன்றல்களுக்கும் இதன் மகிமை பகர்; பிற
கலாசாரங்களை மதித்துநட - ஆனால்
என்புக் காய் ஓடுகின்ற நாயைப் போல நாக்குத்
தொங்கியே - உன் அருமைப்
பண்புகளைத் தொலைத்துவிட்டுப் பாவியாக
அலைந்திடாதே தமிழா நீயும்

சினிமாவால் சீர்கெட்டது கலாசாரம்
அதைப் பின்பற்றியே
மனிதாபிமானமும் மரத்துப் போச்சு! ஆனால்
அதுதான் நாகரிகம் என்று
வெட்கமின்றி மானம் ரோசம் எதுவுமின்றி
தரணியெங்கும் தயக்கமின்றி வீறுநடை
போடுகின்றார்! தவிக்கின்றேன்
யார்க்கிதை உரைப்பதென்று

முன்னைய நம் பண்பாடுகளையெல்லாம்
பேணி மதித்து விட்டு
பின்னைய சந்ததிக்கும் அதன் மகிமையைப்
பகர்ந்து கொண்டு வழுவாமல் திட மனத்தோடு
நம் கலாசாரம் பேணுவீராகில்
முழுமையாக இறையருள் பெறுவீர் நிச்சயமாக.

*அம்பலவாணர் இராஜரட்னம்*



# ஜன்னல் ஓரம்

## "சும்மா பரவாயில்லை"

மலையாளத்தில் வெற்றி பெற்ற 'சாதாரணம்' என்ற படம்தான் கரு. பழனியப்பனால் தமிழில் மறு ஆக்கம் செய்யப்பட்டு ஜன்னல் ஓரம் ஆக்கப்பட்டிருக்கிறது. மலையாளத்தில் இருந்த அடிப்படை கதையை மாற்றாமல், திரைக்கதையில் தேவையில்லாத திருத்தங்கள் செய்யாமல் ஓரளவுக்கு உருப்படியாக எடுத்திருக்கிறார்கள்.

ஓர் அரசு பஸ் சாரதி மற்றும் நடத்து நர், அதில் அடிக்கடி பயணிக்கும் பயணிகள் - இவர்கள்தான் கதை மாந்தர்கள்.

தமிழகத்தின் பிரபல நகரான பழனியில் இருந்து காலை புறப்பட்டு, மாலையில் பண்ணைக்காடு என்ற மலையூரில் தங்கி, மறுநாள் காலை அங்கிருந்து புறப்பட்டு வரும் பஸ் அது. அணைக்கட்டு அழகுடன் இருக்கும் பண்ணைக்காட்டில் சாரதியும், நடத்துனரும் தங்கி, காலையில் கிளம்புவார்கள். இதனால் பண்ணைக்காடு ஊர் மக்களுடன் சாரதி பார்த்தீபனுக்கும், நடத்துநர் விமலுக்கும் உறவு ஏற்படுகிறது.

அந்த ஊரில் அண்ணன் சார் என்று அழைத்து அனைவரும் மதிக்கும் ஓய்வுபெற்ற ஆசிரியர் ராஜேஷ் இருக்கிறார். சூரத் நகரில் வேலை செய்யும் அவரது ஒரே மகன் ஆண்டுக்கு ஒரு முறைதான் ஊருக்கு வருவான். இந்த முறை அவன் வரும்போது, தனது வீட்டிலேயே வளரும், பெற்றோரை இழந்த நிர்மலாவை திருமணம் செய்து கொடுக்க முடிவு செய்கிறார்கள் நிர்மலா அண்ணன் சாரின் நண்பரின் மகள். ஆனால் அண்ணன் சாரின் மகன் பிணமாகவே ஊருக்குத் திரும்புகின்றான்.

அண்ணன் சாரின் மகனை, பஸ்ஸை மோதிக் கொன்று விட்டதாக விமலையும், பார்த்திபனையும் பொலீஸ் பிடித்துச் செல்கிறது. ஆனால் அண்ணன் சாரின் மகனைக் கொன்றது விமல் அல்ல என்று, அவரே சிறையில் இருந்து பிணையில் வந்து பார்த்திபன் உதவியுடன் நிரூப்பிப்பதுதான் கதை. அப்படியானால் கொலையாளி? அதுதான் 'ஜன்னல் ஓரம்' படத்தின் மர்ம முடிச்சே!



> "தெளிந்த நீரோடைபோன்ற எளிய காதல் கதையாக ஆரம்பித்து 'கிரைம் த்ரில்லர்' ஆக முடியும் இந்தக் கதையில் குத்துப்பாடலும் இருக்கிறது. அது ஏன் என்பது இயக்குநருக்குத் தான் வெளிச்சம்

போக்குவரத்துக் கழகத்தில் வேலைக்குச் சேருவதில் ஆரம்பித்து, பண்ணைக்காடு பெண் மனிஷா யாதவைக்காதலிப்பதுவரை, தனக்கே உரிய முத்திரையுடன் சுப்பையா கதாபாத்திரத்தில் விமல் வசீகரிக்கிறார். தான் குற்றவாளி அல்ல என்று நிரூபிக்க, பார்த்தீபனுடன் சேர்ந்து போராடும் காட்சிகள் நன்றாகவேவந்திருக்கின்றன. கொஞ்சக் காலத்துக்கு முன்னர் தமிழ் சினிமாவில் பார்த்த பார்த்தீபனா இது





என்று மூக்கில் விரல் வைக்கிறமாதிரி வெளுத்துக் கட்டியிருக்கிறார். குசும்பும் திமிரும் கலந்த பாத்திரத்தில் கச்சிதமாகப் பொருந்துகிறார். மற்றைய நடிகர்களும் பரவாயில்லை.

இயற்கையின் ஆட்சி நிறைந்த கதைக்களத்துக்கு ரசிகர்களை அழைத்துப் போன மாதிரி உணரவைத்து விடுகிறது அர்பிந்து சாரவின் ஒளிப்பதிவு. மலையாளம், தமிழ், இரண்டுக்குமே இசை வித்யாசாகர். தமிழுக்குக் கொஞ்சம் வணிகத் தன்மை கொண்ட உணர்ச்சியை இசையில் ஊட்டியிருக்கிறார். தெளிந்தநீரோடைபோன்ற எளிய காதல் கதையாக ஆரம்பித்து 'கிரைம் த்ரில்லர்'ஆக முடியும் இந்தக் கதையில் குத்துப்பாடலும் இருக்கிறது. அது ஏன் என்பது இயக்குநருக்குத்தான் வெளிச்சம். பழனியப்பன், மையக் கதையை விட்டு விலகாமல் இயக்கியிருக் கிறார். திரைக் கதையின் எளிமையான கட்டமைப்பும், மலைப் பயணத்தில் எதிர்படும் சின்னச் சின்னத் திருப்பங்கள் போன்ற கதைத் திருப்பங்களும் பயணத்தைச் சுவையாக்குகின்றன.

பல விதங்களிலும் இன்னும் வளர்ச்சி பெறாமல் இருக்கும் கிராமத்தில் எல்லா விஷயங்களையும் சர்வ சாதாரணமாக ஏற்றுக்கொள்வது நம்பும்படி இல்லை. நிர்மலாவைத் தன் வீட்டில் வைத்து அண்ணன் சார் ஏன் வளர்க்கிறார் என்பதற்கும் திரைக் கதையில் பதில் இல்லை. பல திருப்பங்கள் வருகின்றன. ஆனால் எதுவும் பார்வையாளருக்குள் பரபரப்பு ஏற்படுத்தவில்லை. ஏதோ போனால் போகிறது என்று பொழுதைக் கடக்க வேண்டுமானால் ஒரே ஒரு தடவை இந்தப் படத்தைப் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் வசீகரிக்க

வலிமைமிக்க, நீடித்து நிலைக்கக் கூடிய வசீகரிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் வழிகள்

நிலாமகன்



யாரோ என்னைச் சலிப்படையச் செய்கிறார். அது நானாகத்தான் இருக்கும்
டைலான் தோமஸ்
கவிஞர், எழுத்தாளர், நாடக ஆசிரியர்

**மௌனத்தைப் பொருத்தமாக பயன்படுத்தவும்**

மிக வலிமையான கவர்ச்சி விளைவை ஏற்படுத்துபவர்கள் மௌனத்தை ஆக்கபூர்வ வழியில் தங்களால் பயன்படுத்த முடியும் என்பதை உணர்ந்திருக்கிறார்கள்; அதனால் கேட்பவர்கள் மனதில் கருத்தைத் தோற்றுவிக்க முடியும். இடைவெளியை அவர்களாகவே நிரப்பிக் கொள்ளவும் முடியும். அமெரிக்க நகைச்சுவையாளர் ஜோஷ் பில்லிங்ஸ் சொல்வார், "மறுப்பதற்கும், தவறு என்று நிரூபிப்பதற்கும் மௌனம் ஒரு மிகவும் கடினமான வாதம் ஆகும்".

உங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒளிமறைவு இல்லாததாகவும், அனைவருக்கும் இடமளிப்பதாகவும் மௌனம் இருக்கிறது.

நீங்கள் எப்படி மற்றவர்களை எதிர்கொள்கிறீர்கள் என்பதில், இது முக்கியத்துவத்தைக் கூட்டுகிறது. மற்றவர்கள் விட்டுச் சென்ற மௌனத்தை இட்டு நிரப்ப நீங்கள் விரைந்து செயற்படாவிட்டால், மற்றவர்களுக்கு யோசிப்பதற்கான நேரத்தை நீங்கள் கொடுக்கிறீர்கள். மேலும் அவர்களுக்கு மௌனமான மரியாதையையும் அளிக்கிறீர்கள்.

முழுவதும் வேறுமாதிரியான மௌனம் ஒன்று உண்டு: வலுச் சண்டைக்கு முனைபவர், எதிர் விளைவை ஏற்படுத்தாதவர், நட்புணர்வு இல்லாதவர் என்று அது உங்களைப் பற்றி ஒரு தோற்றத்தை ஏற்படுத்திவிடும். இது உங்கள் வசீகரத் திறமையை, கவர்ச்சி விளைவைச் சேதப்படுத்தக் கூடும். நண்பர் அல்லது உங்களுக்குப் பிடித்தமானவருடன் ஏற்பட்ட விவாதத்துக்குப் பிறகு, மௌனத்தை ஓர் ஆயுதமாக, நீங்கள் பயன்படுத்திய சூழ்நிலை உங்களுக்கு நினைவுக்கு வருகிறதா? என்ன செய்கிறீர்கள் என்பதை நீங்கள் உணர்ந்திருந்தால் அதைக் கையாளுவது எளிதாகிறது. படிப்படியாக அதை அதிக அளவில் கண்காணிக்கத் தொடங்கினால் அது வலுவிழந்துவிடும். அதனால் கீழுள்ளதைச் செயற்படுத்தவும்.



- உங்கள் மௌனம் குறித்து நீங்களே எச்சரிக்கையாக இருக்கவும்.
- மௌனத்துக்கான உங்கள் எதிர் நடவடிக்கையின் விழிப்புணர்வைக் கூர்மையாக்கிக் கொள்ளுங்கள்.
- மௌனத்தை எளிதாக ஏற்றுக்கொண்டு அதனோடு செயற்படத் தொடங்குங்கள்.
- எதிர்மறையாக இல்லாமல் ஆக்கபூர்வமான முறையில் மௌனத்தைப் பயன்படுத்தவும்.

மௌனத்தை நல்ல முறையில் கையாண்டால், அதிக கவனிப்பும், முனைப்பும் உடையவராக ஆகலாம். ஆக்கபூர்வமான மௌனம் என்பதற்கு அர்த்தம் அமைதியாகச் சலனமில்லாமல் இருத்தல் [illegible]ானே தவிர, விரைவா[illegible]ச்சலுடனும் ஓடும் இயந்திரம் போல் உங்கள் மனம் செயல்படாமல் இருத்தல் என்று அர்த்தமல்ல. இந்த அமைதித் தன்மையை உங்களைச் சுற்றி உள்ளவர்கள் [illegible] விரைவாக உணர்ந்து அதற்குப் பதில் நடவடிக்கையை அமைதியாக எடுப்பார்கள்.

மற்றவர்களைச் சந்தடியில்லாமல் செய்யவும் மௌன நிலை செயற்படுகிறது. சிலர் ஓயாமல், நிறுத்தாமல் உங்களுக்குப் பதில் அளிக்கக்கூட நேரம் கொடுக்காமல் பேசிக் கொண்டே இருப்பார்கள். அப்போது நீங்கள் மௌனத்தைப் பயன்படுத்தி ஓர் இயல்பான வலியற்ற முடிவுக்குக் கொண்டு வரலாம். ஆக்கபூர்வமான எதிர் வினைகளான தலையாட்டுதல், முகபாவங்கள், மற்ற வகையான வார்த்தைகளால் வலிமைப்படுத்துதல் போன்றவற்றைச் செய்து அவரை உற்சாகப்படுத்தாமல் சும்மா இருக்கவும். வெற்று முகபாவனையை எதிர்கொள்ளும் எந்த ஒரு சராசரி நபரும் தம் பேச்சை உடனே நிறுத்திக் கொள்வார், இரண்டு நிமிடங்களுக்குள்ளாகத் தாமும் மௌனமாகிவிடுவார்.

சிறப்பாகத் தகவல் பரிமாற்றம் செய்யக்கூடிய தலைவர்கள், சொற்பொழிவாற்றும்போது மக்களுடைய மௌனத்தைக் கவனமாகக் கேட்பார்கள்.

உற்சாகமாக ஏற்றுக் கொள்ளல், வெறுப்போடு எதிர்த்தல், வெளிப்படுத்தாத கவலை போன்றவற்றை மக்களின் மௌனத்திலிருந்து தலைவர்கள் புரிந்து கொள்வார்கள். முனைப்பாக இருத்தல், கவனமாகக் கேட்டல், உறுதியாக நிலைத்து நிற்றல் என்பதன் மூலம் [illegible]

மற்றவர்களைச் சந்தடியில்லாமல் செய்யவும் மௌன நிலை செயற்படுகிறது. சிலர் ஓயாமல், நிறுத்தாமல் உங்களுக்குப் பதில் அளிக்கக்கூட நேரம் கொடுக்காமல் பேசிக் கொண்டே இருப்பார்கள். அப்போது நீங்கள் மௌனத்தைப் பயன்படுத்தி ஓர் இயல்பான வலியற்ற முடிவுக்குக் கொண்டு வரலாம்.



## தேசத்துக்காக....

துப்பாக்கி மௌனித்த-எம்
தாய் தேசத்தில்
மீண்டும் பிண மாரி
பொழியாமல்
முழுதும் அருள் மாரி
பொழியட்டும்...

இளைஞனே
இடைவேளை விட்ட பின்பும்
என்ன தயக்கம்
பக்திச் செங்கோலை உன்
இதயத்தில் ஊன்றி விடு

ஒரு இயேசுவாக
ஒரு புத்தனாக ஒரு நபியாக
உன்னைத் துறக்கச்
சொல்லவில்லை


சுயநலத்தை மட்டும்
துறந்தால் போதும்

வில்லெடுத்த பார்த்தீபன்
ஞானத்தையும் கடந்தே
சென்றான்....
தன் தேசத்துக்காக
என்பதை-நீ
ஒரு போதும் மறவாதே
வன்முறையை வரையறை
செய்து உன் நடைமுறையை
புனிதமாக்கு
சிலிர்க்காத மொட்டுக்களும்
நாளை சிலிர்ப்பதற்கு.....

சா.ரமேஸ்குமார், மருதனார்மடம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 15 12 2013 ஞாயிற்றுக்கிழமை




## சிறகிழந்த பறவைகள்

விதி செய்த சதியால்
விலங்கு மாட்டினோம்!
சிறகொடிந்த பறவைபோல்
சிறைக்குள் வாடுகின்றோம்!
விழி தூங்க மறுக்கின்றது
விடுதலை யெண்ணி!
முட்கம்பி வேலிச் சுருளினுள்
முகவரியிழந்து எதிர்காலம்
கடக்கின்றது!
கறைபடிந்த எம் வாழ்வுக்கு
கண்ணீர்தான் முடிவன்றோ
கனத்த இதயத்தோடு
கம்பிக் கூட்டினுள் காலம்
கழிகின்றது!
சொந்தங்களைத் தொலைத்து
சோகங்களை
சுமக்கின்றோம்!
சோதனைக் காலமிதோ
சோபையிழந்து
தவிக்கின்றோம்!
நிலை குலைந்து
உலை வைக்க முடியாத -
குடும்ப நினைவுகள்
நிழல் படர்ந்த சகதியில் நாம்!
துன்புற்று அழுது
புலம்புகின்றோம்
துயர் துடைக்க யாருமின்றி
அநாதைகளாய்!
புண்பட்ட நெஞ்சுக்கு
புத்துயிரூட்ட வருவார்
யாரென்ற ஏக்கத்தில்!
கையெடுத்துக் கும்பிட்டும் -
கடவுள்
கண்திறவாததேனோ!
சத்தமின்றி நிசப்தமாகும்
இரவுகளை
சங்கடத்துடன் தினமும்
சந்திக்கின்றோம்!
புலரும் பொழுதுகளில் பூக்கள்
மலர்கின்றன
புன்னகையிழந்து எம் கதை
தொடருது கண்ணீரில்!
இரக்கமுள்ளம் கொண்டவரே
இருள் சூழ்ந்த
வெஞ்சிறையிலிருந்து எமை
மீட்கீரோ!

*கொட்டடி கோமகன், யாழ்ப்பாணம்.*
*தமிழ் அரசியல் கைதி, புதிய மகஸின் சிறை.*



## சொற்சிலம்பம் - போட்டி இல: 296



அனுப்புபவர் பெயர்:....................................

விலாசம்:....................................

....................................

கையொப்பம்:....................................

### இடமிருந்து வலம்

1. இணக்கம்
5. ஒரே அ[illegible]ன
7. இரும்பைக் கவர்வது
8. விளையாட்டு உபகரணம்
9. கணவன்- மனைவி
11. பெருக்கல் குறி
12. உள்
13. வரும்படியாகக் கிடைப்பது
15. நண்பகல் வேளை
17. தங்களுடைய
18. குளிர்மையான பானம்
20. பல சொற்கள் கொண்டு பூர்த்தியாவது
22. வஞ்சகம்
24. திடுக்காட்டம்
25. அகழும்

### மேலிருந்து கீழ்

1. தோழன்
2. மெதுவான வேகம்
3. தேர்
4. நிகழ்வு
5. இது குளிர்ச்சி தரும்
6. இனிமையானது
10. செல்வம்
12. அம்பிகாவதி மனம் கவர்ந்தவள்
14. பெண்கள்
16. காற்றோட்டம் இதனால் வரும்
19. தீயைத் தீண்டினால்
21. தோழி
23. பாரம்

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி *நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 294 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) ஏகபோகம் (7) வரைதல் (8) கருது (9) கவிஞன் (11) பொன் (12) மனிதன் (14) வெறி (15) புலி (16) குத்தகை (18) பங்கு (20) மதலை (21) மிருகம் (22) தில் (23) அகவல்பா.

### மேலிருந்து கீழ்

(1) ஏவல் (2) கரை (3) போதகன் (4) கல்வி (5) கரு (6) விதுரன் (8) கன்னி (10) ஞமலி (11) பொறித்தல் (13) தடங்கல் (14) வெகுமதி (15) புகை (17) தலை (18) பருவ (19) கும்பா (21) மிக

**★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.**

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 296**
[illegible] உதயன் பப்ளிகேஷன்
[illegible] ]லிமிட்டெட்,
[illegible]லக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் [illegible]மைக்கு முன்னர், (25.12.2013) [illegible]கதிக்கு முன்னர்) கிடைக்கத் [illegible] [illegible]லட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்[illegible] போட்டி [illegible]296இல் வெற்றி பெறுவோர்களது விபரம் [illegible]2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 294 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**ச.சதீஸ்குமார்,**
கிளி/ சென்.திரேசா மகளிர் கல்லூரி, கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு**
**யோ.ஆன்.டினுயா,**
சென்.செபஸ்தியார் லேன், சில்லாலை, பண்டத்தரிப்பு.

**3 ஆம் பரிசு**
**கிளி சிவராசா,**
முள்ளானை, இளவாலை.

**4 ஆம் பரிசு**
**சி.சயந்தன்,**
இல.208, ஹொரவப்பொத்தன் வீதி, வவுனியா.

**5 ஆம் பரிசு**
**சி.யோகராசா,**
முகமாலை, எழுதுமட்டுவாழ்.

### பாராட்டுப் பெறுவோர்

**என்.ஜெயந்தினி,**
NAITA இல:44, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

**செல்வி ஆரணி சதீஸ்வரன்,**
நாவலடி, புலோலி மத்தி, பருத்தித்துறை.

**ஜெ.அரவிந்தன்,**
இல.132, புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் [illegible] காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயமோகன்

# பழகாத உண்மைகளை அறிவோம்



சிந்தனைக்கு எதிராக நம் சூழல் நம் மிடம் சொல் லும் ஒவ் வொரு சாக்குப் போக்கை யும் அறியாமை யின் வெற்றுப் பசப்பு என அருவ ருத்து அகற்றுவது மட்டுமே.

தேன்கூட்டுக்குள் அந்நியக் கூட்டைச் சேர்ந்த ஒரு தேனீயைப் பிடித்துப் போட்டால், அந்தத் தேன்கூட்டுக்குள் இருக்கும் மொத்தத் தேனீக்களும் கலைவதைக் காணலாம். சற்று நேரத்தில் அந்த அந்நியத் தேனீ கொல்லப்பட்டு வெளியே வீசப்படும். தேக்க முற்ற மூளைகளும் இப்படித் தான் புதிய கருத்தை எதிர்கொள்கின்றன.

## சிந்தனை முடக்கம்

எம் குழந்தைப் பருவத்தில் குடும்பச் சூழல், வெளிச் சமூகச் சூழலிலிருந்து இயல்பாகவே கொஞ்சம் கல்வி கிடைக்கிறது. அதன் பின்னர், கல்விக்கூடம் அளிக்கும் சிறிதளவு கல்வி. வாழ்க்கையில் எங்காவது ஓரிடத்தில் பதிந்து மேற்கொண்டு வாழப் பழகிவிட்டால், சிந்திப்பதை முற்றாகவே நிறுத்திவிடுகிறோம்.

நாம் ஏற்கெனவே அறிந்தவற்றைச் சொல்லும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையே நாம் விரும்பிப் பார்க்கிறோம். நாம் ஏற்றுக்கொண்ட கருத்தைச்சொல்லும்உரைகளையேவிரும்பிக் கேட்கிறோம். அவற்றையே பிறரிடம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவைதாம் நமக்குப் புரிகின்றன, நம்மை மகிழ்விக்கின்றன.

நாம் அறிந்திராத ஒரு புதிய கருத்து நம்முடைய அகத்தை நிலைகுலையச் செய்கிறது. நாம் அதுவரை உருவாக்கி வைத்திருந்த சிந்தனைகள் சரிகின்றன. ஆகவே, அது நமக்கு எரிச்சலூட்டுவதாக இருக்கும். கோபம் கொள்ளச் செய்யும். நாம் நம்பிக்கொண்டிருப்பதில் ஆழமான உறுதி நமக்கிருக்கும் என்றால், புதிய சிந்தனை நமக்குக் கேலிக்குரியதாகவும் தோன்றும்.

## மூன்று நிலைகள்

நம்முடைய அறிதலின் மூன்று படிநிலைகளை பௌத்த ஞானமரபு அடையாளப்படுத்துகிறது. ஒரு புதிய விஷயத்தை மனம் எதிர்கொள்ளும்போது எமது அகக் கட்டுமானமே அதிர்ச்சி அடைகிறது. அதை அந்தக்கரண விருத்தி என்கிறது பௌத்தம். முதன்முதலில் கடலைப் பார்க்கும் குழந்தை திகைத்துச் சொல்லிழந்து அப்படியே விழித்துப் பார்த்து அமர்ந்திருப்பது அந்தக்கரண விருத்தி நிகழ்வதால்தான்.

அதன்பின் நாம் அந்தப் புதிய அனுபவத்தை நாம் ஏற்கெனவே அறிந்து வைத்திருக்கும் அறிவின் ஒரு பகுதியாக மாற்றிக்கொள்ள முயல்கிறோம். ஏற்கெனவே நாம் அறிந்திருக்கும் அறிவெல்லாம் மொழியில் இருப்பதால் அந்தப் புதிய அனுபவத்தையும் மொழிக்குள் கொண்டு வருகிறோம். அந்தப் புதிய அறிதலுக்கு ஒரு பெயரிடுகிறோம். குழந்தை "பெரீய்யயய தண்ணி" என்று சட்டெனக் கைநீட்டிக் கூவுகிறது. இதை சப்தாகரண விருத்தி என்கிறது பௌத்தம்.

அந்தப் பெயர் வழியாக அந்தப் புதிய அறிதல் நாம் அறிந்த ஒன்றாக மாறிவிடுகிறது. அதன் பிறகு, அந்தப் பெயருடன் நாம் அறிந்த அனைத்தையும் இணைக்க ஆரம் பித்துவிடுகிறோம். இதுதான் அது என அடையாளப்படுத்துகிறோம். இதை பௌத்தம் தத்தாகரண விருத்தி என்கிறது.

இந்த மூன்று படிநிலைகளாக நிகழும் அறிதல் என்பதுதான் மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள பேரின்பம். பௌத்த சிந்தனையும் சரி, வேதாந்தமும் சரி மனிதன் உடல்கொண்டு, உயிர்கொண்டு வந்து வாழ்ந்திருப்பதே படிப்படியாக மலரும் அறிவின் பொருட்டு மட்டும்தான் என்கின்றன.

நம்முடைய வாழ்க்கையின் மகத்தான நிமிடங்கள் என்னென்ன என்பதைக் கொஞ்சம் பின்னால் திரும்பிப் பார்த்தால், அவையெல்லாமே நாம் புதியதாக எதையாவது கண்டு, அறிந்து, உணர்ந்த தருணங்கள் என்பதை அறியலாம். முதன்முதலாகப் பார்த்த மலை, முதலில் கண்ட கடல், முதற் காதல், முதல் காமம், முதல் குழந்தையை மார்போடு அணைத்த தருணம்... அதன்பின் எங்கோ அந்த முதல் அனுபவம் என்பது நின்றுவிடுகிறது. எல்லாம் பழைய அனுபவங்களாக ஆகிவிடுகின்றன. அங்கே உண்மையில் வாழ்க்கையும் நின்றுவிட்டிருக்கிறது. சிந்தனையில் இப்படி முற்றிலும் புதிய ஒன்றை எதிர்கொண்டு நிலைகுலைந்த கடைசித் தருணம் எது என்று யோசித்துப் பாருங்கள். நம் கல்லூரிக் காலத்துக்குப் பின் அப்படி ஒரு சலனமே நமக்குள் நிகழ்ந்ததில்லை என உணர்வீர்கள்.



புதுச் சிந்தனைகளைத் தவிர்ப்பதற்காக நாம் ஒவ்வொருவரும் ஏராளமான வழிகளைக் கண்டுவைத்திருக்கிறோம். நம்முடையது மூளைச் சோம்பல் மிக்க ஒரு சமூகமாதலால், நம் சூழலிலேயே புதிய சிந் தனைகளைத் தவிர்ப்பதற்கான ஏராளமான பேச்சுக்கள் புழங்குகின்றன.

முதல் கேள்வி, இதனால் என்ன பயன்? இந்தச் சிந்தனைகளால் எமது உலகியல் வாழ்க்கைக்கு ஏதாவது பயனுண்டா? வாழ்க்கை என்பது பணத்தையும் அதிகாரத்தையும் ஈட்டுவது மட்டும்தான் என்ற நம்பிக்கையிலிருந்து எழக்கூடிய கேள்விகள் இவை. அதே கேள்விகளை அவர்களிடம் திருப்பிக் கேட்க முடியும். உங்கள் பிள்ளைகளைப் பணக்காரர்களாக ஆக்கிவிட்டுச் செத்துப் போவதன் வழியாக நீங்கள் அடையும் இன்பம் என்ன?

## அறிதலின் பேரின்பம்

அறிதல் என்பது தன்னளவில் பேரின்பம். நுகர்வு மூலம் அதிகாரம் வழியாக அடையும் போலி இன்பங்கள் எவையும் அதற்கு நிகரல்ல. உலகியலில் உண்மையான இன்பம் என ஏதுமில்லை. ஓர் இன்பத்தை அடைந்ததுமே அது முக்கிய மல்ல; அதற்கும் அப்பால் உள்ள இன்னொன்றே இன்பம் என்று தோன்றவைத்து, கடைசிக்கணம் வரை ஓட வைத்துக் கொண்டே இருக்கும் ஒரு போதை அது.

தேவையில்லாதவற்றை ஏன் அறிந்து கொள்ள வேண்டும்? என்பது இரண்டாவது வாதம். தேவையில்லாதவற்றின் மீது நம் கவனம் நிலைப்பதே இல்லை என்பதே அதன் பதில். இலக்கியத்தில் ஆர்வம் உடையவன் ஒருபோதும் பங்குச் சந்தை நிலவரத்தைக் கூர்ந்து கவனிக்கப்போவதில்லை. ஒவ்வொருவருக்கும் அவரது அகத்தின் இயல்புக்கு ஏற்ப ஒரு தேடல் உண்டு. அந்தத் தேடலுக்கு விடையாகும் விஷயங்களை மட்டுமே அவரால் கவனிக்க முடியும்.

இவை உலகியல் வினாக்கள். போலி ஆன்மிகத் தளத்திலிருந்து ஒரு வினா எழும். "இந்த மாதிரி எதையெதையோ தெரிந்து கொண்டு என்ன நடக்கப்போகிறது? மனிதன் தன்னை அறிய வேண்டும்... தன்னை அறிவதன் வழியாகப் பரம்பொருளின் உண்மையை அறிய வேண்டும்..." அதற்கு இவையெல்லாம் தேவையே இல்லை.

இந்தியப் பெருங்கண்ட எந்த ஞானமரபிலும் இந்தக் கூற்றுக்கு ஆதரவில்லை. இது வெறுமே மூளைச் சோம்பலுக்குச் சொல்லப்படும் சாக்குப்போக்கு மட்டுமே. பௌத்தம் கூறும் ஓர் உவமை; மனிதக் குலத்தில் எவருக்கும் மேலே நிமிர்ந்து நோக்கி சூரியனைப் பார்க்கும் பார்வை இல்லை என்று வைத்துக் கொள்வோம். மண்ணிலுள்ள பல்லாயிரம் பொருட்களில் ஒளிவிடும் பிரதிபலிப்புகள் வழியாகவே சூரியனைக் கண்டுணர முடியும். பரம்பொருள் என்ற ஓர் ஒற்றை உண்மை இருந்தாலும், நம்மைச் சூழ்ந்துள்ள பல கோடி உண்மைகளை அறிவதன் மூலமே அதை நாம் அறிய முடியும். அறிந்தவர்கள் எல்லாம் அப்படி அறிந்தவர்களே.

## மகா தர்மம்


இங்குள்ள ஒவ்வொன்றிலும் உறையும் தர்மம் என்ற மாற்றமில்லா விதியின் ஒட்டுமொத்தப் பேருருவமே மகா தர்மம் என்று பௌத்தம் சொல்லும். இங்குள்ள அனைத்திலும் உறையும் சாராம்சத்தின் முழுமையே ஈசன் என்று ஈஸோவாஸ்ய உபநிடதம் சொல்லும். இவற்றை அறிவதன் உச்சமே அந்த அறிதல். சின்னச் சின்ன உண்மைகளை எதிர்கொள்வதற்குச் சோம்பல் கொள்ளக்கூடியவர்கள் எப்படிப் பேருண்மையை' மட்டும் உள்வாங்கிக்கொள்ள முடியும்?

இரு நூறாண்டு காலமாக, பிழைப்பது மட்டுமே வாழ்க்கை என்று நம்பக்கூடிய ஒரு பெருங்கூட்டமாக நாம் மாறிவிட்டிருக்கிறோம். நம் ஒவ்வொரு அறிவுத் துறையிலும் இருக்கும் தரவீழ்ச்சிக்கான காரணம் இதுதான். இதை வெல்ல ஒரே வழி, சிந்தனைக்கு எதிராக எமது சூழல் எமக்குச் சொல்லும் ஒவ்வொரு சாக்குப்போக்கையும் அறியாமையின் வெற்றுப் பசப்பு என அருவருத்து அகற்றுவது மட்டுமே.

*(கட்டுரையாளர் இந்தியாவின் பிரபல தமிழ் எழுத்தாளர்)*

## அலுவலகம் வெறிச்சோட அரங்குகளில் நில்லாதீர்

பத்திரிகைகள் தரும் செய்திகளைப் பார்க்கிறோம்
பட்டறிவு தந்த பாடங்களால் எழுதுகின்றேன்
அமைச்சர்களே உம் பின்னால் அடிவருடிகளின் கூட்டம்
அலை மோதி நிற்கின்றது அடிவருடித் தான் வளர
அமைச்சர் அமைச்சர் என்று அழகாகப் புகழ்ந்தேத்தி
ஆனந்தப் படுத்தி அடியோடு வீழ்த்துவதை அறியும் இவ்வுலகு
பச்சைக்கும் கொடி பிடிக்கும் சிவப்புக்கும் கொடி பிடிக்கும்
இச்சைகளைத் தீர்ப்பதற்கு எக்கொடியும் தான் பிடிக்கும்
பச்சோந்திகளின் பசப்பிற்கு எடுபடாது
இச்சந்ததிக்கு உழைப்பதற்கே உமையிங்கு தேர்ந்துள்ளார்
கல் வைக்க ஓர் விழா கல்லெடுக்க ஓர் விழா
கொட்டிலுக்கு கூரை போட கொடி பிடிக்க ஓர் விழா
மெல்ல அழைத்தும்மை செல்லாக் காசாக்குவார்
பொருத்தமானவற்றைத்
தேர்ந்து வருத்தா தவறைத் தவிர்த்து
அலுவலகம் வெறிச் சோட அரங்குகளில் நில்லாது
மாலைகளைத் தேடி மதி கெட்டு ஓடாது
கைதட்டலுக்காகப் பொய்களைப் புகலாது
செய்யக்கூடிய கூடியவற்றை செயலாக்கிக் காட்டி
மெய்யாக உழைத்தெம்மை மேன்மையுறவைப்பீர்



வயவையூரான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யார் சொல்வதைக் கேட்பது?



மன்னர் மதிசீலருக்கு ஒரு சந்தேகம் வந்தது. தாய் சொல்லைத் தட்டாதே. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை... என்கிறார்கள்! இரண்டு பேரும் ஒரே கருத்தைச் சொன்னால் பிரச்சினை இல்லை. மாற்றிச் சொன்னால் யார் சொல்வதைக் கேட்பது? என்று அமைச்சர் அருள்மதியிடம் கேட்டார். அவருக்கும் குழப்பமாக இருந்தது. தாய் எப்போதும் தன் குழந்தை நலனில் அக்கறை உடையவள். ஆனால் தந்தை வெளி உலக அறிவுடன் ஆலோசனை சொல்பவர். எதற்கும் நம் குலகுருவிடம் விளக்கம் கேட்கலாம்.. என்றார் அவர். காட்டில் தவம் செய்யும் குலகுருவின் குடிலை அடைந்து அவர் முன்னால் பய பக்தியுடன் அமர்ந்தனர். அவர் கண்களை மூடித் தியானத்தில் இருந்தார். அப்போது குருவின் மனைவி தன் மகனிடம், மகனே மன்னருக்கும் அமைச்சருக்கும் பழங்கள் எடுத்து ஒரு தட்டில் வை. நான் பால் எடுத்து வருகிறேன் என்றார்.

குரு கண்ணை மூடியபடி மகனே விசாகா... ஓலைச் சுவடியுடன் வா.. எழுத்தாணியால் நான் சொல்வதை உடனே எழுது! என்றார்.

குருவின் மகன் விசாகன், ஒரு கணம் திகைத்தான் எதை முதலில் செய்வது என்று?

பிறகு அன்னை கூறியபடி, பழங்களை ஒரு தட்டில் மன்னர் முன் பணிவுடன் வைத்தான்.

அதன் பிறகு ஓலைச் சுவடி, எழுத்தாணியுடன் தகப்பனார் முன் அமர்ந்தான். அமைச்சருக்குப் புரிந்துவிட்டது.

மன்னா இருவர் சொல் வதையும் கேட்டுத் தன் சுய அறிவால் முடிவெடுத் தான் விசாகன்..! வாருங்கள் போகலாம் என்றார்.


## லிங்கனின் மதம்

அமெரிக்க அதிபராக ஆபிரகாம் லிங்கன் இருந்தபோது அவரிடம், உங்களது மதம் என்ன? என்று ஒருவர் கேட்டார். அதற்கு லிங்கன், நல்லதைச் செய்யும்போது எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. கெட்டதைச் செய்யும்போது வருத்தம் ஏற்படுகிறது. இதுதான் என்னுடைய மதம் என்று பதில் அளித்தார்





அனிருத்தன்



சி.சுவேத்தா, தரம்-5
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தி.



ர.சபீனா, தரம்-8
யா/ ஆனைக்கோட்டை சி.சி.ரி.எம். பாடசாலை



ப.கயல்வேந்தன், தரம்-7
மு/ பாண்டியன்குளம் ம.வி.

## பழமொழிகள்

* அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்திதான்.
* அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் ஆகான்.
* ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வேண்டும்.
* அறு கெட நாணல் இடு ஊர் கெட நூலை விடு.
* இட்ட உறவு எட்டு நாளைக்கு நக்கின உறவு நாலு நாளைக்கு.
* இறைத்த கிணறு ஊறும் இறையாத கிணறு நாறும்.
* ஈர நாவிற்கு எலும்பில்லை.
* ஈனரை அடுத்தால் மானங் கெட வரும்.
* உண்மை சொல்லிக் கெட்டவரில்லை.
* உழுகிற மாடானால் உள்ளூரில் விலைப்படாதா?
* ஊர் கூடிச் செக்குத் தள்ள வேண்டுமா?
* ஊர் ஓடின் ஒத்து ஓடு ஒருவரோடின் பார்த்து ஓடு.
* எச்சில் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானா?
* எழுத்து இல்லாதவர் கழுத்து இல்லாதவர்.
* ஏதென்று கேட்பாருமில்லை எடுத்துப் பிடிப்பாருமில்லை.
* ஏரை நிறைந்தால் கரை கசியும்.
* ஐந்து பணத்துக்கு குதிரையும் வேண்டும். ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்.
* ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமா?
* ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லுதல்.
* ஒருவர் அறிந்தால் இரகசியம் இருவர் அறிந்தால் அம்பலம்.
* ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி.
* ஓர் ஊருக்கு ஒரு வழியா? ஒன்பது வழி.
* ஔவை சொல்லுக்கு அச்சமில்லை.

ஆ.கபத்திரா, தரம்-4ஏ.
யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தி.




## வெற்றிப் பாதை

*நான் என்ன செய்வேன்?*
*நான் எதைச் செய்வேன்?*
*நான் எப்படிச் செய்வேன்*
*என எண்ணுவதை விட*

*நான் இதைச் செய்வேன்*
*நான் இப்படிச் செய்வேன்*
*என்று எண்ணு உன் வெற்றிப்*
*பாதை அதிலே உருவாகும்*

## விடை தெரியுமா ? 241

### உங்களுக்கும் பரிசுகள்

1. ஆசியாவில் முதல் முதலாக கைத்தொழில் மயமான நாடு எது?
2. பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
3. உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம் எது?
4. நள்ளிரவு சூரியன் உதிக்கும் நாடு எது?
5. மரத்தின் கிளைகளில் இருந்து வேர்களைத் தோற்றுவிக்கும் தாவரம் எது?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடைகள் 239

1. தொலமி
2. காசியப்பன்
3. யானை
4. இஸ்ரேல்
5. பெங்குயின்

### விடை தெரியுமா?

தெரிந்தால் 21.12.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### வெற்றி பெற்றவர் விவரம் (238)


♥ சு.ஹரிபிரசாத், தரம்-4டி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

## தெரியுமா?

பகல் சூரியனைப் பற்றி உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். தினமும் காலையிலிருந்து மாலைவரை அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், நள்ளிரவுச் சூரியனைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

ஆர்க்டிக் பகுதியில் கோடைகாலத்தில் சூரியன் மறைவதில்லை. அது தலைக்கு மேலே சுற்றி வந்து கொண்டிருக்கும். எந்த நேரத்திலும் அது அடிவானத்தில் மறைவதில்லை. நள்ளிரவில் சூரியன் மறைவதுபோல் தோன்றினாலும் உடனே உதயமாகிவிடும். அதுதான் நள்ளிரவு சூரியன் என்று குறிப்பிடப்படுகிறது.

மலர்களில் ஆந்தோசயனின் என்னும் நிறப் பொருள் இருக்கிறது. அதுவே மலர்களுக்கு நிறத்தைக் கொடுக்கிறது. அது இல்லையென்றால் நாம் பல நிறங்களில் மலர்களைப் பார்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கவலையை மறக்க இயற்கை சிகிச்சைகள்

- இனியன்

கவலை இல்லா மனிதனைப் பார்ப்பது அரிதான ஒன்றாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் வெவ்வேறு கவலைகள் இருக்கத்தான் செய்யும். நாம் அவற்றை எவ்வாறு எதிர் கொள்கிறோம் என்பது தான் மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஒரு சிலர் தமது வாழ்க்கை முழுவதும் முடிவடைந்து விட்டதாக எண்ணி அதைப் பற்றியே மேலும் கவலைப் படத்தொடங்குவார்கள். ஒரு சிலரோ அதனை எதிர்கொண்டு கவலைகளை நீக்குவதற்கான வழிகளை மேற்கொள்வார்கள். கவலை அல்லது பதற்றம் என்பது எதைப் பற்றியோ பயம் கொள்ளும் உணர்வுக்குச் சமமானது. பொதுவாக மன அழுத்தத்தின் காரணமாகவே இந்தக் கவலை மற்றும் பதற்றமும் ஒருவரை தொற்றிக் கொள்கிறது. இதன் விளைவாக குழப்பமான மனநிலை, பயம், எதை நினைத்தாவது குழப்பமடைவது போன்றவைகளை அது ஏற்படுத்தும். கவ்லைகள் சிறிதாக இருந்தால் உங்கள் மனதையும் உடலையும் அது பாதிக்காது. தொடர்ந்து நீடிக்கும் கவலைகளும் பதற்றம் மனஅழுத்தம், குமட்டல் போன்ற மன ரீதியான பிரச்சினைகளையும் தலைவலி, உடல்அழுத்தம், தளர்ச்சிபோன்ற உடல் ரீதியான பிரச்சனைகளையும் உண்டாக்கும். சில நேரங்களில், கவலைகளைக் கட்டுப்படுத்த மருந்துகளை உபயோகிக்க வேண்டி இருக்கும். மருந்துகளைத் தொடர்ந்து உபயோகித்தால் பக்க விளைவுகள் ஏற்படுவதோடு உங்களை அதற்கு அடிமையாக்கிவிடும். அதனால், கவலைகளை குறைப்பதற்கு இயற்கையான முறைகளையே தேர்வு செய்யுங்கள். இயற்கை முறையில் கவலைகளைத் தீர்ப்பதற்கான சில வழிகள் இதோ:

## ஓய்வு முறைகள்

நீங்கள் கவலையுடன் இருப்பதாக உணர்ந்தால் அதில் இருந்து உங்கள் மனதை அமைதிப்படுத்துவதற்கான புதிய நம்பகமான வழிமுறைகளை கண்டறிய வேண்டும். ஒவ்வொரு மனிதருக்கும் வெவ்வேறு வழியான ஓய்வு எடுக்கும் முறைகள் இருக்கும். பாட்டுக் கேட்பது, நீண்ட தூரம் நடைபயணம் செய்வது, குளிப்பது அல் லது விருப்பமான படத்தைப் பார்ப்பது போன்றவைகள் பயனுள்ளவைகளாக நிரூபிக் கப்பட்ட சில வழிகளாகும். உங்கள் கவலைகளை குறைப்பதற்கு இதில் ஏதாவது ஒரு வழியை முயற்சி செய்யலாம். உங்கள் மனஅழுத்தத்தில் இருந்து உங்கள் மனதைதிசைதிருப்பிபுத்துணர்வை ஏற்படுத்தும்.

## யோகா மூச்சுப் பயிற்சி

நீங்கள் எதைப்பற்றியாவது கவலை கொண்டிருந்தாலோ எதைப்பற்றியாவது அதிருப்தி அடைந்திருந்தாலோ, அதனால் உங்கள் மனதில் எழும் எதிர்மறையான எண்ணங்களைப் போக்குவதற்கு யோகா சுவாசப்பயிற்சியை செய்யுங்கள். இந்த கட்டுப்பாடான மூச்சுப்பயிற்சியானது உங்கள் மனதையும் எண்ணங்களையும் கட்டுக்குள் வைக்க உதவும். யோகா மற்றும் யோகா மூச்சுபயிற்சி, இவை இரண்டுமே கவலையை தீர்ப்பதற்கான இயற்கை சிகிச்சை முறைகளாகும். யோகா மூச்சுப்பயிற்சியை பிராணாயம் என்றும் கூறுவார்கள்.

## உடற்பயிற்சி

தீவிரமான உடற்பயிற்சியும் கவலையைத் தீர்க்கும். சிறந்த, ஆரோக்கியமான இயற்கைச் சிகிச்சை முறையாகும். உடபயிற்சியினால் வெளியாகும் ஹாமோன்கள் கவலையையும் மனஅழுத்தத்தையும் குறைக்கும். ஒரு நல்ல உடற்பயிற்சிக்கு பிறகு நீங்கள் புத்துணர்வு பெற்று சக்தியை அடைந்து உங்கள் பிரச்சினைகளுக்கு வேறு புதிய வழியில் தீர்வு காண எண்ணுவீர்கள். உடற்பயிற்சியானது உங்கள் வாழ்வில் உள்ள எல்லா கோபங்களையும் வலிகளையும் போக்கும்.

தீவிர பயிற்சிகளாக கருதப்படுவவை உடற்பயிற்சிக் கூடங்கள், எடைபளுக்கள், ஓட்டப்பயிற்சி, நடனப் பயிற்சி போன்றவைகள் ஆகும்.

## தியானம்

தினமும் 15 நிமிட தியான பயிற்சி உங்களுக்கு பெரிதும் உதவி புரியும். இது ஒரு சிறந்த இயற்கை முறையான சிகிச்சையாகும். இது கவலைகளை குறைப்பதோடு மட்டுமல்லாது உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவி புரியும். உங்கள் மனதை அமைதியாக வைத்துக் கொள்ளவும் சுத்தம் செய்யவும் தியானப்பயிற்சி உதவுகின்றது.

# சிரிக்க.... சிந்திக்க.... சில வரிகள்

முத்துமணி



நாய்களைப் பற்றிய பல கதைகள் உள்ளன. அதுவும் அவற்றின் விசுவாசத்தைப் பற்றிய கதைகள் ஏராளம். நாய் நன்றியுள்ள செல்லப்பிராணி என்பதில் ஐயம் இல்லை. ஆனால் சமீப காலமாக வீட்டைக் காக்கும் தொழிலைக் கைவிட்டுவிட்டதோ என ஐயம் கொள்ள வேண்டியுள்ளது. காரணம் அண்மைக் காலமாக கொள்ளையர்களின் அட்டகாசம் பற்றிப் பத்திரிகைகளில் பத்தி பத்தியாக செய்திகள் வெளிவருகின்றன. ஆனால்ஒரு செய்தியாவது கொள்ளையர்களை நாய் கடித்து விரட்டியது அல்லது குரைத்து விரட்டியது என வராதா என்று ஆவலாக உள்ளது. வீட்டு நாய்கள் கொள்ளையர்களுடன் கூட்டமைப்போ என்றொரு சந்தேகமும் கூடவே எழுகிறது. இவைகளை (நாய்களை) இனி நாம் "நாய்கள்" என அழைத்தால் S.P.C.A அமைப்பினர் எம் மீது வழக் குத் தாக்கல் செய்தாலும் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை காரணம் அவைகள் அரசினால் பாதுகாக்கப்படும் செல்லப் பிராணியாக PROMOTE பண்ணப் பட்டு விட்டன. நீங்கள் உங்கள் பிள்ளைகளைத் தண்டிக்கலாம். ஆனால் நாய்களை மன்னிக்கவோ, நாயர்களை தண்டிக்கவும் நிந்திக் கவோ சட்டத்தில் இடமுண்டோ என சட்ட வல்லுநர்களைத் தான் கேட்க வேண்டும்.

சரி விடயத்துக்கு வருவோம்: இந்த நாயர்கள் செய்யும் லீலைகள் பல. அதில் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளைச் சறுக்கி விழுத்தி வித்தை காட்டுதல், காலையில் நடு ரோட்டில் நம்பர் வண், நம்பர் ரூ செய்தல் வழிப்போக்கர்களைக் கடிக்க விரட்டுவது என பல கடமைகள் அவைக்கு உண்டு. இந்த நம்பர் வண்ணுக்கு சிலர் ஆராய்ச்சி செய்து கேற்றில் [illegible] போத்தல்களில் [illegible] பாதுகாக்க முற்பட்டாலும், நம்பர் ரூவுக்கு என்ன பதில் நடவடிக்கை என ஆராய எவரும் முற்படவில்லை. காரணம் எஜமானர்களுக்கு அவை விசுவாசமாக எஜமானர் வீட்டில் நம்பர் ரூ செய்யாமல் ரோட்டில் காலைக் கடனை முடித்து விடுவார்கள். இதனால் ரோட்டில் பயணம் செய்யும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் வெட்டி ஓட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதுவும் நன்மைக்குத் தான் போல் தெரிகிறது. மோட்டார் சைக்கிள் பழகும் ஓட்டிகளுக்கு எட்டுப் போட நமது பொதுச் சொத்தான றோட்டே போதுமானது. வெட்டி வெட்டி எட்டுப் போட நல்ல களம். இதற்காக யாழ். முற்ற வெளிக்குச் செல்ல வேண்டியதில்லை. நாயர்களின் கல்யாண சீசன் வந்தால் இரவு பகலாகக் கொண்டாட்டம் நாயர்களுக்கு. எஜமானர்களுக்குத் திண்டாட்டம்.

என்னத்தைச் சொன்னாலும் மேல் நாட்டுச் செல்லப் பிரயாணி யான நாயர்கள் கொடுத்து வைத்தவர்கள். அவைகளின் சொகுசு வாழ்க்கை நமது நாயர்களுக்குத் தெரிந்தால் நடு ரோட்டில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தாலும் செய்வர். நமது இந்துக் கடவுள்கள் தமக்குரிய வாகனங்களாக மிருகங்களை SELECT பண்ணிவிட்டார்கள். அதில் வைரவருக்கு நாய்தான்- [illegible] நாயர்தான் வாகனம். [illegible] வணங்கும்போது இவரையும் வணங்குவோமாக.

இந்த நாயர்கள் விசுவாசமாக எஜமானர் வீட்டில் நம்பர் ரூ செய்யாமல் ரோட்டில் காலைக் கடனை முடித்து விடுவார்கள். இதனால் ரோட்டில் பயணம் செய்யும் சைக் கிள், மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் வெட்டி ஓட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குழந்தைப் பேற்றை தள்ளிப் போடாதீர்

- அபிநயா

நவநாகரிக உலகில், பெண்களில் பெரும்பாலானோர் வேலைக்கு செல்கின்றனர்: பொருளாதார ரீதியில், அவர்கள் நல்ல நிலைக்கும் வந்து விடு கின்றனர். ஆனால், பெண்களுக்கே உரித்தான, அரிய பொக் கிஷமாக, போற்றி அனுபவிக்க வேண்டிய, இனிமையான சூழல்களை இழந்து விடுகின்றனர். பருவத்தே பயிர் செய் என்பது பயிர்களுக்கு மட்டு மல்ல, பெண்களுக்கும் இது பொருந்தும். இளவயது பெண்கள், பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்காக, தன்னுடைய திருமண வயதை தள்ளிப்போடுகின்றனர். அப்படியே, 24 - 26 வயதுக்குள் திருமணம் முடிந்தாலும், நல்ல நிலைக்கு வந்தபின், குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என நினைத்து, பெரும்பாலானவர்கள் கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர்.

கருத்தடைச் சாதனங்களை உபயோகித்து, பல ஆண்டுகள் கழித்து, குழந்தை பெற விரும்பும் காலத்தில், அவற்றை நீக்கிக் கொண்டால், உடனடியாக கருத்தரிக்கலாம் என, திட்டம் தீட்டுகின்றனர். அது அவ்வளவு சுலபமல்ல. இவர்கள், இந்த எண்ணத்தை முதலில் மாற்றிக் கொள்ள வேண்டும்.

உடலில் மற்ற உறுப்புகளை விட, பெண்ணின் இனப் பெருக்க உறுப்புகள் விரைவாக முதிர்ச்சியடைந்து விடுகின்றன. பெண்ணின் நடுத்தர வயதிலேயே, மாதவிலக்கு முற்றுப் பெறுவதால், கருத்தரிப்பதற்கான வாய்ப்பு இல்லாமலேயே போய் விடுகிறது.

பெண்ணின் வயதைப் பொறுத்து, அவளது கருமுட்டைகளும் பாதிக் கப்படுகின்றன. உடல் ரீதியாக, கருப்பை முதிர்ந்து, கருத்தரிப்பதற் கான வாய்ப்பைக் குறைக்கிறது. முப்பது வயதுக்கு மேற்பட்ட நிலையில், செயற்கை முறையில், கருத்தரிப்பு ஏற்படுத்திக் கொள்ளும் பெண்களின் கர்ப்பம் நிலைப்பதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன.

வயதுஆகஆக, உடலின் ஆற்றல் குறைகிறது. மேலும், உடலில் ஹார்மோன் மாற்றங்கள் பல நிகழ்கின்றன. உயர் ரத்த அழுத் தம், கருப்பையில் கழலைகள், சினைப்பையின் செயல் திறன் குறைதல், நோய் எதிர்ப்பு திறன் குறைவு, உடல் பருமன், நீரி ழிவு, ரத்த சோகை போன்ற பிரச்னைகளை, பெண்கள் சந்திக்க நேரிடுகிறது. இதில், பெரும் பங்கு வகிப்பது மாத விலக்கு குறைபாடு. ஹார்மோன் குறைவி னால், ஒழுங்கற்ற உதிரப்போக்கு. அதாவது, விட்டு விட்டு வருதல், சினைப்பையால், கருமுட்டைகளை உருவாக்க இயலாத நிலை போன்றவை ஏற்படுகின் றன.

கருத்தடை மாத்திரைகளை சாப்பிடுபவராக இருந் தால், அவற்றை நிறுத்திய மூன்று மாதங்களுக்கு பிறகு, கருத்தரிக்கும் வாய்ப்பை உண்டாக்கிக் கொள்வது நல்லது. ஏனெனில், இந்த மூன்று மாத இடைவெளியில், உடலில் உள்ள ஹார்மோன் களின் நிலை, பழைய நிலலக்கு திரும்பி விடும். உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

மேலும், 30 வயதுக்கு மேல் கருத்தரிக்கும் பெண் களுக்கு, கருச்சிதைவு அதிகளவில் ஏற்படுகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல், பய ணம், மன நிலை போன்றவை, இளம்வயதினரை விட, வயது முதிர்ச்சி அடையும் நிலையில், அதிக பாதிப்பை ஏற்படுத்துவதால் கருச் சிதைவு தவிர்க்க இயலாததாகி விடுகின்றது. முதிர் வயது பெண்கள் பிரசவிக்கும் போது, இடுப்புக்கூட்டு பகுதியிலுள்ள, எலும்புகளின் விரிந்து கொடுக்கும் தன்மை, வெகு வாக குறைந்து விடுவதால், சுகப் பிரசவம் நடப்பது அரி தாகிறது. இதனால், சிசேரியன் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

இவை அனைத்தும் அறிவி யல் பூர்வமானது என்பதா லேயே, மருத்துவர்கள், உரிய வயதில், குழந்தைப் பேறு அடைய வேண் டும் என்கின்றனர். ஆகவே, தாய்மையை அனுபவிக்க 20 முதல் 30 வயது வரை சரியான பருவம் . இதனால் தான், நம் முன்னோர், பரு வத்தே பயிர் செய் என்ற னர். இதைக் கருத்தில் கொண்டு, ஏற்ற வயதில் குழந்தைப் பேறை அடைய வேண் டும் , அப்போதுதான் தானும்ஆரோக் கியமாக இருக்க முடியும். குழந்தையையும் ஆரோக் கியமாக வளர்க்க முடியும்.



## அறுவை சிகிச்சை பிரசவத்தால் ஏற்படும் பிரச்சினைகள்...

தற்போது பெரும்பாலான பெண் களுக்கு அறுவைசிகிச்சை பிரசவத் தையே சிறந்ததாக சொல்கின்றனர். ஆனால் உண்மையில் அறுவை சிகிச்சை பிரசவத்தின் போது அவ்வளவாக வலி தெரியாவிட்டாலும் அந்த மாதிரியான பிரசவத்துக்குப் பின்னர் வாழ்நாள் முழுவதும் ஏற்படும் பக்கவிளைவுகளைப் பற்றி யாரும் யோசிக்கவில்லை. அறுவை சிகிச்சை பிரசவத்தை தேர்ந்தெடுத்தால், அதற்கு பின்னர் நிறைய பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடும். அவ்வாறு அறுவைச்சிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுக்கும் பொழுது வயிற்றில் ஏற்படும் தழும்பானது வாழ்நாள் முழுவதும் அப்படியே இருக்கும்.

அதுமட்டுமின்றி அவ்வாறு அடி வயிற்றில் அறுவைசிகிச்சை செய் யும் போது, பிற்காலத்தில் வேறு ஏதாவது அறுவைசிகிச்சை வயிற்றில் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால், அது மிகுந்த ஆபத்தை ஏற்படுத்திவிடும்.

சுகப்பிரவத்தை விட அறுவை சிகிச்சை செய்து குழந்தை பெற்றவர்களுக்கு குறைந்தது 3 மாதஓய்வானது அவசியம். வேலை செல்லும் பெண்களுக்கு இது மிகவும் பிரச்சனையாகி விடும்.

ஏனெனில் அலுவலகத்தில் மகப் பேறு விடுப்பு மூன்று மாதம் என்பதால், அதற்கு மேல் விடுப்பு எடுத்தால், சம்பளத்தில் பிடித்துக் கொள்வார்கள் என்பதை விட, குழந்தையுடன் அதிகமான நேரத்தை செலவழிக்க முடியாது. அதிலும் அறுவைசிகிச்சையின் போது தையல்கள் போட்டிருப் பதால், ஒவ்வொரு முறை சிரிக்கும் போதும், இருமலின் போதும், தையல் போட்ட இடத்தில் ஒருவித அழுத்தம் மற்றும் வலியை உணர நேரிடும். இதனாலும் முதுகு வலி ஏற்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள் உள்ளவரை ஆரோக்கியம்!

ஒவ்வொரு மனிதனும் உலகத்தில் கழிக்கும் தன் வாழ்நாட்களை ஆரோக்கியமான நாள்களாக கழிக்கவே விரும்புகிறான். அவ்வாறு ஆரோக்கியமான வாழ்க்கைக்கு நல்ல உடற்பயிற்சியும், ஆரோக்கியமான உணவுகளும் அவசியம். குறிப்பாக காய்கறிகள், பழங்கள், பருப்பு வகைகள் போன்ற உணவுகள் மனிதனுக்குத் தேவையான நோய் எதிர்ப்புச் சக்தியை வழங்குகின்றன.



## முந்திரிப் பருப்பு

முந்திரிப் பருப்பு இயற்கையின் அதிசயம். இதில் விற்றமின் பி, மெக்னீசியம், பொட்டாசியம், நார்ப்புரதம், ஆகிய சத்துகளைக்கொண்டது.
முந்திரி இதயத்தைப் பாதுகாப்பதோடு இதயம் சம்பந்தமான அனைத்து நோய்க்கும் சிறந்தது முந்திரிப் பருப்பு.



## பேரீச்சம்பழம்

பாலை நன்கு கொதிக்க வைத்து பேரீச்சம்பழத்தை அதில் கலந்து தினமும் இளம்பெண்கள், வளரும் குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் சாப்பிடவேண்டும். இது சிறந்த மருத்துவ பலன்களை கொண்டது.
இரும்புச்சத்து மற்றும் நார்ச்சத்து அடங்கியுள்ள பேரீச்சம்பழம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.
உடலில் உள்ள ஹார்மோன்களில் நிலையை சரிசெய்ய உதவுகின்றது.. ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சிகள் கொண்ட பெண்கள் தினமும் பாலுடன் இரண்டு பேரீச்சம்பழத்தைப் போட்டு கொதிக்க வைத்து பாலுடன் தேன் கலந்து ஒவ்வொரு நாளும் சாப்பிட்டு வந்தால் மாதவிடாய்ப் பிரச்சினை நீங்கும்.



## அக்ரூட் பருப்பு

உடல் பருமனாகக் காணப்படுபவர்கள் உடலை குறைத்து கட்டுக்கோப்பாக வைத்திருக்க விரும்பினால் அக்ரூட் பருப்புகளை சாப்பிடுவது நல்லது.
இதை சாப்பிட்டால் உடல் எடையை குறைத்து கொள்ளலாம். மேலும் நீரிழிவு மற்றும் உயர் இரத்தஅழுத்தநோயாளிகளுக்கு அக்ரூட் பருப்புகள் மிக நல்லது. அக்ரூட் பருப்புகள் இரத்த ஓட்டத்தைச்சீராக்கிமனஅழுத்தத்தைக் குறைக்க ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள்நிறைந்து காணப்படுகின்றன.



## உலர்திராட்சை

இரும்புச்சத்து கொண்ட உலர் திராட்சை பழத்தை இரத்த சோகையால் பாதிக்கப்பட்டவர்கள் சாப்பிடலாம். உங்கள் குழந்தைகள் எடை குறைவாக இருந்தால் ஒவ்வொரு நாளும் 5 உலர் திராட்சைகளை யாவது சாப்பிடக் கொடுங்கள். பின்னர் உங்கள் குழந்தையின் எடை அதிகரிப்பதை அவதானிக்கலாம். செரிமான கோளாறு மற்றும் மலச்சிக்கல் பிரச்சினையால் பாதிக்கப்படுபவர்கள் உலர் திராட்சை பழங்களைச் சாப்பிடலாம்.



## ஆரோக்கியமாக வாழ விருப்பமா? கரட் சாப்பிடுங்கள்



ஆண்கள் தினமும் அப்பிளை சாப்பிடுகிறார்களோ இல்லையோ, கரட்டை தவறாமல் சாப்பிட வேண்டும். ஏனெனில் கரட்டை ஆண்கள் உணவில் அதிகம் சேர்த்து வந்தால், அவர்களுக்கு நிறைய நன்மைகள் கிடைக்கும். அதிகம் சாப்பிட்டு வந்தால், அந்தப் பருவ காலத்தில் ஏற்படும் பல்வேறு உடல்நல பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம் என்று கூறுகின்றனர். இந்தக் கூற்று ஆண்களுக்கு மட்டுமன்றி, பெண்களுக்கும் தான்.
சரி, இங்கு கரட்டை ஆண்கள் தினமும் சாப்பிட்டு வந்தால் என்ன நன்மைகள் கிடைக்கும் என்று பட்டியலிட்டுள்ளோம். அதைப் படித்தால், நிச்சயம் இனிமேல் கரட்டை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வீர்கள்.

### இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்..

ஆண்கள் அவ்வப்போது இரத்தத்தைச் சுத்தப்படுத்த வேண்டியது அவசியம். அதற்கு வாரத்துக்கு 2 முறை கரட்டை ஜூஸ் போட்டு குடிக்கலாம். இல்லாவிட்டால், தினமும் ஒரு கரட் சாப்பிட்டு வரலாம்.

### செரிமானம்..

கரட் செரிமானத்துக்கும் உதவும். ஆகவே செரிமான பிரச்சினையால் அவஸ்தைப்பட்டால், ஒரு நாளைக்கு இரண்டு கரட்டை சாப்பிட்டு வந்தால், விரைவில் செரிமான பிரச்சினை நீங்கும்.

### வயிற்றுக் கோளாறு..

கரட்டை ஆண்களும் சரி, பெண்களும் சரி தினமும் சாப்பிட்டு வந்தால், வயிற்றில் ஏற்படும் பிரச்சினைகள் குணமாகும். அதிலும் வாயுத் தொல்லை இருக்கும் போது, கரட் சாப்பிட நீங்கும்..



கொலஸ்ட்ரோல்.. ஆண்கள் எப்போதுமே தங்களது உடலில் உள்ள கொலஸ்ட்ரோலின் அளவை கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்குத் தினமும் இரவில் உணவு உண்ட பின்னர் ஒரு டம்ளர் கரட் ஜூஸ் குடித்து வர, உடலில் உள்ள கொலஸ்ட்ராலின் அளவானது கட்டுப்பாட்டுடன் இருக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடாமல் வெற்றியில்லை



பெண்கள் வானத்தின் பாதியைத்தாங்கிக் கொண்டிருக்கின்றனர் என்றார் மாவோ.
பெண் இன்றிச் சூரியன் இல்லை; சந்திரன் இல்லை; விவசாயமில்லை; நெருப்புமில்லை என்பது அரபுப் பழமொழி. தாயாய், ஆண் கருவைச் சுமந்து, ஆண் மகவைப் பெற்றெடுக்கிறாள். சகோதரியாய், மனைவியாய், மகளாய், தோழியாய் ஆணோடு பிறந்து, வளர்ந்து, ஆணுடன் வாழ்க்கையை பகிர்ந்து கொண்டாலும், ஆணுக்குச் சமமாகப் பெண் ஏன் பார்க்கப்படுவதில்லை? ஆண்களுக்கென்றே பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட பணிகளில் பெண்கள் பணியாற்றத் தொடங்கிவிட்டனர். கண்ணாடிக் கூரைகளை உடைத்து, வெளியேறி முன்னேறி வருகின்றனர் பெண்கள் என்கின்றோம். இருப்பினும், இருபத்தியோராம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டு நிறைவுற்ற இத்தருணத்தில் உலகில் பெண்களின் அந்தஸ்து எவ்வாறு உள்ளது என ஆராயும் பொழுது, பல தடைகளைத் தாண்டிய போதும், அவள் போக வேண்டியுள்ள தூரம் மிகவும் அதிகம் என்று அறிய முடிகிறது. பெண்கள் இன்னமும் சக மனிதர்களாகப் பார்க்கப்படாத நிலை தொடர்கிறது.
பெண்கள் மனிதர்களா? என நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டு, ஆம், பெண்களும் மனிதர்கள் தான் என 1929ஆம் ஆண்டு பிரிட்டன் பிரிவு கவுன்சில் தீர்ப்பு வழங்கி 80 ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டன. விநோதமான இந்த வழக்கின் பின்னணி சுவாரசியமானது. 1867 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பிரிட்டன் வட அமெரிக்கச் சட்டத்தின்கீழ் மனிதர்கள் என்ற சொல் ஒன்றுக்கும் மேற்பட்ட மனிதனையும், மனிதன் (நபர்) என்ற சொல்லே ஆணை மட்டுமே குறிக்கிறது. 1876இல் இயற்றப்பட்ட பிரிட்டன் பொதுச் சட்டத்தைப் பொறுத்த வரை பெண்கள் மனிதர்களாக கருதப்பட்டமாட்டார்கள். ஆனால் வலி, தண்டனை ஆகியவை தொடர்பான விடயங்களில் மனிதர்கள் எனக் கருதப்படுவார்கள் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.
1916ஆம் ஆண்டு ஆல்பர்டாவில் (கனடா) எமிலி மர்பி என்ற பெண் முதல் பொலிஸ் மாஜிஸ்ட்ரேட்டாகப் பதவியேற்றார். ஆனால் பி.என்.ஏ சட்டத்தைச் சுட்டிக்காட்டி, அவரது நியமனம் செல்லாது என வாதிடப் பட்டது. பிரிட்டன் பொதுநலவாயத்தின் முதல் பெண் நீதிபதியாக 01.01.1916 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட எமிலி தொடர்ந்து எதிர்ப்புகளைச் சந்தித்தார். அவர் நீதிமன்றத்தில் முதல்நாள் எதிர்கொண்ட வழக்கு, ஒரு சாராய வியாபாரியின் வழக்கு. எமிலி அவனுக்குக் கடுமையான தண்டனை வழங்கினார். அப்பொழுது, சாராய வியாபாரியின் வக்கீல், எமிலி ஒரு பெண் என்றும், பி.என்.ஏ சட்டத்தைச் சுட்டிக்காட்டி, அவர் நபர் என்ற வரையறைக்குள் வராததால், அவர் அளித்த தீர்ப்பை ஏற்க இயலாது என மேல் முறையீடு செய்யவிருப்பதாகவும் வாதிட்டார். அவரது எதிர்ப்பைக் குறித்துக் கொண்ட எமிலி அமைதியாக இருந்தார். விசாரணையைத் தொடர்ந்தார். இதேபோன்று 1917ஆம் ஆண்டு, இளம் குற்றவாளிகள் நீதிமன்றத்தில் நீதிபதியாகச் செயற்பட்ட ஆலிஸ் ஜேமியன்சன் அளித்த தீர்ப்பையும் வக்கீல்கள் ஏற்க மறுத்தனர்.
1917இல் ஆல்பர்டா நீதிமன்றம் பெண்களும் மனிதர்களே எனத் தீர்ப்பளித்தது. எமிலி மர்பி கனடா நாட்டு செனட்டர் பதவிக்குப் போட்டியிட விரும்பி, தனது பெயரைப் பதிவு செய்து கொண்டார். ஆனால், அன்றைய கனடா பிரதமர் சர். ராபர்ட் போர்டென், அதை ஏற்க மறுத்து விட்டார். பி. என்.ஏ. சட்டத்தைச் சுட்டிக்காட்டிய பிரதமர், எமிலி செனட்டர் பதவிக்குப் போட்டியிட முடியாதெனத் தெரிவித்து விட்டார். இதையடுத்து, கனடா நாட்டுப் பெண்கள் குழுக்கள் கையெழுத்து இயக்கம் நடத்தி, கனடா நாட்டு செனட் பெண்களை உறுப்பினர்களாக ஏற்க மனு அளித்தனர்.
1927இல் எமிலி மர்பி கனடாவின் உச்ச நீதிமன்றத்தில் விளக்கம் கேட்டு வழக்குத் தொடுத்தார். பெண்கள் மனிதர்களா? என்பதே வழக்கின் மையக் கேள்வி. எமிலியுடன் சேர்ந்து ஹென் ரீட்டா எட்வர்ட்ஸ் நெல்லி மெக்ளங், லூயி மெக்கின்னே மற்றும் ஐரீன் பார்பை ஆகிய நால்வரும் அந்த வழக்கைத்தொடுத்தனர். பிரபல ஐவர், வீரமான ஐவர், நபர்/மனிதர் வழக்கு எனப் பல பெயர்களில் இந்த வழக்கு பிரபல்யமடைந்தது. 1928, ஏப்ரல் 4ம் திகதி, கனடா நாட்டு உச்ச நீதிமன்றம் பெண்கள் மனிதர்கள் என்ற விளக்கத்திற்குள் வர வில்லை என்று தீர்ப்பளித்தது. பி.என்.ஏ. சட்டம் உருவாக்கப்பட்ட போது பெண்களுக்கு வாக்குரிமை இருக்கவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளாக செயற்படவில்லை. சட்டத்தில் ஆண் என்றே அனைத்து பிரிவுகளிலும் குறிப்பிட்டிருந்தது. பிரிட்டனின் மேல் சபையான ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸில் ஒரு பெண் கூட அன்று இல்லை. எனவே கனடாவில் அச்சட்டத்தை மாற்றக்கூடாதென வாதிட்டனர். ஐந்து நீதிபதிகள் இந்த வழக்கை விசாரித்து விட்டு, தகுதியான நபர்கள் என்பதில் பெண்கள் இடம்பெறவில்லை என்று தீர்ப்பளித்தனர். பெரும்பான்மைத் தீர்ப்பு என்பதை பிரான்சிஸ் அலெக்சாண்டர் ஆங்லின் எழுதினார். அதை நீதிபதிகள் லமோல் மற்றும் ஸ்மித் ஆகியோர் ஏற்றுக் கொண்டனர். ஐந்து வாரம் நீதிமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. பெண்கள் மனிதர்கள் அல்ல என்று இறுதியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது.
மனம் தளராத அந்த ஐந்து பெண்களும் அன்றைய கனடா நாட்டுப் பிரதமரான மெக்கின்சி கிங் என்பவரின் உதவியுடன் பிரிட்டன் பிரிவு கவுன்சிலில் முறையிட்டனர். 18, ஒக்டோபர், 1929 அன்று லார்டு சான்கீ ஆம் பெண்கள் மனிதர்களே எனத் தீர்ப்பளித்தார். அத்துடன் கனடாவின் செனட்டர் பதவிக்கு அவர்கள் போட்டியிடலாமென்றும் அறிவித்தார். அவருடைய தீர்ப் பில், பொது இடங்கள், பொது வாழ்க்கையிலிருந்து பெண்களை ஒதுக்கி வைப்பதென்பது காட்டுமிராண்டித்தனமான செயல். பெண்கள் மனிதர்களா என்று கேள்வி எழுப்புகின்றவர்களே! பெண்கள் மனிதர்கள் இல்லையா என்று நான் கேட்கிறேன் என்று லார்டு சான்கீ எழுதியுள்ளார்.
1918ஆம் ஆண்டில் கனடாவில் சில பெண்களுக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. மனிதர்கள் வழக்கு கனடாவில் பெண்களின் வாக்குரிமை இயக்கத்திற்கு உத்வேகமளித்தது. 1960ஆம் ஆண்டில்தான் கனடாவில் அனைத்து பெண்களுக்கும் வாக்குரிமை கிடைத்தது. 1979ஆம் ஆண்டில் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கும், ஆண்-பெண் சமத்துவம் மற்றும் பெண்ணுரிமைப் போராளிகளாக 5 பேரைத் தேர்ந்தெடுத்து கவர்னர் ஜெனரல் விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து, ஒவ்வொரு ஆண்டும், இந்த வீரமிக்க ஐவர் விருது வழங்கப்படுவது தொடர்கிறது. அதுமட்டுமின்றி 2009ஆம் ஆண்டில், அந்த 5 பெண்களையும் கனடாவின் முதல் கௌரவ செனட்டர்கள் என்று கனடா செனட் அறிவித்தது குறிப்பிடத்தக்கது. உலகின் சட்ட வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள இந்தத் தீர்ப்பு, உலகெங்கிலுமுள்ள பெண்ணுரிமைப் போராளிகளை மகிழ்வடையச் செய்யும் என்பதில் ஐயமில்லை.




## இலங்கையின் விசாலமான பெருநிறுவனத்துடன் இணைந்து பெருநிறுவன துறையின் முன்னேற்ற பாதையில் பயணியுங்கள்

LOLC

LOLC மைக்ரோ கிரெடிட்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

GREAT PLACE TO WORK Best companies to work for 2013 Sri Lanka

[illegible] LOLC மைக்ரோ கிரடிட் [illegible] 150,000 [illegible] LOMC [illegible] 25 [illegible] 94 [illegible] 34 [illegible]

### நுண்நிதி உத்தியோகத்தர்கள் - குத்தகை - நேர்முகத் தேர்வு

நிறுவனத்தின் செயற்பாட்டு மற்றும் புதிய வாடிக்கையாளருக்குத் திறமையுடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றும் இயல்பைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கான அரிய வாய்ப்பு.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பூரண நுண்நிதிவசதிகளை வாடிக்கையாளருக்குச் சந்தைப்படுத்த வேண்டப்படுவர்.

மேற்படி பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகள் பின்வரும் தகுதிகளையும் திறமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

★ 20 - 27 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல்
★ க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியுடன்
★ க.பொ.த. (உ/த)பரீட்சையில் குறைந்த பட்சம் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
★ செல்லுபடியாகும் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் உரிமம் இருத்தல்.
★ நுண்நிதித்துறையில் முன் அனுபவம் இருத்தல் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

| திகதி | நேரம் | நேர்முகத் தேர்வுநடைபெறும்இடம் | பணிக்குரிய இடம் |
|---|---|---|---|
| 24/12/2013 | 9.00 - 12.00 | LOLC யாழ்ப்பாணக்கிளை, இல.37,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம்,நெல்லியடி, சுன்னாகம் |

மேற்குறிப்பிட்ட நேர்முகத் தேர்வுக்குப் பங்குபற்ற முடியாதெனின் மாத்திரம் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை உறவினர் அல்லாத இரு நடுவர்களின் விபரங்களுடன் கீழ்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
ஆட்சேர்ப்புப் பிரிவு, எல்.ஓ.எல்.சி.குழு,
இல.100/1, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
careers@lankaorix.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சார்பில் செஞ்சட்டைகள் களம் இறங்க தீர்மானம்

## தாய்லாந்து நெருக்கடி தொடர்கிறது

ரம்யன்

தாய்லாந்தில் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் சினோவாத்ரா தரப்பினருக்கும் எதிர்த் தரப்பிலிருக்கும் ஜனநாயக கட்சியினருக்குமிடையில் புரிந்துணர்வு ஒன்று ஏற்படக்கூடிய சூழ்நிலை கைநழுவிப் போய்க்கொண்டிருப்பதாக நடு நிலையாளர்கள் கருத்து வெளியிடுகிறார்கள். ஒரு மாத காலத்துக்கு மேல் எதிர்த் தரப்பினர் வீதிப் போராட்டங்களை நடத்தி ஆட்சிக் கவிழ்ப்புக்கு முயற்சி செய்துவரும் சூழமைவில் நிலைமைகளைச் சமாளித்து சுமூக நிலையை உருவாக்கலாம் என்ற நம்பிக்கையில் பிரதமர் யிங்லுக் சினோவாத்ரா அரசைக் கலைத்து புதிதாக தேர்தலை நடத்துவதற்கான ஒரு அறிவித்தலை வெளியிட்டார். 60 நாள்களுக்குள் புதிய தேர்தலை நடத்துவது பற்றியும் கூறியிருந்தார். ஆனால் எதிர்த் தரப்பினர் அதற்கு சம்மதிப்பதாகத் தெரியவில்லை.

எதிர்த்தரப்பினர் சினோவாத்ரா பதவியைத் துறந்துவிட்டு மக்கள் சபையொன்றிடம் ஆட்சிப் பொறுப்பை கையளிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் மக்கள் சபை என்பது அரசமைப்பின்படி உருவாகியதாக இருக்காது என்பது மட்டுமன்றி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒன்றாகவும் இருக்காது என்பதால் சினோவாத்ரா அதற்குச் சம்மதிக்க மறுத்து வருகிறார்.

சினோவாத்ரா ஆட்சியில் ஊழல் மலிந்துவிட்டதாக எதிர்த்தரப்பினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். அது தவிர அரசு கொண்டுவர விரும்பும் தேசிய பொது மன்னிப்புக்காக சட்டவாக்கம் ஒன்று நாடு கடந்து வாழும் பதவி துறந்த முன்னாள் பிரதமரும், இப்போதைய பிரதமரின் சகோதரருமான தாக்சின் சினோவாத்ராவை அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து காப்பாற்றி சுதந்திரமாக நாட்டுக்குள் அனுமதிப்பதற்கான முயற்சி என்றும் எதிர்த்தரப்பினர் சந்தேகிக்கிறார்கள். அது மட்டுமன்றி புதிய தேர்தல் ஒன்று நடத்தப்பட்டாலும் சினோவாத்ராவின் தாய்லாந்து தேசிய கட்சியே பதவிக்கு வரும் என்பதில் அவர்களுக்கு சந்தேகமில்லை. காரணம் நாட்டின் கிராமிய ஊரகப் பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான சாதாரண மக்கள் சினோவாத்ராவை ஆதரிக்கிறார்கள். உயர் பதவிகளில் இருப்போரும் மேல்தட்டு வாசிகளும் உயர் மட்ட இராணுவம் போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் மட்டுமே எதிர்த்தரப்பினருக்கான ஆதரவைத் தெரிவிப்பவர்களாகத் தெரிகின்றது. பொதுவில் பார்க்கப் போனால் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்டு பதவியிலிருக்கும் -கீழ் சபையில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் சினோவாத்ரா அரசை வெறும் ஆர்ப்பாட்டங்கள் மூலம் கவிழ்த்துவிட்டு தெரிவு செய்யப்படாத சபையொன்றிடம் ஆட்சியைக் கையளிக்க வேண்டும் என்பது எதிர்த்தரப்பினரின் உத்தேசமாக இருந்து வருகிறது என்பதே உண்மை நிலை.

நிலைமைகளை மேலும் சிக்கலடையச் செய்யும் வகையில் எதிர்த் தரப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக பதவி விலகியுள்ளார்கள். தேர்தல் ஒன்றை நடத்தப் போவதாக பிரதமர் தமது தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின் போது அறிவித்திருப்பது எதிர்த்தரப்பினர் ஏதாகிலும் ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த பத்து ஆண்டு காலத்தில் தாய்லாந்தில் நடைபெற்றுள்ள எல்லா தேர்தல்களிலுமே தாக்ஸின். சார்பு கட்சிகளே வென்றுள்ளன. இனிவரக் கூடிய தேர்தலிலும் அவர்களே வெற்றியடைவார்கள் என்று கருதப்படுகின்றது. பெரும் எடுப்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை எதிர்த்தரப்பினர் நடத்தி வருகின்ற போதிலும் யிங்லக்சினோ வாத்ராவின் கட்சி அமோக வெற்றியடையும் என்று நிபுணர்கள் பலர் கூறுகிறார்கள்.

நாடாளுமன்றத்தின் மூலம் தங்களால் எதனையும் சாதிக்க முடியவில்லையென்று கூறியிருக்கும் எதிர்த்தரப்பு ஜனநாயகக் கட்சியினர் . அதனால் 500 உறுப்பினர்களைக் கொண்ட கீழ் சபையில் தங்களின் 153 உறுப்பினர்களும் பதவிகளைத் துறந்துள்ள தாக அறிவித்துள்ளனர். அத்தோடு கடந்த 20 ஆண்டு காலத்தில் பெரும்பான்மையை ஒரு போதும் பெற்றுக்கொள்ள முடியவில்லையென்பதையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.



### செஞ்சட்டைகாரர் அரசுக்கு ஆதரவு

எதிர்க்கட்சியினரின் அரசுக்கு எதிராக வீதி ஆர்ப்பாட்டங்களை அதிகப்படுத்திவரும் அதேநேரம் அரச சார்பான செஞ்சட்டை இயக்கத்தினரும் ஆர்ப்பாட்டங்களில் இறங்கப்போவதாக அறிவித்துள்ளனர். பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தப் போவதாக பிரதமர் அறிவிக்கும் அளவுக்கு நெருக்குதல் கொடுத்துள்ள எதிர்த்தரப்பினருக்கு எதிராக பிரதமர் சினோவாத்ராவுக்கு ஆதரவாக செஞ்சட்டைகாரர்கள் அறிவித்தல் விடுத்திருக்கின்றனர். இது இரண்டுதரப்பினருக்குமிடையிலான பெரும் தாக்குதலுக்கு வழிவகுக்கும் என்று அஞ்சப்படுகின்றது.

முன்னாள் பிரதமர் தாக்ஸின் சினோவாத்ராவுக்கு நாட்டின் வடக்கு ஊரகப்பகுதிகளிலும் வடகிழக்கு பகுதிகளிலும் இப்பொழுதும் பெரும் ஆதரவு இருந்து வருகின்றது. அவருடைய ஆட்சி 2006 ஆம் ஆண்டு இராணுவத்தினால் முறியடிக்கப்பட்டது. தாக்ஸின் ஒரு வீரராக கிராமப் பகுதி மக்களால் கருதப்படுகிறார். அரசுக்குள் அவருடைய செல்வாக்கு மிகுந்துவிடக்கூடாது என்பதே எதிர்த்தரப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் விருப்பமாகும்.

செஞ்சட்டை இயக்கத்தினர் சர்வாதிகாரத்துக்கு எதிரான ஜனநாயகத்துக்கான ஐக்கிய முன்னணி என்று தம்மை அழைத்துக் கொள்கின்றனர். யிங்லக் சினோவாத்ராவின் அரசு வீழ்ச்சியுறாமல் காப்பதற்குத் தங்கள் இயக்கம் பணியாற்றப் போவதாக அந்தக் குழுவின் தலைவர் ஒருவரான கட்டுபோர்ன் பிரொம்பான் என்பவர் கூறியுள்ளார்.

## சாக்கடலை உயிர்ப்பிக்க ஒப்பந்தம்

செங்கடலில் இருந்து தண்ணீரைக் கொண்டுவந்து வறட்சியடைந்து கொண்டிருக்கும் சாக்கடலை (Deasea) நிரப்புவதற்கான உடன்படிக்கை ஒன்றை இஸ்ரேல், ஜோர்தான் மற்றும் பலஸ்தீனியர்களுக்கிடையில் செய்து கொள்ளப்படவிருக்கின்றது.

வோஷிங்டன் உலக வங்கியில் வைத்து கைச்சாத்திடப் பட விருக்கும் இந்த உடன்படிக்கையின் படி செங்கடலின் வட எல்லையிலிருந்து தண்ணீர் கொண்டுவரப் பட்டு சாக்கடலின் வறண்ட பகுதி நிரப்பப்படும். அவ்வாறு செய்யாது போனால் 2050 ஆண்டளவில் சாக்கடல் முற்றாக வற்றிப்போய்விடும் என்று கருதப்படுகின்றது.

இந்தத் தகவல்களை இஸ்ரேலிய சக்தி மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சில்வன் லோம் தெரிவித்துள்ளார். செங்கடலில் இருந்து கொண்டு வரப்படும் தண்ணீரில் ஒரு பகுதி உப்பு நீக்கப்பட்டு இஸ்ரேல். ஜோர்தான் மற்றும் பலஸ்தீனத்துக்கு பகிர்ந்தளிக்கப்படும். மீதமிருக்கும் தண்ணீர் சாக்கடலின் வறண்ட பகுதியில் நிரப்பப்படும். இது ஒரு சரித்திர முக்கியத்துவமான ஒப்பந்தமாக இருக்கப் போகிறது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். உடன்படிக்கை கையெழுத்தானவுடன் அககாபா பகுதியில் உப்பு நீக்கும் இயந்திரத்தை நிறுவுவதற்கும் , தண்ணீர் கொண்டு செல்வதற்கான நான்கு குழாய் களில் முதலாவதுஒன்றைநிறுவுவதற்குமானசர்வதேசகேள்வி வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமாக வாழ

# வாஸ்து சாத்திரம்

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல வாஸ்து ஆலோசகர்
எண்கணித நிபுணர் கலாநிதி
ஜே.என்.எஸ்.செல்வன்



ஒரு வீட்டை நிர்மாணிக்கும் போது வாஸ்து பார்ப்பது மிக அவசியம். நன்மைகளை எளிதில் பெறுவதற்காக மனிதர்கள் ஏதேனும் வழியைத் தேடிப் போகிறார்கள். ஆனால் வாஸ்துப்படி வீட்டைக் கட்டினால் வாய்ப்புகளும் வசதிகளும் அவர்களைத் தேடி வரும் என்பதில் ஐயமில்லை.

| திசை | அதிபதி |
|---|---|
| கிழக்கு | இந்திரன் |
| தென்கிழக்கு | அக்கினி |
| தெற்கு | இயமன் |
| தென்மேற்கு | இராட்சசன் |
| மேற்கு | வருணன் |
| வடமேற்கு | வாயு |
| வடக்கு | குபேரன் |
| வடகிழக்கு | ஈசானன் |

மேலே குறிப்பிட்டதிசைகளில் எது எங்கு இருக்க வேண்டுமோ அதை அங்கே வைத்துக்கட்டினாலே பெருமளவான பிரச்சினைகள் தீர்ந்துவிடும். புதிதாக எந்தப் பிரச்சினையும் வராது. இதை விட்டு எதை எப்படிக் கட்டினால்தான் என்ன? என்று வீறாப்புக் கதைத்தபடி வீடு கட்டுபவர்கள் சிக்க லில்தான் மாட்டிக்கொள்வார்கள். சிலர் அக்கினி மூலையில் கிணற்றையோ கழிவு தொட்டிகளை யோ கட்டி விடுவார்கள். பின்னர் பல பிரச்சினை களை எதிர்கொள்வார்கள்.

இத்தகைய வீட்டில் சமைக்கும் பெண்கள் இரத்த சம்பந்தமான நோய்களுக்கு ஆளாக வாய்ப்புள்ளது. குடும்பத் தலைவர்கள் விபத்தில் சிக்கிக் கொள்வார்கள். திடீர் திடீர் என்று வீட்டிற்குள் சண்டை மூண்டுவிடும். செல்லும் இடங்களில் அவர்களின் மதிப்பு இறங்கிவிடும். இவை எல்லாம் நடந்த பின்னர்தான் வாஸ்து நிபுணரிடம் ஓடிவருவரார்கள், அதைச் சரிப்படுத்தித் தாருங்கள் என்று. முன்னரே ஆலோசனை கேட்டிருந்தால் இந்தச் சிக்கல் எல்லாம் வந்திருக்காது என்பதைப் பலர் புரிந்துகொள்வதே இல்லை.


வாஸ்து சரியாக அமைந்த நாடாளுமன்றக் கட்டங்களைக் கொண்ட நாடுகள் நன்கு முன்னேறியுள்ளன. அந்த நாட்டு மக்கள் சுகபோக வாழ்க்கையை வாழ்கிறார்கள். அவர்களின் உடலும் உள்ளமும் உயர்வாக உள்ளதாகக் கூறுகின்றார்கள்.

நாம் திசைகளை எட்டாகப் பகுத்துள்ளோம் அல்லவா. அப்படிப் பகுக்கப்பட்ட திசைகளில் எந்தத் திசையில் இருந்து என்ன நன்மை கிடைக்கும் என்றும் சில திசைகளைப் பயன் படுத்துவதைத் தவிர்ப்பதால் கிடைக்கக்கூடிய நன்மைகள் பற்றியும் இனி வரும் வாரங்களில் பார்க்கலாம்.

### கிழக்குத் திசை

குடும்பத்தின் அனைத்து நலன்களுக்கும் பண வரவுகளுக்கும் குழந்தை பிறப்புக்கும் வாகன வசதிகளுக்கும் நகை நட்டுக்கள் வாங்கி மகிழ்வதற்கும் உதவி செய்திடும் திசை கிழக்கு. இந்தத் திசையில் வீடு கட்டும்பொழுது அந்த இடம் மற்றத் திசைகளை விடப் பள்ளமாகவும் படர்ந்ததாகவும் இருப் பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். காணியின் சுற்று மதில் சுவருக்குள் கிழக்கு மூலையில் வேறு எந்தக் கட்டங்களும் அமையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சரியான அளவீடுகள் வைத்து வீட்டின் கிழக்கு, வடக்கு மூலைகளில் அதிக இடம் விட்டு வீட்டைக் கட்டினால் மனதில் உறுதியும் அமைதியும் உருவாவதுடன் பிள்ளைகளும் நன்றாகப் படிப்பார்கள். செய்யும் தொழில் விருத்தி அடையும். சுகமான வாழ்க்கையும் அரசுப்பதவியில் உள்ளவர்களுக்கு மேலும் மேலும் உயர்வுகளும் வந்துசேரும். அரசியலில் உள்ளவர்களுக்கு அதி கார மிக்க பதவிகள் நிச்சயம் கிடைக்கும். எனவே கிழக்குத்திசையைக் கருத்தில் கொண் டால் கிழமை தோறும் நன்மைகள் பெற லாம் என்பதை மனதில் இருத்திக் கொள் ளுங்கள். அடுத்த வாரம் அக் கினி மூலையைப் பற்றிப் பார்க்க லாம்.

எதை எப்படிக் கட்டினால்தான் என்ன? என்று வீறாப்புக் கதைத்தபடி வீடு கட்டுபவர்கள் சிக்கலில்தான் மாட்டிக் கொள்வார்கள். சிலர் அக்கினி மூலையில் கிணற்றையோ கழிவு தொட்டிகளையோ கட்டி விடுவார்கள். பின்னர் பல பிரச்சினைகளை எதிர்கொள்வார்கள்.







இப் பண்டிகை காலத்தில், வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளை வாழ்த்திட மிகச் சிறந்த IDD கட்டணங்கள் அடங்கிய மொபிடெல் IDD அட்டைகள்

| ரீலோட் / ரீசார்ஜ் பெறுமதி | கிடைக்கப் பெறும் IDD அழைப்புகளின் பெறுமதி | கிடைக்கப் பெறும் சர்வதேச SMS பெறுமதி | கிடைக்கப் பெறும் மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| ரு. 189 | ரு. 300 | ரு. 100 | ரு. 400 |
| ரு. 589 | ரு. 900 | ரு. 400 | ரு. 1,300 |

கட்டணங்கள் அரச வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டவை. *நிபந்தனைகளுக்குட்பட்டது.

Sri Lanka Telecom Mobitel



ஆசிரியருக்கு கௌரவம்

சில பாடங்கள் நம் வாழ்வை மாற்றிவிடும்

வட்டவல தேயிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொடர்கிறது இந்தியாவின் சோகம்

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள இந்திய கிரிக்கெட் அணிக்கு அங்கு கசப்பான அனுபவமே இம்முறையும் கிடைத்திருக்கின்றது.

மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் முதல் இரு ஆட்டங்களிலும் தோல்வியடைந்த இந்தியா தொடரை இழந்தது. மூன்றாவது ஆட்டத்திலாவது ஆறுதல் வெற்றி ஒன்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நப்பாசையையும் நிறைவேறாது தடுத்து விட்டார் வருண பகவான்.

ஒருநாள் தொடரில் முதலிரு ஆட்டங்களிலும் இந்திய இரசிகர்களே சலித்துக் கொள்ளுமளவு இருந்தது இந்திய அணியின் ஆட்டம். அந்தளவு மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தி யிருந்தது அந்த அணி. இந்திய அணியின் நடுவரிசை வீரர்கள் நிலையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்தியதே அதற்குக் காரணம் என்றும் கூறலாம்.

தமது நாட்டில் நடைபெறும் தொடர்களில் ஓட்டங்களை விளாசித் தள்ளும் இந்திய கிரிக்கெட் வீரர்கள், வெளிநாடுகளில் நடைபெறும் தொடர்களில் பெட்டிப் பாம்பாக அடங்கி விடுகின்றனர். இந்தியாவில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ஆட்டங்களில் இமாலய இலக்குகளை நிர்ணயித்த இந்திய அணி, தென்னாபிரிக்காவில் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெறுவதற்கே பெரும்பாடு பட்டது.

**தென்னாபிரிக்க மண்ணில் கடந்த 21 ஆண்டுகளாக எந்தவொரு ஒருநாள் தொடரையும் வென்றதில்லை இந்திய கிரிக்கெட் அணி. உலக சம்பியன் மற்றும் நம்பர் - 1 என்ற அந்தஸ்துடன் தென்னாபிரிக்க மண்ணில் காலடி வைத்த இந்திய அணிக்கு இந்த முறையும் ஏமாற்றமே எஞ்சியது.**

இந்திய அணியின் இந்தத் தடுமாற்றத்துக்கு அந்த அணியின் நடுவரிசை வீரர்களின் நிலையற்ற ஆட்டமே பெரிதும் காரணம் என்று கூறலாம். இந்திய அணியின் நடுவரிசை வீரர்களான யுவராஜ் மற்றும் ரெய்னா துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறுகின்றனர். யுவராஜ் சிங் இந்த ஆண்டு பங்கேற்ற 17 ஒருநாள் ஆட்டங்களில் 247 ஓட்டங்களே (2 அரைச் சதம் அடக்கம்) எடுத்துள்ளார். அவரின் சராசரி 19.71 ஓட்டங்கள். தென்னாபிரிக்க மண்ணில் அவர் விளையாடிய 11 ஆட்டங்களில் மொத்தம் 211 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

ரெய்னா, யுவராஜை விடவும் சற்றுப் பரவாயில்லை. கடைசியாக விளையாடிய 33 ஆட்டங்களில் 770 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவரின் சராசரி 35.00. இக்கட்டான நிலையில் அணியைச் சரிவில் இருந்து மீட்க வேண்டிய இவர்கள், அத்தகைய சந்தர்ப்பங்களில் உடனடியாக பவிலியன் திரும்புவதிலேயே குறியாக இருக்கின்றனர்.


அதுகுறித்து இந்திய அணித் தலைவரும் கவலைப்படுகின்றார். "கடந்த சில தொடர்களில் நடுவரிசை வீரர்கள் சொதப்புகின்றனர். அது அணிக்கு நெருக்கடிகளைத் தருகின்றது." என்கிறார் அவர். வெறுமனே கவலைப் படுவதை விடுத்து அதை நிவர்த்தி செய்ய வேண்டியதே தற்போதுள்ள தேவை.

இந்திய அணியைப் பொறுத்தவரை வெளிநாடுகளில் நடைபெறும் தொடர்களில் பங்கேற்கச் செல்லும் போதெல்லாம் "ஷோர்ட் பிட்ச்" பந்துகளை எதிர்கொள்வதில் திணறுவது குறித்த பிலாக்கணங்கள் ஆரம்பிக்கும். ஏனெனில் துணைக் கண்டத்து ஆடுகளங்களில் அந்த முறையில் அதிகம் பந்து வீசுவதில்லை. அதனால் வெளிநாட்டுத் தொடர்களிலேயே இந்திய அணிக்கு அந்தச் சிக்கல் எழுகின்றது. அது குறித்து எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படுவதாகத் தெரியவில்லை.

சில ஆட்டங்களில் வெற்றி பெறலாம். சில ஆட்டங்களில் தோல்வியடையலாம். ஆனால் அவற்றில் இருந்து என்ன கற்றுக் கொள்கின்றோம் என்பதே முக்கியமானது.

முதல் ஆட்டத்தில் பந்துவீச்சுச் சரியில்லை. இரண்டாம் ஆட்டத்தில் துடுப்பாட்டம் சரியில்லை என்று கூறுவதையும், தமது நாட்டில் நடைபெறும் ஆட்டங்களில் வெளுத்து வாங்கி தமது மனக் கொதிப்பை அடக்கும் போக்கை மாற்றி இந்திய அணி தமது அணியில் உள்ள குறைபாடுகளை நீக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் ஆரோக்கியமான கிரிக்கெட் அணியை இந்தியா உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

**தென்னாபிரிக்காவுடன் இந்திய அணி 19 ஆட்டங்களில் விளையாடியுள்ளது. அதில் 4 ஆட்டங்களிலேயே வெற்றி பெற்றுள்ளது. 14 ஆட்டங்களில் தோல்வி. ஒன்றில் சமனிலை.**



**தென்னாபிரிக்காவின் டீ கோக் இந்தியாவுக்கு எதிரான மூன்று ஒரு நாள் ஆட்டங்களிலும் சதமடித்து அசத்தினார். அதன் மூலம் இந்தியாவுக்கு எதிராக தொடர்ந்து மூன்று ஆட்டங்களில் சதமடித்தவர் என்ற சாதனையைத் தன்வசம் ஆக்கியுள்ளார் டீ கோக்**

# மீண்டும் வருகிறார் ஷரபோவா

**ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் 4 ஆவது இடத்தில் உள்ள ஷரபோவா கடந்த ஓகஸ்ட் மாதம் சின்சினாட்டி ஓபன் ரென்னிஸ் ஆட்டத்தின் முதற் சுற்றில் காயமடைந்தார்.**

"இது மிக நீண்ட இடைவெளிதான். இருந்தாலும் மீண்டும் எனது திறமையை நிரூபிப்பேன்" என்று தன்னம்பிக்கையுடன் கூறுகின்றார் முன்னணி ரென்னிஸ் வீராங்கனை ஷரபோவா.

காயம் காரணமாக கடந்த 4 மாதங்களாக ரென்னிஸ் மைதானங்களில் ஷரபோவாவைக் காணவில்லை. அவரின் ஆட்டத்தைக் காண முடியாது ஏங்கிப் போயிருந்த இரசிகர்களுக்கு இப்போது காதில் தேன் பாயும் அறிவிப்பு ஒன்று வெளியாகியுள்ளது. அதுதான் ஷரபோவா மீண்டும் களம் திரும்பி விட்டார் என்ற தகவல்.

"இது சற்று நீண்ட இடைவெளி தான். ஆனால் எனக்கு ஏற்பட்ட காயம் முழுமையாக மாற வேண்டும் என்பதில் நான் கூடிய கவனம் எடுத்துக் கொண்டேன். ஏனெனில் அப்போதுதான் என் விளையாட்டுத் திறனைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்" என்று கூறுகின்றார் ஷரபோவா.

உங்கள் நீண்ட இடைவெளி உங்கள் இரசிகர்களுக்கு பெரும் இழப்பல்லவா? என்று அவரிடம் கேட்ட போது சிரிக்கின்றார்.

"அதுதான் இப்போது வந்து விட்டேனே.. இனி எனது ஆட்டத்தை இரசிகர்கள் இரசிக்கலாம். விரைவில் முதலிடத்தை நான் பிடிப்பேன்." என்கிறார் ஷரபோவா.

இம்மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் பிரிஸ்பென் சர்வதேச ரென்னிஸ் தொடரில் ஷரபோவாவின் கலக்கல் ஆட்டத்தை இரசிகர்கள் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org